ஸஞ்சிகை 6.

# ஸ்ரீ வாணீ விலாஸினீ.

விச்வாவஸு ௵

புரட்டாசி ௴

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1905.

*Copyright Registered.*

Studio: **RANGA VILAS, Srirangam.**

**GOLD MEDALISTS.**

PATRONIZED BY

His Excellency the Governor of Madras & Nobles of the Carnatic.

# A. Sudersanum - - - - Naidu & Son.

*Artists and Photographers.*



**Photographic views of important** Indian cities, such as Madras and Madura, Mountain and River Scenery, celebrated Hindu Temples and Gods such as Madura, Trichy, Srirangam, Tanjore, Conjeevaram, &c., Mahomedan Mosques, Christian Churches, Photos of Famous Acharyas such as Vanamamalai and other Jeears and the Photos of Great Priests such as Sankaracharya and others. And also excellent Photos of Handsome Damsels and of Indian Scenes and Native Characters can be obtained in Cabinet size at Rs. 3 per Dozen unmounted; Rs. 3-8 Mounted.

*Bromide Enlargements and Paintings in Oil, or water colours* in all sizes, according to price list, and framed complete in the latest style. Old photographs reproduced same size, or finished as above.



# CONTENTS for OCTOBER 1905.


| | | |
|---|---|---|
| 1 | **Saraswati Stotra.** (Sanskrit). | 513 |
| 2 | **Syamala Dandaka.** (Do.) Kalidasa. | 514 |
| 3 | **Navaratnamala.** (Do.) Kalidasa. | 519 |
| 4 | **Saraswati Antadi.** Kamban. | 521 |
| 5 | **Lakshmi Antadi.** Kamban. | 526 |
| 6 | **Life of Sri Sankaracharya.** Continued. | 537 |
| 7 | **Namakal Tudi.** C. Ramaswamy Aiyangar B.A. | 551 |
| 8 | **Kalidasa and Saraswati.** | 553 |
| 9 | **Mahishasuramardanam.** | 562 |
| 10 | **Darsana Darsanam.** (An examination of the different systems of Philosophy). T. E. Srinivasachariar. | 566. |
| 11 | **Saraswati Stotra.** M. V. Minakshisundara Mudaliar B.A, | 572 |
| 12 | **The Grace and Greatness of Saraswati.** G. Subramania Aiyar. | 573 |
| 13 | **Mallikamarutam.** (Continued). M. C. Satagopachariar. | 585 |
| 14 | **Atma Vidya Vilasam.** (Theosophy) Continued. | 597 |
| 15 | **Dravyarjana Sangam.** (A humorous Story). | 601 |
| 16 | **Chandravalli.** (A Detective Story). C. Ramaswamy Aiyangar B.A. | 617 |
| 17 | **Vibhrama Vihasam.** (Shakespeare's Comedy of Errors) Contd. Illustrated. | 660 |
| 18 | **Dadabhai Naoroji.** A. Sankaralingam Pillai B.A. | 574 |
| 19 | **Hyderabad or the Nizam's Dominions.** | 681 |

| | | |
|---|---|---|
| 20 | **Kalaimakal Panchakam.** A. Madhaviah. | 696 |
| 21 | **Imitation of Christ.** (Continued.) Atmanathan. | 697 |
| 22 | **Tripuradahanam.** M. V. Minakshisundara Mudaliar B.A. | 706 |
| 23 | **Kadarkadan.** (The Story of a Recluse). A. Madhaviah. | 712 |
| 24 | **Swadeshism.** Ambil S. Venkatachariar. | 721 |
| 25 | **Vidyunmala.** | 725 |
| 26 | **How to win the love of their Husbands.** R. Koneti Aiyar B.A. | 730 |
| 27 | **A weary Editor's Soliloquy.** | 736 |


---


# ORDERS ARE NOW BEING REGISTERED

FOR

## Bound Copies

OF

# THE SRI VANI VILASINI

## VOL. I.

MAY—OCTOBER 1905.

Contains a large No. of serials and original articles by several eminent writers of the day.

750 pages full of interesting reading matter with numerous illustrations.

Ten Half-Tone plates in different colours.

Indispensable as a Prize book.

No Hindu Home should be without this book.

A Unique Tamil Publication in every respect.

Full Calico, Gilt, ~~Rs~~ 3–4–0 exclusive of postage.

*Apply early to save disappointment.*

THE MANAGER,

Bookselling Department,

SRI VANI VILAS PRESS,

*Srirangam.*

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
24 NOV 1905
MADRAS.

# விஷயங்கள்.


| | | |
|---|---|---|
| 1. | ஸரஸ்வதீ ஸ்தோத்ரம், (ஸம்ஸ்கிருதம்). | 513 |
| 2. | சியாமளாதண்டகம். (ஷை) காளிதாஸன். | 514 |
| 3. | நவரத்னமாலை. (ஷை) காளிதாஸன். | 519 |
| 4. | ஸரஸ்வதியந்தாதி. கம்பன். | 521 |
| 5. | லக்ஷ்மியந்தாதி. கம்பன். | 529 |
| 6. | ஸ்ரீ சங்கராசாரியார் சரித்திரம். | 537 |
| 7. | நாமகள்துதி. சருக்கை இராமசாமி ஐயங்கார் பி. ஏ. | 551 |
| 8. | காளிதாஸனும் ஸரஸ்வதியும். | 533 |
| 9. | மஹிஷாஸுரமர்த்தனம். | 562 |
| 10. | தர்சனதர்சனம். திரு. ஈ. ஸ்ரீனிவாஸாசாரியார். | 566 |
| 11. | ஸரஸ்வதி ஸ்தோத்ரம். ம. வீ. மீனாக்ஷிஸுந்தர முதலியார் பி. ஏ. | 572 |
| 12. | ஸரஸ்வதியின் பெருமையும் கருணையும். குரு. சுப்பிரமணிய ஐயர். | 573 |
| 13. | மல்லிகாமாருதம். மோ. க. சடகோபாசாரியர். | 585 |
| 14. | ஆத்மவித்யாவிலாஸம். | 597 |
| 15. | திரவியார்ஜனசங்கம். | 601 |
| 16. | சந்திரவல்லி. சருக்கை இராமசாமி ஐயங்கார் பி. ஏ. | 617 |
| 17. | விப்ரமவிஹாஸம். படத்துடன் கூடியது. | 660 |
| 18. | தாதாபாய் நௌரோஜி. அ. சங்கரலிங்கம்பிள்ளை பி. ஏ. | 674 |

19. ஐதராபாத் அல்லது நிஜாமிராஜ்யம். 681
20. கலைமகள் பஞ்சகம். *அ. மாதவையர்.* 696
21. கிருஸ்துபோன்ற ஒழுக்கமுறைநூல். *ஆத்மநாதன்.* 697
22. திரிபுரதஹனம். *ம. வீ. மீனாக்ஷிசுந்தரமுதலியார் பி. ஏ.* 706
23. காதற்கடன் (ஓர் துறவியின்கதை). *அ. மாதவையர்.* 712
24. ஸ்வதேசீயம். *அன்பில் ஸ்ரீ வெங்கடாசாரியார்.* 721
25. வித்யுன்மாலை. 725
26. கணவரன்பைக் கவருமுபாயங்கள்.
*ர. கோனெட்டி ஐயர் பி. ஏ.* 730
27. ஓர் பத்திராசிரியர் சோர்ந்து புலம்புதல். 736

## படங்கள்

*ஸரஸ்வதி.*

*லக்ஷ்மீ.*

*மஹிஷாஸுரமர்த்தனி.*

*நிஜாம் மீர்மாபூப் ஆலிகான் ஜி. ஸி. எஸ். ஐ.*

*திரிசிரபுரம் மலை.*

## *S. Parthasarathy Chetty & Co.*

**Esplanade Row,**
**MADRAS.**



12 Bore C .F. Single Barrel ejector Guns.

H. and R. 12 Bore C. F. S. B. B. L. ejector gun top snap Action Case hardened frame Selected Walnut Stock with pistol Grip rebounding Hammer Taper Screw Hinge pin which take up wear and insures tight joints Holds barrel to frame polished steel barrel Weight $6\frac{3}{4}$ ℔ ... **Rs. 30.**

Remington Arm Co's 12 Bore C. F. S. B. B. L. ejector gun. The best single Breech loader top Snap Action rebounding lock finely chequerred Pistol Grip stock and fore end fancy rubber plate 30 inches Decarbonised steel Barrel Weight $5\frac{3}{4}$ ℔ **Rs. 50.**

**Revolvers !** **Revolvers ! !** **Revolvers ! ! !**

### WEBLEYS POCKET MODEL MARK.




·380 C. F. 5 shot Revolver self-extracting nickel plated length of Barrel 3 inches Weight 20 oz. **Rs. 60**

**IVER JOHNSON REVOLVER.**

·380 Bore Special C. F. 5 shot nickel plated self-extracting safety Hammer Double Action. Length of Barrel 4 inches Weight 1 ℔ **Rs. 35.**

**Cartridges for the above revolvers per 100 Rs. 5**



Your photograph or that of any friend or relative whose memory you wish to cherish can be beautifully enlarged and mounted in cut out cards measuring about 12″×10″.

**For only Rs. 6.**

The original photograph will be returned uninjured with a copy of the same in gloss arristotype or Platinotype **free of Charge.**

Orders should be accompanied by an advance payment of Re. 1 in postage stamp of any country.

**S. K. LAWTON & CO.,**

Photographers, Photo-Engravers & Enlargers

**MANIPPAY, JAFFNA, CEYLON.**




ஸரஸ்வதி.

ஸ்ரீவாணீ விலாஸினீ.

வா. I. ந. 6.

या कुन्देन्दुतुषारहारधवला
या शुभ्रवस्त्रावृता
या वीणावरदण्डमण्डितकरा
या श्वेतपद्मासना ।
या ब्रह्माच्युतशंकरप्रभृतिभिः
देवैः सदा पूजिता
सा मां पातु सरस्वती भगवती
निःशेषजाड्यापहा ॥

# ॥ श्यामलादण्डकम् ॥

माणिक्यवीणामुपलालयन्तीं
मदालसां मंजुलवाग्विलासाम् ।
माहेन्द्रनीलद्युतिकोमलाङ्गीं
मातङ्गकन्यां सततं स्मरामि ॥

चतुर्भुजे चन्द्रकलावतंसे
कुचोन्नते कुंकुमरागशोणे ।
पुण्ड्रेक्षु पाशांकुश पुष्पबाण-
हस्ते नमस्ते जगदेकमातः ॥

माता मरकतश्यामा मातंगी मदशालिनी ।
कटाक्षयतु कल्याणी कदम्बवनवासिनी ॥

जय मातङ्गतनये जय नीलोत्पलद्युते ।
जय संगीतरसिके जय लीलाशुकप्रिये ॥

जय जननि सुधासमुद्रान्तहृद्यन्मणिद्वीपसंरूढबिल्वाटवीमध्यकल्पद्रुमाकल्पकादम्बकान्तारवासप्रिये, कृत्तिवासप्रिये, सर्वलोकप्रिये । सादरारब्धसंगीतसंभावनासंभ्रमालोलनीपस्रगाबद्धचूलीसनाथत्रिके, सानुमत्पुत्रिके । शेखरीभूतशीतांशुरेखामयूखावलीबद्धसुस्निग्धनीलालकश्रेणिशृङ्गारिते, लोकसंभाविते । कामलीलाधनुःसंनिभभ्रूलतापुष्पसंदोहसंदेहकृल्लोचने, वाक्सुधासेचने । चारुगोरोचनापङ्ककेलीललामाभिरामे, सुरामे रमे । प्रोल्लसद्वालिकामौक्तिकश्रेणिकाचन्द्रिकामण्डलोद्भासिलावण्यगण्डस्थलन्यस्तकस्तूरिकापत्त्ररेखासमुद्भूतसौरभ्यसंभ्रान्तभृङ्गांगनागीतसान्द्रीभवन्मन्द्रतन्त्रीस्वरे, सुस्वरे, भास्वरे । वल्लकीवादनप्रक्रियालोलतालीदलाबद्धताटंकभूषाविशेषान्विते, सिद्धसंमानिते । दिव्यहालामदोद्वेलहेलालसचक्षुरान्दोलनश्रीसमाक्षिप्तकर्णैकनीलोत्पले, पूरिताशेषलोकाभिवाञ्छाफले, श्रीफले । स्वेदबिन्दूल्लसत्फाललावण्यनिःष्यन्दसंदोहसंदेहकृन्नासिकामौक्तिके, सर्वविश्वात्मिके, कालिके । मुग्धमन्दस्मितोदारवक्त्रस्फुरत्पूगताम्बूलकर्पूरखण्डोत्करे, ज्ञानमुद्राकरे, सर्वसंपत्करे, पद्मभास्वत्करे । कुन्दपुष्पद्युतिस्निग्धदन्तावलीनिर्मलालोलकल्लोलसंमेलनस्मेरशोणाधरे, चारुवीणाधरे, पक्वबिम्बाधरे ॥

॥ १ ॥

सुललितनवयौवनारम्भचन्द्रोदयोद्वेललावण्यदुग्धार्णवाविर्भवत्कम्बुबिब्बोकभृत्कन्धरे, सत्कलामन्दिरे, मन्थरे । दिव्यरत्नप्रभाबन्धुरच्छन्नहारादिभूषासमुद्योतमानानवद्यांशुशोभे, शुभे । रत्नकेयूररश्मिच्छटापल्लवप्रोल्लसद्दोर्लताराजिते,

योगिभिः पूजिते । विश्वदिङ्मण्डलव्यापिमाणिक्यतेजः-स्फुरत्कंकणालंकृते, विभ्रमालंकृते, साधकैः सत्कृते । वासरारम्भवेलासमुज्जृम्भमाणारविन्दप्रतिद्वन्द्विपाणिद्वये, संततोद्यद्दये, अद्वये । दिव्यरत्नोर्मिकादीधितिस्तोमसंध्यायमानांगुलीपल्लवोद्यन्नखेन्दुप्रभामण्डले, संनताखण्डले, चित्प्रभामण्डले, प्रोल्लसत्कुण्डले । तारकाराजिनीकाशहारावलिस्मेरचारुस्तनाभोगभारानमन्मध्यवल्लीबलिच्छेदवीचीसमुल्लाससंदर्शिताकारसौन्दर्यरत्नाकरे, वल्लकीभृत्करे, किंकरश्रीकरे । हेमकुम्भोपमोत्तुङ्गवक्षोजभारावनम्रे, त्रिलोकावनम्रे । लसद्वृत्तगम्भीरनाभीसरस्तीरशैवालशंकाकरश्यामरोमावलीभूषणे मंजुसंभाषणे । चारुशिञ्जत्कटीसूत्रनिर्भर्त्सितानङ्गलीलाधनुःशिञ्जिनीडम्बरे, दिव्यरत्नाम्बरे । पद्मरागोल्लसन्मेखलाभास्वरश्रोणिशोभाजितस्वर्णभूभृत्तले चन्द्रिकाशीतले ॥ २ ॥

विकसितनवकिंशुकाताम्रदिव्यांशुकच्छन्नचारूरुशोभापराभूतसिन्दूरशोणायमानेन्द्रमातंगहस्तार्गले, वैभवानर्गले, श्यामले । कोमलस्निग्धनीलोत्पलोत्पादितानंगतूणीरशंकाकरोदारजंघालते, चारुलीलागते । नम्रदिक्पालसीमन्तिनीकुन्तलस्निग्धनीलप्रभापुञ्जसंजातदूर्वांकुराशंकसारंगसंयोगरिङ्खन्नखेन्दूज्ज्वले, प्रोज्ज्वले निर्मले, । प्रह्वदेवेशलक्ष्मीशभूतेशतोयेशवाणीशकीनाशदैत्येशयक्षेशवाय्वग्निकोटीरमाणिक्यसंघृष्टबालातपोद्दामलाक्षारसारुण्यतारुण्यलक्ष्मीगृहीतांघ्रिपद्मे, सुपद्मे, उमे ॥ ३ ॥

सुरुचिरनवरत्नपीठस्थिते, सुस्थिते । रत्नपद्मासने । रत्न-
सिंहासने शंखपद्मद्वयोपाश्रिते । तत्र विघ्नेशदुर्गावटुक्षेत्रपालैर्युते ।
मत्तमातंगकन्यासमूहान्विते । मंजुलामेनकाद्यंगनामानिते भैर-
वैरष्टभिर्वेष्टिते । देवि वामादिभिः शक्तिभिः सेविते । धात्रि-
लक्ष्म्यादिशक्त्यष्टकैः संयुते । मातृकामण्डलैर्मण्डिते । यक्ष-
गन्धर्वसिद्धांगनामण्डलैरर्चिते । पञ्चबाणात्मिके । पञ्चबाणेन
रत्या च संभाविते । प्रीतिभाजा वसन्तेन चानन्दिते । भक्ति-
भाजां परं श्रेयसे कल्पसे । योगिनां मानसे द्योतसे । छन्दसा-
मोजसा भ्राजसे । गीतविद्याविनोदातितृष्णेन कृष्णेन
संपूज्यसे । भक्तिमच्चेतसा वेधसा स्तूयसे । विश्वहृद्येन वाद्येन
विद्याधरैर्गीयसे ॥ ४ ॥

श्रवणहरणदक्षिणक्वाणया वीणया किंनरैर्गीयसे । यक्ष-
गन्धर्वसिद्धाङ्गनामण्डलैरर्च्यसे । सर्वसौभाग्यवाञ्छावतीभि-
र्वधूभिः सुराणां समाराध्यसे । सर्वविद्याविशेषात्मकं चाटु-
गाथासमुच्चारणं कण्ठमूलोल्लसद्वर्णराजित्रयं कोमलश्यामलो-
दारपक्षद्वयं तुण्डशोभातिदूरीभवत्किंशुकं तं शुकं लालयन्ती
परिक्रीडसे । पाणिपद्मद्वयेनाक्षमालामपि स्फाटिकीं ज्ञान-
सारात्मकं पुस्तकं चांकुशं पाशमाबिभ्रती येन संचिन्त्यसे,
तस्य वक्त्रान्तराद्गद्यपद्यात्मिका भारती निःसरेत् । येन वा
यावकाभाकृतिर्भाव्यसे तस्य वश्या भवन्ति स्त्रियः पुरुषाः ।
येन वा शातकुम्भद्युतिर्भाव्यसे सोऽपि लक्ष्मीसहस्रैः परि-
क्रीडते । किं न सिद्ध्येद्वपुः श्यामलं कोमलं चन्द्रचूडा-
न्वितं तावकं ध्यायतः । तस्य लीलासरो वारिधिस्तस्य
केलीवनं नन्दनं तस्य भद्रासनं भूतलं तस्य गीर्देवता किंकरी-

तस्य चाज्ञाकरी श्रीः स्वयम् । सर्वतीर्थात्मिके सर्वमन्त्रात्मिके सर्वतन्त्रात्मिके सर्वयन्त्रात्मिके सर्वशक्त्यात्मिके सर्वपीठात्मिके सर्वतत्त्वात्मिके सर्वविद्यात्मिके सर्वयोगात्मिके सर्वनादात्मिके सर्वशब्दात्मिके सर्वविश्वात्मिके सर्वदीक्षात्मिके सर्वसर्वात्मिके सर्वगे पाहि मां पाहि मां पाहि मां देवि तुभ्यं नमो देवि तुभ्यं नमो देवि तुभ्यं नमः ॥ ५ ॥

कालिदासः ।

# ॥ नवरत्नमाला ॥

ओंकारपञ्जरशुकीं
उपनिषदुद्यानकेलिकलकण्ठीम् ।
आगमविपिनमयूरीं
आर्यामन्तर्विभावये गौरीम् ॥ १ ॥

दयमानदीर्घनयनां
देशिकरूपेण दर्शिताभ्युदयाम् ।
वामकुचनिहितवीणां
वरदां संगीतमातृकां वन्दे ॥ २ ॥

श्यामलिमसौकुमार्यां
आनन्दामन्दसंपदुन्मेषाम् ।
तरुणिमकरुणापूरां
मदजलकल्लोललोचनां वन्दे ॥ ३ ॥

नखमुखमुखरितवीणा-
नादरसास्वादनवनवोल्लासम् ।
मुखमम्ब मोदयतु मे
मुक्ताताटङ्कमुग्धहसितं ते ॥ ४ ॥

सरिगमपधनिरतां तां
वीणासङ्क्रान्तकान्तहस्तान्ताम् ।
शान्तां मृदुलस्वान्तां
कुचभरतान्तां नमामि शिवकान्ताम् ॥ ५ ॥

अवटुतटघटितचूली-
पालीं तालीपलाशताटङ्काम् ।
वीणावादनवेला-
कम्पितशिरसं नमामि मातङ्गीम् ॥ ६ ॥

वीणारवानुषङ्गं
विकचमदामोदमाधुरीभृङ्गम् ।
करुणापूरतरङ्गं
कलये मातंगकन्यकापांगम् ॥ ७ ॥

मणिभङ्गमेचकाङ्गीं
मातंगीं नौमि सिद्धमातङ्गीम् ।
यौवनवनसारङ्गीं
सङ्गीताम्भोरुहानुभवभृङ्गीम् ॥ ८ ॥

मेचकमासेचनकं
मिथ्यादृष्टान्तमध्यभागं तम् ।
मातस्तव स्वरूपं
मङ्गलसङ्गीतसौरभं मन्ये ॥ ९ ॥

कालिदासः ।

# ஸரஸ்வதியந்தாதி.

## கட்டளைக் கலித்துறை.

சீர்தந்தவெள்ளிதழ்ப் பூங்கமலாசனத்
　　தேவிசெஞ்சொற்
றூர்தந்தவென்மனத் தாமரையாட்டி
　　சரோருகமேற்
பார்தந்தநாதனிசை தந்தவாரணப்
　　பங்கயத்தாள்
வார்தந்தசோதியம் போருகத்தாளை
　　வணங்குதுமே. க.

வணங்குஞ்சிலைநுத லுங்கழைத்
　　தோளும் வனமுலைமேற்
சுணங்கும்புதிய நிலவெழுமேனியுந்
　　தோட்டுடனே
பிணங்குங்கருந்தடங் கண்களு
　　நோக்கிப் பிரமனன்பா
லுணங்குந் திருமுன்றிலாய் மறைநான்கு
　　முரைப்பவளே, உ.

உரைப்பாருரைக்குங் கலைகளெல்லா
　　மெண்ணி லுன்னையன்றித்
தரைப்பாலொருவர் தரவலரோ தண்டரளமுலை
வரைப்பாலமுதுதந் திங்கெனைவாழ்வித்த
　　மாமயிலே
விரைப்பாசடைமலர் வெண்டாமரைப்பதி
　　மெல்லியளே. ங.

இயலான துகொண்டுநின் றிருநாமங்களேத்துத
[ற்கு
முயலாமையாற்றடுமோ றுகின்றேனிந்தமூவுலகுஞ்
செயலாலமைத்த கலைமகளே நின்றிருவருளுக்
கயலவிடாம லடியேனையுமுவந்தாண்டருளே. ௪.

அருக்கோதயத்தினுஞ் சந்த்ரோதயமொத்
தழகெறிக்குந்
திருக்கோலநாயகி செந்தமிழ்ப்பாவை
திசைமுகத்தா
னிருக்கோதுநாதனுந் தானுமெப்போது
மினிதிருக்கு
மருக்கோலநாண்மல ராளென்னை
யாளு மடமயிலே. ௫.

மயிலேமடப்பிடியேகொடியேயிளமான்பிணையே
குயிலேபசுங்கிளியேயன்னமே
மனக்கூரிருட்கோர்
வெயிலேநிலவெழு மேனிமின்னேயினி
வேறுதவம்
பயிலேன்மகிழ்ந்து பணிவேனுனதுபொற்
பாதங்களே. ௬.

பாதாம்புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்தமுத்தியுந் தந்தருள் பாரதி
வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம்புயத்தி லிருப்பாளிருப்பவென்
சிந்தையுள்ளே
யேதாம்புவியிற் பெறலரிதாவதெனக்கினியே. ௭

இனிநா னுணர்வதெண் ணெண்கலையாளை
யிலகுதொண்டைக்

கனிநாணுஞ்செவ்விதழ் வெண்ணிறத்தாளைக்
கமலவயன்
றனிநாயகியை யகிலாண்டமும் பெற்ற
தாயைமணப்
பனிநாண்மலருறை பூவையையாரணப்
பாவையையே. அ.

பாவுந்தொடையும் பதங்களுஞ்சீரும்பலவிதமா
மேவுங்கலைகள் விதிப்பாளிடம்விதி யின்முதிய
நாவும் பகர்ந்ததொல் வேதங்கணுங்கு
[நறுங்கமலப்
பூவுந்திருப்பதம் பூவாலணிபவர் புந்தியுமே. கூ.

புந்தியிற்கூரிரு ணீக்கும்புதிய மதிய மென்கோ
வந்தியிற்றோன்றிய தீபமென்கோநல்
லருமறையோர்
சந்தியற்றோன்றுந் தபனனென்கோமணித்
தாம மென்கோ
உந்தியிற்றோன்றும் பிரான்புயந்தோயு
மொருத்தியையே. ய.

ஒருத்தியையொன்று மிலாவென்மனத்தி
னுவந்துதன்னை
யிருத்தியைவெண்கம லத்திருப்பாளையெண்
ணெண்கலைதோய்
கருத்தியையைம்புல னுங்கலக்காமற்
கருத்தைபெல்லாந்
திருத்தியையான்மற வேன்றிசைநான்முகன்
றேவியையே. கக.

தேவருந்தெய்வப்பெருமானுநான்மறைசெப்பு
[கின்ற

மூவருந்தானவ ராகியுள்ளோருமுனிவரரும்
யாவருமேனைய வெல்லாவுயிருமிதழ்வெளுத்த
பூவருமாதினருள்கொண்டுஞானம் புரிகின்றதே.

புரிகின்ற சிந்தையு னூடேபுகுந்து
புகுந்திருளை
யரிகின்றதாய்கின்றவெல்லாவறிவி
னரும்பொருளைத்
தெரிகின்றவின்பங் கனிந்தூறிநெஞ்சந்
தெளிந்துமுற்ற
விரிகின்ற தெண்ணெண்கலைமானுணர்த்திய
வேதமுமே. கங

வேதமும்வேதத்தி னந்தமுமந்தத்தின்
மெய்ப்பொருளாம்
பேதமும்பேதத்தின் மார்க்கமுமார்க்கப்
பிணக்கறுக்கும்
போதமும்போத வுருவாகியெங்கும்
பொதிந்தவிந்து
நாதமுநாதவண் டார்க்கும்வெண்
டாமரை நாயகியே. கச

நாயகமான மலரகமாவது ஞானவின்பச்
சேயகமான மலரகமாவதுந் தீவினையா
லேயகமாறி விடுமகமாவது மெவ்வுயிர்க்குந்
தாயகமாவதுந் தாதார்சுவேத சரோருகமே. கரு

சரோருகமேதிருக் கோயிலுங்கைகளுந்
தாளிணையு
முரோருகமுந்திரு வல்குலுநாபியு
மோங்கிருள்போற்

சிரோருகஞ்சூழ்ந்த வதனமுநாட்டமுஞ்
சேயிதழு
மொரோருகமீரரை மாத்திரையான
வுரைமகட்கே. ௧௬.

கருந்தாமரைமலர் கட்டாமரைமலர் காமருதா
ளருந்தாமரைமலர் செந்தாமரைமல ராலயமாத்
தருந்தாமரைமலர் வெண்டாமரைமலர் தாவி
[லெழிற்
பெருந்தாமரைமணக் குங்கலைக்கூட்டப்
[பிணைதனக்கே. ௧௭.

தனக்கேதுணிபொரு ளென்னுந்தொல்வேதஞ்
சதுர்முகத்தோ
னெனக்கேசமைந்த வபிடேகமென்னு
மிவையவர்தா
மனக்கேதமாற்று மருந்தென்பகுடு
மலரென்பன்யான்
கனக்கேசபந்திக் கலைமங்கைபாத
கமலங்களே. ௧௮.

கமலந்தனிலிருப் பாள்விருப்போடங்
கரங்குவித்துக்
கமலங்கடவுளர் போற்றுமென்பூவை
கண்ணிற்கருணைக்
கமலந்தனைக்கொண்டு கண்டொருகாற்றங்
கருத்துள்வைப்பார்
கமலங்கழிக்குங் கலைமங்கையாரணி
காரணியே ௧௯.

காரணன்பாகமுஞ் சென்னியுஞ்
சேர்தரு கன்னியரு

நாரணனுக மகலாத்திருவு மோர் நான்மருப்பு
வாரணன்றேவியு மற்றுளதெய்வ மடந்தையரும்
ஆரணப்பாவை பணித்தகுற்றேவ லடியவரே. ௨0

அடிவேதநாறுஞ் சிறப்பார்ந்தவேத மனைத்
[தினுக்கு
முடிவேதவள முளரிமின்னேமுடி யாவிரத்ன
வடிவேமகிழ்ந்து பணிவார் தமது மயலிரவின்
விடிவேயறிந்தென்னை யாள்வார்தலந்தனில்
[வேறிலையே. ௨க.

வேறிலையென்று னடியாரிற்கூடி விளங்குநின்பேர்
கூறலையானுங்குறித்துநின்றேனைம்புலக்குறும்பா
மாறலைகள்வர் மயக்காமநின்மலர்த் தாணெறியிற்
சேறலையீந்தருள் வெண்டாமரைமலர்ச்
[செயிழையே ௨௨.

சேதிக்கலாந்தர்க்க மார்க்கங்களெவ்வெவர்
சிந்தனையுந்
சோதிக்கலாமுறப் போதிக்கலாஞ்
சொன்ன தேதுணிந்து
சாதிக்கலாமிகப் பேதிக்கலாமுத்திதானெய்தலா
மாதிக்கலாமயில் வல்லிபொற்றுளை
யடைந்தவரே. ௨௩.

அடையாளநாண்மல ரங்கையிலேடு
மணிவடமு
முடையாளை நுண்ணிடையொன்றுமிலாளை
யுபநிடதப்
படையாளையெவ்வுயி ரும்படைப்பாளைப்
பதுமநறுந்

தொடையாளையல்லது மற்றினியாரைத்
தொழுவதுவே. உச.

தொழுவார்வலம்வரு வார்துதிப்பார்தந்
தொழின்மறந்து
விழுவாரருமறை மெய்தெரிவாரின்ப
மெய்புளகித்
தழுவாரினுங்கண்க ணீர்மல்குவாரென்க
ணுவதென்னை
வழுவாதசெஞ்சொற் கலைமங்கைபாலன்பு
வைத்தவரே. உரு.

வைக்கும் பொருளுமில் வாழ்க்கைப்
பொருளுமற் றெப்பொருளும்
பொய்க்கும்பொருளன்றி நீடும்
பொருளல்ல பூதலத்தின்
மெய்க்கும்பொருளு மழியாப்
பொருளும் விழுப்பொருளு
முய்க்கும்பொருளுங் கலைமானுணர்த்து
முரைப்பொருளே. உசு.

பொருளாலிரண்டும் பெறலாகுமென்ற
பொருள்பொருளோ
மருளாத சொற்கலை வான்பொரு
ளாபொருள் வந்துவந்தித்
தருளேவிளங்கு மவர்க்கொளியா
யறியாதவருக்
கிருளாய்விளங்கு நலங்கிளர்மேனி
யிலங்கிழையே உஎ

இலங்குந்திருமுக மெய்யிற்புளக
மெழுங்கண்கணீர்

மலங்கும்பழுதற்ற வாக்கும்வலிக்கு
மனமிகவே
துலங்குமுறுவல் செயக்களிகூறுஞ்
சுழல்புனல்போற்
கலங்கும்பொழுது தெளியுஞ்சொன்மானைக்
கருதினர்க்கே. உஅ.

கரியாரளகமும் கண்ணுங்கதிர்முலைக்
கண்ணுஞ்செய்ய
சரியார்கரமும் பதமுமிதழுந்
தவளநறும்
புரியார்ந்ததாமரையுந் திருமேனியும்
பூண்பனவும்
பிரியா தென்னெஞ்சினு நாவினுநிற்கும்
பெருந்திருவே. உகூ.

பெருந்திருவுஞ்சய மங்கையுமாகியென்
பேதைநெஞ்சி
லிருந்தருளுஞ்செஞ் சொல்வஞ்சியைப்போற்றி
னெல்லாவுயிர்க்கும்
பொருந்தியஞானந் தருமின்பவேதப்
பொருளுந்தருந்
திருந்தியசெல்வந் தருமழியாப்பெருஞ்
சீர்தருமே. கூ0.

கம்பன்.

# லக்ஷமியந்தாதி.

## கட்டளைக்கலித்துறை.

வரோதய மாதவ வண்கமலாலை மங்கைபரம்
பரோதய பாதபங் கேருகத்
தாள்பண்டை பாண்டரங்கன்
சிரோதய பாதகங் கைத்தேவ
தேவன் றிருமறு வொன்
றுரோதய மாதப யந்தரும்
யாங்கட் குதயஞ் செய்தே. க.

உதையஞ்செய் வாளவட் சீறடித்
தாமரை யோதியென்று
மிதையஞ்செய் வார்தமக் கேயளிப்
பாள்வர மிக்குவிற்பூங்
குதையஞ்செய் வான்றனை யீன்றருள்
வாணங் கொடுவினைகள்
சிதையஞ்செய் வாள்விழி யாளெமக்
கேதருஞ் செல்வங்களே. உ.

செல்வாளி நற்றடங் கண்ணிசெந்
தாமரைச் செங்கைமங்கை
வில்வாளி கல்கதை யாழிசங்
கேந்திய விண்ணவன்றேள்
புல்வாளி லக்குமி யெற்பெற்ற
தாயவட் பூத்த பைம்பொற்
பல்வாளி தழ்க்கம லாலயம்
வாழருட் பாற்கடலே. ௩.

பார்க்கடற் கேடறச் செங்கோ
லுடன்பசும் பொன்முடியும்

போர்க்கடற் கேசரி வீர
பராக்ரமம் போதவுந்தண்
கார்க்கடற் கேய்கட் கடாக்கமு
மோக்கமுங் காதலடி
யார்க்கடற் தேயலர் மேன்மங்கை
நாளு மருட்பரிசே. ௪.

அருட்பாற் கடற்பெருகாரமுதா
மவ ணண்ணுபரம்
பொருட்பாற் கடற்சிந்தை யுள்ளெழுந்
தூறப் புரிதவத்தோ
டிருப்பாற் கடற்றிருப் பேரின்ப
வான்பத மீந்தருள்வான்
றிருப்பாற் கடற்கு ளவதாரஞ்
செய்த செழுஞ் செல்வியே. ௫.

செல்விதன் பேரருட் கூர்ந்ததன்
றேமுற் சிருட்டியெல்லாம்
நல்விதி செய்து முயிர்க்குயி
ராய்த்தெய்வ நாயகனும்
பல்வித மாயிருந் தேகரந்
தெங்கும் பரந்தளித்துஞ்
சொல்வித மாயரன் றன்றுடைத்
திட்டுந் தொழப்பெற்றதே. ௬.

பெற்றனர் மாயர் திருப்பாற்கடற்பள்ளி பேரரண
ருற்றனர் மாவெள்ளி வேதண்ட
மேசத்ய லோகமுற்றார்
வெற்றன ரிந்திரர் பொன்னுல
காண்டனர் விண்ணவர்மே
னிற்றனர் நின்கட் கருணைபெற்
றேநன் னிதியணங்கே. ௭.

நிதிபதி யீசன் சுரேசன்செந்தீயம னிருதி
நதிபதி நாதன் சதாகதிதானுமெந் நாளுமிவ
ரதிபதி யாகவெண் டிக்கடைந்
தார்நின் னருட்பெறலா
லுதிபதி ஞறு கலாமதி
மாமுகத் தொண்டிருவே. அ.

திருவேநின் னுயகர் பானிலமா துஞ் சிவனிடத்தே
பொருவே னெடுங்கண் ணுமையா
ளுடன்பொங்கு கங்கையுமீ
ரிருவேத னுவினில் வாணியுந்
தாம்வந் திவர்களுன்பால்
வருவேலை யங்கட் கடாக்கமன்
றேபெற்று வாழ்வதுவே. கூ.

வாழ்வத நாளிற் புலோமசை
யாண்முதன் மாதருன்றாள்
தாழ்வத னல்ல வோபெரும்
போகந்துய்த் தார்வனத்தார்
வீழ்வத னற்புயப்பொன்மலை
தோய்ந்தெழு மின் விழித்தேன்
சூழ்வத னம்புயச் செஞ்சுட
ரேசெய்ய சுந்தரமே. ய.

சுந்தர மேவுமுப் பத்துமுக்கோடி சுராதிபரென்
றந்தர மேயவர் யாவரு மேத்தநல் லச்சுதன்பூங்
கொந்துர மேலிருந் தின்னருட்
கூருங் குலக் கொடியே
சிந்துர மேபிணை மானே
சிவந்த செழுஞ்சுடரே. கக.

செழுஞ்சுட ரேய்மணி சேர்பாற்
கடலினுஞ் சீதரன்றன்

கொழுஞ்சுட ரேறு கவுத்துவ
மார்பினுங் கோதில்செந்தேன்
விழுஞ்சுட ரேம விரைத்தா
மரையினு மென்னுளத்து
மெழுஞ்சுட ரேதிரு வேயண்ட
கோளங்க ளீன்றவளே. கஉ

ஈன்றவ ளேமத வேளை யறங்களை யேழுலகைத்
தேன்றவ ளேதன் முல்லைப்பல்
வாயிதழ்ச் செம்பவளம்
போன்றவ ளேதிரு மால்வளர்
பாற்கடல் போல் விழிகள்
ஆன்றவ ளேயணங் கேயமு
தேயென் னருந்தவமே. கஉ

அருந்தவ மேபுரி யன்பரவாநெஞ்சகத்தெழுந்த
பெருந்தவ மேபொன் னருளுரை
விந்தவப் பேரகம்வீற்
றிருந்தவ மேதிரு மாதே யெனக்கினி தாகுநலந்
தருந்தவ மேயைந் தருவே
தழைத்தவென் றுயகமே. கச

தாயகமே யெவ்வுலகுக்கும்யார்க்குந்தயாநிதியா
நாயக மேநின் சரணும் புயங்களை நாடுமன்பர்
தூயக மேவிளங் கும்விளக்காயவட் டேயருள்கூர்
சாயக மேயன்ன கண்ணியம்
போருகஞ் சார்பவளே. கரு

சார்பவ ளாதரிப் பாரிடத்தேவந்து சாலவருள்
கூர்பவ ளாதரத் தானெவர்க்
குங்களிக் கொவ்வையிதழ்
ழார்பவ ளானசெந் தாமரை
யாளரிமார்பிடங் கொண்

டேர்பவ ளாதரித் தேயெனை
யாண்டரு ளெங்கள்பங்கே. க௬.
பங்கையைக் கார்கொண்ட வண்டா
ரளகவம் பாரமதைக்
கொங்கையை வான்முகத் தைக்கனி
வாயைவண் கூர்விழியைச்
செங்கையைத் தாளை யருளொ
யத்திரு மேனியைக்கண்
டங்கையை யான்குவித் தேதொழு
வேனென் றுற் றுநந்தமே. க௭.
ஆனந்த ரும்பருண் டானவர்
தானவ ராயிரக்கண்
ணனந்த ரும்பரும் பங்கயத்
தானக்க ணழியங்கைப்
பானந்த ரும்கரும் பார்சொற்பொற்
பாவை யருள் சுரந்த
மீனந்த ருங்கருங் கட்கடை
நோக்கம் விரும்புவரே. க௮.
விரும்பேனின் சேவடி தேடிநின்
றேவிழி நீரெழுமுத்
தரும்பேனென் பூடுரு கேன்பெரு
கேனின தன்பினினெஞ்
சிரும்பேனென் றேவுன் கருணை
கடாக்கத்தை யேபெறுவேன்
சுரும்பேநின் றார்குழ றுயே
சரோருகத் தோங்கனமே. க௯.
அனமே யிளங்குயி லேமயி லேபுள்ளியார்மடமா
னினமே பசுங்கொடி யேபிடி
யேயணி யேந்துகொம்பே

புனமே வருங்கிள்ளே யேபிள்ளே
யேனகம் புக்கிருக்குந்
தனமே நலந்தரு வேதிரு
வேயெற்குன் ருள்கதியே. ௨௰

தாள்களே யாதரித் தாட்செய்கு
வார்தமர் தம்மடியா
ராள்களே யாதரித் தாண்டரு
ளாயன் றரக்கர்குலக்
கோள்களே யாதரித் தார்ந்தகண்
டாமணிக் கோதண்டத்தான்
றோள்களே யாதரித் தாய்துங்க
மாமலர்த் தூயவளே. ௨க.

தூயவ ரில்லறத் தாக்கமென்
கோதெய்வச் சோதிமின்ன
ராயவ ரில்லறத் தெய்வமென்
கோவெற்கு மார்க்கும்பெற்ற
தாயவ ரில்லறத் தாணுவென்
கோபஞ்ச தாருவென்கோ
மாயவ ரில்லறத் தாளெம்பி
ராட்டியை வாக்குவந்தே. ௨௨.

வாக்குவந் துன்னை வணங்கி
வழிபட்டு வாழ்த்திவினைப்
போக்குவந் தேநின் னருளினை
யான்பெறப் போந்தடைந்தேன்
நோக்குவந் தாதியம் போருகத்
தாயன்னை நுன்னருட்கா
ளாக்குவந் தென்னைக்கண் டாயடி
யேனு னடைக்கலமே. ௨௩.

அடைக்கலந் தாரணி வேந்தர்விண்
ணோர்தொண்ட ராடுகங்கை
சடைக்கலந் தாரணி நரன்முக
னிந்திரன் றுங்குதுழாய்ப்
படைக்கலந் தானணி வான்சுட
ரோரும்பொற் பங்கயப்பூ
விடைக்கலந் தாளுநன் மாமாது
கட்கடை யின்னருட்கே. உச.

அருளே புரிந்து பகிரண்ட
கோடிக ளாக்கறத்தின்
பொருளே யருட்சந்தி ரோதய
மேபெரும் போகந்தரு
மருளே விமல கமலமின்
னேமருண் மாற்றுமின்பத்
தெருளே விரிந்தென் மனத்தெழுந்
தூறித் தெளிந்தவன்பே. உரு.

அன்பே பெருகமெய் யேபுள
கிக்கமெய் யானநற்பே
ரின்பே பெறுகக்கண் ணீரே
ததும்பவல் யாக்கைதன்னோ
டென்பே யுருகநின் றேனே
புலம்பவந் தென்னிருகண்
முன்பே தருக திருவேநற்
செல்வமு மோட்சமுமே. உசு.

மோட்சங் கணித்துப தேசித்து
முன்வினை மோதுகட்க
டாட்சங் களித்தடி யேற்கரு
ளாய்மற்க டாவசுரர்

கோட்சங்க மர்த்தனக் கோட்டுமெல்
லார்தண்ட கோதண்டமா
வாட்சங்கு சக்கரத் தான்மார்பில்
வாழும் வனப்பணங்கே. உஎ.

வனப்பார வம்புயத் தாள்களுந்
தோள்களு மங்கலநாண்
டனப்பார முங்கழுத் துக்கனி
வாய்முத்துந் தாழ்குழலின்
கனப்பார முங்கயற் கண்களுங்
காணவென் கண்முனின்றே
யனப்பார வம்புயத் தாளடி
யேன்றனை யாட்கொள்வளே. உஅ.

ஆட்பட்ட வர்க்கருஞ் சொர்க்காதி
போகங்க ளைத்தருந்தொண்
ணூட்பட்ட வர்த்தன ராகத்
தருங்கலை ஞானந்தருங்
கோட்பட்டு ருத்துந ரும்பகை
யுங்கொடுந் தீவினையுந்
தூட்பட்டு கச்செய்யும் பூவாழும்
பொற்கதிர் சூழுமின்னே. உகூ.

சூழ்கதி ரோங்குபங் கேருகத்
தாளைத் தொழுபவர்க்கு
நீள்கதி ரிந்திரச் செல்வமுங்
கல்வியு நேர்ந்தளித்து
மாள்கதி நாளின் மகிழ்ந்துநித்
யாநந்த வைகுந்தமாம்
வாழ்கதி வீடுந் தருவாள்
வரோதய மாமங்கையே. நூ0.

கம்பன்.



# ஸ்ரீசங்கராசாரியார் சரித்திரம்.

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் இவ்வாறாக அமருகனென்னும் அரசனது சரீரத்தில் பிரவேசித்து, அவனுடைய அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகள் மூலமாய்க் காம சாஸ்திரத்தில் அனுபவஞானம் அடையவேண்டுமென்று தமக்கு விருப்பமிருப்பதாகச் சொன்னதைக்கேட்டதும், ஸ்ரீபத்மபாதர் மிகுந்த வணக்கத்துடன் மொழிந்ததாவது :—"ஸ்வாமின்! தங்களுக்குத்தெரியாத விஷயமொன்றுமில்லை. இருந்தபோதிலும் தங்களிடத்து எனக்குள்ள பக்தியினால் இப்பொழுது யான் பேசத்துணிந்தேன். அதைப்பொறுத்தருள வேண்டும். முன்னொரு காலத்தில் மத்ஸ்யேந்திரன் என்னும் மஹாத்மா, தனது சிஷ்யனாகிய கோரக்ஷன் என்பவனிடத்தில் தன்னுடைய சரீரத்தை ஒப்புவித்துவிட்டு, இறந்து

போய்க்கிடந்த ஒரு அரசனுடைய சரீரத்தில் தனது யோக வித்தையினால் பிரவேசித்து, அவ்வரசனது ஊருக்குச்சென்றார். அவ்வூரில் இவர் சென்ற நாள் முதல் மாதம் மும்மாரி பெய்து வெகு ஸுபிக்ஷமாக விருந்தது. இதைக் கண்ட மந்திரிகள் தங்களை யாளவந்திருப்பது யாரோ ஒரு மஹானென்பதை யறிந்துகொண்டு, அவ்வரண்மனையின் அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளைக்கொண்டு அவ்வரசனை வெகுவாக விநோதப்படுத்தும்படிச் செய்தார்கள். அந்நங்கையர்களின் மாயவலையிலீடுபட்டு, அம்மஹானும் தமது நிஜரூபத்தைமறந்து, விஷயங்களிலேயே மிகவும் பிரவிர்த்தியுள்ளவராக விருந்துவிட்டார். கோரக்ஷனும் வெகுகாலம் அவருடைய சரீரத்தைக் காத்துக்கொண்டிருந்தும், அவர் திரும்பி வாராமையைக்கண்டு, அவர் பிரவேசித்த அரசனிருக்குமிடத்தை விசாரித்து, அங்குச்சென்று, அவ்வரண்மனையில் அந்தப்புரஸ்திரீகளுக்கு நாட்யம் சொல்லி வைக்கும் வேலையிலமர்ந்து, அவ்வேந்தனுக்கு அந்தரங்கஸ்நேகிதனாகி, பிறகு ஓர் ஸமயத்தில் தனிமையாயிருக்கையில், அவ்வரசனுக்கு அவருடைய நிஜரூபத்தை ஞாபகப்படுத்த, அவரும் உடனே தாம் கெட்டுப்போனதை யறிந்து, மிகுதியாக வருத்தப்பட்டு, முன்போலத் தமது ஸொந்த சரீரத்தை யடைந்தாரென்று ஒரு கதையைக் கேட்டிருக்கிறேன். ஆகவே விஷயங்களில் பற்று உண்டாகுதல் யாது காரணம் பற்றியும் மிகக்கெடுதலே. நிகரில்லாத மஹத்தான நம்முடைய விரதமெங்கே? அதிநிந்திக்கத் தக்கதான காம சாஸ்திரமெங்கே? தங்களைப்போலொத்த மஹான்களே இவ்வாறு அபேக்ஷித்தால் அப்புறம் லோகத்தில் வ்யவஸ்தையில்லாமல் போய்விடாதோ? ஏனெனின்,

यद्यदाचरति श्रेष्ठस्तत्तदेवेतरो जनः ।
स यत्प्रमाणं कुरुते लोकस्तदनुवर्तते ॥

யத்யதாசரதி சிரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜன:
ஸ யத்பிரமாணம் குருதெ லோகஸ்ததனுவர்த்ததெ

"இவ்வுலகில் பெரியவர்கள் எதெதை ஆசரிக்கிறார்களோ அதையே தான் ஸாமான்ய ஜநங்களும் செய்கிறார்கள். அவர்கள் எதைப் பிரமாணமாக அங்கீகரிக்கிறார்களோ அதையேதான் இவர்களும் பின்றொடருகிறார்கள்."

என்று நீதிமொழியுளதன்றோ? ஆனால், தங்களுக்குத் தெரியாததை யான் புதிதாகத் தெரியப்படுத்தினதாகக் கருதக்கூடாது. ஸர்வஞ்ஞரான தங்களுக்குத் தெரியாததுமுண்டோ? எனக்குள்ள பிரேமையால் நான் ஞாபகப்படுத்தினேனேயொழிய வேறில்லை. வழுவிப்போயிருக்கும் ஞானமார்க்கத்தை ஸ்தாபித்து, பூலோகத்தில் ஸந்யாஸதர்மத்தை வெளிப்படுத்துவதற்காகவே பிரதிஞ்ஞை செய்து கங்கணம் கட்டிக்கொண் டவதரித்திருக்கும் தங்களுக்கு மின்னொருவர் எடுத்துக்கூறவுமேதேனு முளதோ? இல்லை. இல்லை. பிரணயத்தால் நான் சொன்னதை க்ஷமித்தருளல் வேண்டும்." என்றார். இதைச் செவியுற்றதும் ஸ்ரீ சங்கரபகவத்பாதர் புன்னகைகொண்டு தமது பிரிய சிஷ்யராகிய பத்மபாதரை நோக்கி "அப்பா! நீ சொல்வது வாஸ்தவமே; இருந்தபோதிலும், யான் மொழிவதைச் சற்றுக் கவனத்துடன் கேள். பரமார்த்தமான தத்வத்தை யுனக்குச் சொல்லுகிறேன். ஆஸக்தியிலிருந்தும் விடுபட்டவர்களுக்கு—அதாவது முற்றுமேபற்று நீங்கினவர்களுக்குக் காமத்தால் ஒருவிதக் கெடுதலும் வராது. ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் சரித்திரம் உனக்கு நன்றாகத் தெரியுமே. அவர் பதினாறாயிரம் கோபஸ்திரீகளுடன் பற்பல விதமாய் ரமித்தபோதிலும், ஸர்வஸங்க பரித்யாகிகளான மஹா யோகிகளுக் கெல்லாம் முதன்மையானவரன்றோ! இதனுண்மை யுனக்குத் தெரியாததோ? மேலும் யோகசாஸ்

திரத்தில் வஜ்ரோளிகையென்று சொல்லப்படும் யோகத்தில் ஸித்தியடைந்தவர்களுக்கு இந்திரியம் வழுவுதலால் எவ்வித பாதகமும் உண்டாகமாட்டாதென்பதை யறியாயோ? அவர்களுடைய ரேதஸ்ஸானது எப்பொழுதும் ஊர்த்வ முகமாயிருத்தலால், அவர்களுக்கு எச்சமயத்திலும் இந்திரியத்தை ஆகர்ஷணம் செய்துகொள்ளத் திறமையுண்டு. மேலும் ஸங்கல்பம்தான் எவ்வாறான வபிலாஷைக்கும் காரணமாயுள்ளது. அத்தகைய ஸங்கல்பமானது, ஸாக்ஷாத் கிருஷ்ண பரமாத்மாவுக்குச் சமானமான எனக்குக் கிடையவே கிடையாது. மேலும் ஸம்ஸாரத்திலுள்ள தோஷத்திலேயே கண்ணுயுள்ள ஒருவனுக்கு, காமத்திற்கு மூலகாரணமாயுள்ள ஸங்கல்பம் என்பது தொலைந்த தக்கணமே ஸம்ஸார பந்தமும் நசித்து விடுகிறதல்லவா? ஆதலால், இந்தக்கர்மா ஒரு விதத்தாலும் என்னைச் சேர மாட்டாது. இதனால் விதி ப்ரதிஷேத சாஸ்திரங்களுக்கு வையர்த்யம் வருகிறதே—அதாவது இன்னதுசெய்யலாம், இன்னது செய்யக்கூடாது என்று விதித்திருக்கிற வேத வசனங்களால் யாது பிரயோஜனமென்று எண்ணுவாயேயானால், அவை ஆத்ம தத்வத்தை விசாரியாமல் அஹம்பாவம்கொண்டு மிகத் தெரிந்தவனாக எண்ணிப் பிதற்றும் மந்த புத்திகளினுபயோகத்திற்காக ஏற்பட்டவை. தத்வத்தையறிந்து மஹா வாக்யங்களினனுபவத்தால் உண்டாகும் மேம்பாட்டை யடைந்தவன் ஆசிரமங்களிலிருந்தும் விடுபட்டதாக ஆத்மாவையுணர்ந்து, எப்பொழுதும் ஆத்மாநந்தத்திலேயே விருப்பானேயொழிய விதிக்கு வசனாகான். அது எங்ஙனமெனின், மண்ணிலிருந்துண்டாகும் கடம் முதலிய வஸ்துக்கள் எப்படி மண்ணைத்தவிர எக்காலத்தும் வேறல்லவோ, அதே மாதிரியாக பரமாத்மாவிடமிருந்துண்டான இந்த ஜகத் முழுவதும் பரமாத்மாவைத்

தவிர எக்காலத்தும் வேறல்லவென்பது ஸித்தம். ஆகவே, இத்தகைய நிச்சய புத்தியுள்ளவன் அனவரதமும் உலகம் பொய்யென் றுணர்ந்துகொண்டு தான் செய்யும் கர்மாவினால் ஒரு விதப்பலனையு மடைகிறதில்லை. உதாரணமாக ஸ்வப்னத்தில் செய்யும் புண்யமாவது பாபமாவது யாதொரு விதமானபலனையும் கொடுக்கிறதில்லையல்லவா? ஆகலின், மேற்கூறியஆத்மஞானி அசுவமேதயாகத்தை ஆயிரக்கணக்காய்ச் செய்தாலும் ஸரி; அல்லது பிரம்மஹத்தியை லக்ஷக்கணக்காய்ச்செய்தாலும் ஸரி, அவைகளால் சற்றேனும் பாதிக்கப்படமாட்டான். இதையே தான் பதஞ்சலி மஹரிஷியும் பரமார்த்த ஸாரத்தில் கூறியுள்ளார்.

हयमेधसहस्राण्यप्यथ कुरुते ब्रह्मघातलक्षाणि ।
परमार्थविन्न पुण्यैर्न च पापैर्लिप्यते क्वापि ॥

ஹயமேதஸஹஸ்ராண்யப்யத குருதெ ப்ரம்மகாதலக்ஷாணி
பரமார்த்தவின்ன புண்யைர்ன ச பாபைர்லிப்யதெக்வாபி

இதற்கிணங்க, வேதபுருஷனும் பின் வருமாறு சொல்லுகிறார்.

त्रिशीर्षाणं त्वाष्ट्रमहन्नरुन्मुखान्यतीन्शालावृकेभ्यः प्रायच्छत्तस्य मे तत्र लोमापि न मीयते स योमां वेद न ह वैतस्य केनचन कर्मणा लोको मीयते नस्तेयेन न भ्रूणहत्यया ।

திரிசீர்ஷாணம் த்வாஷ்ட்ரமஹன்னருன்முகாந்யதீன்சாலா விருகேப்ய: பிராயச்சத்தஸ்ய மெ தத்ர லோமாபி ன மீயதெ ஸ யோமாம் வேத நஹ வை தஸ்ய கேனசன கர்மணு லோகோ மீயதெ நஸ்தேயேன ன ப்ரூணஹத்யயா.

இதன் தாத்பர்யம்:—த்வஷ்டாவின் புத்திரனை திரிசிரஸை இந்திரன் ஸம்ஹாரம் செய்தான். வேதாந்த விசாரம் செய்யாத அநேக யதிகளைக் கோபத்தால் ஓநாய்களுக் கிரையாக்கினன். இத்தகைய கொடிய செய்கைகளால் அவனுக்கு ஒருவிதத் தீங்கும் உண்டாகவில்லை. இந்த ரிக்கினல் பாபம் ஸம்பந்தப்படாதென்றுச்சுதே

யன்றி புண்யம் ஸம்பந்தப்படாதென்று கூறலாகுமோவெனின், இதைக் குறித்தும் சுருதியிலேயே பின்வருமாதாரங்கள் காணப்படுகின்றன.

जनकोहवैदेहो बहुदक्षिणेन यज्ञेनेजे। अभयंवै जनक प्राप्तोऽसि।

ஜனகோஹவைதேஹோ பஹுதக்ஷிணேன யஞ்ஞேநேஜெ அபயம்வை ஜனக பிராப்தோஸி.

வைதேஹரான (தேகத்தில் பற்றில்லாத) ஜனகரானவர் வெகு திரவியம் செலவழித்து யாகங்கள் செய்தார். அப்படிக்கிருந்தும் கிஞ்சித்தேனும் பயமில்லாததும் பரமானந்த ஸ்வரூபமானதுமான மோக்ஷத்தை யடைந்தாரேயல்லாது மேற்சொல்லிய யாகங்களின் பலனை யனுபவிப்பதற்காக தேஹ சம்பந்தத்தை யடையவில்லை.

ஆதலால் தத்வத்தை யுணர்ந்தவன் இந்திரனையொப்ப பாபத்தாலும் தாழ்த்தப்படான்; ஜனகரையொப்ப புண்யத்தாலும் உயர்த்தப்படான். அவனுக்கு "ஏன் இந்த பாபகார்யத்தைச்செய்தோமென்றுவது, ஏன் இந்த புண்யமான கர்மாவைச்செய்யவில்லை" யென்றுவது மனதில் எவ்விதத்தாபமு முண்டாகாது. அவ்வாறே சுருதியிலும் காணப்படுகிறது.

तत्सुकृत दुष्कृते विधुनुत एनं ह वाव नतपति किमहं साधुनाकरवं किमहं पापमकरवम् ।

தத்ஸுகிருத துஷ்கிருதெ விதுனுதஏனம் ஹவாவ னதபதி கிமஹம் ஸாதுனகரவம் கிமஹம் பாபமகரவம்.

ஆதலால்தான், அப்பா, நான்சொல்வது, இந்தக்காமசாஸ்திரத்தை இச்சரீரத்துடனேயே பரிசீலனை செய்தாலும் ஒரு வித தோஷமும் வராது. இருந்தபோதிலும் சிஷ்டாசாரத்தை யனுஸரித்து அதைப் பரிபாலிக்கவேண்டுமென்னு மெண்ணத்தால் வேறொரு சரீரத்தையடைந்து இக்காரியத்தை யநுஷ்டிக்க யத்தனிக்கிறென் என்றார்கள். இதைக்கேட்டதும் சிஷ்யர்களுக்கிருந்த ஸந்தேகம் நீங்கி

ற்று. நமதாசார்ய ஸ்வாமிகளும் அவர்களுக்கு இன்னு மனேக ஸத்கதைகளைச் சொல்லிக்கொண்டு அவர்களுடன் ஒரு கிரி சிருங்கத்தை (மலையினுச்சியை) யடைந்து அவ் விடத்தில் நிர்மலமானவோரிடத்தில் சிஷ்யர்களையெல்லாம் கூட்டி அவர்களுக்குத்தாம் வேறு சரீரத்தில்பிரவேசித்துக் காமசாஸ்திரத்தை யாராய்ந்து திரும்புமளவும் அவர்கள் அங்கேதானே இருந்துகொண்டு தமது நிஜ சரீரத்தை மிக சிரத்தையுடன் பாதுகாக்க வேண்டுமென்றும், அதில் கொஞ்சமேனும் அஜாக்கிரதையாக விருக்கக்கூடாதென் றும் கட்டளையிட்டுப் பிறகு யோகாப்பியாஸத்தால் தமது சரீரத்தைவிட்டு, அமருகனென்னும் அரசனது சரீரத்தில் பிரவேசித்தார்கள்.

இம்மஹான் பிரவேசித்த தத்க்ஷணமே அவ்வரசனு டைய சரீரத்தில் ரக்தம் ஓடவாரம்பித்தது. முகத்திலும் ஜீவகளை தோன்றியது. இறந்து கிடந்த அமருகன் மெது வாகக் கையையும் காலையும் ஆட்டிக்கொண்டு கண்ணைத் திறந்து பார்த்தான். இதைக்கண்டதும் அவனது பத்னி களெல்லோரும் ஆனந்த பரவசர்களாய்க் கூத்தாடினார்கள். மந்திரிகளும் தேசம் முழுவதும் வாத்தியகோஷம் செய் வித்தார்கள். அன்றைய தினத்தில் அவ்வூரில் எங்கு கண் டாலும் உத்ஸாகமும் கோலாகலமுமாயிருந்தது.

இவ்வாறு அமருகன் மறுபடி ஜீவித்தெழுந்ததும் அரண்மனைக்குட் சென்று புரோஹிதர்களைக் கொண்டு சாந்தி முதலானதுகளைச் செய்வித்து,ஸ்வர்க்கலோகத்தில் இந்திரனைப்போல பூமியில் கிஞ்சித்தேனும் நீதிநெறி தவ ருது ஆண்டுவந்தார். இவருடைய கீர்த்தி எண்டிசைக ளிலும் பரவியது. பிரஜைகளெல்லோருமே இவரது ஆட் சியில் அதுவரையில் கண்டறியாத ஸௌக்கியங்களையெல்லாம் அனுபவித்தார்கள். மந்திரிகளும் இவருடைய அபூர்வ

ஸாமர்த்தியத்தையும், உதாரகுணத்தையும், வாக்கின் காம்பீர்யத்தையும், புஜபராக்கிரமத்தையும், எல்லாவற்றிற்கும் மேம்பட்ட மேதையையும் கண்டு மிகவும் வியந்தார்கள்.

அந்தப்புரத்திலுள்ள ஸ்திரீகளும் இவரது ஸௌந்தர்யத்தையும், காமசாஸ்திரத்தில் இவருக்குள்ள பாண்டித்யத்தையும், எப்பொழுதும் புதிது புதிதாக இவர் செய்யும் காமலீலைகளையும், இவரது வாக்சாதுர்யத்தையும், மனதின் உத்ஸாகத்தையும், தேகத்தின் காந்தியையும், புத்தியின் நுட்பத்தையும் கண்டு மிகக்களித்து, ஸதா இவருடன் ரமித்து, விஷயானந்தத்தில் மூழ்கினார்கள். சுருக்கிச் சொல்லுங்கால் இவர் அரசாண்டகாலம் கலியுகமாயிருந்த போதிலும் கிருதயுகம்போல் எல்லாருக்கும் தோன்றியது. காலத்தில் மழையும், தேசத்தில் ஸுபிக்ஷமும், பாபத்தில் பீதியும், மோக்ஷத்திலாசையும் உண்டாயிற்று. இவற்றையெல்லாம்ஆலோசிக்குமிடத்துமந்திரிகளுக்குஓர்வித ஆசங்கையுண்டாயிற்று. நம்முடையவும் நமதுபிரஜைகளுடையவும் அதிர்ஷ்ட வசத்தால் நமது அரசன் மீண்டும் உயிர்த்தெழுந்ததுமன்றி அவர் முன்போலல்லாமல் வேறுக மாறி அபார ஸாமர்த்தியத்துடன் ஸர்வஞ்ஞராக விருப்பதும் நம்மெல்லோருடையவும் பாக்கியமே. ஆனால் நன்காராயுங்கால், நமது அரசனே இவர் என்று தோற்றவில்லை. யாரோ ஒரு மஹான் நம்மிடத்திக்கருணைகூர்ந்துநமதுபூர்வஜன்ம ஸுகிருதவசத்தால் இவ்வுடலில் பிரவேசித்து இருக்கிறார் போலும். ஆதலின் இவர் எப்பொழுதுமே நம்மையாண்டு கொண்டு இங்கேயே இருக்கும்படியான உபாயத்தைத் தேடவேண்டும். இம்மஹான் தமது நிஜ சரீரத்தை எங்கேயாவது விட்டுவிட்டுத்தான் இவ்வுடலுக்குள் வந்திருப்பர். அச்சரீரத்தை நாசப்படுத்தி விட்டோமே யானல் இவர் இச்சரீரத்திலேயே தங்கிவிடுவர் என்பதாக யோசி

த்து, ஏவலாளர்களைக் கூப்பிட்டு இப்பூமி முழுவதும் சுற்றி யலைந்து எந்த இடத்திலேனும் இறந்துகிடக்கும் சரீரங்கள் இருந்தால், அவை எந்தப் பிராணிகளுடையதா யிருந்தாலும் ஸரி, அவற்றை உடனே எடுத்துப் பொசுக்கிவிடும்படிக்கும், கொஞ்சமேனும் தவறாமல் அதிசீக்கிரத்தில் அவ்வேலையை முடிக்கவேண்டுமென்றும் கண்டிப்பான உத்திரவு கொடுத்தார்கள். இது இங்ஙனம் நிற்க,

நமதாசார்யஸ்வாமிகள் தமது நிஜசரீரத்தை விட்டுவந்த கிரிசிருங்கத்தில் அச்சரீரத்தை வெகு ஸாவதானத்துடன் அவர் சிஷ்யர்கள் பாதுகாத்து வந்தார்கள். ஓர் நிர்மலமான பிரதேசத்தில் அவ்வுடலைச்சுற்றிலும் எல்லோருமாக உட்கார்ந்துகொண்டு தங்களதுகுருவாகிய ஆசார்யஸ்வாமிகள் அருளிச்செய்த "भज गोविन्दं" பஜகோவிந்தம் என்று வழங்கும் சுலோகங்களைப் பாடிக்கொண்டும் அச்சுலோகங்கள் மாதிரியாகவே தாங்களும் புதிதாக கவனம் செய்துகொண்டும், ஸதா ஒருவருக் கொருவர் வேதாந்த விஷயத்திலேயே ஸத்காலக்ஷேபம் செய்துகொண்டும் இராப்பகலாகச் சோர்வின்றி வெகு ஜாக்ருகர்களாக விருந்தார்கள். மேற்கூறிய பஜகோவிந்தமென்னும் சுலோகங்களைத் தான் மோஹமுத்கர மென்று சொல்வார்கள். அதாவது மோஹத்தை தொலைக்கும் ஓர் சம்மட்டியென்று அர்த்தம். இந்த கிரந்தம் 12 சுலோகங்களுள்ளது. இதில் மிகவும் எளியநடையில்வேதாந்த விஷயங்களை பாமரஜனங்களுக்கு ஆசார்யஸ்வாமிகள் நன்கு போதித்திருக்கிறார்கள். வியாகரணம் முதலிய சாஸ்திரங்களை ஸதா ஸர்வகாலமும் பரிசயம் செய்துகொண்டு காலத்தைக் கழிப்பதில் பிரயோஜனமில்லை. அவை மரண காலத்தில் ஒருவனுக்கு முபயோகப்படமாட்டா. கோவிந்தனையே எப்பொழுதும் பஜனம் செய்யவேண்டும். அது தான் கரையேற்றும், எனப் பொருள்படும்.

भजगोविन्दं भजगोविन्दं भजगोविन्दं मूढमते।
संप्राप्तेसन्निहितेकालेनहि नहि रक्षति डुकृञ्करणे ॥

பஜகோவிந்தம் பஜகோவிந்தம் பஜகோவிந்தம் மூடமதே
ஸம்ப்ராப்தேஸந்நிஹிதேகாலெனஹினஹி ரக்ஷதிடுகிரிங்கரணே.

என்னும் சுலோகத்தைப் பல்லவியாகச் செய்து இப் பன்னிரண்டுசுலோகங்களையு மியற்றியிருக்கிறார்கள். இதை அனுஸரித்தே இவர்களுடைய சிஷ்யர்களும் அநேக சுலோகங்கள் செய்திருக்கிறார்கள். அவைகளைப்பற்றி விரிக்கிற் பெருகும்.

இவ்வாறு சிஷ்யர்க ளெல்லாரும் ஸ்ரீசங்கரருடைய சொந்தசரீரத்தைப் பாதுகாத்துக்கொண்டு தங்களது குருவானவர் திரும்பி வருகிறதற்கு நாளையெண்ணிக்கொண்டிருக்கையில், ஒரு நாள் அமருகனுடைய மந்திரிகளாலேவப்பட்ட ஸேவகர்கள் அவ்விடத்திற்கு வந்து அச்சரீரத்தைக் கண்ணுற்றதும் உடனே அதைக் கொண்டுபோய் தகனம் செய்யவேண்டிய யத்னங்கள் செய்தார்கள். சிஷ்யர்கள் வெகுவாக பேராடியும் அவர்கள் கேட்கவில்லை. முரட்டுத்தனமாய் அச்சரீரத்தை யெடுத்துக்கொண்டு ருத்திரபூமிக்குப் போய்விட்டார்கள். உடனே ஸ்ரீபத்மபாதர் முதலிய சிஷ்யர்கள் எல்லாரும் அமருகனுடைய அரண்மனை வாயிலண்டை உரக்க பஜனம் செய்துகொண்டு ஓடி வந்தார்கள். அரசனோ அச்சமயத்தில் அந்தப்புரத்தில் ஸ்திரீகளுடன் விஷயஸுகத்தில் ஆழ்ந்திருந்தனர். சிருங்காரரஸபிரதானமான கிரந்தம் கூட ஒன்று இச்சமயத்தில் இவ்வரசன் இயற்றியிருக்கிறார். அதற்கு **அமருகசதகம்** என்று பெயர். இந்த மாதிரியாக விஷயத்தில் மூழ்கிக் கிடந்த இவ்வரசனுடைய காதிற்படும்படி உரத்த குரல்களால் பின்வருமாறு பல சுலோகங்களை மேற்கூறிய சிஷ்யர்கள் பாடினார்கள்.

नेति नेत्यादि निगमवचनेन निपुणं निषिध्य मूर्तामूर्तराशिम् ।
यदशक्यनिह्नवं स्वात्मरूपतया जानन्तिकोविदास्तत्वमसि तत्वम् ॥

னெதி னெத்யாதி நிகமவசனென நிபுணம் நிஷித்ய
[மூர்த்தாமூர்த்தராசிம்
யதசக்யநிஹ்நவம் ஸ்வாத்மரூபதயா ஜானந்திகோவிதாஸ்
[தத்வமஸி தத்வம்.

ஓ! ராஜனே! தாங்கள் ஸாதாரணமான அரசனல்ல. இதுவன்று, இதுவன்று என்று வேதவசனங்களால் ஸமஸ்தசராசரங்களும் நிஷேதிக்கப்பட்டு—ஆனால் போகிகளுடைய ஸ்வாத்மானுபவத்தினால் முற்றுமே ஒன்றுமல்லவென்று மறுக்கக்கூடாததாயும் மஹான்களுக்குமட்டில் தெரிந்ததாயும் எந்த வஸ்துவிருக்கிறதோ அதுவே தான் தாங்கள்." என்று இதுமாதிரியான பற்பலசுலோகங்கள் அவ்வரசன் காதிற்படவே அவனுடலிலிருந்த ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளும் திடீரென்று அச்சரீரத்தை விட்டகன்று தமது நிஜசரீரத்தைத் தாம் விட்டுவந்தப்பிரதேசத்தில் காணாமையால் உடனே ருத்திரபூமிக்குச்சென்று அங்கு அதை ராஜகிங்கரர்கள் சிதையில்வைத்து தஹனம்செய்ய வாரம்பித்திருப்பதைக்கண்டு ஜடிதியில் அதற்குள் பிரவேசித்தார்கள். மீண்டும் உயிர் வந்ததையும் கவனியாமல் அக்கிங்கரர்கள் நெருப்பைப் போட்டுவிடவே இம்மஹானும் அச்சமயத்தில் லக்ஷ்மீந்ரிஸிம்ஹனை பனிரண்டு சுலோகங்களால் துதிசெய்தனர்.

श्रीमत्पयोनिधिनिकेतन चक्रपाणे भोगींद्रभोगमणिरञ्जित पुण्यमूर्ते ।
योगीश शाश्वतशरण्य भवाब्धिपोत लक्ष्मीनृसिंह मम देहिकरावलम्बम् ।

ஸ்ரீமத்பயோநிதிநிகேதன சக்ரபாணே போகீந்த்ர
[போகமணிரஞ்சிதபுண்யமூர்த்தே
யோகீச சாச்வதசரண்ய பவாப்திபோத லக்ஷ்மீந்ரிஸிம்ஹ
[மம தேஹிகராவலம்பம்.

இத்தகைய சுலோகங்களால் லக்ஷ்மீந்ரிஸிம்ஹரைத் தமக்குக் கைகொடுத்துத் தூக்கும்படிப் பிரார்த்திக்க அத்

தேவரும் உடனே பிரஸன்னராகி தமது கருணையால், ஜ்வலித்துக்கொண்டிருந்த அக்னியை யணைத்து, கட்டுகளையெல்லாம் அறுத்து, தமது கையாலேயே ஆசார்யஸ்வாமிகளைத் தூக்கி விட்டுப் பிறகு அந்தர்த்தான மாயினர். இதைக்கண்டதும் அங்கிருந்த வரசனது வேலையாட்கள் பயந்து நடுநடுங்கி யோட்டம்பிடித்தார்கள். நமதாசார்ய ஸ்வாமிகளும் உடனே தமது சிஷ்யர்களிடம் வந்து சேர்ந்தார்கள். அவர்களைக் கண்டதும் அச்சிஷ்யர்களுக்கிருந்த ஸந்தோஷத்திற்கோரளவில்லை. வெகுகாலம் விட்டுப்பிரிந்திருந்ததினால் தங்களது குருவைக் கண்டதும் அவர்களைச் சுற்றிச் சுற்றி ஆனந்தத்தால் கூத்தாடினார்கள். பிறகு ஸ்வாமிகளும் இவர்களுடன் ஸரஸ்வதியைப்பார்க்க மீளவும் மாஹிஷ்மதிநகரம் சென்றார்கள். அவ்விடத்தில் ஸ்ரீ சங்கரரைக் கண்டதும் ஸ்ரீமண்டனமிசரரும் வெகுவாகப் பணிந்து மிகக்களித்து தம்முடைய கிருஹம் சரீரம் முதலிய ஸமஸ்தத்தையுமே அவர்களுக்கு அர்ப்பணஞ் செய்து விட்டார்கள். ஸரஸ்வதீ தேவியும் இவர்களைக் கண்டதும் பின்வருமாறு ஸ்தோத்திரம் செய்தாள்.

ईशानः सर्वविद्यानामीश्वरः सर्वदेहिनाम्

ब्रह्मणोऽधिपतिर्ब्रह्माभवान्साक्षत्सदाशिवः ॥

ஈசானஸ் ஸர்வவித்யாநாமீச்வரஸ் ஸர்வதேஹினாம்

பிரம்ஹணோதிபதிர்பிரம்மன்பவான்ஸாக்ஷாத்ஸதாசிவ: .

தாங்கள் ஸகல வித்தைகளுக்கும் ஈசன். ஸமஸ்த பிராணிகளுக்கு மீசுவரன். பிரம்ஹாவுக்கு மதிபதி. தாங்கள் ஸாக்ஷாத் ஸதாசிவனே.

"தாங்கள் இன்னும் காமசாஸ்திரத்தில் என்னை ஜயிக்காமலிருக்கும்பொழுதே நான் தங்களை ஸகல வித்யைகளுக்குமீசன் என்று கூறலாமோவெனின் தடையின்றி அப்படிச் சொல்லலாம். ஏனென்றால், தாங்கள் மனுஷ்யர்க

ளுடைய சரித்திரத்தை யனுஸரித்துக் காம சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று தாமதித்தீர்களேயல்லாது, தங்களுக்குத் தெரியாததுமொன்றுளதோ. ஆதலால் தாங்கள் ஸர்வேசுவரனென்று சொல்வதிற் சந்தேகமில்லை" என்றாள்.

பிறகு காமசாஸ்திரத்திலும் ஸரஸ்வதி பின்வாங்கவே, அவள் செப்பினதாவது "தங்களிடத்தில் நான் தோல்வியடைந்ததில் எனக்கு ஒரு குறையுமில்லை. எப்படியெனின், ஸூரியன் அதிகப் பிரகாசமுள்ளவராயிருத்தலால் சந்திரனுக்கு ஏதாவது அவமானமுண்டோ. அதுபோல தங்களால் பராபவமடைகிறது மிகவும் சிரேஷ்டமே.

महत्परिभवः श्रेष्ठो न नीचादपि गौरवम् ।
कंसारेः पदघातेन कालीयस्य विभूषणम् ॥

மஹத்பரிபவ: ச்ரேஷ்டோ ந நீசாதபி கௌரவம்
கம்ஸாரே: பதகாதேந காலீயஸ்ய விபூஷணம்.

தாழ்மையான மனுஷ்யர்களிடமிருந்து அடையும் கௌர்வத்தைக் காட்டிலும் மஹான்களிடமிருந்து அடையும் பராபவம் மிக சிலாக்கியமே. கம்ஸனது சத்துருவாகிய கண்ணபிரானுடைய பாதத்தால் மிதிப்பட்டதுவும் காலீயனுக்கு ஆபரணமே.

இவ்வாறு துதிசெய்து "ஓ! பரமாத்மாவே! தங்களையானறிவேன். பிரம்ம லோகத்திற்குச் செல்ல எனக்கு அனுமதி கொடுக்கவேண்டும்" என்றுபிரார்த்தித்தாள். இதற்கு நமது ஸ்வாமிகளும் ஸரஸ்வதீ தேவியை வெகுவாக ஆமோதித்துத்தமக்கும் அவளது நிஜரூபம் நன்றாகத் தெரியுமென்பதைக் காட்டித் தாம் இனி துங்கா நதிக்கரையில் ஸ்தாபிக்கப்போகும் சாரதா பீடத்தில் அவள் ஸதா பிரஸன்னையாக விருக்கவேண்டுமெனவே, அத்தேவியு மதற்கிணங்கினாள்.

பின்பு, மண்டனமிச்ரரும் தமது பத்னி பூமியை விட்டு உயரக்கிளம்பிவிட்டதால் அவளுக்கு இனி ஒரு விதத் தீங்கும் நேராதென்பதை யறிந்து தமது திரவ்யங்களை யெல்லாம் ஸத்விநியோகப்படுத்தி, அக்னிஹோத்ராக்னியை விதிப்படித் தமக் குள்ளாகவே ஆரோபித்துக் கொண்டு, நமதாசார்யஸ்வாமிகளைத் தமக்கு ஸதுபதேசம் செய்துக் கிரம ஸந்யாஸ மீந்தருளும்படி யாசித்தார். ஸ்ரீ சங்கரரும் அவருக்கு "தத்வமஸி" மஹாவாக்யத்தை யுபதேசித்து ஸந்யாஸாசிரமத்தைக் கொடுத்து ஸுரேச்வராசாரியாரென்னும் பெயரையுமளித்தார்.



# நாமகள் துதி.

ஏரியை மாரன் றன்னை
யெரியுமா தூண்டி ஞேன்பால்
பேரிய கருணை மேவிப்
பிரியமொ டணைந்து நின்று
சீரிய மறைக ஞான்குஞ்
செப்புமா நடனஞ் செய்வாய்!
பாரியல் மரைமேற் றங்கும்
பாரதி யருள்செய் வாயால்.

அழகியே யழ்கெ லாம்வேட்
டமர்தர விளைந்த பாவாய்!
தொழுமுறை யறிய கில்லேன்
தொழுமவர் சரண்புக் கேனும்
விழைகிலேன் விழைவோர் தம்மை
விரும்பியு மிலனென் செய்கேன்
பழமறை பயிலு நாதன்
பரிவுகொண் டடையு நங்காய்!

கடிகமழ் துளவ மாயன்
கமலையை மார்பிற் கொண்டான்
மடவனம் பாகம் பூண்டான்
வன்னியைக் கரத்தி னேற்றான்
துடியிடை நின்னை நாவிற்
றெருகுமறைக் கிழவன் வைத்தான்
படி புகழ் மாதராருட்
பாரதி மேன்மை யென்னே!

கலையெனுங் கடலினிடைக்
கருதலு மறவியாகு
மலைபல வலைக்கும் வெந்நோ
யடற்கராம் வருத்துகிற்கும்
மெலிதரு மடிய னேனின்
மிகுமருட் புணையி லுய்த்தாள்
பவனுற விலங்கும் வேதன்
பரிவுட னணையும் பாவாய்.

அறிவினின் மிக்கா ரெல்லா
மாற்றலை யுடைய ரென்று
செறிதரு நூல்க ளியாவுஞ்
சிறப்பொடு பகரு மாற்றான்.
மறைநலங் கனிந்த வாயன்
மனைவிநின் னருள் பெற்றார்க்குக்
குறை யினி யேதுமில்லை
குவலய மதனின் மாதோ.

வண்டுறை குழலும் பொங்கு
மாமதி முகமும் பண்ணார்
கண்டெனு மொழியுஞ் சீர்சால்
கருணைவி ளங்கு நோக்கும்
ஒண்டொடிக் கரமுங் கொண்டெ
னுள்ளமெ னச்சொல் வெள்ளைத்
தண்மலர் மீதிருந்து விருப்
பொடுங் காத்த ளிப்பாய்.

எங்குமே விரியுங் கங்கு
லினிமையி னகற்று தற்கோ
துங்கமார் பிரபை பொங்குந்
தூயகை படிகங் கொண்டாய்
சங்கையி லறிவு வேண்டின்
தனிமையை நாடு மென்றே
யெங்களுக் குணர்த்த வோநீ
யிருந்தனை தனியே பூவில்.

சருக்கை இராமசாமி ஐயங்கார்

# காளிதாஸனும் ஸரஸ்வதியும்.

இவ்வுலகத்தில் காளிதாஸனுக்கு மேம்பட்ட கவி இன்னொருவரில்லையென்பது யாவருமறிந்த விஷயமே. எல்லா நாட்டார்களும் இக்கவியினது உயர்வை ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவரியற்றியிருக்கும் சாகுந்தளம் என்னும்நாடகமொன்றே இப்புவிக்குஓர் திலகம்போலுள்ளது. இவர் மாதிரியாக வாக்ஸரஸமும் அர்த்தபுஷ்டியும் வேறொருவருக்கும் வராது. இவர் சிருங்காரரஸத்தில் மிகத்தேர்ந்தவர். மஹாப்பிராம்மணர். ஈசுவரபக்தர். தாம் இயற்றியிருக்கும் கிரந்தங்களிலெல்லாம் மங்கள சுலோகத்தில் பரமசிவனையே தியானம் செய்திருக்கிறார். ஆதியில் இவர் மஹா மூடனாகவிருந்தவர். அக்காலத்தில் ஓர் அரசனுடைய குமாரத்தி மிகவும் விதுஷியாக விருந்தாள். அவளைக் கல்வியில் ஜயிப்பவர்கள்தாம் அவளைமணக்கவேண்டுமென்று அவ்வரசன் வெளியிடவே, உலகத்திலுள்ள ஸமஸ்த வித்வான்களும் வந்து அவளுடன் வாது புரிந்து தோல்வி யடைந்துபோனதும், அவர்கள் எல்லோருமாக ஒருங்கு கூடி இவ்வளவு வித்தியாகர்வமடைந்து தங்களையெல்லாம் அவமானப்படுத்திய அவளைப் பங்கப்படுத்த

வேண்டுமென்று தீர்மானித்து அனேகதந்திரங்கள்செய்து, ஸர்வ மூடனாயிருந்த காளிதாஸனை அவ்விராஜ குமாரிக்கு மணம் செய்வித்தார்கள்.

பிறகு சய்யாகிருஹத்தில் காளிதாஸன் முன்னதாகப் படுத்துறங்கிவிட்டதும், ராஜகுமாரி வந்து தனது தம்பலத்தை அவன் வாயிலுமிழ்ந்தாள். உடனே காளிதாஸன் ஏதோ உளரிக்கொண்டு அதைத் துப்பிவிட்டான். இதனுல் அவன் ஸர்வமூடன் என்பதை யறிந்துகொண்டு அப்பெண் அவனையெழுப்பி, உண்மையை யுரைக்கும்படி அதட்ட, அவனும் நடந்ததை நடந்தபடியே செப்பினுன். இதைக் கேட்டதும் அம்மாது மிக வருத்தமடைந்து அவ்வூரிலுள்ள காளி கோவிலுக்கு அக்கணமே போய் அந்த அம்மனிடம் ஞானமாகிற வரத்தைப்பெற்றுவரும்படிக்கும், அதுவரையிலும் தான் காத்திருப்பதாயும் அவனுக்குச் சொல்ல, அவனும் அவ்வாறே அக்காளி கோவிலுக்கு ஏகினுன். அங்கு அவ்வேளையில் அம்மன் வெளியில் போயிருந்ததைக்கண்டு அவன் உட்சென்று வாயிற்கதவை இறுக்கித் தாளிட்டுக்கொண்டான். சற்று நேரத்திற்கெல்லாம் அத்தேவியும் திரும்பி விரவே, தமது ஆலயத்தின் கதவு மூடப்பட்டிருப்பதையும், திறந்தாலும் திறக்க முடியாமலிருப்பதையும் கண்டு, உள்ளே யார்? என்று கேட்டாள். அதற்கு உள்ளிருந்தமூடன் தனதுவரலாற்றைச்சொல்லித், தனக்கு ஞானத்தையளித்த பிறகு தான் கதவைத் திறப்பதாக மொழிந்ததும், காளியும் அவனது யுக்தியால் ஸந்தோஷமடைந்து அப்படியே ஞானத்தைத்தருவதாக வாக்களித்தாள். பின்பு அவனும் கதவைத்திறக்க அவன் நாக்கில் அம்பாள் பீஜாக்ஷரத்தை யெழுதினுள். எழுதின தத்க்ஷணம் முதற்கொண்டே அவன் அருள்பெற்ற மஹா கவியாக ஆய்விட்டான். அங்கிருந்தபடியே உடனே அவன் அம்பாளை யாவரும்சிலாகிக்கத்தக்கதான சியாமளா தண்டகம் என்று சொல்லப்படும் தண்டகத்தால் துதிசெய்

தான். இது முதல் தான் இவருக்குக் காளிதாஸன் (காளியினுடைய அடிமை) என்று காரணப்பெயர் வழங்கியது. இவ்வரகவியும் அம்மனிடம் விடை பெற்றுக் கொண்டு தனது பத்னி காத்துக்கொண்டிருக்கும் அரண்மனையடைந்து தனது சய்யா கிருஹத்தின் கதவைத்தட்ட, உள்ளே விழித்துக்கொண்டு எதிர்பார்த்திருந்த அம்மாதும் अस्ति कश्चिद्वाग्विशेषः "அஸ்திகச்சித்வாக்விசேஷ:" வாக்கில் ஏதாயினும் விசேஷ மிருக்கிறதா? என்று கேட்டுக்கொண்டே திறப்பதற்காகக் கதவண்டை வந்தாள். இக்கேள்வியைச் செவியுற்ற காளிதாஸன் அந்தவிடத்திலேயே இக்கேள்வியிலுள்ள மூன்றுபதங்களையுமே ஒவ்வொன்றுக்கும் முதல் பதமாகக்கொண்டு மூன்று மஹா காவ்யங்களையுமியற்றினன். 'அஸ்தி' என்னும் பதத்தாலாரம்பித்து குமார ஸம்பவத்தையும், 'கச்சித்' என்பதால் மேகதூதத்தையும், 'வாக்' என்னும் பதத்தால் ரகுவம்சத்தையும் செய்துமுடித்தான். இவ்வாறு ஸரஸ்வதியினிடத்து வரம்பெற்றுத் தனக்கு நிகர் ஒருவருமில்லாமல், அதிக மேம்பாட்டுடன் இருந்த இக்கவிக்கு அனேக ஸமயங்களில் வாக்தேவீ பிரத்யக்ஷமாகி அனுக்கிரஹித்திருக்கின்றனர். அவையெல்லாவற்றையும் விரிக்கிற் பெருகுமாதலால், ஒன்றுமட்டும் இங்கு எடுத்து எழுதுவோம்.

முன்னொரு காலத்தில் தாரா நகரத்தில் போஜராஜன் நீதிநெறிவழுவாது செங்கோல் செலுத்திவருகையில், அவ்வரசனுடைய ஸபையில் காளிதாஸன் முதலிய ஸமஸ்த வித்வான்களும் ஒருங்குசேர்ந்திருந்தார்கள். இப்பரத கண்டத்திலுள்ள பல விடங்களிலிருந்தும் போஜராஜனுடைய கல்வித்திறமையையும், உதார குணத்தையும் கேள்விப்பட்ட வித்வான்கள் யாவரும் இச்சபைக்கு வந்து தத்தம் வித்யையைச் சோபிக்கச் செய்தார்கள். இவ்வாறு பிரதிதினமும் இவ்வரசன் சபைக்குப் புதிதுபுதிதாக வந்த வித்வான்களுக்கு அளவில்லை. இதனடுவில் ஒரு நாள்

அரசன் சபையில் வீற்றிருக்கும்பொழுது வாயிற் காப்போன் ஓடிவந்து, அரண்மனை வாயிலில் பவபூதியென்னும் ஒருவர் காத்திருக்கிறார் என்று அரசனிடம் தெரிவித்தான். அதைக்கேட்டதும் அவரை உடனே உள்ளே அழைத்து வரும்படி அரசன் கட்டளையிட, அவ்வாறே அடுத்த நிமிஷத்தில் பவபூதியும் அச்சபைக்கு வந்து சேர்ந்தார். வரும்பொழுதே இவர் அடியிற்கண்ட இரண்டு சுலோகங்களையும் சொல்லிக்கொண்டு அரசனைக் கண்டார்.

नानीयन्ते मधुनि मधुपाः पारिजातप्रसूनैः
नाभ्यर्थ्यन्ते तुहिनरुचिनश्चन्द्रिकायां चकोराः ।
अस्मद्वाङ्माधुरिमधुरमापद्य पूर्वावताराः
सोल्लासाः स्युः स्वयमिह बुधाः किं मुधाभ्यर्थनाभिः ॥

நாநீயந்தே மதுனி மதுபா: பாரிஜாதப்ரஸூனை:
நாப்யர்த்யந்தே துஹினருசினச்சந்த்ரிகாயாம் சகோரா:,
அஸ்மத்வாங்மாதுரிமதுரமாபத்ய பூர்வாவதாரா:
ஸோல்லாஸா: ஸ்யு: ஸ்வயமிஹ புதா:கிம் முதாப்யர்த்தனபி:.

பாரிஜாத விருக்ஷங்கள் புஷ்பித்ததும் அதிலுள்ள தேனுக்கு வண்டுகளை யார் கூட்டிக்கொண்டு வருகிறார்கள். நிலாப் புறப்பட்டதும் சகோரபக்ஷிகளை யார் பிரார்த்திக்கிறார்கள். அதுபோல நம்முடைய வாக்கின் இனிமையைக் கேட்டதும் ஏற்கனவே உள்ள புத்திமான்கள் தாமாகவே உல்லாஸப்படுவார்கள். நான் இதற்கென்று தனியே பிரார்த்தித்துக்கொள்ளவேண்டுவது அனுவசியம்.

नास्माकं शिबिका न कापि कटकाद्यालङ्क्रिया सत्क्रिया
नोत्तुङ्गस्तुरगो न कश्चिदनुगो नैवाम्बरं सुन्दरम् ।
किंतु क्ष्मातलवर्त्यशेषविदुषां साहित्यविद्याजुषां
चेतस्तोषकरी शिरोनतकरी विद्यानवद्यास्ति नः ॥

நாஸ்மாகம் சிபிகா ந காபி கடகாத்யாலங்கிரியா ஸத்கிரியா
நோத்துங்கஸ்துரகோ ந கச்சிதனுகோ நைவாம்பரம் ஸுந்தரம்,
கிந்து க்ஷ்மாதலவர்த்யசேஷவிதுஷாம் ஸாஹித்யவித்யாஜுஷாம்
சேதஸ்தோஷகரீ சிரோனதகரீ வித்யானவத்யாஸ்தி ந:.

நமக்குப் பல்லக்குக் கிடையாது. தோடா முதலியவாபரணங்களும் கிடையாது. உயர்ந்த குதிரையும் கிடையாது. பின்றொடரும் வேலையாட்களும் கிடையாது. அழகிய பீதாம்பரங்களும்கிடையாது.

ஆனால் நம்மிடத்தில் என்ன தானிருக்கிறதோவென்றால், இப்பூமியிலுள்ள ஸகல வித்வான்களுடையமனதை ஸந்தோஷிப்பிக்கிறதும், அவர்களுடைய தலையை வணங்கச்செய்கிறதுமான ஒப்புயர்வில்லாத சுத்தமான வித்யையிருக்கிறது.

இதைக் கேட்டதும் அச்சபையிலுள்ள வித்வான்களுக்கெல்லாம் மிகக் கோபமுண்டாயிற்று. ஆனால் காளிதாஸன் பேசாமலிருந்ததால் வேறொருவரும் ஒன்றும் பேசவில்லை. எவ்விதத்திலாவது காளிதாஸனுக்கும் பவபூதிக்கும் விவாதமுண்டாக்கிவிட்டுப்பவபூதியினுடைய கர்வத்தையடக்கவேணுமென்று அங்குள்ளவர்களுக்கெல்லாம் தோன்றிற்று. இதை யுத்தேசித்தே பாணனென்னும் கவி பவபூதியை நோக்கி "மார்புக்கு எதிரில் பாணம் வந்தால் மூச்சுக்கூட வெளிவருகிறதில்லை; அப்படியிருக்க இச்சபையில் உனக்கெதிரில் பாணன் இருக்கும்பொழுது இவ்வளவு படாடோபம் எதற்காகச்செய்யவேண்டும்" என்றார். இந்த பதிலை ஸகிக்கமாட்டாமல் பவபூதியானவர் வெகு கோபத்துடன் மொழிந்ததாவது.

हठादाकृष्टानां कतिपयपदानां रचयिता
जन:स्पर्धालुश्चेदहह कविना वश्यवचसा ।
भवेदद्यश्वोवा किमिह बहुना पापिनि कलौ
घटानां निर्मातुस्त्रिभुवनविधातुश्च कलहः ॥

ஹடாதாகிருஷ்டாநாம் கதிபயபதாநாம் ரசயிதா
ஜந:ஸ்பர்தாளுச்சேதஹஹ கவிநா வச்யவசஸா,
பவேதத்யச்வோவா கிமிஹ பஹுநா பாபினி கலௌ
கடாநாம் நிர்மாதுஸ்திரிபுவனவிதாதுச்ச கலஹ:.

மிகவும் கஷ்டப்பட்டுப் பலவிடங்களிலிருந்தும் பதங்களைத் தேடிப் பொறுக்கியெடுத்து ஏதோ சில ரசனைகள் செய்திருக்கும் ஒருவன், தான் எந்தப்பக்கம் திரும்பினாலும் அந்தப் பக்கமெல்லாம் தானாக வலிய ஓடி வரும்படி தன் வசத்திலிருக்கும் ஸரஸ்வதீ தேவியையுடைய கவியினிடத்துப் பொறாமை கொண்டானேயாயின் இதைப்பற்றி விஸ்தரிப்பானேன்? இந்தப் பாவம் நிறைந்த கலியுகத்தில் இன்றைக்கோ அல்லது நாளைக்கோ, குடங்களைச்செய்யும் குயவனுக்கும், மூன்றுலகங்களையும் செய்யும் பிரம்ஹாவுக்கும் சிருஷ்டிகர்த்

தாவென்னும் பெயருக்காகக் கலஹமுண்டாகப்போகிறது.

இந்த ஒரு சுலோகத்தோடு பவபூதி நின்றிருந்தால் அங்குள்ள வித்வான்களின் எண்ணம் நிறைவேறாமற்போயிருக்கும். ஆனல் பவபூதி இத்துடன் நில்லாமல் இன்னுமொரு சுலோகமும் சொன்னன்.

कालिदासकवेर्वाणी कदाचिन्मद्गिरा सह।
कलयत्यद्य साम्यं चेद्भीता भीता पदे पदे ॥

காளிதாஸகவேர்வாணீ கதாசின்மத்கிரா ஸஹ,
கலயத்யத்ய ஸாம்யம்சேத் பீதா பீதா பதேபதே.

காளிதாஸ கவியானவர் ஒவ்வொரு பதமாகப்பயந்து பயந்து பொறுக்கிச் சேர்த்தால் ஒருக்கால் என் வாக்குக்கு அது ஸமானமாகலாம் என்றார்.

இதைக் கேட்டதும் அச்சபையோர் எதிர்பார்த்தபடியே காளிதாஸன் எழுந்து "ஓ! பவபூதியே! நீர் மஹா கவியாகவிருக்கிறீர். ஆனல் உம்மை நீரே இவ்வாறு புகழ்ந்துகொள்ள வேண்டுவதில்லை. அனேகம் பண்டிதர்களால் சூழப்பட்ட இந்த தாராநகரத்ததிபதிக்கு நம்மிருவருக்குமுள்ள தாரதம்யம் நன்றாகத் தெரியும்" என்றார்.

இவ்வாறு போஜராஜனை மத்யஸ்தத்திற்கழைத்ததும் அவ்வரசனும் இவர்களை நோக்கி "நீங்களிருவரும் ஸூர்யாஸ்தத்தினுடைய முடிவை வர்ணியுங்கள்" என்றார். உடனே பவபூதி சொன்னதாவது.

मुक्ताभूषणमिन्दुबिम्बमजनि व्याकीर्णतारं नभः
स्मारं चापमपेतचापलमभूदिन्दीवरे मुद्रिते ।
व्यालीनं कलकण्ठमन्दरणितं मन्दानिलैर्मन्दितं
निष्पन्दस्तवका च चम्पकलता साभून्न जाने ततः ॥

முக்தாபூஷணமிந்துபிம்பமஜநி வியாகீர்ணதாரம் நப:
ஸ்மாரம் சாபமபேதசாபலமபூதிந்தீவரே முத்ரிதே,
வ்யாலீநம் கலகண்டமந்தரணிதம் மந்தாநிலைர்மந்திதம்
நிஷ்பந்தஸ்தபகா ச சம்பகலதா ஸாபூந்ந ஜாநே தத:.

சந்திரபிம்பம் முக்தாபரணம் போட்டதாக ஆயிற்று. ஆகாசத்தில் நக்ஷத்ரங்கள் சிதறிக்கிடந்தன. மன்மதனது வில் அசைவில்லாமலிருந்தது. நீலோத்பல புஷ்பங்கள் மூடிக்கொண்டன. மெது

வான மயூரத்வனியானது மந்த மாருதத்தால் இன்னும் மிருதுவாக்கப்பட்டது. சம்பகக்கொடியும் பூங்கொத்துக்கள் அசையாமல் ஸ்தப்தமாக விருந்தது. பின்பு எனக்குத் தெரியாது.

இவ்வாறு பவபூதி சொல்லியானதும், காளிதாஸன் வர்ணித்ததாவது.

स्विन्नं मण्डलमैन्दवं विलुलितं स्रग्भारनद्धं तमः
प्रागेव प्रथमानकैतकशिखालीलायितं सुस्मितम् ।
शान्तं कुण्डलताण्डवं कुवलयद्वंद्वं तिरोमीलितं
वीतं विद्रुमसीत्कृतं नाहे ततो जाने किमासीदिति ॥

ஸ்வின்னம்மண்டலமைந்தவம் விலுலிதம் ஸ்ரக்பாரனத்தம்தம:
ப்ராகேவ ப்ரதமானகைதகசிகாலீலாயிதம் ஸுஸ்மிதம்,
சாந்தம் குண்டலதாண்டவம் குவலயத்வந்த்வம் திரோமீலிதம்
வீதம் வித்ருமஸீத்கிருதம் னஹி ததோ ஜானே கிமாஸீதிதி.

சந்திரமண்டலம் வியர்த்தது. பூமாலையைக் கட்டுண்ட இருள் அவிழ்ந்து சிதறியது. மந்தஹாஸமானது ஏற்கனவே வெளிக்கிளம்பி மலர்ந்திருக்கும் தாழம் பூவின் நுனிபோலக் கொஞ்சியது. குண்டலங்களின் தாண்டவம் சாந்தத்தை யடைந்தது. ஆம்பல் புஷ்பங்களிரண்டும் மூடிக்கொண்டன. பவழத் தளிர்கள் ஸீத்காரத்தோடு காற்றை வீசின. அதன்பின்பு இன்னதாயிற்றென்பதை யானறியேன்.

இவ்விரண்டு சுலோகங்களையும் கேட்டதும் போஜராஜன் காளிதாஸனை நோக்கி, "உம்மை பவபூதிக்குச் சமானமாகச் சொல்லுதல் கூடாது" என்றார். உடனே பவபூதியும் "பின் என்ன சொல்லுகிறீர்கள்" என்று வினவ, அதற்கரசன் நீர் எவ்விதத்திலும் கவியென்றார். இதைச் செவியுற்ற பாணன் "பவபூதியைக் கவியென்றால், காளிதாஸனை என்னவென்றுசொல்லுகிறீர்கள் என, அரசனும் "ஓ! பாணகவியே! காளிதாஸன் கவியல்ல. ஆனால் பூலோகத்தில் ஸரஸ்வதியின் ஒரவதாரமே" என்றார். யாது காரணத்தால் அவ்வாறு சொல்கிறதென்று ஆக்ஷேபித்து இவ்வரசன் பக்ஷபாதத்தோடு பேசுவதாகத் தீர்மானித்தார் பவபூதி. காளிதாஸனும் அவ்வாறு அவர் தீர்மானிப்பது கூடாதென்றும், ஸரஸ்வதீ தேவியின் ஆலயத்திற்குச் சென்று அங்கு அத்தேவியின் முன்பாக ஸத்யமென்னும்

திராசைக்கட்டி, அதில் இரண்டு சுலோகங்களையும் நிறுத்தால் அவைகளுள் ஒன்றுக்கொன்றுள்ள தாரதம்யம்தெரியுமாதலால், அப்படியேசெய்யவேண்டுமென்றும் வேந்தனைப் பிரார்த்திக்க, அவரும் அதற்கிணங்கி எல்லோருமாகத் தேவியினுடைய ஆலயத்துக்குச் சென்றனர். அவ்விடத்தில் அம்பாள் ஸன்னிதானத்திற்கு முன்பாக மேற்சொல்லிய ஸத்யம் என்னும் திராசில் இரண்டு தட்டுகளிலும் இரண்டு சுலோகங்களையும் வைக்கவே காளிதாஸனுடைய சுலோகம் வைக்கப்பட்ட திராசுத்தட்டு கீழிறங்குவதையும் தன்னுடைய சுலோகமுள்ள தட்டு மேல் செல்லுவதையும் கண்ணுற்று பவபூதி ஸரஸ்வதியை மனதால் தியானித்தான். உடனே அத்தேவியாரும் தமது பக்தனை அச்சமயத்தில் கைவிடக்கூடாதென்று எண்ணித்தமது காதிலுள்ள சிரீஷ புஷ்பத்திலிருந்து ஒருசிறு துணுக்கை நகத்தால் கிள்ளி பவபூதியினது தட்டில் எறிந்தாள். அவ்வாறு எறியவே திராசு முன்னிருந்த நிலைமைக்கு மாறுபட்டது. இதையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த காளிதாஸன் பின்வரும் சுலோகத்தால் அம்பாள் செய்த காரியத்தை வெளியிட்டான்.

अहो मे सौभाग्यं मम च भवभूतेश्च भणितं
धटायामारोप्य प्रतिफलति तस्यां लघिमनि ।
गिरांदेवी सद्यः श्रुतिकलितकह्लारकलिका
मधूली माधुर्यं क्षिपतिपरिपूर्त्यै भगवती ॥

அஹோ மெ ஸௌபாக்யம் மம ச பவபூதேச்ச பணிதம்
கடாயாமாரோப்ய பிரதிபலதி தஸ்யாம் லகிமனி,
கிராம்தேவீ ஸத்ய: ச்ருதிகலிதகல்ஹாரகலிகா
மதூலீ மாதுர்யம் க்ஷிபதி பரிபூர்த்யை பகவதீ.

ஆஹா! என்னுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! எனக்கும் பவபூதிக்கும் விவாதமுண்டாய் நாங்களிருவரும் செய்த சுலோகங்களில் எது மேலானது என்று நிச்சயிப்பதற்காக அவைகளை திராசுத் தட்டுகளில் வைத்ததும், ஸரஸ்வதீ தேவியே பவபூதியினது சுலோகத்திலுள்ள குறையைப் பூர்த்தி செய்வதற்காக இப்பொழுது தான் தமது காதிலுள்ள கருநெய்தல் புஷ்பத்தின் ஓர் துணுக்கை அத்தட்டில் எறிகிறாளே.

இச்சுலோகத்தைக் கேட்டதும் வாகீசுவரியும் தாம் இந்த மாதிரியாக பொய் ஸாக்ஷி சொல்ல வந்ததாகக் காளிதாஸன் கண்டுபிடித்துச் சொன்னதால் வெட்கி, தாம் எறிந்த புஷ்பத் துணுக்கை மீளவும் எடுத்துக்கொண்டு போய்விட்டாள். திராசும் முன்போலக்காளிதாஸன் தட்டு கீழும் பவபூதி தட்டு மேலுமாக ஆயிற்று. இதைக் கண்டதும் பவபூதி ஸம்மதிக்கமாட்டேனென்றான். இத்திராசு ஒரு ஸமயம் இருந்த மாதிரியாக ஒரு ஸமயமிருக்கவில்லை. இத்துடன் மூன்று தடவை மாறிவிட்டது. ஆகையால் இதற்கு ஸத்யம் என்று பேரிருந்தாலும் இதை நம்பமுடியாது என்றான். உடனே காளிதாஸன் ஸாக்ஷாத் அம்மனையே நேரில் வரவழைத்தான். வந்ததும், பவபூதி அம்பாளை நோக்கி देवि ! कोऽहं ? தேவி! நான் யார் ? என்று கேட்டான். வாணியும் त्वं महाकविरसि நீர் மஹாகவி யென்றாள். உடனே வெகு வேகத்துடன் காளிதாஸன் चण्डि ! कोऽहं ? ஓ! சண்டி! நான் யார்? என்று கேட்டான்; இதற்கு அந்த புவனேசுவரியும் अहमेव நானே என்று சொல்லிக்கொண்டே அந்தர்த்தான மாயினள். உடனே அங்கு வந்திருந்தவர்களெல்லோரும் வெகுவாக ஆச்சரியமடைந்தார்கள். பவபூதியும் காளிதாஸனை ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து தன்னிடத்து எப்பொழுதும் கிருபை யிருக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான். பின்பு எல்லோரும் தத்தமிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள்.

# மஹிஷா ஸுர மர்த்தனம்

முன்னொருகாலத்தில் ரம்பன், கரம்பன் என்று இரண்டு அஸுரர்களிருந்தார்கள். இவர்களுக்கு மக்கட்பேறில்லாமையால் மிக வருத்தப்பட்டுக் கொண்டு அதற்காக தபஸ் செய்யவாரம்பித்தார்கள். ரம்பன்என்பவன் பஞ்சாக்னிமத்தியில் வெகுகாலம்தபஸ்செய்தும்ஒன்றும் பலனைக் காணாமையால் கடைசியாக தன் தலையைத் தானேதுண்டித்து ஹோமம்செய்தலாகிய மஹா உக்ரமான தபஸ்ஸை செய்யமுயன்றான். இவன் தனது இடது கையாலேயே தனது சிகையை உயரத்தூக்கிப்பிடித்துக்கொண்டு வலது கையால்கத்தியை எடுத்து வெட்டப்போகும் தருணத்தில் அக்னிபகவான் பிரத்யக்ஷமாகி "இதென்ன ஸாஹஸம்! இந்த ஆத்மஹத்தி எதற்காகச்செய்து கொள்ளுகிறாய்" என்று வினவ, ரம்பனும்தான் வெகுகாலமாகத்தபஸ்செய்தும் தனக்கு யாதொரு கேள்விமுறை இல்லாததால் தான் இவ்வாறு செப்பத் துணிந்ததாகச் சொன்னான். இதைக் கேட்ட அக்னி பகவான் அவ்வாறு செய்ய வேண்டாமென்று அவனைத்தடுத்து அவனுக்கு வேண்டியவரத்தைக் கேட்கும்படி ஆஜ்ஞாபித்தார். ரம்பனும் தான் செய்யத் துணிந்த உக்ரமான செய்கையை நிறுத்தி, தனக்கு அதிவீரனையும், நினைத்த ரூபங்களையெல்லாம் எடுத்துக் கொள்ளக்கூடிய திறமை யுள்ளவனையும், மூன்றுலகங்களையும்



மஹிஷாஸுரமர்த்தனி.

ஜயிக்கக்கூடினவனையும், ஒரு புத்திரன் வேண்டு மென்று பிரார்த்தித்தான். அக்னி பகவானும் அவ்வாறே கொடுத்தோமென்று அனுக்கிரஹித்தார். இந்த வரத்தை பெற்றுக்கொண்டதும், ரம்பன் மிகஸந்தோஷமடைந்து அக்னி பகவானை பிரதக்ஷிண நமஸ்காரங்கள்செய்து யக்ஷர்களால் சூழப்பட்ட ஸ்தானத்திற்குச் சென்றான். அவ்விடத்தில் தன்னுடைய விதிவசத்தால் ஏவப்பட்டவனாய் எத்துணையோ அழகுள்ள ஸ்திரீகளிருக்கும்பொழுதும் அவர்களையெல்லாம் தவிர்த்து ஒரு எருமை மாட்டை இச்சித்தான். உடனே அந்த எருமையும் கர்ப்பமாயிற்று. அது முதல் அந்தப் பிரியையான எருமையை வெகுவாக போஷித்து ரக்ஷித்து வந்தான்.

ஒரு ஸமயத்தில் அந்த எருமையினிடத்து மோஹங்கொண்டு ஒரு எருமைக்கிடா அதை நெருங்கியபொழுது ரம்பன் அதை வெருட்டி அடித்தான். அந்தக்கிடாமாடும் தனது கொம்புகளால் அவனை மார்பில் குத்திக் கொன்றுவிட்டது. இவ்வாறாக ரம்பன் இறந்ததும் அந்த எருமை மிகவும் துக்கமடைந்து கிடாசெய்யும் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் யக்ஷர்களைச்சரணமாகநாடிற்று. அவர்கள் அதை ரக்ஷிக்கவேண்டி அந்த எருமைக் கிடாவை அடித்து ஸம்ஹரித்தார்கள். பின்பு அவர்கள் ரம்பனை கிருதார்த்தனைச் செய்வதற்காக அவனது சரீரத்தை எடுத்து தஹனமும் செய்தார்கள். தனது கணவனை தஹனம்செய்வதைக் கண்ட அந்த மஹிஷியானது அக்காட்சியைக் கண்ணுறப் பொறுததாய்த் தானும் ரம்பனுடனேயே ஸஹகமனம் செய்வதாகத் தீர்மானித்துக்கொண்டு அந்த சிதையில் ஏறிற்று. உடனே அதன் கர்ப்பத்திலிருந்தும் ஜ்வலித்துக் கொண்டிருந்த அந்த அக்னி மத்தியிலிருந்து ஒரு புத்திரன் வெளிக்கிளம்பினான். அவன் தான் மஹிஷாஸுரன்.

மஹிஷாஸுரன் தனக்கு வயது வந்தவுடன், தான் சாகாவண்ணம் வரம் பெறவேண்டி மிகவும் உக்ரமான தபஸ் செய்தான். இவனது தபஸ்ஸில் திருப்திபடைந்தவராய் பிரம்மதேவன் பிரத்தியக்ஷமாய் வந்து என்னவேண்டுமென்று கேட்டார். அதற்கவன் தனக்கு சாவில்லா

மலிருக்கும்படி அனுக்கிரஹிக்கவேண்டினன். இதைக் கேட்டதும் பிரம்மா அந்தவரனைக்கொடுக்க முடியாதென்றும் உலகத்தில் உண்டாகிற ஸமஸ்தத்திற்கும் நாசமென்பது ஸித்தமென்றும் ஆனதால் அதைத்தவிர்த்துவேறு எந்த வரம் கேட்டாலும் கொடுப்பதாக வாக்களித்தார். மஹிஷாஸுரனும் தன்னை யெதிர்க்கக்கூடியபெண்பாலார் யாரிருக்கிறார்களென்று எண்ணிக்கொண்டு தனக்கு தேவதைகள், அஸுரர்கள், மானவர்கள் முதலிய எந்த புருஷர்களிடத்திருந்தும் மரணமில்லையென்று வரம் கொடுக்கவேண்டுமென்றான். பிரம்மாவும் அதேமாதிரியாக வரத்தைக்கொடுத்து உனக்கு எப்பொழுதாயிருந்த போதிலும் மரணம் ஸ்திரீகையால் தானென்று சொல்லிப்போய் விட்டார்.

இதன் பின்பு மஹிஷாஸுரன் செய்த அட்டஹாஸங்களுக்கோர் வரம்பில்லை. பூலோகம் முழுவதும் ஜயித்து ஏகாதிபத்தியத்திற் குள்ளாக்கினன். ஸ்வர்க்கத்தில் தேவதைகளையும் தனக்குத்தோன்றியபடி யெல்லாம் ஹிம்ஸித்தான். ஸ்வர்க்கத்தையும் ஜயிக்க விரும்பி இந்திரனுடனும் யுத்தத்துக்குச் சென்றான். இந்திரனும் ஸமஸ்ததேவதைகளுடனும் வந்து அவனை எதிர்த்தான். ஆயினும் அவனிடம் அடிபட்டு எல்லாத் தேவதைகளும் நாலா பக்கங்களிலும் ஓடினார்களேயன்றி, மஹிஷாஸுரனை ஜயிக்க ஒரு தேவதையாலும் முடியவில்லை. இத்தகைய அவமானத்தைதேவர்கள் அடைந்து, மஹிஷாஸுரனும் ஸ்வர்க்கத்திலும்தன்னைத்தடுப்பாரின்றித்திரியுங்காலத்தில் தேவர்களெல்லா மொருங்கு கூடி பிரம்மா ஈசுவரன் இவர்களுடன் மஹாவிஷ்ணுவிடம் சென்று இவ்வஸுரனைக் கொல்ல உபாயம் யாது செய்யலாமென்று யோசித்தார்கள். பிரம்மாவானவர் புருஷர்களிடமிருந்து மஹிஷாஸுரனுக்குச்சாவில்லையென்று வரமளித்திருப்பதால் அவனைக் கொல்லக் கூடிய ஸ்திரீ ஒருவளை சிருஷ்டிக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். உடனே மும்மூர்த்திகளிடமிருந்தும் திவ்யமயமான தேஜஸ் உண்டாயிற்று. மற்றைய தேவதைகளும் தத்தம் தேஜஸ்ஸையும் இத்துடன் கலந்தார்கள். இந்த தேஜஸ்ஸெல்லாம் ஒன்றாகச்சேர்ந்து அதிஸுந்தரமான ரூபத்துடன் கூடிய ஒரு ஸ்திரீயாக

மாறிற்று. அந்த ஸ்திரீயைக்கண்டதும் தேவர்களே ஆச்சரியமடைந்து அவளை ஸ்தோத்ரம் செய்தார்கள். அந்த ஸ்திரீக்கு பதினெட்டுக் கைகளிருந்தன. பின்பு தேவதைகளெல்லாம் ஒவ்வொருவரும் அந்த ஸ்திரீக்கு ஒரு ஆபரணமும் ஒரு ஆயுதமும் கொடுத்தார்கள். இவை யெல்லாவற்றையும் பெற்றுக்கொண்டு அந்த ஸுந்தரியும் மஹிஷாஸுரனை ஸம்ஹாரம் செய்யச் சென்றாள். இவளது வரவைக் கேட்ட அவ்வஸுரன் தூதர்களையனுப்பித் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும்படி அந்த அம்பாளைத் தூண்டி அழைத்துவரும்படிச் சொன்னான். இதைச் செவியுற்றதும் அத்தேவியும் சிரித்துக்கொண்டு தான் அவனை வதம் செய்ய வந்திருப்பதாகத் தெரிவித்தாள்.

மஹிஷாஸுரனும் பலவாறாகச் சொல்லியும் அவள் கேளாமையால் தனது ஸைன்யங்களையெல்லாம் அவளுடன் போர்புரியவனுப்பினான். அத்தேவியும் அச்சைன்யங்களையெல்லாம் ஒரே நிமிஷத்தில் தொலைத்து விட்டாள். இதைக்கண்டு மிகவும் வியந்து மஹிஷாஸுரன் தானே நேரில் வந்து தன்னை மணஞ்செய்து கொள்ளும்படி என்ன சொல்லியும் அவள் கேட்காமற்போகவே, தானே அவளுடன் யுத்தத்துக்கு ஆரம்பித்தான். இருவர்க்கும் மஹத்தான யுத்தம் நடந்தது. மஹிஷாஸுரனும் பலரூபங்களையெடுத்துக்கொண்டு அம்பாளுடன் போர்புரிந்தனன். ஒவ்வொரு ரூபத்திலும் அம்பாள் அவனை ஸம்ஹாரம் செய்ததும் உடனே வேறு ரூபமெடுத்துக்கொண்டு திரும்பினான். இவ்வாறு எல்லா ரூபமுமானவுடன் மஹிஷ ரூபமாகவந்தபொழுது ஈட்டியால் குத்திக்கொன்றாள். கடைசியாக மனுஷ்ய ரூபமாக வந்தபொழுது சக்ரத்தையெறிந்து கழுத்தை அறுத்தாள். அதோடு மஹிஷாஸுரனும் இறந்து கீழே விழுந்தான். தேவர்களெல்லோரும் புஷ்பவர்ஷம் வர்ஷித்தார்கள். அம்மனை வெகுவாக ஸ்தோத்ரம் செய்தார்கள். இவ்வாறாக லோகத்தில் அதர்மம் தொலைந்து தர்மம் நிலை நின்றது.

இந்தப் புராணகதையினது தத்வார்த்தத்தை பின்னர் ஒரு ஸமயம் வெளியிட முயலுவோம்.

# தர்சநதர்சநம்.

தர்சநம், ஸமயம், மதம் என்ற இம்மூன்றுசொற்களும்ஒருபொருளையுணர்த்துமவை. தர்சநமென்பதற்குப்பொதுவாகக் காட்சி யென்பதுபொருளாயினும், கண்ணுற்கண்டது போலவே பெரியோர் மெய்யறிவினுல் அறிந்த விஷயமென்பதுபற்றி, இந்தச் சொல் மதமென்னும் பொருளில் வழங்கப்பட்டு வருகின்றது. மதமென்பதற்கு மநநத்தினுல் நிச்சயிக்கப்பட்டதென்பது பொருள். மநநமாவது ஸாதகபாதகங்களை யாராய்ந்து பாதகங்களைவிலக்கி ஸாதகங்களைக் கொள்வது. ஸமயமாவது வியவஸ்தை; ஜனங்கள் உய்வதற்கு அநுகூலமானவற்றை விதித்து மாறுனவற்றை நீக்குவதென்பது தேர்ந்தபொருள்.

உலகத்தில் அறியவேண்டிய பொருள்களை யறிவதற்கு ப்ரத்யக்ஷம், அநுமாநம், சப்தம் என மூன்றுப்ரமாணங்கள் மனிதருக்கும் கிழப்பிறப்புள்ளப்ராணிகளுக்கும், ஸாதாரணமாயிருக்கின்றன. சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்தங்களைச் செவி, உணர்ச்சி, கண், நா, மூக்கு ஆகிய ஐம்பொறிகளினுல் முறையே அறிவது ப்ரத்யக்ஷம். அது எல்லா ப்ராணிகளுக்கு மிருப்பதைக்காண்கிறோம். அநுமாநமென்பது காணாற்கரிய பொருளைக் கண்டபொருளைக்

கொண்டு அறிவதாம். கைக்கெட்டாத கனி முதலியன, இரண்டிற்கும் ஸம்பந்தப்படக்கூடிய துறடு முதலியகருவிகொண்டு எட்டப்படுவதுபோல, காட்சிக்குப் புறப்பட்டபொருள் காட்சிக்கு அகப்பட்டபொருளினில் ஸம்பந்தங் கொண்டு நிச்சயஞ்செய்யப்படுகிறது. தூங்கியெழுந்தவன், வீதியில் ஜலமோடுவது, வீடுவாசல் மரஞ்செடி கொடிகளில் நீர்த்துளிகள் சொட்டிக்கொண்டிருப்பது முதலிய குறிகளைக்கண்டு, தான் நித்திரை செய்தபோது மழை பெய்ததாகத் தெரிந்துகொள்வது, மழையின்றி உண்டாகக்கூடாத மேற்சொன்ன குறிகள் தன் காட்சிக்கு அகப்பட்டதனாலல்லவோ? பசு முதலானவையும் இரையும் கையுமாக வருபவனைத் தொடர்வதும், கழியும் கையுமானவனைக் கண்டவுடனே வெருண்டோடுவதும், இக்குறிகளினால் அவர்களின் அன்பையும் பகையையும் தெரிந்து கொள்வதனாலுண்டாகின்றது. இவ்வாறு அநுமாநமும் ப்ராணிகளிடம் பொதுவாகவழங்கி வரும் ப்ரமாணம். இவ்விரண்டு ப்ரமாணங்களுக்குமிடமாயிராத விஷயத்தைச் சப்தத்தினால் தெரிந்து கொள்வது ஸஹஜம். முன்னே நடந்து சென்றனவும் அந்யதேசங்களில் நடக்கின்றவுமான விருத்தாந்தங்களை வார்த்தா பத்திரிகைகள் முதலானவற்றினால் அறிவது சப்தப்ராமணத்தின் உதவிதான். கற்பித்த பசுக்களும், கிளி முதலியபறவைகளும் சப்தத்தினால் தெரிந்து கொள்வதையும் காண்கிறோம். ஆதலால் இவைமூன்றும் ஸாதாரணங்களான ப்ரமாணங்கள். உபமானம், அர்த்தாபத்தி முதலான ப்ரமாணங்களும் இவற்றில் அடங்கியவையாதலால் அவற்றைப் பற்றித் தனித்து நிரூபிப்பது முக்கியமன்று.

இதனால், அநுமானத்துக்குக்காட்சியே ஆதாரமென்பது முடிவு. சப்தத்துக்கும் சொல்லுமவன் காட்சிகாரண

மாகிறது. வெண்காக்கை பறந்தது என்பது முதலான வசனங்கள் சொன்னவனைப் பொய்யனென்று காட்டுவதன்றித்தான் பொருள்படுவதில்லையே; ஆதலின் முற்றும்யாரும் கண்டறியக் கூடாத விஷய மிருப்பதாகச் சாதிப்பது முடியாது. ஆத்மா, ஈச்வரன், பரலோகம் முதலிய ப்ரமாணங்கள் ஸ்பரிசிக்கத் தரமில்லாதவையாகையால் அவையுளவென்பதே ஒப்பற்பாலதன்றென்பது ஒரு ஆக்ஷேபந்தான். ஆயினும் இதில் நாம் அநுபவத்தை யாராய்ந்தால் இதனுண்மை வேறாக விளங்கும். நமது உட்பொருளாகிய அறிவென்பது சூரியனைப்போல என்றும் ஒளிகுன்றாத முதற் பொருளென்பது திண்ணம். நமது புலன்களின் வழியே சிதறி வரும் அதன் கிரணங்களையே நாம் அறிவாக நினைத்துப் புறப்பொருள்களையே பொருளாகக் கொண்டு அகப்பொருளின் கண் செல்லாது விடுகிறோம். சில இடக்குக் குதிரைகளுக்கு ஒட்ட ஒட்டப்பின் வாங்குவது இயற்கையாயிருப்பதுபோலவே தூய்மைபெற்ற மனத்துக்குப்புறம் நோக்கிப் புலன்களின் வழியே செல்வது வழக்கம். இதைத்தெரிந்துகொண்ட யோகீசுவரர்கள் மனத்தூய்மை யொன்றையே நாடிச் சில காலம் சரீரமும் இந்திரியங்களும் துன்பமுறுவதையும் பாராட்டாமல் தவம் முதலிய நற்கருமங்கள் புரிந்து உள்ளறிவை முன் வழிச்செலுத்தி ஆத்மாவையும் ஸாக்ஷாத்காரமாகக் கண்டு அகமகிழ்ச்சியடைந்ததுமட்டுமின்றி, சரீரமும் இந்திரியங்களும் அவற்றைப் போஷிப்பவர்களுக் கிருப்பதைவிட நிர்மலமும் ஸ்திரமுமாக இருக்கவும் பெற்றார்கள். இங்ஙனம் அகப்பொருள்கள் உளவென்றும் அவை தூயமனசுக்கு எட்டக்கூடியவையென்றும் தெரிந்துகொள்வதற்கு முன், இன்பங்களை விலக்கித் துன்பங்களைத் தருகின்ற மேற்கண்ட யோகாப்பியாசத்திலே ப்ரவர்த்திப்பது நே

ராது; யோகாப்பியாஸம் செய்து ஸித்திபெற்றாலன்றி அகப்பொருளின் உண்மை அறிதற்குரியதாகாது. இவ்வாறு ஒன்றைமற்றொன்று பொறுத்திருப்பது அந்யோந்யாச்ரயதோஷமாகாதா? ஆயின், இவ்வறிவும் தவமும் இரண்டு முண்டாவதெப்படி யெனின், உபதேச பாரம்பரையாகத் தொன்று தொட்டு வருகிற நம்பிக்கையொன்று இவ்விரண்டிற்கும் ஆதாரமாயுள்ளது. இந்நம்பிக்கை இந்தவிடத்தில் இந்த ஸமயத்தில் இன்னரால் ஏற்படுத்தப்பட்டதென்று நிர்ணயஞ் செய்யக்கூடாதபடி தேசகாலங்களை வியாபித்து எந்த ப்ரமாணங்களாலும் தர்க்கங்களாலும் மாற்றப்படாமல் நிலைபெற்றிருப்பதைப் பார்க்கையில் இந்நம்பிக்கை இயற்கையில் அமைந்திருக்கிறதென்பது தெரியும்.

மேலும் உலகத்தில் அறிவொன்றுமட்டுந்தான்முதற்பொருளென்பதும், புலன்களெல்லாம் அதன் ஒளி வெளிப்போக வாயில்களாயிருப்பதைத் தவிர்த்து வேறல்லவென்பதும் யாவருமறிந்த விஷயம். தூக்கத்திலும் மயக்கத்திலுமிருப்பவர்களை இறந்தவர்களைக் கைவிடுவதுபோலக் கைவிடாமலெதிர்பார்த்திருப்பது, வாயில்கள் மூடியிருப்பினும் உட்பொருளாகியஞானமானது ஒளிகுன்றாமலிருக்கிறதென்கிற நம்பிக்கைபற்றியன்றோ. ஆதலின், உடல், உறுப்புக்கள், புலன்கள், சப்த ஸ்பர்சரூபரஸ கந்தங்களாகிய விஷயங்கள் அடங்கிய உலகம், இவையாவும் மேற்சொன்ன அறிவிற்கு அடிமைகளாக அமைந்திருக்கின்றனவேயல்லாது முதன்மையானவையல்ல வென்பது நமது பகுத்தறிவினால் உணரும் விஷயம். இதன்பின் ஒன்றை ஒன்று கவர்ந்தே தம்தம்தொழில்களில் ஊக்கத்துடன் நடந்து வருவதாகத் தெரிகின்ற உலகமே ஜடபதார்த்தங்களாகிய ஐந்து பூதங்களின் தொகுதியாயிருப்

பதனுல் இதையும் நடத்துவதான பேரறிவொன்று இதற்கு முக்கியமா யிருத்தல் வேண்டுமென்றும் தெரிந்து கொள்ளக்கூடியது. இவ்வாறு ஊகித்தறிந்துகொண்டாலும், ஐயம் திரிபு நீங்குவதற்காக ஆதாரந் தேடி அதுவே ஞாபகமாக இருந்த ரிஷீசுரவர்களுக்கு ஸமாதி காலத்தில் திறந்திருந்த ஞானக்கண்ணுக்கு மந்திரங்கள் முதலிய ஞான சாதனங்களான வாக்கியங்கள் புலப்பட்டதனுல் நம்பிக்கை யுண்டாகி அவற்றில் உரைத்தவழியைப்பிடித்து மேன்மேலும் அநுஷ்டானஞ்செய்துவரவா ஆத்மஸாக்ஷாத்காரம், ஈச்வர தர்சனம் முதலான பெரும் பேறுகளைப்பெற்ற பெரியோர்களின் உபதேசங்களும் அவர்களுக்கு ஸமாதியில் தெரிந்தவேதமும், பின்னர் நம்பிக்கையையும் பக்தியையும்சிரத்தையையும் விருத்திசெய்துகொண்டுவருகிறதென்பது சாஸ்திரங்களால்தெரிந்துகொண்ட விஷயமாகலின், இதில்அந்யோந்யாச்ரயதோஷம் வாராது. இவ்வாறு முன்னோர்கள் பெற்றிருந்தஸித்தியும், முக்காலமறியும் சக்தியும் அவரொழுக்கமும் சரியானதென்பதை விளக்குவதனுல் அன்னோர் வாக்கியங்களைக் கிரஹித்தவர்களும் அவர்வழியே தாங்களும் சென்று பயன்பெற்று வந்தனர். உட்பொருளை யுணர்ந்தவர்களுக்கு வெளித்தோற்றத்தினிடம் அருவருப்பும், அதை உண்மையாக நம்பினவர்கள் மயங்கினவர்களென்று அவர்களிடம் இரக்கமும் உண்டாவது ஸஹஜம். அதனுல் அவர்கள் தாங்கள் சிரமப்பட்டுத் தெரிந்துகொண்ட அருமையான விஷயங்களை இடைவிடாது சிஷ்யபரம்பரைகளில் செலுத்தினர். இது நல்ல வழியென்பதற்குச் சாக்ஷிகள் இவ்வழியே ஒழுகுகின்றவர் உள்ளும் புறமும் சுத்தமாயிருப்பதும், எல்லா ப்ராணிகளையும் தம்மைப்போலவே நினைத்து ஒன்றாக்கும் தீங்கை நினைக்காமலிருப்பதும், தேகம் மனம் வன்

மையுடன் ஒழுக்கத்துக்குத் தக்கபடி நெடுநாள் ஜீவித்திருப்பதும் ஆகின்றன. இதற்கு மாறானவர் ஆசைக் கடலில் ஆழ்ந்து ஒழிவின்றி இரவும் பகலும் அலைந்து தேகத்தையும், இந்திரியங்களையும், மனத்தையும் பலஹீனப் படுத்தி வாழ்நாளும் குன்றிப் போவதும் காணப்படுகிறது.

இந்நல்லொழுக்கத்தின் முறையை ஸாங்கோபாங்கமாகத் தெரிவிப்பது தர்சநமாகின்றது. அதற்குக் கர்மம், ஞானம், பக்தி என மூன்று வகுப்புகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் ஞானமென்பது புருஷார்த்தம் [பேறு]. அதையடைபவன், அடைவதற்கு உபாயம் முதலியவற்றை மேலோருபதேசத்தினால் அறிவது. பக்தியென்பது ஈசுவரன்கண் நாதனென்ற மேம்பாட்டுடன் அன்புவைத்து மனத்தைநிலைநிறுத்துவதேயாம். இவற்றிற்கேற்பச்சாஸ்திரங்களில் விதித்த நல்லொழுக்கங்களைவிடாமல் நடப்பதுதான்கர்மம். இம்மூன்றனுள் ஒவ்வொன்றைத்தலைமையாகவும், மற்றுள்ள இரண்டையும் அதற்குத் துணையாகவும் கொண்டு அந்தந்த வழியாக ஸாதித்த பரம்பரைகளையொட்டி முடிவுபெற்றவர்கள் தம்தம் அநுபவமார்க்கங்களை உபதேசிக்கவும், அதைக் கைப்பிடித்த சிஷ்யர்களும் குருவாக்கியங்களில் வைத்திருந்த நம்பிக்கையைக் கொண்டு பயன் பெற்றிருக்கவும், அந்த மார்க்கங்களும் கிளைகிளையாகவியாபித்திருப்பதனால் மதங்களில் வேறுபாடுண்டாயிற்று. அவ்வேறுபாட்டையும், அதுவந்த வழியையும் பின்னர் ஆராய்வோம்.

திரு. ஈ. ஸ்ரீனிவாஸாசாரியார்.

# ஸரஸ்வதி ஸ்தோத்திரம்.

## வெண்பா.

அன்பர்கட் காதரவா யாங்கவர்நா வீற்றிருந்து
துன்பந் துடைத்துச் சுகங்கொடுத்துப்—பின்பு
வினைகெடுத்து வீடுதரும் வெள்ளைக் கமலத்
தனை செம்பொற் பாத மது.

தண்டா ரணிந்து சரஸ்வதிப் பேர்பூண்டு
வெண்டா மரைமீது வீற்றிருக்கும்—கண்டே
அடியா ரகத்தி லறிவமுத மூட்டி
வடுவிலாச் சொல்லை வழங்கு.

தாயகமது யெல்லாந் தழைவிக்கு நற்கலைக்கு
நாயகமா நிற்கும் நளினத்தாய்—நேயமுடன்
நின்னடியே வாழ்த்தி நினைந்தேன் நிலைபெறுமா
றென்னை யளிப்பா யினிது.

ம. வீ. மீனாக்ஷிசுந்தரமுதலியார். பி. ஏ.,
கோயமுத்தூர்.



## ஸரஸ்வதியின்பெருமையும் கருணையும்.

ஸரஸ்வதி, சிருஷ்டிகர்த்தாவாகிய பிரஹ்மதேவனுக்குரிய சக்தி. இந்தச் சக்தியைக் கொண்டுதான் நான்முகக் கடவுள் எல்லாவுலகங்களையும் உண்டாக்குகின்றார். இவளில்லையேற் படைத்தற்றொழிலுமில்லை. படைத்தற்றொழிலில்லையாகவே காத்தல் அழித்தல்களாகிய மற்றைய இரண்டு தொழில்களும் இல்லையாய் விடும். படைத்தன்றோ அங்ஙனம் படைக்கப்பட்ட பொருள்களைப் பின்னர்க் காத்து அழித்தல் வேண்டும். ஆகவே படைத்தல் காத்தல் அழித்தல்களாகிய முத்தொழில்களுக்கும் ஸரஸ்வதீ தேவியே முக்கிய காரணமென்பது தேற்றம். இந்தத் தேவி முக்குணங்களுள் முதன்மை பெற்ற ஸத்வகுண ஸ்வரூபிணியென்பதற்கிசைய அக்குணத்

திற்குரிய வெண்மை நிறத்தைத் தானும் உடையவளாய், வெள்ளைக் கலையுடுத்து வெள்ளிய வாபரணங்களைப் பூண்டு, ஸத்தியலோகத்தில் வெண்டாமரைமலரில் அங்குள்ளாரனை வர்க்குங்கட்புலனுகும்படி திருவுருக்கொண்டு வீற்றிருப்பினும், ஸகல லோகங்களிலும் ஆங்காங்குள்ள ஸமஸ்த ஜீவ கோடிகளின் வாக்கின் கண்ணும் மறைந்து ரூபமின்றியும் வஸிக்கின்றனள். இச்சரஸ்வதிக்கு எல்லாருடைய நாவின் கண்ணும் எழுந்தருளியிருந்து பேசுதல் முதலிய பற்பல ஒலிபற்றிய செயல்களைச் செய்வித்தலால் நாமகள், வாக் தேவீ, வாணீ எனவும், உலகத்துக்கு இன்றியமையாத கலைகள் பலவற்றிற்கும் அதிதேவதையாய் விளங்குகிறபடியால் கலைமகள், பனுவலாட்டியெனவும், இன்னும்இவைபோன்ற பலவித காரணங்களாற் பற்பல பெயர்களும் வழங்குவதுண்டு. இனி இக்கலைமகள் ஸகல வித்யாஸ்வரூபிணியாகிய தான் கற்கவேண்டுவதொரு கல்வியில்லையாயினும் ஒருவன் கல்வியில் எத்துணைத்தேர்ச்சியுடையனுயிருப்பினும் செருக்குற்றுச் சிலகாலம் தான் கற்ற கல்வியைத் திருப்பிக் கவனிக்காமல் விட்டொழியின் அவை முழுமையும் அழிந்து போம் என்பதை நம்போன்ற உலகத்தார் பலர்க்கும் அறிவுறுத்தப் புத்தகத்தையும், எல்லாமந்திரங்களின் வடிவமாயுமுள்ள தான் ஜபிக்கத்தக்க மந்திரம் வேறொன்றில்லையாயினும், இங்ஙனம் ஜபமாலையைக் கரத்திலேந்திக்கொண்டு மஹாமந்திரங்களை ஜபித்தவரே அஞ்ஞானமாகிய இருளையுடைய பிறவிப்பெருங்கடலைக் கடப்பர் என்பதைத் தெளிவிக்கும்படி தான் ஏதோ மந்திரஜபம் செய்கிறவள் போல ஸ்படிகமணி மாலையையும், தான்வாக் தேவதையென்பதற்கேற்ப வாக்கின் அகக்கருவி போன்ற முகத்தையுடையதும், மிக இனிய ஓசையை யுடையதுமாகிய வீணையையும் தனது திருக்கரங்களிற் கொண்டிருக்கின்றனள். அன்றிச்

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை."

"ஒருமைக் கட்டான் கற்ற கல்வி யொருவர்க்
கெழுமையுமே மாப்புடைத்து."

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனர் அருளிச்செய்தபடி செல்வங்களெல்லாவற்றினுள்ளும் கலைமகளாற் கொடுத்தற்பாலதாகிய செவிச்செல்வம் (கல்வி) ஒன்றுமே முதன்மையானதும் அழியாததுமாம். இன்னும் இச்சரஸ்வதீ தேவியின் கடாக்ஷம் ஒருவர்க்கு உண்டாய் விடுமேல் அவரும் பிறரை ஆக்கல் (க்ஷேமப் படுத்துதல்) அழித்தல்களாகிய வல்லமையுமுடையவராவர். உதாரணமாகத் தாம் பாடிய இராமாயணத்தை அரங்கேற்றுமாறு தில்லைக்குச்சென்று அங்குள்ள தீக்ஷிதர் பலரையும் ஓரிடத்திற் சேர்த்து வைத்துக்கொண்டு பிரசங்கிப்பதற்கு மிக முயன்றும் தம்மாற் கூடாமையாற் சமயம் பார்த்துக்கொண்டிருந்த கம்பர் ஒரு நாள் ஒரு தீக்ஷிதருடைய பிள்ளை பாம்பு கடித்து இறந்துபோனதினல் அதனை யடக்கஞ் செய்வதற்கு அவர்களனைவரும் ஒருங்குகூடி யிருந்ததைக் கண்ணுற்று, இது தான் நல்ல சமயம் என்பதாக வுன்னி, அவ்விடத்திற்குப் போய் இந்தச் சமயம் தவறினல் மறுபடியும் நீங்களனைவரும் ஒன்று சேருவது அரிதாதலால், என்னாற் பாடப்பட்ட இராமாயணத்தை இப்பொழுது கேட்க வேண்டும் என்பதாகச் சொன்னதும், அதற்கு அவர்கள் கம்பரை நோக்கிக் "குழந்தை யிறந்ததனல் வியசனம் பாராட்டிக் கொண்டிருக்கிற இப்பொழுது தான உமக்குச் சமயம் கிடைத்தது" என்பதாகக் கடிந்து சொல்ல, கம்பர் 'இக்குழந்தையை இப்பொழுது உயிர்ப்பித்தால்இது சமயம் ஆமன்றே' என்று சொல்லி, உடனே

"ஆழியான் பள்ளியணையே யவன்கடைந்த
வாழிவரையின் மணித்தாம்பே—பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற
நாணே யகல நட."

என்ற வெண்பாவையும், தாம் பாடிய இராமாயண த்து நாகபாசப்படலத்திற் சில செய்யுள்களையுஞ்சொல்லி அக்குழந்தையை உயிர்ப்பித்தனர். அன்றியும் கைக்கோளர் களால் தமது சாதிச்சிறப்பு விளங்குமாறு ஒருநூல் பாடித் தருதல் வேண்டுமென்று பிரார்த்திக்கப்பட்ட கூத்தர் என் னும்புலவரும் அவர்களைநோக்கி, 'நமது தலைப்பிள்ளைகளின் எழுபது தலைகளை அறுத்து அதற்குப் பரிசாக முன்னரே கொடுத்தால் அங்ஙனமே நாம் பாடித்தருவோம்' என்பதா கச்சொன்னதும், அக்கைக்கோளர் எங்ஙனமாயினும் நமது சாதிச்சிறப்பு உலகத்தில் விளங்குமாயின் அதுவே நமக் குப்போதுமானது என்று எண்ணித் தத்தம் பிள்ளைகளின் தலைகளைத் தாந்தாமே அறுத்து ஓரிடத்திற்குவிக்க, கூத்தர் அத்தலைக் குவியலையே தமக்கோராசனமாகக் கொண்டு அதிற் கம்பீரமாய் வீற்றிருந்து, தமதுசாதிபாராகிய கைக் கோளரது பெருமைகள் பலவற்றையுந் திரட்டி ஈட்டி யெழுபது என்னும் ஒரு நூலைப்பாடி முடித்துப் பின்னர் சரஸ்வதியை நோக்கி,

"கலைவாணி நீயுலகிலிருப்பதுவுங் கல்வியுணர் கவிவல்லோரை
நிலையாகப் புரப்பதுவு மவர்நாவில் வாழ்வதுவு நிசமேயன்றே
சிலைவாணனு விருந்தாயிரம் புயங்கள் துணிந்து முயர்சீவனுற்றான்
தலையாவி கொடுத்திடுஞ் செங்குந்தருயிர் பெற்றிட நீ தயை செய்
வாயே."

என்று பிரார்த்தித்து அறுபட்ட தலைகளை அவ்வவற் றின் உடலோடு ஒட்டச்செய்து, மாண்டபிள்ளைகள் மீண் டும் உயிர்பெற்று எழச்செய்ததனால் ஒட்டக்கூத்தர் என்ற காரணப்பெயரும் பெற்றனர்.

இம்மட்டோ? காளமேகப்புலவர் ஒரு நாள் தன்னைக் குறித்து 'சீ, யுன்னைக் கொடுப்பேனே' என்று பழித்துக் கூறிய பார்ப்பினியைக் கண்டு கோபங்கொண்டு,

"என்னைக் கொடுத்தா லிரக்கமுனக் குண்டாமோ
வன்னக்கமல முகவல்லியே—துன்னுமதக்
காட்டானைக் கோட்டுமுலைக் காரிகையே நீ பயந்த
கோட்டானைத் தானே கொடு."

என்று வசைபாடி, பாடிய அப்பொழுதே அவளது குழந்தை யிறந்துபோமாறு புரிந்தனர். இப்புலவரே ஒரு காலத்தில் திருமலைராயன் பட்டணத்தை மண்மாரி பெய்வித்து அழித்தனர். இங்ஙனம் எவரானுஞ்செயற்கரிய காரியங்களை மிக எளிதிற்செய்து முடித்த புலவர் எத்தனையோ பலர். இது நிற்க;

இக்கலைமகள் தன் கடாக்ஷம் பெற்ற தொண்டர்களுக்கு அவர்கள் வேண்டும்போதெல்லாம் "கடவுளை நம்பினோர்கைவிடப்படார்" என்பதற்கியைய அவரவர்வேண்டிய வடிவங்கொண்டு பிரசன்னமாகி, விரும்பிய எப்பொருளையுங்கொடுத்து அநுக்கிரகஞ் செய்வாள். உதாரணமாகக் கம்பர் புத்திரனை அம்பிகாபதி தனது குமாரத்தியைப் பிறரறியாமற் புணர்ந்து கற்பழித்த செய்தியைக் குறிப்பினாற் றெரிந்துகொண்ட சோழராஜன் பலமுறை கம்பரிடத்து இரகசியமாய் அவரது புத்திரன் துச்சரிதையைத் தெரிவித்து இனி அங்ஙனம் செய்யாதிருக்கும்படிக்கும் செய்வானேல் கட்டாயம் தண்டிக்கப்படுவான் என்றும் சொன்னதற்குக் கம்பர் தன் குமாரன் அம்பிகாபதி அவ்விதஞ்செய்திருக்கமாட்டானெனச் சாதித்தனர். அதைக் கேட்ட அரசன் தானே அவனது கெட்டநடையை வெளிப்படுத்துவதாகச் சொல்லிச்சில நாட்கழிந்ததும் ஒருநாள் கம்பர் முதலிய பலரை விருந்து செய்விப்பதாகத் தனது

கிரகத்திற்கு வரவழைத்து, இலையும் போடுவித்து, அவர்க ளனைவர்க்குந் தனது குமாரத்தியைப் பரிமாறும்படி திட் டஞ் செய்தனன். அப்படியே அவளும் நெடு நாளாகச் சமயம் கிட்டாமையாற் கண்ணுற் பார்த்துமறியாத தனது ஆசை நாயகனுகிய அம்பிகாபதியை அன்று காணலாம் என்று கொண்ட பேரவாவினுற் பதார்த்தங்கள் வைத்த ஒரு வட்டிலைக் கையிலேந்திக்கொண்டு மெல்லமெல்லப் பரி மாறுவதற்கு நடந்து வந்தனள். உடனே அதனைக்கண்ட அம்பிகாபதியும் அவளிடங்கொண்ட ஆசைமிகுதியால் அ வளது அனிச்சமலரினும் மெல்லியனவாகிய அடிகள் தரை யில் மிதித்தலால் நோகவும், பெயர்த்தலாற் கொப்புளங் கொண்டு புண்ணுகவும், முன்னமே அதிநுட்பமாய் ஒடி ந்து விழத்தக்கதாயிருக்கின்ற இடை யிப்பொழுது பதார் த்தவட்டிலாகிய இந்தப் பாரத்தைச் சுமத்தலாற் றடுமாற் றங்கொண்டு துவளவும் அவள் நடந்துவருதல் தகுதியல்லை வென்னும் பொருள் படும்படி ஒரு வெண்பாப் பாடத் தொடங்கி

"இட்டடி நோவ வெடுத்தடி கொப்புளிக்க,
வட்டில் சுமந்து மருங்கசைய."

என்ற இரண்டடிகளைச் சொன்னதும், வளவன் அங் குள்ள கம்பர்முதலிய பலரையும்நோக்கிக் "கேட்டீர்களா? அம்பிகாபதி சொன்னதை இப்படிக் கெட்டவெண்ணத் தோடு என் மகளைக் குறித்துச்சொல்லிய இவனை யென்ன தான் செய்யக்கூடாது" என்று கோபத்துடன் சொல்லும் பொழுது உடனே கம்பர் சோழராஜனைப் பார்த்து "நீர் சொல்லுகிறபடி யென் குமாரன் உமது மகளைப்பற்றிப் பாடவில்லை வீதியில் இப்பொழுது கொட்டிக்கிழங்கு விற் கிற ஒரு பெண் மகளது இயல்பைப் பற்றியன்றோ பாடி னுன் என்பதாகச் சொல்லி."

—"கொட்டிக்
கிழங்கோ கிழங்கென்று கூவுவாள் நாவில்
வழங்கோசை வையம்பெறும்,

என்பதாக அவ்வெண்பாவின் எஞ்சிய பிற்பாதியையும் பாடி முடித்தனர். அதைக்கேட்ட அபயன், கொட்டிக் கிழங்கு விற்றற்கு வீதியில் யாரேனும் ஒரு தையல் அப்பொழுது வந்திருப்பின் இக்கம்பர் சொல்லுவது மெய்தான் என்பதாகச் சொல்லியதனைத் தெரிந்துகொண்டு வரும்படி ஒரு சேவகனை வீதிக்கனுப்பினதும், கலைமகளும் இந்தச்சமயத்தில் நாம் சென்று காப்பாற்றுவிட்டால் நமது பக்தனாகிய கம்பன் பொய்யனாய் அவமானப்படுதலேயன்றி, அம்பிகாபதியும் மிகுந்ததுன்பப்படும்படி நேரிடுமென்பதாகத் திருவுளங்கொண்டு ஒரு மடந்தைப் பருவத்தையுடைய பெண் வடிவத்துடன் அங்கு "கோட்டிக் கிழங்கோ கிழங்கு" என்பதாகத் தனது அருமைத் திருவாக்கைத் திறந்து கூவிக்கொண்டு வந்தனள். இது மட்டோ. ஒரு நாள் சோழராஜன் கம்பர் ஒட்டக்கூத்தர் என்ற இரண்டு புலவரையும் நோக்கி, ஸ்ரீராம சரித்திரத்தைத் தமிழ்ப்பாவினால் "நீங்கள் இருவீரும் தனித்தனியொவ்வொரு பிரபந்தமாகப் பாடித்தருதல் வேண்டுமென்பதாகக் கேட்டுக்கொள்ள, அதுமுதல் ஒட்டக்கூத்தர் தமிழில் இராமாயணம் பாடத்தொடங்கிச் சுந்தரகாண்டம் வரையில் பாடி முடித்து யுத்தகாண்டம் இயற்றிக்கொண்டிருக்குமளவும் கம்பர் சிறிதும் பாடத்தொடங்காமலேயிருந்தனர். அதனையறிந்து அரசன் ஒருநாள் அவ்விருவரையும் வருவித்து "இராம சரித்திரம் எவ்வளவு பாடியாயிற்று" என்று வினவியதற்கு ஒட்டக்கூத்தர் யுத்த காண்டத்திற் கடல்காண்படலமளவும் ஆயிற்று என்றார் கம்பரோ தாம் ஒருபாட்டும் பாடாதிருந்தும், ஒட்டக்கூத்தரினுந் தாம் அதிகமாய்ப் பாடினதாகச் சொல்ல வேண்டு

மென நினைத்து 'அதற்கு மேல் சேதுபந்தனப் படல மளவும் பாடினே' னென்றார். 'ஆனால் அதனைச் சற்றே பிர சங்கஞ்செய்யும், கேட்போம்' என்று செம்பியன் கூற, கம்பர் உடனே அப்படலத்தை மாத்திரம் ஆசுகவியாகப் பாடி மனத்தில் அமைத்துக்கொண்டு அதில்

"குமுதனிட்ட குலவரை கூத்தரின்
திமிதமிட்டுத் திரியுந் திரைக்கடல்
துமிதமூர் புகவானவர் துள்ளினர்
அமுதமின்னு மெழுமெனு மாசையால்."

என்ற பாடலை யெடுத்துச் சொல்லிப் பிரசங்கித்தார். அதுகேட்ட ஒட்டக்கூத்தர் கம்பரை நோக்கி 'துளியைத் துமியென்றீரே, இதற்கு எங்கேனும் ஆதாரம் உளதா' என்றுஆக்ஷேபிக்க, கம்பர் 'இது, செய்யுள்வழக்கில் இன்று யினும், உலகவழக்கிலுள்ளது' என்றுரைக்க, கூத்தர் ஆனால் அவ்வுலகவழக்கை மெய்ப்பிக்கவேண்டும்; என்று வற்புறு த்த, 'நாளை அங்ஙனமே செய்வோம்' என்று சொல்லிப் பிரசங்கத்தை முடித்துப் பின்பு வீட்டிற்குச் சென்ற கம் பர் ஸரஸ்வதியைப் பிரார்த்தித்து அக்கலைமகள் பிரசன்ன மாய் அனுக்கிரகித்தபடி மறுநாளுதயத்தில் ஒட்டக்கூத் தரையும் சோழராஜனையும் இடைத்தெருவுக்கு அழைத் துச்செல்ல, அப்பொழுது நாமகள் அங்கு ஓர் இடைப் பெண்ணாகத் திருவுருக்கொண்டு சில குழந்தைகளுடனே குடியற்றதாகியவொரு பாழ்வீட்டில் தங்கித் தயிர்கடை கின்றவளாய், அருகிலிருந்த அச்சிறுவர்சிறுமியரை நோக்கி 'மக்காள்! உங்கள்மேல் மோர்த்துமி தெறிக்கப்போகிறது, தூரவிருங்கள் என்று சொல்ல, கம்பர் ஒட்டக்கூத்தரை நோக்கிக் 'கூத்தரே! அதனைக்கேட்டீரோ' என்று சொல்ல, அவர் அதனை ஒப்புக்கொண்டு அவ்வில்லத்துட் சென்று பார்க்குமளவில், அவண் இருந்த இடைப்பெண்ணும் சிறு

பிள்ளைகளும் தயிர்த்தாழி முதலியனவும் தமது கண்ணுக்குப்புலப்பட்டவுடனே மறைந்துவிட்டதனால், இது ஸரஸ்வதீதேவியின் திருவிளையாட்டே யென்று அறிந்து அதிசயித்தனர். இன்னும், அக்கம்பர் ஒரு காலத்தில் தமக்கும் சோழ ராஜனுக்கும் நேர்ந்த மனஸ்தாபத்தால் அவனை நோக்கி,

"மன்னவனு நீயோ வளநாடு முன்னதோ
வுன்னையறிந் தோதமிழை யோதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு."

என்னும் ஒரு வெண்பாவைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டுச் சேரநாட்டுக்குப் போய் அவ்வரசனைக் கண்டு, "நான் கம்பரிடத்தில் அடைப்பக்காரனாயிருந்தவன்; இப்பொழுது அவர் தமக்கும் சோழராஜனுக்கும் உண்டான மனஸ்தாபத்தால் தேசாந்தரம் போய்விட்டபடியால் ஜீவனார்த்தமாய்த் தங்களிடத்திற்கு வந்தேன்" என்பதாகச் சொல்லிச் சேரனிடத்தில் அடைப்பக்காரனாக வமர்ந்து சமயம் வாய்த்தபொழுது தமது கல்வித்திறமையால் அரசனை மனமகிழ்வித்து அவனுடைய அன்பையும் மதிப்பையும் பெற்றுச் சிறந்து வாழ, அதுகண்டு அச்சேர சமஸ்தான வித்வான்கள் பொறாமைகொண்டு ஓர் மயிர்வினைஞனுக்குச் சிறிது பொருள் கொடுத்து அவனைக்கொண்டு அடைப்பக்காரனாயிருந்த கம்பரை வெகுநாளுக்கு முன் தேசாந்தரம்போயிருந்த தனது சகோதரனென்று சொல்லிச் சாதித்து அவமானப்படுத்த முயன்றார்கள். அப்பொழுது கம்பர் ஸரஸ்வதியைத் தியானித்து 'தாயே! இந்த ஆபத் காலத்தில் அடியேனைப் பாதுகாக்கும்பொருட்டுத் திருவுளமிரங்கி உனது காற்சிலம்பிலொன்றை யென்னிடம் கொடுத்தருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, அவ்

வாறே கலைமகள் அனுக்கிரகித்ததனால் அவளுடைய வச்சிரச்சிலம்பொன்று உடனே கம்பர் கையிற் கிடைத்தது ; அதனை அவர் அரசனுக்குக் காணிக்கையாகக் கொடுத்து 'இதன் இனமான மற்றொன்று என் சகோதரனை இந்த மயிர்வினைஞனிடம் இருக்கிறது; அதனையும் பெற்றுக்கொள்ளவேண்டும்' என்று வேண்டினார். காண்பவர் கண் கூசும் படி யொளிவிடுகின்ற அவ்வொற்றைச் சிலம்பைக் கையில் வாங்கிப்பார்த்து ஆச்சரியங்கொண்ட அரசன் அந்த மயிர் வினைஞனை நோக்கி 'உன் பங்குக்குக் கிடைத்து நீ வைத்திருக்கிற மற்றொரு சிலம்பையும் கொண்டு வா' என்று சொல்ல, அவன் மிக அஞ்சி அஃது என்னிடம் இல்லை யென்றான். கம்பர் அதனைப் பொய்ச்சாதனையென்று வற்புறுத்திக்கூற, அரசன் அதன் உண்மையை வெளியாக்குமாறு ஏவலாளர்களால் அந்த அம்பட்டனைக் கட்டியடிப்பித்தான். அடி பொறுக்கமாட்டாமல் அவன் 'இந்த அடைப்பக்காரருக்கும் எனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை; இந்தச் சமஸ்தான வித்வான்கள் என்னைக்கொண்டு இப்படியெல்லாஞ் செய்வித்தார்கள்' என்று உண்மையைச் சொல்லி நிலை நிறுத்தினான். பின்னர் அரசன் கம்பரை நோக்கி 'இந்த அற்புதச் சிலம்பு உனக்கு ஏது என?, கம்பர் 'இது ஸரஸ்வதியினது என்று சொல்லி அதனை மெய்ப்பிக்கும் பொருட்டு ஸரஸ்வதியைத்தியானித்து ஸரஸ்வதியந்தாதி யென்னும் ஒரு நூலைப்பாடித் தோத்திரஞ் செய்தவளவில் நாமகள் கருணைகூர்ந்து ஒற்றைக்காற் சிலம்பு ஒலிக்க நடித்துக்கொண்டு கண்கூடாகத் தோன்றி 'எங்கே சிலம்பு?' என்று கம்பரைக் கேட்க, இவர் அரசன் கையிலிருந்த சிலம்பை வாங்கி அத்தேவியின் சிலம்பில்லாத மற்றொரு திருவடிக்கு நேரே நீட்ட, அச்சிலம்பு அத்திருவடியிற் போய் ஏறின மாத்திரத்தில், ஸரஸ்வதி அந்தர்த்தானமாயி

னள். இதுமட்டோ, காளமேகப்புலவர் திருமலைராயன் பட்டணத்திற்குச் சென்று அங்கு யமகண்டம் என்ற ஓர் வகை நிர்ப்பந்த கவி பாடுவதாகச் சம்மதித்துப் பாடிக் கொண்டு வரும்பொழுது அதற்கேற்பக் கரும்புள்ளி செம் புள்ளிகள் குத்தப் பெறுதன் முதலிய பலவித விகார வேடம்பூண்ட அப்புலவரது முகத்தில் தான் வசிப்பது தகு தியன்றாதலின் அவரது முகத்தைவிட்டுக் குதிகொண்ட ஸரஸ்வதி இச்சமயத்தில் நமது தொண்டனாகிய இவனைக் கைவிடலாகாது என்று கொண்ட திருவுள்ளத்தால் பாடுவ தில் தவறு நேர்ந்த அப்பொழுதே கொன்றுவிடும்படி அந் தத் திருமலைராயனால் நியமிக்கப்பட்டு அப்புலவர் முன்பு நின்ற யானையினது முகபடாத்தில் எழுந்தருளியிருந்து அச்சமயத்திலும் அவருக்கு வாக்கு அளித்து அருள் புரிந் தனள். அன்றியும் பக்தி சிரத்தையோடு தன்னைப் பூசித்து வந்த ஒட்டக்கூத்தருக்கும் ஒருகாலத்தில் பிரசன்னமாகித் தனது திருமுலைப்பாலை ஓர் வட்டிலிற்கறந்து புகட்டிச்சகல கலாநிலையம் என்னும் ஒரு புஸ்தகத்தையும் கொடுத்தருளி னாள். இவ்வாறு இக்கலைமகள் எத்தனையோ பல புலவர்க்கு அவரவர் பக்திக்குத் தகப் பிரசன்னமாயும் மறைந்தும் அவ்வச்சமயங்களில் வந்து நின்று திருவருள் புரிந்திருக் கின்றனள்.

இது நிற்க, இவ்வாணி உலகத்தார் பலரும் அஞ்ஞா னம் நீங்கி மெய்ஞ்ஞானம் பெற்றுய்ய இங்ஙனம் தன்ன ருள் வழிப்பட்ட புலவர் பலரால் பற்பல பாஷைகளாலும் நாற்பொருட்பயனையும் தரத்தக்க நூல்கள் பலவற்றைச் சொல்லுவித்ததேயன்றி யொரு சமயத்தில் தானே தன் னுடைய ஒரு கலையால் ஔவையார் என்னுந் திருப்பெய ரோடு இந்நிலவுலகில் அவதரித்துத் தமிழிற் பல நீதி நூல் களை யாவரும் உணர்ந்துகொள்ளுமாறு எளிய நடையில்

இயற்றியும், தன் ஸ்வரூபமாகிய அக்ஷரங்கள் பலவற்றுற் பல சங்கப்புலவராய்ப் பிறந்து அரிய பெரிய பல் செய்யுள்களைச்செய்தும், பொருளாராய்ந்தும் தமிழை வளர்த்தனள். விரிப்பிற் பெருகும்.

ஆகலின், இங்ஙனம் பல்லாற்றுலும் உலகத்துக்கு நன்மை புரிதலே தனக்குக் கடமையாகக்கொண்ட இந்த ஸாஸ்வதீ தேவியை நாமும் அனவரதமுஞ் சிந்தித்து வந்தித்து உய்வோமாக.

புத்தகம் படிகமாலை குண்டிகை பொருள்சேர் ஞான
வித்தகந் தரித்த செங்கை விமலையை யமலைதன்னை
மொய்த்த கொந்தள கபார முகிழ்முலைத்த வளமேனி
மைத்தகு கருங்கட்செய்வா யணங்கினை வணங்கல்செய்வாம்.

குரு. சுப்பிரமணிய ஐயர்.



# மல்லிகாமாருதம்.

காளிந்தியும் மல்லிகையை அவளது உயிர்ப் பாங்கியாகிய நவமாலிகையுடன் புஷ்பம் பறிக்கும் வியாஜத்தினால் அதேயிடத்திற்கு இட்டுக் கொண்டு வரப் போகின்றாள்." எனவே மந்தாகினியும் அகமகிழ்ந்து அவளை நோக்கி, "ஸாரஸிகே, நீ என் இப்பொழுது வெருண்ட பார்வையுடனும் விதிர்த்த அவயவங்களுடனும் ஏதோ அச்சமுற்றவள் போல் காணப்படுகின்றனை?" என, ஸாரஸிகை, "பகவதி, ஆம்; வாஸ்தவந்தான். இப்பொழுது அடியாள் சிறிது அச்சமுற்றவளாகவே யிருக்கின்றேன். ஏனெனில், சந்திரவருமனெனும் நமது அரசன் நமது மந்திரித் தலைவராகிய விச்வவஸுவுக்கு, 'நீ சொன்னவண்ணம் இந்தக்ஷணமே அம்பிகையின் ஆலயஞ்சென்று மல்லிகையை யாருக்கு மணக்கலாம்' என்று அம்பாளைக் கேள். 'அவளைச் சம்பரனுக்கே மணஞ்செய்வி' என்று அம்பிகை உத்தரவளிப்பாளேல் அப்பொழுது ஆக்ஷேபணையின்றியவளை நம் சம்பரனுக்கே கொடுப்பாயாக.' என்று ஆக்கினையனுப்ப, அம்மந்திரியும் அங்ஙனமே புரியுமாறு இராஜபுருஷர்கள் அநேகர்புடைசூழ அம்பிகாலயத்திற்குள் செல்வதை யான் கண்டேனம்மணி. அதனைத் தம்மிடத்தில் சீக்கிரம் தெரிவிக்குமாறு விரைந்து வந்தேன்." என்றாள். உடனே மந்தாகினியும், (தன்னுள்) "ஓகோ! நாம் நினைத்தபடியேயாயிற்று. நல்லதிருக்கட்டும்." என்று எண்ணிக்கொண்டு

ஸாரஸிகையை நோக்கி, "வத்ஸே, யானும் இப்பொழுது அம்பிகாலயத்திற்குத்தான் போகப்புறப்பட்டேன். ஆகலின் நீ யென்னைச் சீக்கிரம் அங்கு அழைத்துக் கொண்டுபோ." என்று சொல்ல ஸாரஸிகையும் மந்தாகினியைக் காளிகோவில் நோக்கி நடத்திச் செல்ல அக்காலை மந்தாகினி அவளை நோக்கி, "ஸாரஸிகே, மல்லிகைக்கும் மாருதனுக்கும் இப்பொழுது நிகழ்ந்திருக்கின்ற நேசத்தை நன்கு அறிந்துகொண்டு சம்பரகன் இவ்வித ஏற்பாடு செய்திருக்கின்றான் போலும்." எனவே ஸாரஸிகை, "பகவதி, அதற்கிணங்க அரயனும் அச்சம்பரகனுக்கு அநுகூலனாகவிருக்கின்றானே. இதற்கு என்செய்வது?" என்று விசனத்துடன் கேட்க, யோகினியும், "ஓ! பேதாய், ஸாரஸிகே, இது விஷயத்தில் நீ யேன் வருத்தமுறவேண்டும்? மூவுலகத்தோரும் முடிமேல் தாங்கும் ஆணையையுடைய வுமா தேவிக்கு முடிமன்னன் ஆக்கினைப்படி நடக்கவேண்டு மென்பது கடமையோ? மஹேச்வரியினது மகிமையை நீ அறியாய். அற்புத சேஷ்டிதங்களைப் புரியுமிவள் ஆதியில் வெற்புக்களுக்கரசனான இமய கிரிக்குப் புத்திரியாகப் பிறந்து உமையெனப் பெயர் பூண்டு மலரினும் மெல்லிய மேனியெனும் மாயவலையால் மதனனைச் செற்ற மஹேச்வரனது மனதையுங் கவர்ந்து அவரது அங்கத்தின் பாதியாயிருந்துகொண்டு அதினாலவர்க்கு அர்த்தநாரீச்வரன் எனப்பெயர் வழங்கச் செய்தனள். பின்னர் அப்பார்வதியே கொடிய வசுரர்களது கொடுமைகளை நீக்குமாறு சங்கு, சக்கரம், வில், வேல், அம்பு; கண்டையெனும் ஆயுதங்களால் துலங்கும் கரங்களையுடையளாய்த் தோன்றி, வெள்ளிய பிடரிமயிருடன் விளங்கும் கேசரியூர்தி யேறி அவுணர்களோடு அமர்புரிந்து அவர்களது சிரங்களைக்கொய்து சிவ கணங்களின் சேயிழையார்க்கு விளையாடும் பந்தாகத்தந்தருளினளன்றோ! ஆனதுபற்றி அசுரேந்திரர்களது மாயை கூட அம்மஹா மாயையைமாட்டுச் செல்லாதெனில் சம்பரகனது மாயை செல்லுமோ?" என்றாள். அதனைச்செவியுற்ற ஸாரஸிகையும், "ஆம்; தாம் புகல்வது வாஸ்தவந்தான். மகிஷாஸுரனது மண்டையையுருட்டின மலர்ப்பதத்தைப் பெற்ற சண்டிகையினது சாமர்த்தியம் வாசாமகோசரமன்றோ. இப்பொழுது நாம் அம்பிகாலயத்திற்கு அணித்தாக வந்துவிட்டோம். இதோ! கார்மேகக்கூட்டம்போல் கருத்த தமால மரங்களடர்ந்து காளராத்திரிபோல் இருண்டிருக்கும் இதுதான் காளிதேவியின் ஆலயம்." எனவே மந்தாகினியும் அவளை நோக்கி, "வத்ஸே, அங்ஙனமாயின் நாம் இங்கேயே யிருந்துகொண்டு அங்கு நிகழுமவற்றைக்கேட்டுக் கொண்டிருப்போம். ஏனெனில் சற்றுத்

ஆரத்தில் நின்று கவனிப்பவர்களுக்குத்தான் இத்தகைய வஞ்சனைச் செய்கைகள் விசதமாய் விளங்குகின்றன." என்றுரைத்து இருவரும் அவ்விடத்திலேயே இருந்துகொண்டு ஆலயத்தில் நடக்கப்போவதை மிக்க கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில், "ஓ! மகிமைதங்கிய துர்க்கையெனும் தாயே, அடியேன் உன்னை நமஸ்கரிக்கின்றேன். நினது பேரருளால் கிடைத்த மல்லிகை யெனும் எனது புதல்விக்குத் தக்க வரன் யாவன்? தயை புரிந்து புகலுமம்மா." என்ற சத்தம் காதில் படவே, யோகீச்வரியும் ஸாரஸிகையை நோக்கி, "சாந்தமும் கம்பீரமுமான இந்த சப்தம் தேவியைப்பிரார்த்திக்கின்ற நம் மந்திரி விச்வவஸுவின் குரல்" என்றாள். மீண்டும் கவனித்துக் கேட்டுக்கொண்டிருக்கையில், "வத்ஸ, விச்வவஸுவே, மல்லிகைக்குத் தக்க கணவன் சம்பரகனேதான்." என்று ஓர் சத்தம் காதிற்பட்டது. அதனை மிக்க கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்த மந்தாகினியும், "ஓகோ! இப்பொழுது உண்டான சத்தம் ஆலயத்திலிருக்கும் தமாலவிருக்ஷங்களின் சிகரங்களின்மேல் ஆகாசவாணிபோல் உண்டாயிருக்கின்றது. குரலைப்பார்த்தால் கழுதையின் குரல் போல கர்ணகடோரமாயிருக்கின்றது." என்றுரைத்து அச்சத்தம் புறப்பட்டவிடத்தையே உய்த்து நோக்கி ஸாரஸிகையைப்பார்த்து, "ஸாரஸிகே, அதோ! பார்த்தாயா எவனோ ஒரு மனிதன் பச்சிலை மரத்தின் நுனியில் ஒளித்துக்கொண்டு நிற்கின்றான்." எனவே, ஸாரஸிகை அவனை உய்த்து நோக்கி, "ஆம் அம்மணி, யாரோ ஒருமனிதன் கறுப்புவஸ்திரத்தினால் சரீரத்தை மூடிக்கொண்டு தமாலவிலைகளின் கறுப்போடு கறுப்பாய்ப் பிறர்க்குத்தெரியாமல் ஒளித்துக்கொண்டிருக்கின்றனன்." என மந்தாகினி, "ஆகா! பாவி சம்பரகன் புரியும் சூது இதுவல்லவோ. மாசற்ற மனத்தினரான மந்திரித்தலைவரை நீசனானவிவன் மோசஞ்செய்ய முயல்கின்றானன்றோ?" எனவே ஸாரஸிகை, "அங்ஙனமாயின் இக்கணமே நாம் ஆலயத்திற்குள் சென்று சம்பரகன் செய்யும் சூது முழுவதையும் பஹிரங்கப் படுத்துவோமே." என யோகினி, "வத்ஸே, அங்ஙனம் செய்வது சரியல்ல; இச்சங்கதியைக் காளிந்தி யொருத்தி தவிர மற்றெவரும் அறியக்கூடாது." எனவே, ஸாரஸிகை, "அப்படியானால் நாம் இதற்குத் தடையாகச்செய்ய வேண்டிய சூழ்ச்சி யாது?" என்று வினவ, மந்தாகினி, "காலில் தைத்த முள்ளை முள்ளைக்கொண்டே களைவதுபோல் வஞ்சனை நெஞ்சத்தனான விம்மதிகேடனை வஞ்சனையினாலேயே வெல்லவேண்டும்." என்றுரைத்துச் சிறிதுநேரம் தன் மனதிற்குள்ளேயே ஆலோ

சித்துக்கொண்டு பின்னர் ஸாரஸிகையை நோக்கி, "வத்ஸே, நமது மாருதனது உயிர்த்தோழனை கலகண்டனென்போன் இக்குஸுமபுரத்தரசனது மற்றொரு மந்திரியாகிய விஷ்ணுராதனது புதல்வி இரமயந்திகையைக் காமுற்றிருக்கின்றனனெனக் கேள்விப்படுகின்றேன். அது சங்கதி யுனக்குத் தெரியுமோ?" என, ஸாரஸிகை "அது வாஸ்தவந்தான். அக்கலகண்டன் அடிக்கடி பாய்மாவேறிப் புரமெங்கும் பவனிவருங்காலத்தில் உப்பரிகையின்மீது உலாவிக்கொண்டிருந்த இரமயந்திகை அக் கட்டழகனது வடிவழகைக் கண்டு அவன்மீது மையலுற, அச்சிறுவனும் அச்சிறுமிபால் வேட்கையுற்ற சித்தத்தையுடையனா யிருக்கின்றனன் என்றவிச் சங்கதியை இரமயந்திகையினது உயிர்த்தோழி மதுகரிகை யென்பாள் எனக்குரைத்திருக்கின்றாள்." எனவே மந்தாகினி யவளை நோக்கி, "அங்ஙனமாயின் இப்பொழுது இரமயந்திகை ஸ்நாநம்செய்யுமாறு ஸோமஸரஸ்ஸுக்குச் சென்றிருக்கின்றாள். நீ சென்று இங்கு இப்பொழுது நிகழ்ந்த ஆகாசவாணியின் தத்துவத்தைக் காளிந்தி காதில் சொல்லிவிட்டுக் கலகண்டனையும் கடிதில் அந்த ஸோமஸரஸ்ஸின் கரைக்குச்செல்லும்படி செய்வி. யானும் அம்பிகையைத் தரிசித்துவிட்டு அமாத்திய சேகரனுக்கும் அசரீரிவாக்கின் உண்மையைத் தெரிவித்து இப்பொழுது அவனது மனத்திலுண்டான பிரமத்தை மாற்றுகின்றேன்." என்றுரைத்து ஆலயத்திற்குள் சென்றாள். இதுநிற்க,

மந்தாகினியின் கட்டளைப்படி, மலர் கொய்யும் வியாஜத்தை யிட்டு மல்லிகையை, அவளது அந்தரங்க ஸகியாகிய நவமாலிகையுடன் வஸந்தோத்தியானத்திற்குக் காளிந்தி இரகசியமாயிட்டுக் கொண்டு வருவாளென்றும் அங்கு மல்லிகையைச் சந்திக்குவான் தானும் அதே வுத்தியானத்திற்குப் பிரமரகன் ஒருவனை மட்டுமே ஸஹாயனாகக்கொண்டு வரவேண்டுமென்றும் ஸாரஸிகையால் வற்புறுத்தப்பட்ட மாருதனும் அங்ஙனமே தனது சேவகனாகிய பிரமரகன் வழிகாட்ட வஸந்தோத்தியானம் சென்று மிக்க ஆவலுடன் மல்லிகையைத் தேடித்திரிந்தனன். அக்காலையவன் தனது வல்லபையைக்காணாது மனம் விண்டு பிரமரகனைநோக்கிப் புகன்றதாவது: "அடா, பிரமரகா, ஒருவன் ஒருவரை மனதில் எப்பொழுதும் எண்ணிக்கொண்டிருப்பதினாலே அவன்மனதில் அவருடைய உருவம் நன்றாய்ப்பதிந்து வேறுஞாபகமில்லாமற் போய்விடுகின்றதென்பது மிகவும் உண்மையே. ஏனெனின், இப்பொழுது எனதுமனதில் அக்காதலியினது வெண்மதியைவென்ற வதனமும், செந்தளிரைப்

பழித்த வதரமும், தாமரையை யேய்க்குந்தடங்கண்களும், தனபா ரந்தாங்காது தத்தளிக்கின்ற தநுவல்லியும், அன்னத்தை வென்ற நடையும், ஆகிய இவைகளே எப்பொழுதும் இடைவிடாதுதோன்றி எங்குப்பார்த்தாலும், காண்போர் கண்களுக்கு அமிருதவர்த்தி போன்ற, என்னுருயிர்க்காதலியாகவே காணப்படுகின்றது. அவளை நானிங்கு எப்பொழுது காணப்பெறுவேனடா?" என்று பரிதபிக் கவே பிரமரகனும் (தன்னுள்) "ஓகோ! இவர்க்கு இப்பொழுது தனது ஆசைக் காதலியின் பித்து பலமாய்ப் பிடித்துவிட்டது." என்று எண்ணிக்கொண்டு, அவனை நோக்கி, "ஐயனே, ஸாரஸி கையினது மொழி சத்தியமாயிருப்பின் இப்பொழுது மல்லிகையம் மாளுடைய தரிசனம் சீக்கிரம் கிடைக்குமென்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை. ஆகலின் அதுவிஷயத்தில் ஆதங்கமுற வேண்டாம்." என, மாருதன், "இரவினாரம்பத்திலுதிக்கும் சந்திரிகையைக்காணக் கருதும் சகோரப்புள்ளைப்போல் யானிப்பொழுது எனது பிராண வல்லபையினது வரவை யாவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கி ன்றேன். ஆகிலும் அவட்கு என்னிடம் மனப்பூர்வமான அநுராகம் உண்டாயிருக்கின்றதா வென்பதே சந்தேகமாயிருக்கின்றது. இப் பொழுது மன்மதன் என் மனதில் பிரவேசித்து என்னை அவள்பால் காதல் கொள்ளச் செய்வதுபோல் அக்காமன் அவளது மனத்திலும் பிரவேசித்து என்மாட்டு அவள் காதலுறுமாறு செய்வானேல் அதி னாலேயே யான்கொண்ட கோரிக்கை நிறைவேறினதாகும். எம் மிருவருக்கும் சங்கமங்கூடத் தேவையில்லை. அஃது எங்ஙனமெ னில், பொய்கையில் தாமரை இருக்கின்றது. வானத்தில் வெய் யோன் இருக்கின்றான். இங்ஙனம் இவர்கள் வெகு தூரத்திலிருப் பினும் இவர்களுக்குள் பரஸ்பரம் இருக்கும் பிரீதியினாலேயே நாயகீ நாயகபாவம் உலகத்தில் பிரசித்தமாயிருக்கின்றதன்றோ?" அதுபோ லவேதான்." என, பிரமரகன், "சுவாமி, அவ்வம்மாள் தம்மாட்டு அதிக அன்புடையவளா யிருக்கின்றனள் என்பதற்கு அனேககார ணங்களிருக்கையிலும் அதுவிஷயத்தில் தமக்கு ஏன் இங்ஙனம் ஐயமுண்டாகவேண்டும்?" என, மாருதன், "ஆமப்பா, பிரமரகா, அன்பின் மிகுதியால் அறிவிழந்த மாந்தர்கள் தக்க காரணங்கள் பல விருப்பினும் அவைகளில் நயப்பிக்கையுறார். ஏனெனில், ஒருவன் ஒரு அணங்கரசியின்மீது காதலுற்று அவ்வநுராகத்தின் மிகுதியினால் புந்தியிழந்து அவள் தன்னிடத்தில் அன்பிலளாயிருப்பினும் அன்புற் றவளாகவும் அவ்வணங்கு நேரில் இல்லாதிருப்பினும் தனக்கெதிரே நிற்கின்றவளாகவும் தப்பெண்ணங்கொண்டு அவள்பால் மேன்மே

லும் தனக்கிருக்கும் அபிலாஷத்தை வெளியிட்டுப் பின்னர் அவளால் அளவற்ற அவமானத்தை யடைகின்றான்." எனவே, பிரமரகன், "என் ஐயனே, யான் தமது கட்டளைப்படி அவ்வம்மாளிடத்தில் ஸீமந்தமணியையளிக்குங்காலத்தில் அவ்வம்மணி தரித்திருந்த உத்தரீயத்தின் முன்றானையில் தமது சித்திரப்படம் எழுதப்பட்டிருந்ததைப் பற்றி யேற்கெனவே யான் தம்மிடத்தில் செப்பியிருக்கின்றேனல்லவா? அது சங்கதிதெரிந்தும் தமக்கேன் இவ்வீண்சந்தேகம்?" என, மாருதன், "சேவக, அத்துணைபெரிய பேற்றையடைவதற்கு யானும் பாத்திரமோ வென்ற வெண்ணத்தினால் தான் நம்பிக்கையுள்ள உன் மொழியிலும் எனக்கு நம்பிக்கை பிறக்கவில்லையப்பா." எனவே பிரமரகன், "அங்ஙனமாயின் தாமே நேரில் அவ்வம்மாளைக்கண்ணுற்றபோதிலும் தங்கள் கண்களை நம்பாமல் அப்படி அவ்வம்மாளைக் கண்டது பொய்யென்று கூட நினைப்பீர்கள்போலும்." என்றான். பின்னர் மாருதன் பிரமரகனை நோக்கி, "பிரமரக, இப்பொழுது எனது அன்பின்களஞ்சியத்தின் வரவை யெதிர்நோக்கிக்கொண்டிருக்கின்ற யான் அவளைக் காணுமளவும் போக்கக்கூடாத பொழுதை யெவ்வண்ணம் போக்கலாம்?" என, பிரமரகன், "ஐயனே, இங்கு மங்கும் வேடிக்கையாயுலாவி விளையாடும் வஸந்தலக்ஷ்மியினது பதமலரினின்று பெருகும் செம்பஞ்சுக் குழம்பால் பூசுண்டதுபோல் சிவந்த தளிர்களால் நிறைந்த மரங்களால் சூழப்பட்டும், மெல்லென வீசம் தென்றலால் அசைக்கப்பட்ட கள்ளவிழ்பூந்தாதுகளையுடைய நறுமலர்க்கொடிகளினின்றும் பறந்து விண்மிசை கானஞ்செய் வண்டினங்களால் அலங்கரிக்கப்பட்டும், தேமாந்தளிர்களை யருந்திச் செருக்குற்ற தீங்குரலுடைய குயிலினங்களின் பஞ்சமத்தொனி யெங்கும் பரவப்பெற்றதுமான இவ்வஸந்த வநோத்தியானத்தைக் கண்குளிரப் பார்த்துத் தமக்குற்ற விரகதாபத்தைத் தணித்துக் கொள்ளத் தடையென்ன?" எனவே மாருதன், "அப்பா, பிரமரகா, நீ நல்ல யோசனை சொன்னாய். நினது உபதேசம் அராவைக்கண்டஞ்சினவனுக்கு அரவின் புற்றண்டை வசிக்கச் சொல்பவனது உபதேசம்போலிருக்கின்றது. ஏனெனில், மன்மதனுக்கஞ்சி மனந்தளர்ந்தவெனக்கு நீ அவனது பாசறையிலேயே இருக்குமாறு உபதேசிக்கின்றாயன்றோ? எங்ஙனமெனில், செவ்விய தளிர்களாகிய விதானங்களோடு விளங்கும் விருக்ஷஸமூஹங்களே அக்காமனது கூடாரங்கள். வண்டினங்களின் வரிசைகளே அவனது பகைவரை வெல்லும் வாட்கள், தென்றற்காற்றுகளே அவனதுசேனைகள். தீங்குரலோடு கூவுங் குயிலினங்களே அவனது இரணபேரிகள். ஆகலின் இவ்வுத்

தியானம் காமனெனும் கோமகனது பாளையமினிது தங்கும் பாச றையேயல்லாது வேறல்ல காண். ஆனதுபற்றி இப்பூந் தோட்டத் தைப்பார்ப்பதினல் என் விரகநோய் முன்னிலும் மும்மடங்கு விருத்தியாகுமேயல்லாது தணியப்போகிறதில்லை. ஆதலின் நீ சீக் கிரம் நமது பாசறை சென்று தீவாந்தரத்தினின்று வந்த என்னுருயி ர்க்காதலியினது சித்திரபடத்தை யெடுத்துக்கொண்டுவா. அதனைப் பார்த்தாகிலும் ஒருவாறு தாபத்தைத்தணித்துக்கொள்ளுகின்றேன்'' என்றான். பிரமரகனும், "என் ஐயனே, இதோ கொண்டுவருகிறேன்'' என்றுரைத்து விரைந்துசென்றனன். "அங்ஙனம் அவன் செல்லுங் காலையில் வானத்தைநோக்கி, "ஓ! உத்தியானதேவதைகளே, இப் பொழுது ஐயன் மாருதனுக்கு நீங்கள்தான் துணைவர்கள்." என்று பிரார்த்தித்துக்கொண்டே சென்றனன்.

மாருதன் இங்ஙனம் ஏகாகியாய் இருந்துகொண்டிருக்கையில் தனக்குள்: "ஆகா! பார்க்கப்பார்க்கத் தெவிட்டாத அமிழ்தமாகிய இவ்வணங்கரசை மணக்கும் பாக்கியமுடைய வாலிபனே வாலிபன்; அவளையடையும்படி யவன் புரிந்த தவமே தவம்! ஆகிலும் இப்பொ ழுது தடையேதுமில்லாமல் வளர்ந்துகொண்டிருக்கின்ற எனது மனோரதமென்னும் மரத்துக்கு மந்தாகினியினது மொழிகள் கொடி கொம்பாகயிருக்கின்றன. அன்றியும், அவ்வணங்கரசு என்னால் எவ்விதத்திலும் அடைவதற்குக் கூடாதவளென்று நான் நிச்சயமா யறிந்திருக்கையிலும் அவள் பிரிவாற்றப்பெறாத வென்னுருயிர் இப் பொழுது என்மாட்டுத் தங்கியிருப்பதற்குக் காரணம் யானவளை முன்னொருமுறை சந்தித்துப் பிரிந்தகாலத்தில் அவள் என்பேரில் பலமுறை வைத்த பிரியமுடன் கூடிய பார்வைகளேதான்." என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே ஏதோ காலடிச்சத்தம் காதிற் பட்டது. உடனே மாருதன் அஃது என்னவென்று திரும்பிப்பார் க்கையில் சிறிது தூரத்தில் காளிந்தி நவமாலிகை இவ்விருவருடன் வருகின்ற மல்லிகையைக் கண்ணுற்றனன்.

உடனே அவன் மிதமற்ற களிப்புற்றவனாய் அவள் அங்ஙனம் வருங்காலத்தில் அவளிருக்குமிருப்பைக்கண்டுபரிதபித்துத் தன்னுள் "ஆகா! வெயிலில் வாடிய தாமரைத்தண்டுபோன்ற அவயவங்களு டனும், ஸ்தனங்களுடையபாரத்தினால் எங்கு ஒடிந்துவிடுகின்றதோ வென்றஞ்சத்தக்க நுண்ணியவிடையோடும், தாங்குவதற்கு மிகவும் அரிதான ஜகனபாரத்தினால் கிலேசமடைந்து, இளந்தளிரன்ன தன் னிருகால்கள் கடுக்க, இதோ! வருகின்றாள் என்னுசைக் கண்ணு

ட்டி. ஆ! இப்பொழுது என்மனதில் உண்டாகும் ஆநந்தத்தை யான் என் சொல்வேன்! ஏனெனில் இதுகாறும் அநங்கனது ஆக்நேயாஸ்திரத்திஞல் அடிக்கப்பட்டு அபரிமிதமான தாபத்திற்கு இரையாகி இடைவிடாது வருந்திக்கொண்டிருந்த வென்மனம் இப்பொழுது இவ்வணங்கரசைக் கண்ணுற்றவுடன் அமிழ்தவெள்ளத்தி லாழ்ந்ததுபோல் அளவற்ற வாநந்தத்தை யடைந்திருக்கின்றது. நல்லது; இப்பொழுது யான் இச்செடி மறைவிலிருந்துகொண்டு என் காதலி தனிமையில் புகலும் கனிமொழிகளைச் செவியுறுகின்றேன்." என்றுரைத்து. அருகிலிருந்த புதர்க்குள் பதுங்கியிருந்தனன்.

அக்காலை மல்லிகையும் நவமாலிகை வழிகாட்டக் காளிந்தியோடு வருகையில் தன்னுள். "இப்பொழுதும் என்மனதிற்குச் சமாதானம் உண்டாகவில்லை. ஆ! என்ன ஆச்சரியம்? தீவாந்தரத்திலிருந்து எனது சித்திரபடம் எப்படி வந்ததோ தெரியவில்லையே! 'மகாநுபாவன் மாருதனது படம் எங்ஙனம் வந்திருக்கின்றதோ அங்ஙனமேதான் உன்படமும் வந்திருக்கவேண்டும்.' என்று எனது பிரிய ஸகி காளிந்தி சொன்னது சரிதான்." என்று சொல்லிக்கொண்டே வருகையில் மாருதன் அவளது வடிவழகை நன்கு உய்த்து நோக்கி "ஆகா மட்டில்லா வனப்புவாய்ந்த இவளது மேனியை இப்பொழுது பார்க்கையில் இவள் ஸஹிக்கமுடியாத மதன தாபத்திற்கிரையான மனத்தினள்போல் காணப்படுகின்ருள். ஏனெனில், இக்கூர் வேற்கண்ணியின் கோமளப்பார்வைகள் ஒரு விஷயத்திலும் நன்கு ஊன்ருது குறிப்பின்றி யுழலுகின்றன. கோவைக்கனியை நிகர்த்த வதரமானது அடிக்கடி நிகழும் நெட்டுயிர்ப்பிஞல் நிறம் மாறியிருக்கின்றது. கொடியினின்று பரிவின்றிக் கொய்த பல்லவ மஞ்சரி போல் துடியிடையாளின் தநுவல்லி தளர்ச்சியுற்றிருக்கின்றது. கண்ணுடிபோல் துலங்கும் கபோலங்களிரண்டும் காசைப்பூவைப்போல் வெளுத்திருக்கின்றனவன்றே?" என்று தன்னுள் எண்ணிக்கொண்டிருக்கையில், மல்லிகை காளிந்தியை நோக்கி, "ஸகி, இதோ! பூங்கொத்துக்களின் பாரந்தாங்காது பூமியிற் புரளும் கொடிகள் நிறைந்து விளங்குகின்றதே; இதுதானே நீ புகழ்ந்து புகன்றவிடம்?" என்றுவினவ, காளிந்தியும் தன்னுள், "ஐயன் மாருதன் இங்குத்தான் ஏதேனுமோர் செடிமறைவில் ஒளிந்திருக்கவேண்டும்." என்று தீர்மானித்துக்கொண்டு. மல்லிகையை நோக்கி. "ஆமம்மா, மல்லிகை, யான் குறித்தவிடமிதுவேதான்." எனவே. மல்லிகை. "அங்ஙனமாகில் இங்கு நாம் அநேகவிதமான அழகிய மலர்களைக்கொய்வோம்.'

என்றுரைத்துச் சகிகளுடன் தன் மெல்லிய கரங்களால் அங்கு மலர்ந்திருக்கும் மல்லிகை, முல்லை, ரோஜா, சம்பகம், சம்பங்கி, பாதிரி, பன்னீர் முதலிய மலர்களைக்கொய்ய வாரம்பித்தனள்.

அவள் அங்ஙனம் மலரெடுக்கும் மாண்பைக்கண்ணுற்ற மாருதனும் தன்னுள், "ஆகா! கொங்கைகள் குலுங்க, கொடியிடையொடிய, கூந்தலசைந்தாட, குமிழியன்ன கொப்பூழ் தெரிய, தண்டை சிலம்புகள் ஒலிக்க, சிற்றிடை நோவ, மைத்தடங்கண்கள் சுழல, பொற்றொடியிவள் பறிப்பது மலர்களோ அல்லது எனது மனமோ? தெரிகிலேன்." என்று வியப்புடன் நோக்கிக்கொண்டு நின்றனன். அக்காலை மல்லிகை, தான் ஏற்கெனவே கொய்துவிட்ட மலர்க்கொடிகளைமீண்டும் கரத்தால் பற்றியிழுத்து மலர்கொய்யமுயன்று தன் கரத்தில் புஷ்பம் விழாதிருப்பதைக் கண்டு வியப்புற்று சகிகளை நோக்கி, "சகிகாள், இக்கொடியில் மலர்கள் நிரம்பவிருப்பினும், யான் மலர்களையெடுக்க வெடுக்க எனது கரத்தில் ஒருமலர்கூட விழவில்லையே. இஃது என்ன புதுமை?" என, நவமாலிகை அவளை நோக்கிப்புன்னகையுடன், "பிரியஸகி, இக்கொடியிலிருந்தபுஷ்பங்கள் அனைத்தும் உன்னால்எற்கெனவே யெடுத்தாய்விட்டன. என்றாலும் நின் செங்கரங்களின் செவ்வொளி செடியில் விழுவதால் அது செந்தளிரால் நிறைந்ததுபோலவும், நினது விரல் நகங்களின் காந்தியால் எங்கும் மலர்களால் நிறைந்திருப்பதுபோலவும், அடிக்கடி சுழலும் நினது கருவிழிகளின் காந்தியால் வண்டினங்களால் நிறைந்ததுபோலவும் காணப்படுகின்றதம்மா." எனவே, மல்லிகை மிகவும்வெட்கி அச்செடியைவிட்டகன்று மற்றொரு செடியை நாடி மலர் கொய்யுமாறு முயலவே அங்கு அனேக வண்டினங்கள் அவளது வதன கமலத்தின் வாசனையால் கவரப்பட்டு அவளை நாற்புறமும் சூழ்ந்துகொள்ள அதினால் அவள் அச்சமுற்றுத் திகைத்து நிற்பதைக் கண்ணுற்ற நவமாலிகையும், "ஸகி, தேவபாரிஜாத புஷ்பத்தின் பரிமளத்தைப் பழித்த நினது நிச்சுவாஸ வாஸனையை நுகர்ந்தவளிக் கூட்டங்கள் மல்லிகை, முல்லை, சம்பகம், புன்னாகம் தேமா முதலிய மலர்களைத் துறந்து நின்முகத்திற்கெதிரே சுற்றிக் கொண்டிருக்கின்றமையால் நீயுனது கமலமுகத்தைக் கரத்தால் மூடிக்கொள்." எனவே, மல்லிகையும் அவள் மொழிந்தவண்ணமே செய்தனள். அக்காலை அங்ஙனம் மூடியவவள் கரத்தைக் கமல மலரெனக் கருதிச்சுரும்பினங்கள் மீண்டும் முன்போல் அவள் முகத்

தைச்சுற்றிலும் மொய்த்துக்கொள்ளவே, மல்லிகை மிகவும் வெருண்டு கண்களை மூடிக்கொண்டு திகைத்து நிற்க, நவமாலிகை, 'பயப்படவேண்டாம்' என்று சொல்லி அவளையணைத்துக்கொண்டு அவ்விடம் விட்டுச்சிறிது தூரம் நடத்தப்பின்னர் மல்லிகை தன்கண்களைத் திறந்துகொண்டு, "அம்மாடி, நல்லவேளையாய் மதுகரங்களின் சங்கடத்தினின்று தப்பிப்பிழைத்தேன்." என்று அங்கமெல்லாம் வியர்க்க நடு நடுக்கத்துடன் நிற்பதைக் கண்ட காளிந்தியும் அவளை நோக்கி, "மல்லிகை மலர்போல் மெல்லிய மேனியையுடைய மல்லிகே, நீஇதுகாறும் மலர்கொய்து வியர்த்துக்களைத்துப் போனாய். ஆதலின் நிழல் பரந்து குளிர்ந்திருக்குமோர் செடியடியில் உட்கார்ந்து இளைப்பாறலாம் வா" என, அவளுமதற்கிசைய அப்பொழுது காளிந்தி அவளை நோக்கி, "ஸகி, மல்லிகே, இதோ! உனக்கு வலப்புறத்தில் பளிங்கால் சமைத்த பாத்தியோடு கூடிய இம்மல்லிகைச் செடியைப் பார்த்தனையா? இதுதான் நினது அன்னை. இம்மல்லிகைச் செடியினடியிலிருந்து தான் அமாத்திய சேகரரான நினது தந்தை அம்பிகையினருளால் உன்னைக்கண்டெடுத்தாரம்மா எனவே, மல்லிகை அம்மாலதீலதையைக்கிட்டி, "என்றனையிப்புவியில் பயந்த அன்புள்ளவன்னையே இதோ! உனக்கு வந்தனம் புரிகின்றேன். என்று மிக்க விநயத்துடன் நமஸ்கரித்தனள். அக்காலை சற்றுத்தூரத்தில் மறைந்திருந்த மாருதன் அவளங்ஙனம் நமஸ்கரித்த மல்லிகைச் செடியைக்குறித்துத் தன்னுள், "ஸகல ஜனங்களுடைய கண்களாகிய வண்டுகளாலனுபவிக்கப் பட்டும் இலாவண்ணியமெனும் மதுவைப்பெருக்கிக்கொண்டு மிருக்கின்ற இம்மல்லிகை யெனும் மலரரும்பைப் பெற்றதனால் நீ பாரிஜாதமெனும் கற்பகத்தருவைக்காட்டிலும் மேம்பாட்டை யடைந்தனை. என்று புகழ்ந்துபேசினான். பின்னர் நவமாலிகை மல்லிகையை நோக்கி, "ஸகி, இம்மல்லிகைச்செடி தனது அருகே வந்த அருமைப்புதல்வியாகிய நின்னைக் கண்டு அடக்கக்கூடாதவன்பின் மிகுதியால் மலர்களினின்று பெருகும் மதுத்துளிகளென்ற வியாஜத்தினால் தனது ஸ்தன்னியத்தைப் பெருக்குகின்றது. ஆகையால் நாம் இதினடியில் சிறிதுநேர முட்கார்ந்து இளைப்பாறலாம்." எனவே, அங்ஙனமே மூவரும் அதினடியில் உட்கார்ந்தார்கள்.

அக்காலை மாருதன் தன்னுள், "இங்ஙனம் அநங்கனது வேதனையால் அயர்வுற்றசரீரத்தையுடையஇவ்வணங்கரசியின் அன்புக்கு

இலக்கானவன் இன்னுனென்று தெரிந்துகொள்ளும்வரையில் என் மனதிற்கு ஆறுதல் உண்டாகாது." என்றுரைத்து அவர்கள் புரியும் ஸல்லாபத்தை மிக்க கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தனன். அப்பொழுது, ஸமயத்திற்குத்தக்கவாறு ஸரஸமாய் ஸம்பாஷிக்குந் திறமையுற்ற காளிந்தியும் மல்லிகையைநோக்கி, "ஸகி, மல்லிகே, மலர்கொய்த சிரமத்தினுல் உண்டான வியர்வைத் துளிகளால் நிறைந்த மதிமுகத்தையுடைய நின்னை நன்கு அணைந்துகொள்ளு மாறு நறுமலர்களின் மதுவால் சீதளமான பரிசத்தையுடைய மாருதன் தென்திசையினின்று நின்பால்விரைந்து வருகின்றனன்பார்." எனவே மல்லிகை, "ஆகா! என்மனதிற்கிசைந்த மாருதனெனும் மகாநுபாவனு?" என்று மிக்கஆவலுடனும் ஆதரத்துடனும் இடத் தைவிட்டெழுந்திருக்க, அதனைக்கண்ட மாருதனும் மிக்கவாநந்தத் துடன், "ஆகா! இனி இவ்வுலகில் என்போல் பாக்கியவானில்லை. ஏனெனில், தனது சகியாகிய காளிந்தி தென்றல் வருவதைப்பற்றி 'இதோ மாருதன் வருகின்றுன்' என்று சொல்லக் கேட்ட இக்கட் டழகி மாருதன் என்றயானே நேரில் வந்துவிட்டதாகவெண்ணி யளவிறந்தவன்பும் ஆதரமும் ஆவலும் உற்றவளாக என்னைச்சந்தி க்குமாறு திடீரென்று தனது இடத்தைவிட் டெழுந்திருந்தாளல்ல வா?" என்று தன்னுளுன்னிக் குதுகலித்தனன். உடனே சிறிது நேரம் ஆலோசித்து மனவெறுப்புடன், "ஓகோ! யான் மூடன் வீண்மநோராஜ்யம் செய்தேன். இதுகாறும் பூக்கொய்து வியர்த்து விடாய்த்திருக்கும் இம்மல்லிகை மந்தமாருதம் வருகிறதென்று கேட்டுத்தானடைந்த விடாய்தீர அதனையநுபவிக்குமாறு எழுந்திரு த்தலும் ஸகஜமேதான்." என்று சொல்லி யேக்கமுற்றிருந்தனன். திடீரென்று எழுந்திருந்த மல்லிகையின் மேலுத்தரீயத்தைப்பிடித் துக்கொண்டு காளிந்தி சிறு நகையுடன், "ஸகி, நீ யெழுந்திருக்க வேண்டாம். யான் மந்தமாருதத்தைப்பற்றியன்றோ பேசினேன். நீ ஐயன் மாருதனே இங்குவந்துவிட்டதாக நினைத்துவிட்டனையே என, மல்லிகை மிக்க வெட்கமும் விசனமுமுற்று அவளை நோக்கி, "ஸகி, காளிந்தி, நீ இங்ஙனம் எனக்கு ஆசையூட்டுமாறு மோசவா ர்த்தை பேசலாமா?" என்று கடிந்துகொண்டனள். அதனைச்செவி யுற்ற மாருதனுக்கு அக்காலையுண்டான ஆநந்தம் அளவுமீறியிருந் தது. அவன் தனக்குள், "இனி நான்கொண்ட சந்தேகமெல்லாம் தீர்ந்தது. ஓ! மனமே, நீ கொண்ட வெண்ணங்கள் நிறைவேறின என்று சொல்லிக் களிப்புற்றிருந்தனன். அப்பொழுது மல்லிகை

தனது உத்தரீயத்தில் எழுதப்பட்டிருந்த மாருதனது படத்தைக் குறிப்பிட்டு, "ஸகி, பிரத்தியக்ஷமாருதனைக் காண்பது எனக்கு அரிதெனினும் எனது விரகவேதனையினால் நனிவருந்துகின்ற சித்திரரூபியான வென்னுயிர்க் காதலனிதோ! இருக்கின்றார்." என்றுரைக்கவே மாருதனும் அவளது மேலாக்கின் ஓரத்தில் எழுதப்பட்டிருந்த தனது சித்திரபடத்தை உய்த்து நோக்கி மிக்கவாநந்தத்துடன், "ஓகோ! நமது பிரமரகன் புகன்றது முற்றும் உண்மையே என்றுரைத்துப்பின்னர் தனது படத்தைக் குறித்து, "ஓ! எனது சித்திரப்படமே, எனது காதலியின் கொங்கைதனில் எப்பொழுதும் புரளும் பாக்கியம் உனக்குக்கிட்டினமையால், இடைவிடாது அவளது விரகாக்கினியால் வருந்தும் சரீரத்தையுடைய வென்னினும் நீ எண்மடங்கு பாக்கியசாலி." என்று வியந்து பேசினன்.

பின்னர் நவமாலிகை மல்லிகையை நோக்கி, "ஸகி, என்செய்வது? நீ புகன்றவண்ணம் இச்சித்திரரூபியான மாருதனைப்பார்த்துக்கொண்டாகிலும் நீ சிறிதுகாலம் கழிக்கவேண்டுமென்பது அவசியந்தான். உனது சரீரமோ கிருஷ்ணபக்ஷத்திய சந்திரனைப்போல நாளுக்குநாள் விரஹதாபத்தினால் தளர்ச்சியடைந்து வருகின்றது. என்றாலும் அதின் அழகு குன்றவில்லை. விரகி ஜனங்களின் வல்லுயிரை வலியவதை செய்வதில் சிறிதேனும் இரக்கமற்றபாவியான மன்மதனது வல்வினைகளைப்பற்றி யினிநீ கிஞ்சித்தேனுமுபேக்ஷையாயிருத்தல் கூடாது." என்றுரைத்துக் காளிந்தியை நோக்கி, "ஸகி, காளிந்தி எனது பிரியஸகி மல்லிகை தான் அநுதினமும் ஆராதித்துவரும் அம்பிகையின் அருளே உருவெடுத்து வந்ததெனவையுறத்தக்க வையன் மாருதனை யோகீச்வரியினது ஆசிரமத்தில் கண்ணுற்ற காலந்தொடங்கி யவரது விரகதாபத்தினால் மிகவும் வருந்தி வேறு எவ்வித சிந்தையுமற்றவளாய் ஒருநிமிஷ மொருயுகமாகக் கழித்துக்கொண்டு இவளுடைய சித்தத்திற்கு அவலம்பனம் அவரைப்பற்றிய சிந்தையும், இவளது நயனங்களுக்கு அவலம்பனம் அவரது சித்திரப்படத்தைத் தரிசித்தலும், இவளது சரீரதாரணத்திற்குக்காரணம் அவரணிந்தளித்த நித்திலஹாரமும், இவளுடையவுயிர்க்கு அவலம்பனம் அவரையொருகால் அடையப்பெறலாமென்னும் பேராவலுமேதான். அன்றியும் அவரது விரஹத்தால் இவள்படும் அவஸ்தைகளையும் அதுபற்றி யிவள்புரியும் ஸாஹஸத்தையும் புகல்கின்றேன் கேள்.

# ஆத்மவித்யாவிலாஸம்.

நமது வாஸஸ்தானமாகிய இப்பூமி உருண்டைவடிவமுடையதாகையால் பூகோளமென்று சொல்லப்படுகின்றது. அது தன்னைத்தானே சுற்றிக் கொண்டிருப்பது மன்றி ஏறக்குறைய ஒன்பதுலக்ஷத்து முப்பதினாயிரம் மைல் தூரத்திலிருக்கிற சூரியனையும் பிரதக்ஷிணம் செய்கின்றது. சூரியனுடைய பிம்பமானது இந்தப் பூகோளம் போலப் பதின்மூன்று லக்ஷம் மடங்கு பெரிதாம். ஆகவே அதன் சக்தியால்தான் இப்பூகோளம் ஆகாயத்திலுள்ள தனது பாதையைவிட்டுக் கொஞ்சமும் அகலாமல் ஒரேமாதிரியாய்ச் சுற்றிபோடுகிறது. இந்தப் பிரகாரமே இப்பூமிக்குப் பெரிதும் சிறிதுமான சில கோளங்கள் இதனினும் வரவரச் சமீபத்திலும், போகப் போகத் தூரத்திலும் அந்தரத்தில் தத்தம்பாதையின்வழியே சூரியனைச்சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகாயத்தில் அடிக்கடி இடம்மாறிக்கொண்டு மின்னற்பாடின்றி விளங்குகிற புதன், சுக்கிரன், அங்காரகன், வியாழன், சனிமுதலிய கிரஹங்களெல்லாம் இந்தவிதமான கோ

ளங்களேயாம். ஆகவே நமது பூமியும் ஒரு கிரஹமே ஆகின்றது. இவற்றுள் சிலவற்றிற்கு ஒன்று அல்லதுபல உபக்கிரஹங்கள் உண்டு. நமது சந்திரன் நாம்வசிக்கும் பூமியென்னும் கிரஹத்தைச்சுற்றி ஓடுகின்ற உபக்கிரஹமேயன்றி வேறல்ல. இவைகளும் மற்றுமுள்ளசில பொருள்களும் நமது சூரியனுடைய சக்திக்கு உட்பட்டு நடைபெறுவது நமது சிற்றறிவுக்கும் ஒருவாறு புலப்படுகிறதல்லவா? ஆகாயவெளியினது ஏகதேசத்திலுள்ள இந்த இலாகாவை ஒரு பிரமாண்டமென்று நாம் வைத்துக்கொள்ளலாம்.

ஆகாயம் மேகங்களால் மறைக்கப்படாமல் நிர்மலமாகக்காணப்பெற்ற ஒரு கிருஷ்ணபக்ஷத்து இராத்திரியில் சுற்றுப்புறங்களில் மரம் மட்டைகள் இல்லாத ஓர் மைதானத்தில் நின்று நாம் பார்க்குங்காலத்தில் நமது கண்ணுக்குக்கோசரமாகும் நக்ஷத்திரங்களுக்குக் கணக்கு வழக்கேது? உற்றுப்பார்த்தால் அவைகளெல்லாம் நம்மிடமிருந்து ஒரேவிதமான தூரத்தில் இருப்பவை அல்ல என்பது வெளியாகின்றது. அவற்றின் இடையில் காணப்படுகின்றசுக்கிரன், வியாழன் முதலிய கிரஹங்களுக்கும் அவைகளுக்கும் ஏதாவது பேதம்காணப்படுகிறதாஎன்று பார்ப்போம். நமது பிரமாண்டத்தில் சூரியனைச்சுற்றி ஓடுகிற கிரஹங்கள் தமக்கென அமைந்த பிரகாசமின்றிச்சூரியனிடமிருந்தே ஒளி பெற்றிருக்கின்றமையால் அவற்றில் மின்னற்பாடு காணப்படுகிறதில்லை. நக்ஷத்திரங்களோ நமது சூரியனைப்போல ஸ்வயம் பிரகாசமுடையவையாகையால் ஜிவுக்கு ஜிவுக்கென்று மின்னுகின்றன. இந்தக்கிரஹங்கள் இருக்குமிடத்தை ஒரு நாள் குறித்துவைத்துக்கொண்டு சில நாட்கள் சென்றபிறகு உற்று நோக்கினல் இடம் மாறிநிற்பது ஸ்பஷ்டமாகத்தெரியும். அந்த நக்ஷத்திரங்களோ பெரும்பாலும் ஒன்றனுக்கொன்று உள்ள தூரத்தில் மாறுபடுகிறதில்லை.

நம்முடைய கண்களுக்குப்புலப்படுபவைபோக அப்படிப்புலப்படாத எத்தனையோகோடி நக்ஷத்திரங்கள் மிகுந்த சக்தி பொருந்திய தூரதர்சநி என்னும் கருவிவழியாகக் காணப்படுகின்றன. அவைகளின் உருவத்தைப்பின்பற்றி அவற்றைப் பதினெட்டுத்தராக்களாக வானசாஸ்திரிகள் பகுத்திருக்கின்றனர். அவற்றில் பல நக்ஷத்திரங்கள் நமது சூரியனைவிட எத்தனையோ மடங்கு பருத்திருப்பதாகவும் ஊஹித்திருக்கிறார்கள். அப்படி நமதுசூரியனுக்கும்பெரிதும் சிறிதுமான பல நக்ஷத்திரங்கள் அத்தனை சிறியவைகளாகக் காணப்படுவதற்கு அவற்றின் தூரமே காரணமாகும். அவற்றின் தூரத்தையும் அளப்பதற்குக்கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அக்கருவிகளைக் கொண்டு பரிசோதித்ததில் அவற்றின் தூரத்தை மைல் கணக்கில் எடுத்துக்கூற அவர்களால் மாளவில்லை. ஒளி என்பது ஒரு ஸெக்கெண்டுக்கு ஸுமார் லக்ஷத்து எண்பத்து ஆறாயிரம் மைல் தூரம் செல்லும் வன்மை உடையதென்று முன்னமே கண்டுகொண்டிருக்கிறோமே. அந்தக் கணக்குப்படி பார்த்தால் எல்லாவற்றிற்கும் ஸமீபத்தில் தோன்றுகிற ஒரு நக்ஷத்திரத்தின் ஒளியலை இந்தக்ஷணத்திலே நமது கண்ணில் உறுத்துவதற்கு மூன்று வருஷம் எண்பத்துமூன்று நாட்களுக்குமுன் அதன்கண்தோன்றியிருக்கவேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். இப்போது ஆகாயத்தில் உள்ளவைகளுள் மிகப்பிரகாசமாகக் காணப்படுகின்ற ஒரு நக்ஷத்திரம் அதன் தூரத்தைப்போல ஆறுமடங்கு தூரத்திற்கு அப்பாலிருக்கிறதாம். பதினெட்டாவது தராவிலிருக்கும் சில நக்ஷத்திரங்களின்ஒளி இங்கு நமக்குப் புலப்படுவதற்கு இரண்டாயிரவருஷகாலங்கூடப் போதாதென்கிறார்கள். இப்படியிருக்க அவற்றின் தூரத்தை மைல் கணக்கில் குறிப்பிடமுடியாதென்று

சொல்வதற்குத்தடையென்ன? நாம் வெகு தூரத்துக்கு அப்பால் காணப்படும் நக்ஷத்திரத்தின் ஸ்தானத்திற்போய் நிற்பதாகவைத்துக்கொண்டாலும் அதற்கப்பாலும் இப்படித்தான் காணவேண்டியதாகும். ஆகவே இப்பிரபஞ்ச முழுவதையும் சேர்த்து மனத்தாலும் பார்த்துஎல்லைகட்டுவது அஸாத்தியமாகின்றது.

நமது பிரமாண்டத்திலுள்ள சூரியன் ஸ்வப்பிரகாசமாய் விளங்கிக்கொண்டு தன்னைச்சுற்றி ஓடவும், தன் சக்திக்கு உட்பட்டிருக்கவும், கிரஹ கோளங்களைச் செய்துவைத்திருப்பதுபோல ஸ்வப்பிரகாசமாய் விளங்கும் ஒவ்வொரு பிரமாண்டத்திற்குச் சூரியனுயிருந்து பல கிரஹகோளங்களை நடைபெறச்செய்வதாக நமது ஊஹத்துக்கு வருவதுமல்லாமல் மஹான்களது பிரத்தியக்ஷப்பிரமாணத்திற்கும் கோசரமாகின்றதாம்.








“அடே, ராஜா! நாம் இனி சும்மாவிருக்கக் கூடாதடா. ஏதாவது பணம் சம்பாதிக்கவேண்டும். நேற்று நமதண்ணாவுக்கு வந்த கடிதத்தை நீ பார்க்கவில்லையோ.”

‘என்னடா அப்பா அது. அக்கடிதத்தில் யார் என்ன எழுதிருந்தார்கள் ?’

‘நீ சுத்த மந்தியடா. வீட்டுக்குடித்தனக் காரியங்களொன்றையும் கவனிக்கிறதில்லை. உன் பேருக்கு ஸரியாக ராஜாபோல் திரிகிறது. இல்லாதபோனால் ஏதாவது பொம்மை யெழுதுகிறது. ஒரு நாளாவது ஆத்தில் நடக்கும் ஸங்கதிகளைக் காதில் போட்டுக்கொள்ளுகிறதேயில்லை.’

‘தாங்கள் ரொம்ப கவனிக்கிறவர்கள் தான் எனக்குத் தெரியும். வேறு வேலைகள் ஒன்றும் தெரியாதபோனால் எப்பொழுதும் அடுப்பங்கரைப் பூனையாக வீட்டுக்குள்

உட்கார்ந்துகொண்டு பொம்மனாட்டிகளுக்குச் சரியாக வம்பளந்துகொண்டு ரொம்பவும் நடிப்பது தவிர வேறென்ன விருக்கிறது. இந்த லக்ஷணத்திற்கு நீ இன்னொருவரை கோபித்துக்கொள்ளவும் வேண்டுமோடா?'

'அடே, நாம் இப்பொழுது ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக்கொண்டு நிற்பது சுத்த பிசகு. நமது அண்ணா யாரோ ஒரு துரைக்கு ரூ 200 கொடுக்கவேண்டும் போலிருக்கிறது. அதற்காக அந்த துரையிடமிருந்து நேத்து கண்டிப்பான கடிதம் வந்தது. அதில் "மேல் அஸந்தர்ப்பங்கள் வேண்டாமென்றால் உடனே அனுப்புகிறது" என்று எழுதியிருந்தது மட்டும் என் கண்ணில் பட்டது. அது முதல் அண்ணாவும் ஒரு மாதிரியாக கவலையுடனிருக்கிறார். ஆதலால் நாம் எல்லாருமாக ஒன்று சேர்ந்து ஏதாவது ஒரு யோசனை செய்து ரூ 200 சம்பாதித்து அண்ணாவுக்கு கொடுத்தமேயானால் நம்மிடத்தில் அவர் வெகு ஸந்தோஷமாக யிருப்பார். அதற்கு ஒரு வழி சொல்லு பார்ப்போம்.'

'என்னத்தேடா சொல்ரது. நாம் இருக்கிறது நாலு பேர். நாம்பள் 200 ரூ ஸம்பாதிப்பதானால் ஆளுக்கு 50 ரூ போல் ஸம்பாதிக்கவேணும். இது நமக்கு யார் கொடுப்பாள். இருந்தபோதிலும் நீ சொல்வதைக் கேட்டால் எப்படியாவது இந்த இருநூறு ரூபாயை சேர்த்து அந்த துரைக்கு அண்ணாவை விட்டு அனுப்பச் சொல்ல வேண்டியது மெத்த அவசியம். எல்லாத்திற்கும் நமது தம்பிகள் இன்னும் இரண்டு பேர்களையும் கூட்டிவா. எல்லாருமாகச்சேர்ந்து மீடிங் கூடி யோசிப்போம்.'

'இதோ கூட்டிக்கொண்டு வந்துவிட்டேன்' என்று ஓடினான் அப்பா.

இக்கதையை வாசிக்கும் நண்பர்களுக்கு மேலே ஸம்பாஷித்த இருவர்களும் சிறு பையன்களென்று நாம் சொல்லாமலே தெரிந்திருக்கும். இருவர்களுள் மூத்தவனை

ராஜா வென்பவனுக்கு 12-வயதிருக்கலாம். அவனுக்குத் தம்பியாகிய அப்பாவுக்கு 10-வயதிருக்கலாம். அவன் கூட்டி வரப்போன அவனுடைய தம்பிகளாகிய சுந்தரம், மணி இவர்களுக்கு முறையே 8-வயதும், 6-வயதுமாக விருக்கலாம். இவர்கள் நால்வரும் நல்ல புத்திசாலியான சிறுவர்களாதலால் இவர்களின் ஒற்றுமையையும் புத்தி சாதுர்யத்தையும் காட்டக்கூடியதான அநேக செய்கை களில் ஒன்றை இங்கு எடுத்து வரைந்தோம். உட் சென் றதும் ஒரு கணப்பொழுதில் சுந்தரம், மணி இவர்களுடன் அப்பா திரும்பி வந்துவிட்டான்.

'இதோ அவர்களையும் கூட்டி வந்து விட்டேன். இனி சுருக்கா சொல்லடா ராஜா' என்றனப்பா.

'அடே, போடா. இந்த மாதிரி தான் பறக்கிறதாக் கும். மீடிங் என்றால் எல்லாருமாக உட்கார்ந்து ஸாவகாச மாக யோசித்து தீர்மானங்கள் செய்யவேணும். அப்பொ தான் ஸரியாக இருக்கும்' என்றான் ராஜா.

'ஸரி தான். செட்டி சிங்காரிக்கிறதற்குள் பட்டணம் பாழ்த்துப்போச்சுதென்று நீ வாசிக்கவில்லையாக்கும். நாம் இவ்வளவு ஸாவகாசமாயிருக்கக் கூடாது.'

'முதலாவது நாமெல்லாருமாக அவ்வாறு உட்கார்ந்து யோசித்தால் நடுவில் அம்மா அண்ணா யாராவது வந்தால், என்னடா பசங்களா இது? என்று கேட்பார்கள். ஆகை யால் எதுவானாலும் ஸரி, சீக்கிரம் முடி பார்ப்போம்.'

ராஜா. 'ஸரி. எல்லாரும் இப்படி வரிசையாக உட் காருங்கள். இப்பொழுது நாமளெல்லாருமாக ஒரு சங்க மொன்று கூடி ரூ 200-க்கு குறையாமல் பணம் ஸம்பா திக்கிறதென்று தீர்மானித்திருக்கிறோம். இச்சங்கத்துக்கு திரவியார்ஜன சங்க மென்று பேர் கொடுப்போம். இந்தச் சங்கத்துக்கு நான் தான் சேர்மன். ஸரிதானா?'

அப்பா. 'ஸரி. நான் தான் மானேஜர். சுந்தரமும், மணியும் மெம்பர்கள்.'

சுந்தரத்திற்கும், மணிக்கும் ஸங்கதியொன்றும் இன்னும் தெரியவில்லையாதலால் அவர்களொன்றும் பேசவில்லை.

ராஜா. 'ஸரி. இனி நாமெல்லோருமாக சேர்ந்து ரூ 200 ஸம்பாதிப்பதற்கு ஆளுக்கு ரூ 50 ஸம்பாதிக்கவேண்டும். அவரவர்களுக்குத் தோணுமுபாயங்களைச் சொல்லுங்கள் பார்ப்போம். சேர்மனுனைபடியால் நான் என்னுபாயத்தை முதலில் சொல்லுகிறேன் கேளுங்கள். இந்நாளில் நல்ல படங்களெழுதினால் நல்ல காசு வருகிறதென்று அடிக்கடி கேள்விப்படுகிறோம். உதாரணமாக ரவிவர்மாவின் படங்களுக்கு ஆயிரக்கணக்காக எவ்வளவோ மஹாராஜாக்கள் கொடுக்கிறார்களாம். தவிர இப்பொழுது சித்திரவேலை கண்காட்சிகள் அடிக்கடி நடக்கிறது. இன்னும் இரண்டு நாளைக்கெல்லாம் பட்டணத்தில் ஒன்று நடக்கப்போகிறது. அந்தக்காட்சியில் நல்ல படங்களுக்கு வெகுமதி 100 அல்லது 200 என்று கொடுக்கப் போகிறார்களாம். ஆதலால் நான் இன்றைக்கே ஒரு பெரிய படம் எழுதி அனுப்பிவிடுகிறேன். உடனே பிரைஸ் (prize) குறைந்தது 50-ரூபாயாவது வந்துவிடுமென்பதில் ஆக்ஷேபணையில்லை.

அப்பா. 'நேக்கு இது தெரியுமே. நீ இது தான் செய்வாயென்று முன்னமேயே சொன்னேனே.'

மணி. 'நான் இங்கேயில்லை போ. எனக்கு கோபம் வந்தூட்டுது. நான் போறேன்.'

அப்பா. 'அடே, மணீ! ஏண்டா, என்னத்துக்கடா கோபம்.'

மணி. 'நான் தான் பொம்மையெழுதுவேன்.'

ராஜா. 'இம்—கும். நோக்கென்ன எழுத தெரியும்.'

அப்பா. 'அவன் கிடக்கிறான்டா மணீ. அவனே பொம்மையெழுதிக்கொண்டு உட்கார்ந்திருக்கட்டும். நாமிரண்டுபேரும் வேறே ஒரு காரியத்திற்குப் போவோம்.'

மணி. 'ஸரி. என்ன சொல்லு.'

அப்பா. 'ஏண்டா, ராஜா என்ன பொம்மையெழுதப் போகிறாய்.'

ராஜா. 'நான் ஒரு பெரியபன்னி எழுதப்போகிறேன்.'

மற்றைய மூன்றுபேர்களும் இதைக்கேட்டதும் சிரித்தார்கள்.

ராஜா. 'ஏதுக்கடா சிரிக்கிறீர்கள். அதிக மயிரில்லாத பன்னியைப்போலொத்த மிருகங்களை யெழுதுவது மிகவும் ஸுலபமாச்சுதே. அதனால்தான் நானதை யெடுத்துக்கொண்டது.'

அப்பா 'ஸரி, சுந்தரம்! நீ யென்ன செய்யப்போகிறாய். உன் 50-ரூபாயை எந்த விதத்தில் ஸம்பாதிப்பாய்.'

ஸுந்தரம். 'ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீ வாணீ விலாஸினீ யென்னும் பத்திரிகைக்கு ஸரஸ்வதி பூஜை நம்பருக்கு இரண்டு பாட்டுகள் எழுதியனுப்பினேனேயானால் பாட்டு ஒன்றுக்கு 25 ரூ வீதம் உடனே 50 ரூபாய்க்கு ஒரு செக்கு வந்து விடுகிறது.'

அப்பா. 'கவிராயரா தாங்கள்! தங்கள் பாட்டு பலா உஸ்தி போலிருக்கிறதே. பாட்டு 1-க்கு 25-ரூபா யாரடா கொடுப்பார்கள். முதலாவது உன் பாட்டை ஒப்புக்கொள்ளுகிறார்களோ இல்லையோ.'

ஸுந்தரம். 'போடா போ. உனக்கென்ன தெரியும், சவுக்கமா வேணும்பேசுவே. நான் எழுதியனுப்புகிறேன் பாரேன். இதுக்குள்ளேயே என் மனத்தில் பாட்டுக்கு வேண்டியதுகளெல்லாம் சேர்த்துவிட்டேனே. பிராஸத்தில் எழுதிவிட்டால் திவ்யமாக இருக்குமே.'

அப்பா. 'பிராஸம் என்றால் என்ன.'

ஸுந்தரம். 'பார்த்தாயா. உனக்கு இதுகூட தெரியவில்லே. பிராஸம்என்றால் பாடல்களில் உபயோகப்படும் வார்த்தைகளில் ஒன்றைப்போல் மற்றொன்று சப்திக்கிறது; உதாரணமாக, மானே, தேனே; மயிலே, குயிலே; பால், டால்; அங்கஜன், பங்கஜன் முதலியவைபோலவுள்ளதுகள்.'

அப்பா. 'ஏதேது ரொம்ப இலக்கணம் தெரிந்தவனுக விருக்கிறாயே.'

மணி. 'எனக்குத் தெரியாதோ இது. அமுரது, கிமுரது; அம்மா, கிம்மா; சாப்பாடு, கூப்பாடு. இதோ நானும் தான் சொல்லிவிட்டேன். நான் தான் பாட்டெழுதுவேனப்பா. இல்லாதபோனால் நான் கோவிச்சுக்கிண்டு போகிறேன், போ.'

அப்பா. 'இதேதுடா இது. இந்த சங்கத்தைச்சேர்க்கிறதே இத்தனை சங்கடத்திலிருக்கிறது. அடே மணி. நான் தான் முன்னமேயே உனக்குச்சொன்னேனே. அவாளெல்லாம் கிடக்கட்டும் நாமிரண்டு பேருமாக ஒரு காரியம் செய்வோம் சொல்ரேன் கேள் என்று சொன்னேனே. மறுபடிமறுபடியும் அசடுமாதிரி ஏன் கோபிச்சுக்கொண்டு ஓடரே.'

மணி. 'ஸரி. என்ன சொல்லு பார்ப்போம்.'

அப்பா. 'இதெல்லாம் பிரயோஜனமில்லை. நாமிரண்டு பேருமாக வியாபாரம் செய்வோம். இந்நாளில் வியாபாரத்தைப் போல் வேறொன்றிலும் லாபம் வருகிறதில்லை. ராஜாவும் சுந்தரமுமாக 100 ரூபாய்க்கு வழிபண்ணி விட்டார்கள். நாமிரண்டு பேருமாக மீதி 100 ரூபாயையும் வியாபாரத்தில் ரொம்ப ஜல்தியில் எடுத்துவிடுவோம்.'

ராஜா. 'ஆமா. இந்நாளில் வியாபாரத்தில் என்ன லாபம் வருகிறது. உனக்கு பலா வியாபாரம் தெரியுமாக்கும்.'

அப்பா. 'போரும் போரும். பேசாமல் வாயைமூடிக் கொண்டிரு. என்னவிருந்தாலும் எனது வியாபாரம் உன்னுடைய 50 ரூ பன்னிக்குக் குறைவாகப் போய்விடாது.''

எல்லாரும் இதைக்கேட்டதும் சிரித்தார்கள்.

'உங்களோடு வம்பு பேசிக்கொண்டிருந்தால் தபாலுக்கு நாழியாய்விடும். நான் தனியாகப்போயுட்கார்ந்துகொ

ண்டு என் படத்தையெழுதி முடித்து பட்டணத்துக் கண் காட்சிக்கனுப்புகிறேன்.' என்று சொல்லிக்கொண்டு ராஜா ஒரு உள்ளுக்குள் போய்விட்டான்.

'நானும் ஒருவரும் தொந்திரவுபண்ணமல் நிச்சப்த மாக விருக்குமிடத்திற்குப்போய் என்பாடல்களை யெழுதி முடித்து இன்றுதபாலிலேயே ஸ்ரீ வாணீ விலாஸினீக்கு அனுப்புகிறேன்' என்று சொல்லி ஸுந்தரமும் எழுந்திருந்து போய்விட்டான்.

உடனே அப்பா, மணியை நோக்கி "அடே மணீ. அந்த வேலைக்காரப்புலிகள் இரண்டும்போய்விட்டதுகள். நாமும் நம்முடைய வியாபாரத்தைப் பற்றி யோசிப்போம். எனக்கு ஒன்று தோணுகிறது சொல்ரேன் கேள். இந்த சிவன் கோவில்களிலெல்லாம் பூதம் என்று வருகிறதே பார்த்திருக்கிறுயா".

மணி. 'நான்பார்த்ததில்லையே. அதுஎப்படியிருக்கும்.'

அப்பா. 'அடே, ஸ்வாமி புரப்பட்டதும் முன்னுடி இரண்டு மூன்று பேர்கள் பெரிய பொம்மையொன்று செய்து அதை தூக்கி, அதுக்குள் தன்னுடம்பை செலுத்திக் கொண்டு, வீதியில் நடந்து வருகிறுனுகளோ இல்லையோ.'

மணி. 'வரான்கள். அது ஏன் அப்படி வரான்.'

அப்பா. 'ஸரி, இன்னமே இதுக்கு உனக்கு யார் தத்துவார்த்தத்தை சொல்லிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறது. அதை அப்புறம் விசாரித்துக் கொள்வோம். இப் பொழுது அந்த மாதிரியாக அழகான பொம்மைகளாக இரண்டு செய்து ஒருவருக்கும் தெரியாமல் அதை எடுத்துக்கொண்டு ரெயில்வே ஸ்டேஷனைப் பார்க்கப்போய்—

மணி. 'அதை தலையில் கவுத்துக்கொண்டு விட்டால் பிறகு கண் எப்படித் தெரியும். நாமெப்படி நடந்துபோகிறது.'

அப்பா. 'நம்முடைய கண்ணுக்கு நேர அந்த பொம்மைகளில் இரண்டு ஓட்டைகள் செய்துவிட்டு அந்த வழி

யாகப் பார்த்துக்கொண்டு நடக்கிறது.'

மணி. 'என்னத்துக்காக அப்படிப்போகிறது.'

அப்பா. 'ஸரி. அடியைப் பிடியடா பாரதபட்டா வென்று திரும்பிவிட்டயே. முதலிலேயே தான் நாமிரு வருமாக 100 ரூ பணம் ஸம்பாதிக்கவேண்டுமென்று சொன்னேனேடா.'

மணி. 'இந்தப் பொம்மையைத் தலையில் கவுத்துக் கொண்டு போனால் பணம் வருமோ.'

அப்பா. 'இல்லையடா. அந்தப் பொம்மையின் கை யில் ஒரு ஓட்டை வைக்கிறது. அந்தப் பொம்மையின் பேரில் "இந்த பொம்மையின்கையில் ஒருரூபாயைவைத்து பிறகு இது செய்யும் வேடிக்கையைப் பாருங்கள்" என்று ஒரு பெரிய நோட்டீஸ் எழுதி ஒட்டி விடுகிறது. இந்தப் பொம்மையை தலையில் கவுத்துக்கொண்டு நாமுள்ளிருக்கி றது தெரியாதபடி ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போனால் இதைப் பார்த்ததும் ஒவ்வொருவரும் ஒரு ரூபாயை போடுவார்கள். நாம் உள்ளிருந்து அந்த பணத்தை யெடு த்துக்கொண்டு அதற்குப் பதிலாக கால் ரூபாய் பொறும் படியான பிஸ்கோத்து, பெப்பர்மெண்டு, மிட்டாய், கொடி மிந்திரிப்பழம் முதலிய ஏதாவது ஒன்றை அந்த கையிலு ள்ள துவாரத்தின் வழியாகவே கொடுத்து விடுகிறது. அதை யெடுத்துக்கொண்டு அவர்கள் போய்விடுவார்கள். நமக்கு ஒவ்வொருவரிடத்திலும் இவ்வாறு முக்கால்ரூபாய் வீதம் லாபமாகும். இந்த மாதிரியாக ஒரு நிமிஷத்தில் சேர்த்துவிடலாம்.'

மணி. 'அந்த பிஸ்கோத்து, பெப்பர்மெண்டு எல் லாம் நமக்கேது.'

அப்பா. 'அவைளை ஸ்பென்ஸர் அண்டுகோவில் வழி யில் வாங்கிக்கொள்வோம்.'

மணி. 'நானும் ஸ்பென்ஸருக்கு வருவேன். போ வோம் வா.'

அப்பா. 'இரு. நல்ல பொம்மையாக இரண்டுசெய்து கொண்டு அப்புறம் போவோம்.'

உடனே இவ்விரு சிறுவர்களுமாக வெகு பிரயாஸைப் பட்டு இரண்டு அழகிய பொம்மைகள் செய்தார்கள். மேற் கூறியபடியே அவைகளின் கண்களுக்கும், கைகளுக்கும் துவாரங்கள் விடப்பட்டிருந்தன. அவைகளின் வெளிப் புறத்தில் பெரிய எழுத்தில் பல நோட்டீஸ்கள் ஒட்டப் பட்டிருந்தன. அந்த நோட்டீஸ்களில் பின் வருமாறு வரையப்பட்டிருந்தது.

"இந்தப் பொம்மையின் கையில் ஒரு ரூபாயை வைத்துப் பிறகு அது செய்யும் வேடிக்கையைப் பாருங்கள்."

"இந்தப் பொம்மையை ஒருவரும் தொடக்கூடாது."

"யாராவது இத்துடன் விஷமம் செய்தால் அவர்களை பிராஸிகூஷன் செய்யப்படும்."

"செல்லாத ரூபாய்களைப்போட்டால் இந்தப் பொம்மை ஒன்றும் செய்யாது."

"இதில் பணம் போட்டு வேடிக்கையைப் பார்க்காமல் போனீர்களேயானால் பிறகு வருத்தப்படுவீர்கள்

இவை மாதிரியாக இன்னும் பல விளம்பரங்கள் காணப்பட்டன. இவ்வாறு இரண்டு பொம்மைகளும் தயா ரானவுடன் இரண்டு குழந்தைகளுமாக அவைகளையெடுத் துக்கொண்டு தங்களது தாயார் தகப்பனுருக்குத் தெரியா தபடி வெளிக்கிளம்பினுர்கள். வீட்டை விட்டுச் சிறிது தூரம் சென்றதும் இருவர்களும் பொம்மைகளைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு கண்களுக்காக ஏற்பட்ட துவாரங்க ளின் வாயிலாக மார்க்கத்தைக் கவனித்துக்கொண்டு போ கையில் வழியில் ஒரு கல்லு தடுக்கி இருவரும் கீழே விழுந் தார்கள். பொம்மை யிருந்ததுபற்றி இவர்களுக்கு உடம் பில் ஒன்றும் காயம் படவில்லை. மணி உடனே எழுந்தி ருந்து "போரும் அப்பா இது நான் போகிறேன் ஆத்

துக்கு. எனக்கு ரொம்ப கோபம்வந்தூட்டுது'' என்றான்.

அப்பா. "அது கெட்டுது புடி. கீழே விழுந்தது மன்னியில் உன் கோபத்தைத் தணிக்கிரதல்லவா பெரிய கரியமாயிருக்கிறது. ஸ்பென்ஸர் அண்டுகோவுக்குபோய் பெப்பர்மெண்டு முதலியதுகளெல்லாம் வாங்கவேண்டா மாடா, மணீ, வா, போவோம். பொம்மையை எடுத்துக் கொள்."

மணி. இ - ம் ஸ்பென்ஸருக்குப் போவோம் வா" என்று பொம்மைகளை யெடுத்துக்கொண்டு இருவருமாக ஸ்பென்ஸருக்குப் போய் அங்கு பெப்பர்மெண்டு, பிஸ் கோத்முதலியவைகள் வாங்கிக்கொண்டு அதைச்சிறிதுசிறி தான பொட்டனங்களாகக் கட்டிக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டார்கள். சற்று தூரம் போனதும் ஒரு விஷமக் காரப்பையன் இவர்களைப்பார்த்து இவர்களின் பொம்மை களின் வெளிப்புறத்தில் ஒட்டியிருக்கும் நோட்டீஸை வாசித்து மணியின் பொம்மையின் கையில் 6-பைஸாவை வைத்தான். உடனே மணி உள்ளிருந்தபடியே "அடே அப்பா எனக்குக்காசு வந்தூட்டுதுடா. ஆனால் வெள்ளிக் காசைக் காணோமே. இதற்கு எவ்வளவு பெப்பர்மெண்டு கொடுக்கிறதுடா" என்றான்.

அப்பா. இதேதுடா இது! இவன் இப்படி எரைய றான். அடே மணி கத்தாதே. ஒரு பெப்பர்மெண்டு எடு த்துக் கொடு" என்றான்.

இதையெல்லாம் கேட்ட அந்த விஷமக்காரப்பையன் "அடே உள்ளே போக்கிரிப்பசங்களிருக்கிறனடா" என்று சொல்லிக்கொண்டு இரண்டு பொம்மைளையும் முகத்தைப் பார்க்க இரண்டு அடி அடித்து விட்டு ஓடினான். உடனே அப்பாவும் மணியும் பொம்மைகளைக் கீழே போட்டுவிட்டு அந்தத் துஷ்டப்பையனைத் துரத்திக்கொண்டு ஓடினார்கள். ஆனால் அந்தப் பையன் வெகு வேகமாய் ஓடிவிட்டான். இவர்களும் சிறிது தூரம் போய்ப் பிறகு ஓய்ந்து நின்று

விட்டார்கள். மணியும் மிகவும் களைப்படைந்து "அடே அப்பா இந்த பெப்பர்மெண்டையும் பிஸ்கோத்தையும் நாம்பளே சாப்பிட்டு விடுவமடா. படாதூன்னயோ என க்கு கோபம்வந்தூடும். நான் போய்விடுவேன்," என்றான்

அப்பா. "ஸரி. சாப்பிடு. நீ எப்படியாவது கோவிச் சுக் கொள்ளாமலிருந்தால் சரி" என்றான்.

இருவரும் அங்குச் சற்று உட்கார்ந்து கையிலிருந்த உண்டிகளையெல்லாம் சாப்பிட்டு விட்டு, இப்பொம்மை வியாபாரம் ஸரியல்ல, வேறு என்ன செய்யலாமென்று யோசித்துக்கொண்டிருக்கும்பொழுது அவர்களுக்கு எதி ரே ஓர் மரத்தில் பெரிய எழுத்துக்களில் ஒரு நொட்டீஸ் போட்டிருந்ததைக் கண்டார்கள். உடனே இருவரும் அதனருகிற்சென்று அதைப் பார்த்ததில் அதில் பின் வரு மாறு எழுதியிருந்தது.

## ரூ. 200 இனும்.

ஸெண்டரல் ஜயிலி லிருந்து தப்பித்துக் கொண்டு ஓடிப்போன ரகுபதி யென்னும் திரு டனைக் கண்டு பிடித்துக் கொடுக்கிறவர்களுக்கு ரூ. 200 உடனே இனும் கொடுக்கப்படும். ஷை ரகுபதி யென்பவனுக்கு மூக்கின் நடுவில் ஓர் பள் ளமிருக்கும், ஆளும் 7-அடி உயரமாகவிருப்பன். இவை தான் அவனுக்கு அடையாளங்கள். இவ னைப் பிடிப்பவர்கள் உடனே சமீபத்திலுள்ள போலீஸ்ஸ்டேஷனுக்குத் தெரியப்படுத்தவும்.

எல்லியட்,

போலீஸ் ஸூபரிண்டேண்டண்ட்.

இதை அப்பா மணி இருவரும் வாசித்தானதும்,

அப்பா. "அடே மணீ! நமக்கு நல்ல சமயம் வாச்சு தடா" என்றான்.

மணி. "ஏன் வாச்சுது."

அப்பா. "ரொம்ப நன்றாயிருக்கிறது நீ கேட்கும் கேழ்வி. நாமிரண்டுபேரும் திரும்பி ஆத்துக்குப்போனால் நம்மையொருவரும் பரிஹாஸம் செய்யாமலிருக்கும்படி நாமும் பணம் ஸம்பாதிப்பதற்கு நல்ல ஸமயம் வாச்சுது. இந்த நோட்டீஸில் கண்ட திருடனை பிடித்துக் கொடுத்து விட்டமேயானால் நமக்கு மொத்தமாக ரூ 200 கிடைக்கும்."

மணி. 'அவனை யேன் பிடிக்கவேணும்.'

அப்பா. 'நமக்குப் பணம் கிடைப்பதற்காகத்தான்.'

மணி. 'நமக்கு யார் பணம் கொடுப்பா.'

அப்பா. 'போலீஸ் ஸூபரிண்டெண்டென்ட்.'

மணி. 'அவனை யென்னமா பிடிக்கிறது.'

அப்பா. 'நாம் வந்த வழியில் உயரமான மனிதன் ஒருவன் படுத்திருந்தான் அவன் தான் போல் தோணுகிறது. அங்கு போவோம் வா.'

மணி. 'அவன் ஏன் அங்கு படுத்திருந்தான்.'

அப்பா. 'ஜெயிலிலிருந்து தப்பி ஓடிவந்த களைப்பு அவன் அங்கு படுத்துக்கொண்டு தூங்கினான். நாமிருவரும் அங்கு போய் நான் அவன் மூக்கிலுள்ள பள்ளத்தை கவனித்து உனக்கு ஜாடை செய்கிறேன். நீ உடனே ஓடிப்போய் நம்மாத்துக்கு அடுத்தாப்போலிருக்கும் போலீஸ் ஸ்டேஷனில் போய் சொல்லி 4 அல்லது 5 கான்ஸ்டபில்களை கை விலங்குடன் கூட்டிவா, தெரிந்ததா.'

மணி. 'என்னத்துக்கு அந்த கான்ஸ்டபிள்.'

அப்பா. 'அத்திருடனை பிடித்து விலங்கு போடுவதற்காகத்தான்.'

மணி. 'ஒரு நிமிஷம் ஓடிப்போய் கூட்டிவருகிறேன். அந்த திருடன் எங்கிருக்கிறான்.'

அப்பா. 'நாம் வரும்பொழுது இருவரும் கல்தடுக்கி விழுந்தோம் பாரு அங்கிருந்தான்.'

மணி. 'நாமேன் விழுந்தோம்.'

அப்பா. 'ஸரி. இவன் கேழ்விகளுக்கு பதில் சொல்லுவதற்குள்ளாக தாவு தீர்ந்துபோய்விடுகிறது. அடே மணீ நாம் அந்த விடம் வந்து விட்டோம். பேசாமலிரு. நான் போய் பார்த்து உனக்கு ஜாடை செய்கிறேன்.'

மணி ரோட்டிலேயே நின்றான். அப்பா வெகு வேகமாக பக்கத்திலிருந்த வயலிலிறங்கியோடி அத்திருடன் சமீபத்தில் வந்ததும் மெதுவாகக் காலடி ஓசைப்படாமல் அவன் பக்கத்தில் சென்று குனிந்து அவன் மூக்கைப் பார்த்தான். அதில் பள்ளமிருக்கக்கண்டு உடனே வெகு ஸந்தோஷத்துடன் மணியைப் பார்த்து தன் மூக்கைத் தொட்டு ஜாடை காட்டினான். மணியும் வெகு வேகமாக போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினான். இதற்குள்ளாக அந்த ரகுபதியும் தூக்கத்திலிருந்து விழித்தான். விழித்ததும் தன்னருகாமையிலிருந்த சிறு பையனைப்பார்த்து திடுக்கிட்டு எழுந்திருந்து அச்சிறுவனை 'நீ யார்' என்றான்.

'அவன் எழுந்து நின்றதும் அவன் உயரத்தைப் பார்த்து நோட்டீஸில் கண்டபடி 7-அடி யிருக்கலாமென்று ஸந்தோஷித்து அச்சந்தோஷத்தில் அவன் கேட்ட கேள்விக்கு '7-அடி' யென்று பதிலுரைத்தான்.'

ரகுபதி. 'நான் உன் பெயரைக்கேட்டால் 7-அடி என்கிறாயே என்ன' என்றான்.

அப்பா. 'இல்லை ஸார், அதோ ஓடரபையன் 7-அடி போனான் என்று சொன்னேன். நீங்களெழுந்திருந்ததைப் பார்க்கவில்லை.'

ரகுபதி. 'அந்தப் பையன் எங்கு ஓடுகிறான்.'

அப்பா. 'வீட்டுக்கு.'

ரகுபதி. 'என்னத்திற்கு.'

அப்பா. '200 ரூ-இல்லே-பிஸ்கோத்து கொண்டுவர.

ரகுபதி. 'உன் வீடு எங்கிருக்கிறது.'

அப்பா. இவனுக்கு நம் வீட்டைச் சொல்லிவிட்டால் ராத்திரியில் நம்மாத்திலும் திருட வந்துவிடுவனென்றெண்ணி அதற்கு எதிர்ப் புறமாயுள்ள திக்கைக் காண்பித்து 'அங்கே' என்ருன்.

ரகுபதி. 'உன் வீடு இந்தப் பக்கமானல் அந்தப்பையன் ஏன் எதிர்ப்பக்கமாய் ஓடுகிருன்.'

அப்பா. 'ஆம் ஸார், அவன் போலீஸ் ஸ்டேஷன்—இல்லே, இல்லே,—ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போகிருன்.'

ரகுபதி. 'என்னடா போக்கிரிப் பயலா யிருக்கே. 200 ரூ, போலீஸ் ஸ்டேஷன், என்று என்ன என்னவோ சொல்லுகிருய்' என்று அதட்டினன்.

அப்பா. 'இல்லே ஸார். உங்களுக்கு தூக்கக்கலக்கம். சிவனேன்னு படுத்து இன்னெரு தூக்கம் தூங்குங்கள்.'

இதற்குள்ளாக மணி 7—8 கான்ஸ்டபிள்களே கூட்டிக்கொண்டு இவர்களுக்குத் தெரியாமல் பின்பக்கமாக வந்துவிட்டான். அந்த கான்ஸ்டபிள்களும் ரகுபதியை உடனே பிடித்துக் கட்டி விலங்கைப் போட்டார்கள். போட்டானதும் அப்பா அந்த கான்ஸ்டபிள்களுள் முதன்மையானவனே நோக்கி 'ரூ 200 இனும் எங்கே' என்ருன்.

கான்ஸ்டபிள். 'ஓகோ. இனத்துக்கா இந்த வேலே. உங்களுக்கு இனும் கிடைக்கும். உங்கள் பேரென்ன?'

அப்பா. 'என்பேர் திரவியார்ஜன சங்கத்தின் மானேஜர், என்ருன்.'

இதைக் கேட்டதும் கான்ஸ்டபிள் சிரித்துக்கொண்டு "ஸரி இந்த விலாஸத்துக்குப் பணம் வந்துவிடும். ஆனல் இத்திருடனே விசாரிக்கும்பொழுது தாங்கள் இருவரும் சாக்ஷிக்கு வரவேண்டும்" என்ருன்.

மணி. 'நாங்கள் என்னத்துக்கு வரவேணும்.'

அப்பா. 'எங்கு வேணுமானாலும் வருகிறோம். 'மேலஸந்தர்ப்பங்கள் ஒன்றும் வேண்டாமென்றால் பணத்தை உடனேயனுப்புங்கள்'' என்றான்

கான்ஸ்டபிள். ''ஏதேது இந்தப் பையன் வெகு துடியாக விருக்கிறானே. அப்பா, எனக்கு ரொம்ப பயமாக இருக்கிறது. பணத்தை உடனே அனுப்பி விடுகிறேன் யோசிக்காதே. நீங்களிருவரும் இனிப் போகலாம்.''

உடனே அப்பாவும் மணியும் வீடு வந்து சேர்ந்தார்கள். அன்று தபால் தப்பாமல் ராஜாவும் ஸுந்தரமும் அவரவர்கள் எழுதியதை அங்கங்கு அனுப்பிவிட்டார்கள். ராஜாமட்டிலும் பன்றியெழுதி அது ஸரியாக வராமல் கடைசியாக பிரிடிஷ் லயன் (British Lion) என்று ஒரு சிங்கம் எழுதி அனுப்பினான். இதற்குப்பிறகு இரண்டு நாள் இவர்களெல்லோரும் வெகு பொறுமையுடன் காத்திருந்தார்கள். மூன்றும் நாள் காலையில் தபால் பியூன் மூன்று ரிஜிஸ்தர் கடிதங்கள் கொண்டு வந்து அந்த வீட்டில் திரவியார்ஜன சங்கமென்று ஒன்று இருக்கிறதாவென்று விசாரித்தான். உடனே ராஜா 'நான் தான் அதுக்கு சேர்மென்' என்றான். அப்பாவும் 'நான் தான் மானேஜர்' என்றான். மற்றைய இரண்டு குழந்தைகளும் தாங்கள் மெம்பர்கள் என்றார்கள். உடனே அத்தபால் பியூன் ஷெ சங்கத்தின் சேர்மனுக்கு ஒரு கடிதமும், மானேஜருக்கு ஒரு கடிதமும், ஸுந்தரத்திற்கு ஒரு கடிதமுமாக கொடுத்தான். சேர்மென் கடிதத்தைப் பிரித்துப்பார்த்ததும் அதில் ''பிரிடிஷ் லயன்'' என்ற படத்தை கண்காட்சியில் எல்லாரும் வெகுவாக மெச்சினதாயும், இவ்வளவு சிறுவயதில் இவ்வளவு நன்றாக எழுதினதற்காக ஜட்ஜிகள் அதற்கு 100 ரூ பரிசளித்ததாகவும் எழுதி 100 ரூபாய்க்கு ஒருசெக்கும் வைத்திருந்தது. மானேஜர் தன் கடிதத்தைப்

பிரித்துப் பார்த்ததும் அதில் ரகுபதியைப்பிடித்துகொடுத்ததற்காக அப்பா, மணி இருவருக்குமாக ரூ. 200 இனாம் கொடுக்கப்பட்டதென்று எழுதி திரவியார்ஜன சங்கத்து மானேஜருக்கு என்று ரூ. 200-க்கு ஒரு செக்கு வைத்திருந்தது. ஸுந்தரத்திற்கும் ஸ்ரீ வாணீ விலாஸினீ பத்திராதிபரிடமிருந்து வெகுவாகப்புகழ்ந்து ஒரு கடிதமும் 50ரூ.க்கு ஒரு செக்கும் வந்திருந்தது. இதைப் பார்த்ததும் மணி தனக்கு ஒன்றுமில்லையென்று கோபித்துக்கொண்டு போய்விட்டான். அப்பா அவனை ஸமாதானப்படுத்தித் தனக்கு வந்த கடிதத்தில் அவனையும் பற்றி எழுதியிருக்கிறதென்று சொல்லி அக்கடிதத்தை அவனிடம் கொடுத்தான். உடனே எல்லோருமாகத் தங்கள் தகப்பனாரிடம் 200 ரூபாயை கொடுத்து அந்தத்துரைக்கனுப்பச் சொல்லிவிட்டுத் தாயாரிடம் மிகுதியான 150 ரூபாயையும் கொடுத்து நடந்தவை யாவையும் சொன்னார்கள். பெற்றோர்கள் இவர்களை வெகுவாகக் கொண்டாடி அவர்களுக்கு அன்று திருஷ்டி சுற்றிப்போட்டார்கள்.



# சந்திராவல்லி.

## அத்தியாயம்—I.

## கொலை.

"சுந்தரி!" "சுதேசமித்திரனில் ஏதேனும் விசேஷமுண்டா?"

"காலமணி நேரமாய்ப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். விசேஷம் ஒன்றுந் தென்படவில்லை." என்று சுந்தரி மறுமொழி சொன்னாள்.

"ஆனால் நான் சிறிது பார்க்கிறேன் இப்படிக்கொடு." என்று சண்பகம் கேட்டாள்.

"இந்தப்பக்கத்தில் ஏதாயினுமிருக்கிறதாவென்று பார்த்துத் தருகிறேன்" என்று முணுமுணுத்துச் சொல்லிக்கொண்டு மித்திரனைத் திருப்பிப்பார்த்தாள்.

"அந்தச்சாதாரண பத்திரிகையை அப்போதைக்கப்போது மிகுந்த கவலையுடன் வாசிக்கிறாய். உன்னைப்போல யார் பிறந்தார்கள், யார் மணந்தார்கள், யார் இறந்தார்கள், யார் மணவாளனின்று

மொழிந்தார்கள், யார் தற்கொலை செய்துகொண்டார்கள், யார் திருடினார்கள், யார் கொலை செய்யப்பட்டார்கள் என்ற கவலை எனக்குக் கிடையாது." என்று சந்திரவல்லி சொன்னாள்.

சந்திரவல்லி சிறிது உயரமாகவும் அழகாகவுமிருந்தாள். இவள் முகவடிவு ஆடவர் மனத்தைக் கவரத்தக்கதாகவிருந்தது. நெற்றியைச்சுற்றிலும் மயிர்க்குஞ்சங்களிருப்பது ஆடவர்க்கு ஒருவித மனக்கவர்ச்சியையுண்டாக்கும். மேற்சொல்லிய மூவரும் அழகுடையவரேனும், சந்திரவல்லி மிகவும் மேன்மையான எழிலுடையவள் என்பதிற் சந்தேகமில்லை. சுந்தரி சில சமயங்களில் சிரித்துக்கொண்டும் சில சமயங்களில் புருவத்தை வளைத்துக்கொண்டும் மித்திரனைப்படித்துக்கொண்டிருந்தாள். மற்றைய தன் இரண்டு சகோதரிகள் பேசுவதைக்கூடக் கவனிக்கவில்லை. சண்பகம் சிறிது ஆத்திரங்கொண்டு

"சுந்தரி! பத்திரிகையை நீயே வைத்துக்கொண்டிருப்பையானால் சிறிது உரக்கப்படி நாங்களும் கேட்கிறோம்." என்றாள்.

"ஆம். அவள்தான் அந்தப்பத்திரிகையில் விசேஷமொன்றுமில்லை என்று சொல்லுகிறாளே." என்றாள் சந்திரவல்லி.

"தானே படிக்கவேண்டும் என்னும் கருத்துடனல்லவா அப்படிச்சொன்னாள். அதோபார் எதையோ கண்டு சந்தோஷப்படுகிறாள்."

"என்ன கொடுமையான செயல்?" என்று சொல்லி சுந்தரி உடல் சிலிர்த்தாள்.

"என்ன கொடுஞ்செயல்?" என்று ஆவலுடன் சந்திரவல்லி வினவினாள்.

"உடனே எங்களுக்குச் சொல்லவேண்டும்?" என்று சிறிது அதிகாரக்குரலுடன் சண்பகம் கேட்டாள்.

"லக்ஷ்மிவிலாஸத் தோட்டத்தில் ஒரு பெரியமனிதர் கொலை செய்யப்பட்டாராம்."

"லக்ஷ்மிவிலாஸத் தோட்டத்திலா?" என்று சந்திரவல்லிமெதுவாகச் சொன்னாள்.

"கொலையா செய்யப்பட்டார்—உரக்கவாசி." என்றுசண்பகம் கூறினாள்.

"ஒரு கொடுமையான கொலைச்செயல்: இன்றுகாலை இலட்சுமிவிலாஸத் தோட்டத்தில் ஒரு பெரிய மனிதரின்

உடல் கண்டெடுக்கப்பட்டது. அவர் ஆடை முழுவதும் இரத்தக்கறையாயிருந்தது. பக்கத்தில் ஒரு நாய் சுற்றிச் சுற்றிக் குலைத்துக்கொண்டிருந்தது. டாக்டர் நாராயண சாமி நாயுடு என்பவர் காயங்களைப்பார்த்து, பின்னர் நின்று கத்தியால் குத்தப்பட்டார் என்றனர். மேலும் முதல்நாளிரவு ஒன்பதுமணிச் சுமாருக்குக் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார், இறந்தவர் வலதுகையில் ஒரு அழுகிய கையாடை இரத்தக்கறையுடன் காணப்படுவதனாலும் அக்கையாடையின் ஒரு புறத்தில் ஏதோ பெயர்——".

சுந்தரி மேலே வாசிக்கமுடியாமல் பெருமூச்செறிந்தாள்.

"என்னபெயர் சுந்தரி? அந்த மாதிரி இதை எங்களுக்குப்பயமுண்டாக்குகிறாய்." என்று சண்பகம் சொல்லினாள்.

"மேலே வாசி" என்றாள் சந்திரவல்லி.

"பெயரைப்பற்றியென்ன?" என்றாள் சுந்தரி.

"அப்படியானால் அந்தப்பத்திரிகையை இப்படிக்கொடு" என்று சண்பகம் வாங்கிக்கொண்டாள். பத்திரிகையைப் பார்த்து 'சந்திரவல்லி' என்று எழுதியிருக்கிறது என்று மெதுவாகச் சொன்னாள்.

"ஆ! ஆ! இராஜேச்வரா! நீயா" என்று சொல்லிக்கொண்டே சந்திரவல்லி மூர்ச்சையாயினாள்.

சிறிதுகாலம் சுந்தரியாவது சண்பகமாவது பேசவில்லை. இருவர் முகமும் வெண்மை நிறத்தை யடைந்தது. கைகால்கள் சோர்ந்தன. மிகுந்த துக்கத்துடன் மூர்ச்சையடைந்த பெண்ணைப்பார்த்தார்கள். எப்படிச் சகோதரியினிடத்துக் குற்றத்தைச் சாட்டுவார்கள். 'இராஜேச்வரா!' என்று அவள் கதறியதன் காரணம் தெரிந்துகொள்ளவில்லை. அந்தக்கொலையைப் பற்றி வாசித்ததும் இவள் ஏன் மூர்ச்சையாகவேண்டும். நேற்றுச்சாயந்திரம் எங்குத்தனியே சென்றிருந்தாள்? என்ற எண்ணங்கள் இருவர் மனத்தில் குடிகொண்டன. உடனே சந்திரவல்லி முதல்நாள் சாயந்திரம் ஒருவகையாக இருந்தவிஷயமும், யாவரும் தனக்குத்துணை வேண்டாமென்றதும், சுந்திரமந்திரத்தினின்றும் திரும்பிவந்து படுக்கையறையை யடைந்ததும், இவர்கள் மனத்தில் விசதமாகத் தோன்றியது.

"சுந்திரமந்திரத்தில் சாவித்திரியிடந்தான் போயிருப்பாள்" என்று இரண்டுசகோதரிகளும் ஏககாலத்தில் முணுமுணுத்தார்கள்.

"சுந்தரி! என்ன செய்கிறோம்? என்ன எண்ணுகிறோம்? என்னவோ நேற்றிரவு அவள் உடம்பு அசௌக்கியமாயிருந்தமையாலும், அவள் பெயர் பொறித்த கையாடையுடன் ஒரு கனவானிறந்தமையாலும், அவளுடைய சகோதரிகளாகிய நாமே சந்தேகப்படுவது நியாயமாகுமா? அந்தமாதிரி கனவிலும் நினைக்கலாகாது. நினைக்கும்பொழுதே கொடுமையாகவிருக்கிறது. சிறிது பன்னீர் தெளித்துச் சிவிறிகொண்டு வீசலாம்." என்று சம்பகம் சொன்னாள். சண்பகம் சிறிது நிதானித்து அப்பத்திரிகையைக்கையிலெடுத்து மேலே வாசிக்க ஆரம்பித்தாள்.

" அந்தக்கையாடை மிகவும் விசித்திரமான வேலைப்பாடுள்ளதாயிருப்பதால், அந்தக்கனவான் இன்னவனென்று அறியச்சாத்தியமாகும் என்று 'போலீசார்' எண்ணுகிறார்கள். ஆனால் கையாடை இன்னாருடையதென்பதை இன்னுங் கண்டுபிடிக்கவில்லை."

"ஆனால் சீக்கிரத்தில் கண்டுபிடித்து விடுவார்கள். இவ்விடம் 'போலீசார்' வரமாட்டார்கள்; நாம் கௌரவமுள்ளவர்களாதலின்" என்று சண்பகம் கூறினாள்.

"இப்படிச்சும்மா இருக்கலாகாது. வைத்தியரையழைத்துவரவேண்டும். இதுவரையிலும் மூர்ச்சையடைந்தவளல்லள் நம்சகோதரி" என்றாள் சுந்தரி.

"ஆனால் விசிறிக்கொண்டிரு, நான்போய் அழைத்துவருகிறேன்" என்றாள் சண்பகம்.

சண்பகம் வைத்தியரை அழைத்துவரக் கதவண்டை சென்றதும், முருகன் என்னும் வேலைக்காரன் "போலீஸ் இன்ஸ்பெக்டர்" உங்களைப்பார்க்க வந்திருக்கிறார்" என்று சொன்னான்.

"போலீஸ் இன்ஸ்பெக்டர் என்னத்திற்கு வருகிறார்—சரி உள்ளே வரச்சொல்," என்றாள் சண்பகம்.

முத்துகிருஷ்ணன் என்பவர் சென்னைக்குப் போலீஸ் இன்ஸ்பெக்டர். ஸ்திரீகளிடம் அவருக்கு மிகுதியும் மரியாதையுண்டு. மேலும் அழகுடையவளானால் கேட்கவேண்டுவதில்லை.

"அம்மா! இலட்சுமிவிலாஸத் தோட்டத்தில் நடந்த செய்தி

யைப்பற்றி உங்களுக்குத்தெரிந்திருக்கலாமே" என்றார் உத்தியோகஸ்தர் சிறிது வருத்தத்துடன்.

"நேற்றுப்பத்திரிகையில் அந்த விஷயத்தைப் பற்றி வாசித்தேன்". இந்த வார்த்தைகளைச் சொல்லும்போது வாய் சிறிது குளறினாள். ஆனால் கூடியமட்டும் மனத்தின் எண்ணங்களை வெளிவிடவில்லை.

ஆயின் நான் இன்னத்திற்காக இங்குவந்திருக்கிறேன் என்று தெரிந்திருக்கலாம்." ஒரு கையாடையை எடுத்து "இதைப்போன்ற கையாடையை எங்கேனும் கண்டதுண்டோ" என்று புன்சிரிப்புடன் வெகு சாமர்த்தியமாய்க்கேட்டார்.

இந்தக்கையாடையைப் பார்த்ததும் சண்பகம் மயங்கினாள். ஆச்சரியப்பட்டாள். பிறகு உடனே பதில் சொல்ல நா எழுந்தும் அடக்கிக்கொண்டு மிகவும் சாக்கிரதையுடன் அந்தத் துண்டைப் பார்த்தாள். தான் பார்த்ததில்லையென்று சொல்ல மனதில் எண்ணினாள். ஆனால் சங்கராந்தியன்று சந்திரவல்லி வாங்கிய பன்னிரண்டு துண்டுகளிலொன்றெனை அறிந்துகொண்டாள். மனதில் எண்ணியபடி வாயினால் உரைக்கவில்லை. தன் தங்கையினுடையதுபோல் தோன்றுகிறதென்றாள்.

"உன் தங்கையின் பெயர் தலைப்பில் எழுதியிருக்கிறது" என்றார் உத்தியோகஸ்தர்.

"சிறிதுநேரம் இவ்விடம் இரும். நான் உள்ளே சென்று அவளுடைய கையாடையனைத்தையுங் கொணர்கின்றேன், பிறகு ஒருவித முடிவுக்கு வரவேண்டும்" என்று சண்பகம் சொல்லிவிட்டு உள்ளேசென்று அத்துண்டுகளைக் கொண்டுவந்தாள்.

"அதிக சாக்கிரதையாய் அத்துண்டுகளை உற்றுப்பார்த்து "பதினொன்று தாம் இருக்கின்றன" என; "கையிலிருப்பதுடன் பன்னிரண்டாகின்றது." என்றான் முத்துகிருஷ்ணன்.

"சரியாய் எண்ணிப்பாரும்."

"பதினொன்றைப் பலமுறை எண்ணினால் பன்னிரண்டாகாது. கொட்டிக்கொட்டியளந்தாலும் குறுணி பதக்காகாது, என்ற பழமொழி தெரியாதா."

"ஆனாலும் எண்ணிப்பாருங்கள் ஒன்று, இரண்டு......இது என்ன ஒரு கடிதம் கீழே விழுகிறது. சந்திரவல்லி என்று விலாசம் எழுதியிருக்கிறது. பிரித்துப்பார்க்கிறேன்.—'இன்றிரவு அதே

காலத்தில் இலட்சுமி விலாசத்தோட்டத்தில் என்னைச்சந்திப்பாய் சரி இந்தத்துண்டும் எனக்குவேண்டும்" என்று உடையில் எடுத்து வைத்துக்கொண்டார்.

தன் தங்கையைத் தப்பிவைக்கவேண்டுமென்று பாடுபடுவது போகத்தானே அவள் குற்றத்தை ஸ்தாபித்துவிட்டாள் சண்பகம்.

"நான் சந்திரவல்லியைக் கூட அழைத்துச் செல்லவேண்டும். அந்த உடலைப்பார்த்து ஒரு கால் இன்னானென்று தெரியப்படுத்தக் கூடும்" என்று முத்துகிருஷ்ணன் சொன்னான்.

"என் தங்கை இதுவிஷயத்தைப்பற்றி ஒன்றும் அறியாதவள். இந்த விஷயத்தைப் பத்திரிகையில் வாசிக்கும்போதே அவள் மூர்ச்சையடைந்தாள்."

"மூர்ச்சையடைந்தாளா?

"மூர்ச்சையடைந்ததனால் நான் வைத்தியரை அழைத்துவர வெளியே புறப்பட்டேன். தங்களைப்பார்த்தேன்."

"நான் பார்க்கமுடியுமா."

"பார்க்கவேண்டுமானால் பார்க்காமல் போகமாட்டீர்கள்."

"நான் என்னசெய்வேன். என் கடமையை நான் செய்யவேண்டும். அக்கனவானைச் சந்திரவல்லிக்குத் தெரியுமாவென்று பார்க்கச்சொல்லவேண்டும். என் பயப்படவேண்டும்? அவளைச் சந்திரவல்லி கொன்றாள் என்று சொல்லமாட்டோம். முக்கியமாய் நேற்றிரவு அவனைக்கண்டாளா, எத்தனை மணிச் சுமாருக்கு என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டியது."

"சந்திரவல்லி நேற்றுச் சாயந்திரம் சந்திரமந்திரத்திற்குச் சென்றிருந்தாள்."

"கூடயார் சென்றார்கள்".

"யாரும் செல்லவில்லை. தனியே சென்றிருந்தாள். சந்திரவல்லியைப் பார்க்கவேண்டுமானால் என்னுடன் வாருங்கள்" என்று சண்பகம் அழைத்துப்போனாள். இவர்கள் உள்ளே செல்வதற்கு முன்னமே சந்திரவல்லி மூர்ச்சைதெளிந்தாள்.

"அந்தமாதிரி யெல்லாம் பேசாதே. அதிகமாகப்பேசினால் பலஹீனமாய் விடும்." என்று சுந்தரி தன் சகோதரியைப் பார்த்துச் சொன்னாள்.

"அவன் இறந்துகிடக்கும்பொழுது—என் காதலன் இறந்திருக்கும்பொழுதா பேசக்கூடாதென்று சொல்லுகிறாய். மிகவும் வரு

த்தமாயிருக்கிறது. ஐயோ! நேற்றுச்சாயங்காலம் நான் என் அவனிடம் சொடுமையாயிருந்தேன். நீ இறந்து விடுவாய் என்று நான் எண்ணினேனில்லையே.—"

முத்துகிருஷ்ணன் இந்த வார்த்தைகளை மிகவும் கவனத்துடன் கேட்டான். ஆயினும் இவன் வரவை உடனே சந்திரவல்லி பார்த்துத் திரும்பினள்.

"யார் அது? அவருக்கு என்னவேண்டும்?" என்றாள் சந்திரவல்லி.

"நான் வேண்டுவதென்னவென்றால் நீங்கள் என்னுடன் வரவேண்டும். இந்தக்கையாடை அந்தக்கனவான் கையிலிருந்தது. இத்துண்டு தங்களுடையதாகையால் அவனை நீங்கள் பார்க்கவேண்டியது அவசியம்."

இரத்தக்கறை பொருந்திய அந்தத்துண்டைப்பார்க்கச்சகியாமல் சந்திரவல்லி கண்ணை இறுக்கி மூடிக்கொண்டாள்; உடம்பெல்லாம் நடுங்கியது.

"அதை மறைத்துவையுங்கள். யான் பார்க்கச் சகியேன்." என்றாள் சந்திரவல்லி.

மறுபடியும் முத்துகிருஷ்ணனிடமிருந்து அந்தக்கையாடையை வாங்கிக்கண்ணில் ஒற்றிக்கொண்டு முத்தமுங்கொண்டாள். பிறகு சிறிதுநேரம் சும்மாவிருந்து,

"அவனுடைய இரத்தம், என் பிரியநேசனின் இரத்தம்." என்று முணுமுணுத்தாள்.

"அம்மா. சிறிது எழுந்திருங்கள். அவரை நீங்கள் பார்க்கத்தான் வேண்டும்."

"அவன் இறந்துகிடப்பதையா பார்ப்பேன். நேற்றிரவு சந்திரன் பிரகாசிக்கையில் எவ்வளவு அழகுடனிருந்தான்.'

"அம்மா! ஒன்றும் இப்பொழுது சொல்லவேண்டாம். ஏதேனுஞ்சொன்னால் குற்றம் தங்களைச் சேரும்".

"என்னையா குற்றவாளி யென்பார்கள்? ஐயா, நீங்கள் அப்படியா நினைக்கிறீர்கள்."

"அம்மா! நான் ஒன்றும் நினைக்கவில்லை. ஆனால் தங்கள் சொல்படி நீங்கள் தாம் அந்தக்கனவானை இரவில் கடைசியாகப்பார்த்தீர்கள். அவ்வளவுதான்."

---

## அத்தியாயம்—II.

# 'அவன் என் புருஷன்.'

பத்திரிகையைச் சுந்தரி வாசித்துக்கொண்டிருக்கும்போது சென்னையிலேயே வேறோர் இடத்தில் பாலாம்பாள் என்பவள் இதே செய்தியை வாசித்தாள். இவள் அழகுடைய ஸ்திரீ. இவளுக்குச்சுமார் இருபத்திரண்டு வயதிருக்கும். தந்தப்பதுமையைப் போல் தோன்றினாள். அழகு என்னும் பொருளையே இந்த ரூபமாகப்பிரமன் செய்தனனோவென்று சந்தேகிக்கும்படி இருந்தாள். தென்தேயத்தியஸ்திரி யென்று தன் நடவடிக்கையால் தெரிவித்தாள். காலையில் பத்திரிகையைத் தன் கையில் ஏந்தி நாற்காலியில் சார்ந்துகொண்டு

"அப்படியா! அவனைக்கொன்றாள், பாவம், இராஜேச்வரா! என்ன கொடிய முடிவு. கண்ணுடியிலுள்ள நீர்த்துளிக்குச் சமானமாக உன் உயிர் பிரிந்தது. அந்தச்சிறுமியைச் சந்தித்தபோது தனக்கு நேரப்போகும் அபாயத்தை நினைக்கவில்லை. அவளே அவனுக்கு யமனாயினாள். அவளுடைய கையாடை இவன் கையில் எப்படி வந்தது? என்னைப்பற்றி அவளிடம் ஏதேனுஞ் சொல்லியிருப்பானோ? சொல்லாமலும் இருந்திருக்கமுடியாது. ஒரு மனைவியிருக்கும்போது வேறொருத்தியை மணக்க முயன்றான். ஆம், நான் அவன் மனைவி என்பதை மறக்கமுடியாது. அவனிறந்துவிட்டான். நான் சுயேச்சையாயிருக்கலாம்" என்று தனக்குள் எண்ணிக்கொண்டிருந்தாள். எனினும் கடைசி வார்த்தைகளைச் சிறிது உரக்கச் சொன்னாள். இவ்வார்த்தைகளை ஒரு கனவான் கேட்டுக்கொண்டே அவளிருக்கும் அறையிற் பிரவேசித்தான்.

"யாரிறந்தார்கள்? யார் சுயேச்சையை யடைந்தார்கள்?" என்று கேட்டுக்கொண்டு மதிதரன் பிரவேசித்தான். உடனே பாலாம்பாள் எழுந்து நின்றுகொண்டு

"நீங்கள் இன்று வரமாட்டீர்கள் என்று நினைத்தேன். உட்காருங்கள். காபி சாப்பிடுங்கள்.—ஆம். ஆம். நீங்கள் ஒன்றுஞ் சாப்பிடமாட்டீர்கள். 'யாரிறந்தார்கள், யார் சுயேச்சையை யடைந்தார்கள்' என்று கேட்கின்றீர்கள்? நான் ஒரு நாடகம் எழுதிக்கொண்டிருக்கிறேன். நாடகத்தலைவனை தீயவன் இறந்தான். என் நாடகத்தலைவி சுயேச்சையை யடைந்தாள். மேலே எப்படிக்கதையை

முடிப்பதென்று ஆலோசித்துக்கொண்டிருந்தேன். ஆகையினால் தான் நீங்கள் வரும் காலடிச்சப்தமும் கேட்கவில்லை."

"நன்றாகயிருக்கிறது; ஒரு நாடகாசிரியன் தன் நாடக பாத்திரங்களனைவரையும் முதலங்கத்திலேயே கொன்று விட்டு, மற்றைய பாகங்களை அவர்தம் மரண சாஸன பாலரைக் (executors) கொண்டு கதையை முடித்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்." என்று மதிதரன் சிரித்தான்.

"நீங்களேன் ஒருநாடகமாவது கதையாவது எழுதமுயலவில்லை."

"எனக்குச்சொந்தக் கற்பனைசக்தி கிடையாது அந்த விஷயம் எங்கேயோ படித்தேன்." என்றான் மதிதரன்.

"நீங்கள் என்ன சொன்னாலும் சரி. அந்தக்கதை உங்கள் கற்பனை என்பதற்குச் சந்தேகமில்லை. அதுபோகட்டும், நேற்றிரவு இலட்சுமிவிலாஸத்தோட்டத்தில் நடந்தகதையைப்பற்றிக்கேள்விப்பட்டீரா?"

"நான் கேள்விப்பட்டேன் இன்று காலையில்".

"அவன் உடலைப்பார்க்க யான் பிரியப்படுகிறேன்" என்னுடன் நீங்களும் வருகின்றீரா?" என்றாள் பாலாம்பாள்.

"நானா அந்தப்பிணத்தைப் பார்க்க அழைத்துப்போவது. நம்மை உள்ளே செல்லும்படி உத்தரவு கொடுக்கமாட்டார்கள். மேலும் பிணத்தைநான் பார்த்தால் ஒருவாரம் வரையில் மனம் வருந்துவேன். ஆகையால் நான் அழைத்துப்போகமாட்டேன்."

"எப்படியானாலும் நான் போய்ப்பார்க்கவேண்டும். பிணத்தைப்பார்த்து இன்னானென்று என்னால் தெரிவிக்கமுடியும். எனக்குத்தெரிந்தவன்போலத் தோன்றுகிறது. அவர்கள் உத்தரவு அவசியம் கொடுப்பார்கள். அது விஷயத்தைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்." என்றாள் பாலாம்பாள்.

"அப்படி அவசியம் போகவேண்டுமானால் போகலாம். ஒருகால் உன் சிநேகிதனானால் உன் மனம் வருந்துமே, போகவேண்டாமென்று சொன்னேன். கட்டாயம் போகவேண்டுமானால் நானும் வருகிறேன், போகலாம்."

'அவனுயிருடனிருக்கும்போது பார்க்க இஷ்டமில்லை. இறந்தபிறகு பார்க்கவேண்டுமென்று தோன்றுகிறது.' என்று எண்ணி உடைகளை மாற்றிக்கொண்டு மதிதரனுடன் இலட்சுமிவிலாஸத் தோட்டத்திற்குச் சென்றாள்.

"நாமிருவரும் ஒருமாதகாலமாய்ச் சினேகிதராயினும் நீங்கள் என்ன உத்தியோகம் செய்கிறீர்கள் என்பதை எனக்குச்சொல்ல வில்லை." என்றாள்.

"நான் ஒரு நியாயவாதியிடம் உத்தியோகமாகவிருக்கிறேன்"

"இராஜேச்வரர் பணம் கொடுத்திருக்கிறாரே அந்த இடத்திலா".

"ஆம் அங்கேதான். அவர் உயில்கூட பத்துதினங்களுக்கு முன்னமே தான் எங்கள் நியாயவாதியிடம் கொடுத்தார்."

"அந்த உயிலைப்பற்றித் தங்களுக்குத்தெரியுமா?"

"தெரியும். அந்த நியாயவாதியினிடந்தான் உத்தியோகமாக இருக்கிறேன்." என்றான் மறுபடியும் மதிதரன்

இருவரும் 'போலீசார்' வசதியை அடைந்தார்கள். இறந்தவனைப்பாலாம்பாள் கண்டதும் "ஆம். இராஜேச்வரன் தான். இவர் ஒரு நியாயவாதியின் தலைமை உத்தியோகஸ்தராகவிருந்தவர். இவருக்கு உறவினர் யாருமில்லை." என்றாள்.

இந்த வார்த்தைகளையெல்லாம் பக்கத்தில் நின்றவர் கேட்டார். உடனே சந்திரவல்லி முத்துகிருஷ்ணருடன் அங்குவந்தாள். அங்குக்கிடத்தியிருந்த உடலைக்கண்டதும் ஓடிவந்து அதனருகில் விழுந்து

"ஐயோ! இராஜேச்வரா! என் பிரியநாதா! பார்த்து ஒரு வார்த்தை சொல்லலாகாதா. நீ இறக்கவில்லை. எப்படி இறப்பாய். எல்லாம் கனவு நாதா! என் நேற்றுயான் உன்னிடம் கொடுமையாயிருந்தேன்? என்னை மன்னிக்கவேண்டும். வேண்டுமென்று செய்யவில்லை. உன் ஒரு விநாடி வருத்தத்தை மாற்ற என் உயிரைக்கொடுத்திருப்பேன். என்றாலும் நேற்றிரவு கொடியவளாயினேன். பிரிய நாதா! மனமிரங்கலாகாதா, யான் தங்களிடம் அன்புள்ளவள் என்பது தெரிந்துமா இப்படிப்பராமுகமாய் இருக்கிறீர்கள்—"

"சந்திரவல்லி, சாக்கிரதையாய்ப்பேசு. வீணை தொந்தரைப் படாதே. நீ சொல்லும் விஷயங்களை விவரித்துரைக்கலாகாது பின்னால் கஷ்டப்படுவாய்." என்று பாலாம்பாள் சொன்னாள். ஒருவரையொருவர் அருகில் நின்று நன்றாய்ப்பார்த்தார்கள்—இறந்தவன் மனைவியும் இறந்தவன் காதலியும். பிறகு சந்திரவல்லி அவளைப் பார்த்து

"என்னைச்சும்மா இருக்க நீ யாரவள் சொல்வதற்கு? நீ யார்? இங்கு உனக்கு என்னவேலை" என்றாள்.

"உன்னைவிட இராஜேச்வரனை நன்ருக அறிந்தவள்" என்று பாலாம்பாள் சொன்னுள்.

"அதுபொய். எனக்குத்தெரிந்த அளவு மற்றையோர்க்குத்தெரியாது. பிரியநேசருக்குத்தான் அவரவர் குணகுணங்கள் தெரியும்."

"காதலர்க்குக் கண்கள் கிடையாது. பிரியமுடையவன் செய்யுங்குற்றங்கள் பாராட்டாமற்போகும். பகைவர்களுக்கே குணகுணங்கள் நன்ருய்த் தெரியும்." என்று பாலாம்பாள் சொன்னுள்.

"நீ யார்? இவள் ஏன் தொந்தரை செய்கிருள். இவன் பகையாளியை இங்குயேன் அழைத்து வந்தீர்கள். இவன் இறந்துகிடப்பதைக் கண்டு சிரிக்கிருள்"

"அம்மா! நீங்கள் யார்" என்று பாலாம்பாளை முத்துகிருஷ்ணன் கேட்டான்.

"அவன் என் புருஷன், நான் இவன் மனைவி" என்ருள் பாலாம்பாள்.

"இவள் பொய் சொல்கிருள். இவன் என் காதலன்" என்று பைத்தியம் பிடித்தவள் போன்று பலமுறையும் சொன்னுள். பாலாம்பாள் மதிதரனைப்பார்த்து நாம் போகலாம். இவள் யாரோ? என் புருஷனுக்கு என்ன உறவோ? என்னை மிகவும் அவமானம் செய்கிருள்" என்று சொல்லிப் பிறகு சந்திரவல்லியைப் பார்த்து, என்னை இவள் இங்கு ஏன் வந்தனை என்கிருள்—ஒரு விசை மணமானவனை மறுபடியும் மணக்கவிரும்பிக் காதலித்தவள்—என்ன இழிவான தொழில் செய்ய நினைந்தாள்—அதுவும் அவன் மனைவியாய என் முன்னமேயே தான் அவன் காதலி என்கிருள் கௌரவத்துடன்" என்ருள்.

"நீ அவன் மனைவி என்பதை யான் நம்பவில்லை".

"என்ன சொல்கிருய்?"

"இராஜேச்வரன் மிகவும் நல்லவன், யோக்கியன் நீ சொல்வியபடி இருந்தால் என்னைக் காதலித்திரான்" என்று சந்திரவல்லி சொன்னுள்.

"இவள் என்னவெல்லாமோ சொல்கிருள். நாம்போகலாம்" என்று பாலாம்பாள் நகர்ந்தாள். பிரமைகொண்டமதிதரன் "இவள் அவன் மனைவியென்றது உண்மையாகுமா?" என்று கேட்டான்.

"ஆம் என்னுடன் வாருங்கள் என் கதையைச்சொல்லுகிறேன்" என்று பாலாம்பாள் மதிதரனை அழைத்துச்சென்ருள்.

---

## அத்தியாயம்—III.

## எருதின்வலி காக்கைக்குத்தெரியுமா?

மிகவும் சிரமத்துடன் முத்துகிருஷ்ணன் என்பவர் சந்திர வல்லியை அந்த இறந்துகிடக்குங் கனவான் பக்கத்தினின்றும் வெளியே அழைத்துச்சென்றான். வாயிலில் இவள் சகோதரிகள் காத்துக்கொண்டிருந்தனர். இவ்விருவரை எதிர்கொண்டு அழைத்துச் சென்று வீடுபோய்ச் சேர்ந்தார்கள். மூவரும் போகும்போது ஏதோ மருந்திற்கென்று வைத்திருந்த பாஷாணமடங்கிய புட்டியைச் சந்திரவல்லி எடுத்துக்கொண்டு தன் படுக்கையறைக்கு ஓட்டமாய்ச் சென்றாள். அவள் எண்ணத்தை யுணர்ந்த சகோதரிகளுள் சண்பகம் முன்னமேயே படுக்கையறையில் ஒளிந்துகொண்டாள். சந்திரவல்லி அறையை யுட்பக்கம் தாளிட்டுச் சாளரவாயில்பக்கம் திரும்பினாள். சண்பகத்தைக்கண்டு கடுத்தமுகத்துடன் "நான் தனியே இருக்கவேண்டுமென்று அப்பொழுதே சொன்னேனே. நீ என் இங்கு வந்தனை" என்றாள். "உனக்குப் புத்தி சுவாதீனப்படவில்லையாதலால் நீ தனியே இருக்கக்கூடாது என்று நான் வந்தேன்." என்றாள் சண்பகம்.

"நீ இவ்விடம் இருக்கலாகாது. நான் குழந்தையா என்ன என்னைத்தனியே விட்டுப்போகப் பயப்படுகிறாய். என்னைக்கொலைக்காரி என்றுதானே நீங்கள் நினைக்கிறீர்கள்."

"நாங்கள் ஒன்றும் நினைக்கவில்லை. நான் ஏன் இங்குவந்தேனென்றால் உன் எண்ணம் நேரானதாகவில்லை யென்று தெரிந்து கொண்டதனால்."

"அம்மாதிரி கெட்ட எண்ணம் என்னிடம் இல்லை."

"உண்மையாகக் கெட்ட எண்ணம் உன்னிடம் இருக்கிறது. இனி இந்தத்தாளைத் திறக்கமாட்டாய் என்று எண்ணியே இங்கே வந்தேன்."

"அப்படி நான் இப்பொழுதும்செய்தால் நீஎன்ன செய்வாய்."

"அப்படிச்செய்யலாகாது. செய்தால் உன்னைக் கொலைக்காரி என்று எவரும் எண்ணுவார்கள்."

"நான் இறந்தபிறகு யார் என்ன நினைத்தால்தான் என்ன."

"எப்படியாகிலும் உன் சகோதரிகளைப்பற்றிச் சிறிது நினைக்கவேண்டாமா."

இவ்விதம் பேசிக்கொண்டிருக்கும்போது மெதுவாக அந்தப் பாஷாணத்தை யுண்ணப்பிரயத்தனப்பட்டாள். வாயிலொருதுளி விழுமுன் சண்பகம் சாக்கிரதையுடன் கீழே விழும்படி கையினின் றும் தட்டிவிட்டாள்.

"என்ன செய்தாய்? என் செயல்களைத் தடைசெய்ய நீயாரவள்? என் உயிர் என்னுடையதல்லவா. இஷ்டமிருந்தால் வைத்துக்கொள்கிறேன் இல்லாமற்போனால் கொலைசெய்து கொள்கிறேன்." என்று கோபத்துவனியுடன் சந்திரவல்லி சொன்னாள்.

"நம் உயிர் முழுவதும் நம்முடையதல்ல. உலகோர்க்காக நாம் வாழ்கிறோம் என்பதையறியாய்போலும். இதுபற்றியன்றே துரைத்தனத்தாரும் தற்கொலை செய்துகொள்ளலாகாது, என்று விதித்திருக்கின்றனர்."

"என் மனத்தின் வருத்தம் உனக்கு எப்படித்தெரியும். எருதின்வலி காக்கைக்குத் தெரியுமா? யான் இனி உயிர் வாழமாட்டேன். நான் சௌக்கியப்படுவதை நீ தடுத்ததனால் உன்மீது பகைமையும் பாராட்டுகிறேன். நீ என் சகோதரியல்லை. எனக்குப் பகையாளி. இனி ஒரு க்ஷணமேனும் எப்படி என் கண்ணாளனைவிட்டுப்பிரிந்து உயிர் வாழ்வேன்? என் உயிரினால் இனி என்ன பயனை யடையப்போகிறேன்? நாதா! உன்னைநாடியே சீக்கிரம் வந்து சேருகிறேன்."

---

## அத்தியாயம்—IV.

## உயிரையிழப்பினும் செய்யாதொழியேன்.

பாலாம்பாளும் மதிதரனும் வீட்டிற்குத் திரும்பினார்கள். உடனே மதிதரன் 'நான் போய் வருகிறேன்' என்றான். பாலாம்பாளின் நடக்கை இவனுக்குப் பிடிக்கவில்லை. தன் புருஷன் இறந்து கிடப்பதைப்பார்த்தும் சிறிதேனும் மனம் வருந்தாமல் சந்தோஷமடையும் ஸ்திரீயை எவர்தாம் மெய்ச்சுவார்கள். தான் ஒருகாலத்தில் இவளை மணக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டது பிழையெனத் தெளிந்தான். இனிமையான முகத்தையுடைய ஸ்திரீயினால் ஏமாறக்கூடாது; அவர்கள் தாம் உலகத்தை சிருஷ்டி செய்கிறார்கள். ஆம். அவர்களேஅழிக்கிறார்கள். எந்தப்பாதகமும் ஸ்திரீகலவாமல் கொடியதாகிறதில்லை. பதார்த்தங்களுக்கு உப்புப்

போடுவதுபொலும் எவ்விஷயத்திலும் பெண்கள்.

காதலால் வருந்துமொருவனுக்கு அந்த ஸ்திரீ தேவலோகத்த வளாகத் தோன்றுகிறாள். மதிதரனுக்கு இவள் உறவை இனி வளர்த்தக்கூடாது என்று தோன்றியது. என் செய்வான் பாவம். தன்னை மணந்தபிறகும் இந்தப்பாலாம்பாள் இப்படித்தானேசெய்வாள். வருந்தீங்கைவரவொட்டாமல் தடுப்பதன்றே மேன்மையானகுணம். தீமையின் காரணத்தை யுணருபவர் எல்லோரும் மூடரே. என்னத்திற்காகத் தன் புருஷனிடம் பகைமை பாராட்டுகிறாள். என்பதைத் தெரிவிப்பதாக இவள்சொன்னாள். ஏதேனும் பொருத்தத்துடன் பொய்க்கதை நிரூபணஞ்செய்வது மிகவும் எளிது. இறந்துகிடந்த இராஜேச்வரனின் முகத்தைப்பார்த்த அயலானும் வருத்தப்படாமலிரான். ஒருகால் இவன் தன் மனைவியைக் கொடுமையாகபாராட்டியிருப்பான். எப்படியானால் நமக்கென்ன? என்று பலவாறாக எண்ணிக் கடைசியில் "என்னை மன்னிக்கவேண்டும். நான் போய்வருகிறேன்" என்று சொன்னான்.

"மதிதரரே! இன்றைக்கா என்னைத் தனியே விட்டுச் செல்வது?" என்று இரக்கத்துடன் சொன்னாள்.

"இன்றுபோய் நாளைக்கு அவசியம் வருகிறேன் மன்னிக்க வேண்டும்."

"அப்படிக்கூடாது, என் விருத்தாந்தங்களெல்லாம் சொல்ல வேண்டும். மனத்திலிருக்கும் துக்கத்தைச் சினேகிதரிடம் முறையிட்டால் தான் ஆறுதலுண்டாகும். ஆகையால் இன்று தங்கித்தான் செல்லவேண்டும்" என்று வேண்டினாள். இருவரும் அறுசுவையுண்டியருந்தினார்கள். மதிதரன் அதிகமாக உண்ணவில்லை. அதுகண்டு பாலாம்பாள்.

"ஏன் ஒன்றும் சாப்பிடவில்லை?" என்றாள்.

"ஐயோ! எப்படி உணவு பிடிக்கும். இராஜேச்வரனின் முகம் என் கண்கள் முன்பு இப்பொழுதுகூடத் தோன்றுகிறது. யார் அவனைக்கொன்றிருப்பார்கள்? பொருளாசை கொண்டவர் செய்திரார். மேலும் அவனுக்கு உலகின்கண் ஒரு பகையாளியும் இருக்கமாட்டான்."

"ஆம், அவனுக்கு அனேக நண்பர்கள் இருந்தார்கள். பகையிலானுக்கு நட்பாளனில்லை என்னும் மூதுரை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாமே. அம்மாதிரி இவன் கதியாயிருக்கலாம்."

"பாலா! உனக்குப் பகை எவருமில்லையே?"

"எனக்கு அனேகர் பகைஞர் இருக்கின்றார்கள்."

"எனக்கு நம்பிக்கைப்படவில்லை. எவரேனும் ஒருவரைச் சொல்."

"என் புருஷனே எனக்குப் பகைஞன்".

"இராஜேச்வரனா?"

"ஆம். ஏழைசொல் அம்பலம். நீங்கள் நம்பமாட்டீர்கள்."

"நான் என்ன செய்வேன் உன் நடவடிக்கையால் எனக்கு நம்பிக்கை குறைவாயினது. ஆனால் எல்லா விஷயங்களையும் தெளிவாய் எடுத்துச்சொல்லுவாய் என்று நம்புகிறேன்."

"அப்படியே சொல்கிறேன் கேளுங்கள். பத்துவருஷங்களுக்கு முன்பு நான் சந்தோஷமுள்ளவளாக இருந்தேன். என் தாய்தந்தையருடன் சுகமாய்ப்புதுவையிலிருந்தேன். ஆனால் இப்பொழுது என்ன வருந்துகிறேன்.—

"எங்கள் ஊரிலேயே குணகரன் என்ற ஒருவனிருந்தான். அவன் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வருவதுண்டு. நாளடைவில் என்னிடம் பிரியம் பாராட்டி வந்தான். எனக்கும் அவனை மணப்பதில் இஷ்டந்தான். இப்படி இருக்கையில் தஞ்சையினின்று ஒரு கனவான் எங்கள் வீட்டிற்கு வந்தான். என் தாய் தந்தையர் அதிதி பூசை செய்பவராகையால் அவன் வரவை மிகுதியும் பாராட்டினர்கள். சிலநாள் தங்கியிருந்தபின் என்னிடம் ஒருவகை அன்பு பாராட்டினான். நான் அவனை மணப்பதற்கு இஷ்டப்படவில்லை.—"

"பிறகு உன்னை இரகசியமாய் அழைத்து வந்துவிட்டான்?"

"ஆம். வேடிக்கை பார்க்கலாம் என்று கடைத்தெருவு வழியாய் அழைத்துவந்து என் கூக்குரலுக்குச்சிறிதேனும் இரங்காமல் அவன் ஊருக்கு அழைத்துவந்து பலாத்காரமாய் என்னை மணஞ்செய்து கொண்டான்."

"அவ்வளவு கொடியவனா இராஜேச்வரன்?"

"வெளியோர்க்கு மிகவும் யோக்கியனைப்போல நடிப்பான். அவன் மனைவியாகிய எனக்கு மகாகொடியன். மூன்றுவருஷகாலம் அவனுடன் தங்கியிருந்தேன். அப்பொழுது எனக்கு ஒரு பெண் பிறந்தது. அந்தப்பெண்ணை இவன் கொன்றுவிட்டான்.—"

மதிதரன் மிகுதியும் இரக்கங்கொண்டான்.

"அந்தப்பாவி அப்படியா செய்தான்? அப்படிச்செய்யமாட்டான் என்று தோன்றுகிறது." என்று சிறிது அவநம்பிக்கையுடன் பாலாம்பாளின் முகத்தை உற்றுப்பார்த்தான்.

பொய்க்கதை புகல்வதனால் அதிக கற்பனை செய்தோமென்று பயந்து பாலாம்பாள்,

"கொன்றானென்றால் கத்தியால் வெட்டியெறியவில்லை. அதற்கு மாந்தம்வந்து வருந்தும்போது தகுந்த வைத்தியம் செய்யாமல் யான் அதிகமாகப்பயப்படுகிறேன் என்று பரிகாசம்செய்து சும்மா விருந்துவிட்டான். ஆதலால் அது இறந்தது" என்றாள்.

"அப்படியாசெய்தான். ஆயின் தகுந்த தண்டனைதான் விதித்தாய்."

"நான் அவ்வளவு கொடிய இராக்ஷஸி அல்லள். நான் கொன்றேனென்று எண்ணவேண்டாம்."

"சீனதேசத்தினர் குற்றவாளிகளைத் தண்டிப்பதையொப்ப நீ செய்தாலும் பாவமில்லை."

"அவன் எனக்கு என்ன தீங்குசெய்தாலும் அவனைக்கொல்ல மனம்வருமோ எப்படியானாலும் என் புருஷனல்லனா."

"பிறகு உன் கதையை முடித்துவிடு."

"இரண்டுமாத காலமானதும் அவனின்றும் தப்பி என் தாய் தந்தை யகத்துக்குப்போனேன். அங்கு இருவரும் இறந்துபோய் விட்டதாகத்தெரிந்து வருந்தி உணவிற்குக்கூடப் பணமில்லாமல் கஷ்டப்பட்டேன். குணாகரனும் என்னைத்தேடிக்கொண்டே தேச சஞ்சாரமாய்ப் போய்விட்டதாகத் தெரிந்துகொண்டேன். பல வகைப்பட்ட கஷ்டங்களைப்பிறகு அனுபவித்துக்கடைசியில் இங்கு வந்தேன். நேற்று என் கணவனாயிருந்தவனை உயிருடன் பார்த்தேன். இன்று இறந்துகிடப்பதைப் பார்த்தேன். அவ்வளவுதான் என் கதை." என்று பாலாம்பாள் முடித்தாள்.

"இவன் இறந்துகிடப்பதைப் பார்த்துத் துக்கப்படாமல் சந்தோஷத்துடன் நீ திரும்பியது மிகவும் சரியே.

"உங்கள் எஜமானன் பெயர் ஜயபாலன் தானே."

"ஆம் அவர்சிலகாலங்களுக்குமுன் உன் கணவராயிருந்தவரும் இவரிடந்தான் தலைமைக் குமஸ்தாவாகவிருந்தார்."

"ஆனால் நீங்கள் தான் இனி என்னைக்காப்பாற்ற வேண்டும்" என்று தன் கையை மதிதரன் தோள்கள்மீதுபோட்டாள். அனேக நாள்களாக அவனிடமெரிந்து கொண்டிருந்து சிலநாழிகைக்குமுன் தணிந்துபோன காதலாகிய நெருப்பு அவள் கைகள்பட்டதும் ஓங்கி வளர்ந்தது மயக்கங்கொண்டான். எந்தப்புருஷன் தான் மயங்கமாட்டான், அழகித் ஸ்திரீ—மோகினிபோன்ற பெண் அரு

கில் நின்றுகொண்டு மயக்கினுல்.

"இதுவரையிலும் உன் வாழ்நாள் முழுமையும் துன்பம் நிறைந்திருந்தது. இனி அதை மறந்துவிடு. எதிர்காலத்தையே நினைந்திரு. என்னை நீ மணந்துகொள். உன் சௌக்கியத்தையே நான் எப்பொழுதும் கோருகின்றேன். பயப்படவேண்டாம்" என்று பரிந்து சொன்னுன்.

இவன் காதலால் மயங்கிச்சொல்லும் வார்த்தைகளைக்கேட்ட பாலாம்பாள் நம் வலையில் சிக்கிவிடுவான் என்று நினைத்து,

"என்மீது உண்மையாக அன்பு பாராட்டுவீர்களோ என்னவோ" என்று மதிதரன்மீது சிறிது சாய்ந்து நின்ருள். முன்னினும் பதின் மடங்கு ஆசைநோய் கொண்டு,

"நீ என்ன செய்யச்சொன்னுலும் செய்யச் சித்தனுயிருக்கிறேன். வேண்டுமானுல் என் காதலைப்பரீக்ஷை செய்துகொள்." என்ருன்.

"நான் கேட்பதைத் தெரிவிப்பீர்களா?"

"சந்தேகமின்றிச் சொல்லுகின்றேன்."

"இராஜேச்வரன் சிலதினங்களுக்குமுன் ஜயபாலரிடம் எதற்காக வந்தனர்?"

"இதுதானு பரீக்ஷை?"

"ஆம். சொல்லுங்கள்."

"தான் செய்த 'உயிலை' அவரிடம் கொடுப்பதற்கு."

"அந்த 'உயிலில்' என்ன எழுதியிருக்கிருன்."

"அதை நான் சொல்லக்கூடாது. எஜமானத்துரோகம்செய்ய மாட்டேன்."

"சொல்லமாட்டீரா! சரிதான். புருஷர்கள் தன்மை இது. ஒரு நொடியில் எதையும் செய்வதாய்ச் சத்தியம் செய்வார்கள். மறுக்ஷணத்தில் பின்னடைவார்கள். எனக்காக எதைவேண்டுமானுலும் செய்வதாய் ஒப்புக்கொண்டீர். இப்பொழுது இருப்பவர்க்கும் இறந்தவர்க்கும் சிறிதேனும் தீமைபயவாத விஷயத்தைச் சொல்லமாட்டேனென்கின்றீர்கள்."

"என் வீணே தூஷிக்கின்ருய். அந்த விஷயத்தை நான் எப்படிச்சொல்லுவேன். சொல்லவேகூடாது."

"அவன் மனைவியாகிய எனக்கா அந்த விஷயம் தெரியலாகாது. தெரிந்தால் நான் என்ன செய்யமுடியும்."

"நான் சொல்லமுடியாது. வேண்டுமாயின் யான் போய்வருகி

றேன். இனி இவ்விடம் வேண்டுமானல் வரவில்லை."

"அப்படிச்சொல்லலாகாது. நான்ஒரு பெண்ணல்லவா? நீங்கள் இவ்வளவு உறுதியாயிருப்பதனல் தங்களை மிகவும் காதலிக்கிறேன். இனி உங்களைத் தொந்தரவுசெய்யேன்."

"நீ புத்திசாலியல்லவா. நீயே யோசித்தாயாயின் அறிவாய்."

"காதலர்க்கு முடியாத விஷயம் ஒன்றுமில்லை. நான் ஒருசிறு கேள்வி கேட்கிறேன். அதையேனும் சொல்லவேண்டும்—— அந்த உயிலில் என் பெயர் சொல்லியிருக்கிறதா?" என்று பாலாம்பாள் மதிதரன் முகத்தண்டை தன் முகத்தை வைத்துக்கொண்டாள்.

மதிதரனிடம் காதலாகிய அக்நி அதிகப்பட்டு

"உன் பெயரைச் சொல்லவில்லை" என்றான்.

"ஆயின் பணத்தையெல்லாம் யாருக்குக்கொடுத்திருக்கிறான்"

"சந்திரவல்லிக்கு" என்று உடனே மறுமொழி சொன்னன்.

"முழுமையுமா?"

"ஆம். முழுமையும்."

பாலாம்பாள் எய்த அம்பைப்போல அப்புறம் போய்ப்பல்லைக் கடித்துக்கொண்டு "எதிர் காலத்திலாயினும் பணத்தையடைந்து சந்தோஷத்துடனிருக்கலாமென்று நினைந்து எதையெல்லாமோ துணிவுடன் செய்தேன். பணத்தையெல்லாம் வேறொருத்திக்கு வைத்துவிட்டு இறக்கிறான். பத்துத்தினங்களுக்கு முன்னமேயே கொலையுண்டிருக்கலாகாதா." என்று எண்ணினள்.

உடனே மதிதரன் ஏமாந்தோம் என்று தன்புத்தியின்மையைக் குறித்து இகழ்ந்துகொண்டு பெண்கள் முகத்தையே இனிப்பார்க்கலாகாதென்று சென்றான் தன் இருப்பிடம்.

"ஏ! சந்திரவல்லி! நீயா கணவன் பணத்தையடையப் போகிறாய், பார்க்கலாம். அந்தச்செல்வத்தை நீஅடைந்தாலும் அனுபவிக்க விடுகிறதில்லை. அப்படிச்செய்வதில் என்னநேர்ந்தாலும்சரி. உயிரையிழைப்பினும்செய்யாதொழியேன்" என்று பாலாம்பாள் தீர்மானித்துக்கொண்டாள்.

---

## அத்தியாயம்—V.

## நியாயசபை.

மேற்சொன்ன விஷயங்கள் நடந்த மூன்றாம் நாள் நியாய சபை கூடியது. போலீஸ் இன்ஸ்பெக்டர் உடலைக்கண்டதாகச் சொன்னர். வைத்தியர் தம் அபிப்பிராயத்தைச் சொன்னர்.

அனேக சாக்ஷிகள் அடிக்கடி இராஜேச்வரனுடன் சந்திரவல்லியைப் பார்த்திருப்பதாகச் சொன்னார்கள்; இராஜேச்வரனிறந்த இராத்திரி சந்திரவல்லி கோபத்துடன் இருந்ததாகவும் சொன்னார்கள். பிறகு பாலாம்பாள் நியாயாதிபதி முன் வந்து நின்றாள். அங்கு வந்து கூடிய ஜனங்களெல்லோரும் இவளழகைப்பற்றி வர்ணித்தார்கள். நியாயாதிபதியும் சிறிது மனக்கலக்கமடைந்தான்.

"நீ அந்த உடலைப்பார்த்தாயா?"

"நான் பார்த்தேன்."

"இராஜேச்வரன் என்று நன்றாய்ச்சந்தேகமில்லாமல்தெரிந்துகொண்டாயா?"

"ஆம். என் புருஷனின் உடலே."

"அவர் நியாயவாதியாக ஏன் வெளிவரவில்லை?"

"அதிகமாகப் பணம் இருந்தமையால் வேலையைப்பற்றிக் கவனிக்கவில்லை."

"அவனிறக்குங் காலத்தில் நீ கூட வசிக்கவில்லையா?"

"இருவரும் ஒருவகை ஏற்பாடு செய்துகொண்டு அனேக வருஷங்களுக்குமுன் பிரிந்துவிட்டோம்."

"ஏதேனும் சண்டையிட்டுக்கொண்டா பிரிந்தீர்கள்?"

"இல்லை. கல்யாணஞ்செய்துகொண்ட மூன்றுவருஷங்களுக்குப்பின் இருவரும் பிரிந்துவிட்டோம்."

"நீங்கள் இரகசியமாகவா கல்யாணஞ்செய்துகொண்டீர்கள்?"

"ஆம்."

"பிறகு எத்தனைமுறை உன் புருஷனைப்பார்த்தாய்?"

"அனேகமுறை சந்தித்திருக்கிறோம். ஆனால் ஒருவருடனொருவர் பேசுகிறதில்லை."

"கடைசிமுறையாக என்று பார்த்தனை?"

"அவன் கொலையுண்ட இரவு."

"அவன் இறப்பதற்கு முன்னமா?"

"ஆம்."

"என்ன நாழிகையிருக்கும்?"

"சுமார் எட்டரை மணியிருக்கும்."

"மயிலையிலா வசிக்கிறாய்?"

"இல்லை."

"பின் எங்கே வசிக்கிறாய்?"

"சென்னையில்."

"பின் அங்கு என் வந்தனை?"

"என் புருஷனைப் பின்றொடர்ந்தேன்."

"என்னத்திற்குப் பின்றொடர்ந்தாய்?"

"அடிக்கடி சந்திரவல்லியைச் சந்திக்கிறான் என்று கேள்விப் பட்டேன். அந்த விஷயத்தை என் கண்ணாலேயே பார்க்கவிரும்பி னேன். ஆகையால் பின்றொடர்ந்தேன்."

"அந்தத்தோட்டத்திற்குள் சென்றனையா?"

"அருகாமையிலிருந்தேன்."

"இறந்தவன் உன்னைப்பார்த்தானா?"

"பார்த்தாலும் என்னை இன்னாளென்று தெரிந்திருக்கமாட் டான். மாறுவேஷம் போட்டிருந்தேன்."

"முதல் எப்போ பார்த்தாய்?"

"சுமார் ஏழரைமணிக்குப் பார்த்தேன்."

"தனியேதான் சென்றனனோ?"

"ஆம். ஆனால் சிறிதுதூரம் போனதும் ஒரு பெண்ணைச் சந்தித்தான். இருவரும் சென்றனர்."

"அவள் முகத்தைப்பார்த்தாயா?"

"பார்த்தேன்."

"மறுபடியும் அவளைக்கண்டுபிடிக்க அடையாளம் தெரியுமா?"

"ஆயிரம் ஸ்திரீகளினிடையிலும் கண்டுபிடிப்பேன்."

"அவள் பெயர் தெரியுமா?"

"தெரியும். சந்திரவல்லியென்று அவள் பெயர்."

இவள் பெயரைக் கேட்டதும் சபையிலுள்ளார் எவரும் இரக்கமடைந்தார்கள்.

"ஆனால் சந்திரவல்லி என்பதற்குச்சந்தேகமில்லையே?"

"எனக்குச்சிறிதேனும் சந்தேகமில்லை."

"அவள் சந்தித்தபிறகு என்ன நடந்தது?"

"ஒரு சாலைவழியாய் நடந்துசென்று கடைசியில் ஒரு தோட் டத்தையடைந்தார்கள். அந்தத்தோட்டத்தின் பெயர் இலட்சுமி விலாஸம் என்று தெரிந்துகொண்டேன்."

"அவர்களைப் பின்றொடர்ந்தாயா?"

"இல்லை. இரண்டுமூன்று விசை அந்தத்தோட்டத்தைச் சுற்றி னேன்."

"அப்பொழுதும் அங்கே இருந்தனரா?"

"ஆம். ஒரு லதாகிரகத்தில் இருவரும் உட்கார்ந்திருந்தார்கள்.

சந்திரவல்லி மிகுந்தகோபாவேசத்துடன் பேசிக்கொண்டிருந்தாள். இறந்தவன் அவள் கோபத்தைத் தணிக்கமெதுவாகப் பேசினன்."

"அவர்கள் வார்த்தைகள் ஏதேனுங்காதிற்பட்டதா?"

"பேசுவதாய்த்தெரிந்ததேயொழிய வார்த்தைகள் காதிற்படவில்லை."

"தோட்டத்திற்கு வெளியே எவ்வளவு நாழிகை காத்துக் கொண்டிருந்தாய்?"

"அதிக நாழிகை காத்துக்கொண்டிருக்கவில்லை. பிறகு என் இருப்பிடம்போய்ச் சேர்ந்தேன்."

"நீ அவர்களை விட்டுப்பிரிந்தபோது எவ்வளவுமணிஇருக்கும்?"

"எட்டரை அல்லது எட்டேமுக்கால்மணி இருக்கும்."

"சரி. இறந்தவனு உன்னைக் காப்பாற்றிவந்தான்?"

"மூன்றுமாதத்திற்கு ஒருமுறை முன்னூறுரூபாய் கொடுத்து வந்தான்."

"இறந்தபிறகு உனக்கு என்ன வைத்துப்போனன்?"

"ஒன்றுமில்லை."

நியாயாதிபதிமுதல் கூடியிருந்த அனைவரும் இராஜேச்வரன் பெரியமூடன் என்று எண்ணினர்கள். அவள் அழகைப்பார்க்கிலும் சந்திரவல்லி எழிலுடையவளல்லள். மறுபடியும் நியாயாதிபதி,

"சந்திரவல்லியை அடிக்கடி சந்திக்கிருன் என்று கேள்விப் பட்டுத் தானே பின்ருெடர்ந்தாய்?"

"ஆம்."

"ஆனல் அவனை அடிக்கடி பின்ருெடர்வது வழக்கமா?"

"பின்ருெடர்வது வழக்கமில்லை."

"அவன் உன்னைக்கவனிக்கவில்லை. ஆகையால் நீயும் அவன் செயல்களைப்பற்றிக் கவனிக்கவில்லை?"

"ஆம்."

"பின்னர் ஏன் இலட்சுமிவிலாஸத்தோட்டத்துக்குப் பின்ருெடர்ந்து சென்றனை?"

"சந்திரவல்லியின் நன்மைக்காகவே அவ்விதம் சென்றேன்."

"ஏன் அவ்விதம் சென்றனை?"

"அவள் உலகநடவடிக்கை தெரியாதவள் என்று கேள்விப்பட்டேன். ஆகையால் இவன் வலையினின்றும் தப்பிவைக்க எண்ணங் கொண்டு அவ்விதம் சென்றேன்."

"ஆயின் சந்திரவல்லியினிடம் இரக்கங்கொண்டா அவ்விதம்

செய்தாய்?"

"ஆம்."

"உன்னை அவளுக்குத்தெரியுமா?"

"தெரியாது."

"உன் புருஷன் காதலிக்கும் ஒவ்வொரு ஸ்திரீயினிடமுமா நீ அவ்வாறு செய்கின்றனை?"

"இல்லை."

"என் இல்லை?"

"அவன் காதலித்த பெண்களனைவரும் இவளைப்போன்ற யோக்கியதையுடையவளல்லள்."

"ஆனால் நல்லபெண்களை அவன் காதலிக்கவில்லையா?"

"ஆம்."

"சரி நீ போகலாம்." என்றதும் பாலாம்பாள் சென்றனள்.

பிறகு நியாயாதிபதி சந்திரவல்லியை அருகினில் அழைத்தான்.

"இறந்தவனை நீ பார்த்தாயா?"

சந்திரவல்லி பேசமுடியாமையால் தலையை அசைத்தாள்.

"இராஜேச்வரன் என்று கண்டுகொண்டனையா?"

"ஆம்" என்று மிகவும் மெதுவாகச்சொன்னாள்.

"இறந்தவனை உனக்கு நன்றாய்த்தெரியுமா?"

"ஒன்றரைமாசமாய்த் தெரியும்."

"எங்கு அவனைச் சந்தித்தாய்?"

"எங்கள் வீட்டிற்குச்சில் சாமான்கள் வாங்கிக்கொண்டு திரும்புகையில் ஒன்றைத்தெரியாமல் நழுவவிட்டேன். இராஜேச்வரன் அதை எடுத்து எங்கள் வீட்டிற்கொணர்ந்து தந்தான். பிறகு அடிக்கடி நாங்கள் சந்தித்தோம்."

"அவன் உன்னைக்காதலித்தானா?"

"காதல்கொண்டவன்போலத் தோற்றினான்."

"அவன் முன்னமேயே மணந்தவன் என்று தெரியுமா?"

"தெரியாது."

"உன்னைக்கல்யாணஞ்செய்துகொள்கிறேன் என்று சொன்னானா?"

"ஆம்."

"நீ ஒப்புக்கொண்டனையா?"

"ஆம்."

"இதுவிஷயம் உன் சகோதரிகளுக்காவது மற்றைய உறவினர்க்காவது தெரியுமா?"

"தெரியாது."

ஏன் தெரிவிக்கவில்லை?"

"அவ்விதம் அவன் தெரிவிக்கவேண்டாமென்று சொன்னான்."

"அதற்கு என்னகாரணம் சொன்னான்?"

"ஒன்றுஞ்சொல்லவில்லை."

"இராஜேச்வரன் இறந்தவன்று உன்னைச்சந்திப்பதாக எழுதியிருந்தானா?"

"இல்லை."

"பின்னர்?"

"நான் அவனைப்பார்க்கவேண்டுமென்று எழுதியிருந்தேன்."

"என்னத்திற்கு?"

"அவனிடம் எனக்குச்சிறிது கோபம். ஏனென்றால் வேறு யாரோ ஒரு பெண்ணிடம் தகாதநேசம் பாராட்டி வருகிறதாகத் தெரிந்ததனால்."

"நீ சந்தித்தபோது அவனை வைதனையா?"

"ஆம்."

"அதற்குப்பதில் என்ன சொன்னான்?"

"வீணைபொய் சொல்கிறார்கள். நீ நம்பவேண்டாமென்று சொன்னான்."

"நீ மன்னித்தாயா?"

"மன்னிக்கவில்லை. கோபங்கொண்டு திரும்பிப்பாராமல் என் வீட்டிற்குவந்து சேர்ந்தேன். பிறகு இறந்துவிட்டதாகப் பத்திரிகையில் வாசித்தேன்."

நியாயாதிபதி இரத்தக்கறை பொருந்திய கையாடையையெடுத்து

"இது யாருடையதென்று தெரியுமா?"

"ஆம். அது என் கையாடையே."

"இறந்தவன் கையில் எப்படிவந்தது?"

"என்னுடைய ஞாபகச்சின்னமாய் வைத்துக்கொள்வதாக எடுத்துக்கொண்டான்."

"ஏன் இந்தக்கையாடை கிழிந்திருக்கிறது. நீ வைத்திருக்கும் போதே அப்படியிருந்ததா?"

"இல்லை. என்னிடத்தினின்றும் வாங்கிக்கொள்ளுகையில் கிழிந்தது."

"நீ அவனைப்பிரிந்தபொழுது என்ன மணியிருக்கும்?"

"சுமார் ஒன்பது மணியிருக்கும்?"

"நேரே வீட்டிற்கு வந்தனையா?"

"ஆம். யாரையும் பார்க்கக்கூடவில்லை."

"ஏன்?"

"அவர்கள் என்முகத்தைப்பார்த்துத் தெரிந்துகொள்வார்கள் என்று எண்ணினேன்."

"எதைத்தெரிந்து கொள்வார்கள்?"

"என் வருத்தத்தை."

"அவனைவிட்டுப்பிரிந்தபோது யாராவது ஒளிந்துநின்றனரா?"

"யாருமில்லை."

"அவன் உன்னைத்தொடர்ந்துவர யத்தனப்படவில்லையா?"

"இல்லை. அவ்விடத்திலேயே உட்கார்ந்திருந்தான்."

"நீ அவனைச்சந்தித்தபொழுது ஏதேனும் போர்வைகொண்டு சென்றனையா?"

"மஞ்சணிறமுள்ள ஒரு போர்வையால் நான் மூடிக்கொண்டு சென்றேன்."

"அது எங்கே இப்போது?"

"எங்கேயோ தெரியவில்லை."

"ஆனால் உனக்குத்தெரியாது?"

"நான் அவனை விட்டுத்திரும்புகையில் போர்வையைக்காணகிலேன்."

"இது உன்னுடையதா?" என்று நியாயாதிபதி ஒரு உடையைக்காண்பித்தனர். அவ்வாடை முழுவதும் இரத்தக்கறைபட்டிருந்தது.

"ஆம். என்னுடையது. அவனுடைய இரத்தக்கறை பொருந்தியிருக்கிறது." என்று சொல்லிக்கொண்டு ஒருவகை மயக்கங்கொண்டாள்.

சந்திரவல்லி வீட்டிற்குச் சென்றாள்.

---

## அத்தியாயம்—VI.

## குற்றவாளியே.

சந்திரவல்லியின் போர்வை சபைக்கு வந்ததும் எல்லோரும் ஆச்சரியமடைந்தார்கள். ஏனெனின், பத்திரிகைகளிலாவது போலீசாராலாவது அதைப்பற்றியொன்றும் வெளியிடப்படவில்லை. இப்படிக்கிடைத்தது என்பதையொருவரும் அறியார். விசாரணைகாலத்

திற்கு ஒருமணி நேரத்தின் முன்னர் யாரோ தபால் மூலமாய் அனுப்பினூர்கள்.

அனுப்பிய போர்வையினால் சந்திரவல்லியின் குற்றம் ஸ்தாபிக்கப்பட்டது. நியாயாதிபதி இவளே குற்றவாளியென்று மிகுதியும் சந்தேகப்பட்டார்; ஆகையால் அவளைச்சிறையிட உத்தரவு பிறப்பித்தனர். இந்தக்கொலையைப்பற்றிய மற்றவிஷயங்களையுணரவேண்டி முத்துகிருஷ்ணன் என்பவர் அவள்வீட்டு வேலைக்காரியிடம் வெகு சாதுரியமாய்ப்பேசி, சந்திரா விஷஞ்சாப்பிடமுயன்ற செய்தியையும், அவள் அதிக கோபமுடையவளென்பதையும், பின்னர் தற்கொலை செய்துகொள்வதிலேயே எண்ணமுடையவளாயிருந்தனளென்பதையும் அறிந்துகொண்டனர்.

ஸ்திரீகள் கோபமுடையவர்களானுல் அவர்களைச்சிறிதேனும் நம்பக்கூடாது. எதையும் தைரியமாய்ச் செய்வார்கள். புருஷர்கள் எவ்வளவு கோபமுடையவரேனும் சிறிது இரக்கமுடையவராகின்றனர். சந்திரவல்லி அவனிடம் கோபங்கொண்டதாக ஒப்புக்கொள்கிறுள்; ஏனெனின், தன்னிடம் தகாதநேசம் பாராட்டினமையின். அவன் தான் மணம்புணர்ந்தவள் என்று கட்டாயம் இவளிடம் சொல்லியிருப்பான். உடனே கோபாவேசம் கொண்டு இவள் அவனை ஈட்டியால் குத்தியிருப்பாள்.—சந்தேகமேயில்லை. அவள் செய்தது நியாயமே. தந்நயம்பாராட்டி ஒரு மனைவி இருக்க வேறொரு பெண்ணின் கற்பையழித்து அவள்வாழ்நாள்முழுமையையும் வீணுள் ஆக்குவோர் இத்தகைய கதியைத்தான் அடையவேண்டும். ஆனுல் இவளே தண்டித்தற்றொழிலை மேற்கொள்ளல் அவ்வளவு மேன்மையானதல்ல. மேலும் அந்த ஈட்டியும் அவனுடையதென்று ரூபிக்கப்பட்டது. எப்படியானுலும் அவன் தற்கொலைசெய்துகொள்ளவில்லை; முதுகில் காயமிருக்கின்றமையின். முதல் விசாரணையான நான்கு தினங்களுக்குப்பின்னர் சுந்தரி, சண்பகம், சந்திரவல்லி மூவரும் ஓர் அறையிலுட்கார்ந்திருந்தனர். இன்றைக்கு இவர்கள் மூவரையும் பார்த்தால் அடையாளங்கண்டு பிடிக்கமாட்டார்கள். நான்கு தினங்களேயாயினும் இவர்களுக்கு ஒரு ஆயுள் பிரமாணம்போலத் தோன்றியது—பயங்கரமும் அவமானமும் சந்தேகமும் நிறைந்த ஆயுள் பிரமாணம் போன்றது. சிறிது நாழிகையாக ஒருவரும் பேசவில்லை. கடைசியாக சண்பகம்

அருமைச் சந்திரா! யான் சொல்வதைச் சற்றே கவனி. ஏன் வீணுக விசனப்படுகிறுய். இம்மாதிரியான விஷயத்திலகப்பட்டு

க்கொண்டு தொந்தரைப் படுவது ஈனமே. ஆயினும் நாமென்ன செய்யலாம். எல்லாம் இறைவன் செயல். நீ ஒரு காலும் குற்றவாளியென்று நாங்கள்நம்பமாட்டோம்.'' என்றுதேறுதல்கூறினள்.

சந்திரவல்லி இந்தச் சொற்களைக் கேட்காதவள்போல் சும்மாவிருந்தனள். மறுபடியும்

"உன்னுடைய துக்கத்தில் தோன்றியபடி பேசுகிறாய். உன் வார்த்தைகளால் நீ குற்றவாளியென்று உன்னைத் தெரியாதவர்களுக்கு உணர்த்துகிறாய். நாளையேனும் சாக்கிரதையாயிரு. யோசித்துப்பேசு. நீ செய்யாத குற்றத்திற்காக உன் வார்த்தைகள் தண்டனைக் குட்படுத்தாமலிருக்கட்டும்.'' என்று சண்பகம் சொன்னாள்.

''யோசிக்கவா சொல்லுகிறாய். மூளையுருகிப்போம் வரையில் யோசித்தாய்விட்டது. என்னை யானே கொலை செய்து கொள்ள வேண்டுமென்பது தவிர வேறு யோசனை தோன்றவில்லை. நீங்கள் என்னைத் தடைசெய்கிறீர்கள். என்னிடம் பிரியமுள்ளவர்போல் பாசாங்கு செய்கின்றீர்கள். மானங்கெட்ட உயிர் யான் என் வைத்துக்கொள்ள வேண்டும்.'' என்று சந்திரவல்லி ஆவேசங் கொண்டவளைப்போலச் சொன்னாள்.

"பிரியே சந்திரா! அப்படிச் சொல்லாதே. இன்னது சொல்கிறாய் என்று தெரிந்து கொள்ளவில்லை. எங்களிடம் கொடுமை பாராட்டுகிறாய். இவ்விதம் நீ பேசுகையில் எங்கள் மனம் இப்படி வருந்துகிறது என்பதை யுணர்வாயானால் அப்புறம் சும்மாவிருப்பாய்." என்றாள் சுந்தரி.

"அம்மா நீங்களொன்றும் பேசவேண்டாம். நீங்கள் சொல்லும் வார்த்தைகளெல்லாம் எனக்குத்தலைவலியையுண்டாக்குகிறது. எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதாகத் தெரிகிறது. சிறிது நேரம் சும்மாவிருக்கிறேன்'' என்றாள் சந்திரவல்லி.

உடனே காலடிச் சப்தம் கேட்டது. கதவண்டை பார்த்ததும் பாலாம்பாள் பிரவேசித்தாள்.

''சந்திரா! சந்திரா! சீக்கிரம். ஒரு க்ஷணங்கூட தாமதிக்க வேண்டாம். நான் உனக்கு உபகரிக்கிறேன். உன்னைச் சிறையிடக் காவலர் வருகிறார்கள். உண்மையைச்சொல்லுகிறேன். சீக்கிரம் ஓடிப்போகலாம் வா. என் உடையைத் தரித்துக்கொண்டு ஓடிவிடு. நான் எப்படியாவது உன்னைத் தப்பிவைக்கிறேன்.'' என்று இரக்கத்துடன் பாலா சொன்னாள்.

சந்திரவல்லி இவளைக்கண்டதும் மிகுந்த கோபத்துடன் எதிர்நின்று

"ஓடிப்போகவாசொல்லுகிறாய்? குற்றவாளி யான் என்று நிரூபிக்கவா ஓடச்சொல்கிறாய். அவர்கள் வந்தால் வரட்டும். நான் பயப்படவில்லை. வேண்டுமென்றால் என்னைச் சிறையிடட்டும். என் விஷயமாய் இவ்வளவு பரிதாபமெடுத்துக்கொண்டதனிமித்தம் வந்தனம் செய்கிறேன். நீ போய் வருவாய்." என்றாள்.

"இது தானா உன்னிடம் யான் வைத்த நேசத்திற்குக்கைம்மாறு. என் விஷயத்தில் உலகமே நன்றியறிவு இல்லாதவர்கள். என் புருஷனைப் போன்றவளே நீயும்."

"அவனைப்பற்றி என் முன் தூஷணை செய்யாதே. யார் தூஷித்தாலும் அவன் மனைவியாகிய நீதான் கண்டிக்க வேண்டும். நீ போய் வருவாய். உன்னை எனக்குப்பார்க்க மனதில்லை. உன்னைக் கண்டதும் அருவருப்புண்டாகிறது."

"நீ மிகவும் அவமரியாதையாய்ப் பேசுகிறாய். இந்தச்சமயத்தில் நீ சொல்லும் வார்த்தைகளை நான் பாராட்டக்கூடாது. வீணுகக் கெட்டுப்போகாதே. இவ்விடம் நில்லாதே. ஓடிப்போய்விடு. கர்வங்கொண்டு மானபங்கமடையாதே."

"ஆம். சந்திரா! அவள் சொல்வதைக்கேள். பாலாம்பாள் நமக்குத் தீமை புரியாள். அவளிடம் உனக்குப் பிரியமில்லாமற்போனால் அவள் சொல்லும் நல்லவார்த்தையைக்கவனி." என்று சுந்தரி அவள் சொற்களில் ஏமாறிச் சொன்னாள். ஆடு நனைகிறதென்று கோனைக்கு வருத்தம் ஏன் வரவேண்டும் இதனை ஆராயவில்லை. சண்பகம் இவள் சொற்களில் சந்தேகப்பட்டுச்சும்மா விருந்துவிட்டாள்.

"என் உயிரைக் காப்பாற்றுகிறேன் என்று நீ சொன்னாலும் உன்னிடம் நான் கடமைப்பட்டவளாகேன். அப்படி இருப்பதினும் இறத்தலே மேன்மை யென்று நினைக்கிறேன்" என்றாள் சந்திரவல்லி.

"ஆ! ஆ! என்ன மூடத்தனமாய்ப் பேசுகிறாள். நான் இஷ்டப்பட்டால் இவளைத் தப்பிவைப்பேன் என்பதைத் தெரியாதவள். எப்படி யுணர்வாள்? நான் அந்தச் சமயத்தில் அங்கு இருந்தேன் என்று அவள் அறியாள்." என்று பாலாம்பாள் தன் மனத்திலேயே எண்ணினாள். உடனே பாலாம்பாள் போய்வருகிறேன் என்று சொல்லித் தன் வீட்டிற்குத் திரும்பிச் சென்றாள். அவள் சிறிது தூரம் சென்றதும் முத்துக்கிருஷ்ணன் சந்திரவல்லியைச் சிறையிட

அறையிற் பிரவேசித்தான். உடனே சந்திராவை அழைத்துப்போய்ச்சிறையிட்டனன்.

---

## அத்தியாயம்—VII.

## இராமசந்திரன் வரவு.

சந்திரவல்லி சிறையிலிருக்கும்போது சகோதரிகள் இருவரும் அங்குச்சென்றார்கள். அப்பொழுதுவிசாரணைக்காலத்தில் எவரைத் தம் பக்கத்தில் நியாயவாதியாக வைப்பது என்று சண்பகம் கேட்டாள். "கூடலூரிலிருக்கும் இராமசந்திரனை வரும்படி சொல்லியனுப்பு" என்று சந்திரவல்லி சொன்னாள்.

"அவனுக்குத் தந்திகொடுக்கலாமா?" என்றாள் சுந்தரி.

"உடனே வரவழையுங்கள். அவன் தான் விஷயத்தையுணருஞ் சக்தியுடையவன். அவனே புத்திசாலி. அவனுக்குத்தான் என் தன்மைதெரியும். சீக்கிரம் வரச்செய்யுங்கள்" என்று சந்திரவல்லி சொன்னாள்.

இராமசந்திரன் என்பவன் சிறுவயதினன். பி. எல். பரீக்ஷையில் முதன்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவன். இந்த மூன்று சகோதரிகளிடமும் நேசமுடையவன். இவர்களுக்கு உறவினன். முக்கியமாய்ச் சந்திராவை மணக்கவேண்டும் என்று மிகுதியும் பிரியமுடையவன். இந்த விஷயத்தைப்பற்றி பத்திரிகைகளிற் படித்தனனேனும் தன் பிரிய சந்திராதான் இக்கொலையில் சிக்கியவள் என்று உணரவில்லை. எனினும் அவள் பெயரையடிக்கடி பத்திரிகையில் வாசித்தலினால் ஒரு கடிதம் தன் பிரிய சந்திராவுக்கு எழுதினான். அது சிறைச்சாலைக்கு அவள் பெயரைச் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது வந்து சேர்ந்தது. அந்தக்கடிதத்தில் பின் வரும் விஷயமடங்கியிருந்தது.

கூடலூர், தெற்குவீதி,
25—8—1905.

பிரியமுள்ள சந்திரா!

நானும் சீனிவாசனும் சௌக்கியமாகவே காலத்தைக் கழித்து வருகிறோம். இவ்விடத்தில் உங்கள் மூன்றுபேருக்கும் சிலவெகுமதிகள் வாங்கினேன். அவைகளை அனுப்புகிறேன். அவைகளை அங்கீகாரம் செய்துகொள்ளவேண்டும். ஸரஸ்வதி பூஜையாகையால் என்

ஞாபகம்உங்களுக்கு வரவேண்டும்என்ற எண்ணத்தினால் இவ்விதம் செய்யத்துணிந்தேன். சுந்தரி பத்திரிகைப்பித்தேறியவளாகையால் அவளுக்கு "ஸ்ரீவாணீ விலாஸினி" என்னும் பத்திரிகையின் முதல் புத்தகம் அனுப்பியிருக்கிறேன். சண்பகம் மிகவும் சாதுரியமாய்ப் பேசுவாளாகையால் அவளுக்கு "விநோதக்கதைகள்"என்றபுஸ்தகம் அனுப்பியிருக்கிறேன். உனக்கு ஒரு வைரமோதிரம் அனுப்பியிருக்கிறேன். மேற்சொன்ன வெகுமதிகள் உங்களைச் சேர்ந்ததும் எனக்கு ஒரு கடிதம் அனுப்பினால் மிகுதியும் சந்தோஷப்படுவேன்.

இப்படிக்கு,
உன் பிரியநேசன்,
**இராமசந்திரன்.**

"ஐயோ! என் சங்கதியை யறிந்தாலயின் என்ன வருத்தப் படுவான். ஆனால் நான் குற்றவாளியல்லவென்று கட்டாயம் அறிவான். எல்லாம் சரிதான். நான் வேறொருவனைக் காதலித்தேன் என்றுஅறிவானாயின் என்னநினைப்பானோ." என்றாள்சந்திரவல்லி.

"சந்திரா! உடனே தந்தியைக்கொடுக்கலாமா" என்றாள் சுந்தரி.

கூடலூர், தெற்குவீதி,
**இராமசந்திரர்.**

சென்னை,
**சண்பகம்.**

உடனே புறப்பட்டுவரவும் சந்திரா கஷ்ட ஸ்திதியில் இருக்கிறாள்.

என்று ஒரு தந்தி சண்பகம் எழுதித்தானே கொடுத்தாள்.

"இராமசந்திரர் வந்தால் எல்லாம் சரியாய் முடிந்துவிடும்" என்று இரண்டு சகோதரிகளும் சொன்னார்கள்.

* * * * * * * * *

"நீ என்ன சொன்னாலும்சரி. ஸ்திரீகளே உலகத்தைக்காப்பாற்றுவார்கள்."

"அழிப்பவர்களும் அவர்களே."

முதலில் சொல்லியவர் இராமசந்திரர். இரண்டாவது சொல்லியவர் கல்யாண சுந்திரம் என்பவர். இராமசந்திரர் மிகுதியும் அழகுடன் விளங்குபவர். அவர் தம் நீண்ட விழிகளைக்கண்டவர் மிகுதியும் கருணையுடையவர்என்று தெரிந்துகொள்வார். முகத்தின் கண் அரும்பிய மீசைகள்சந்திரனிடத்துள்ள களங்கத்திற்குச்சமானமாம். அவர் பேசும்போது முகம் சந்தோஷக்களையுடன் விளங்கும். விசித்திரமாகவும் சாதுரியமாகவும் பேசும் வல்லமையுடையவர்.

அவர் வார்த்தைகளில் எவரும் மயங்குவார். கல்யாணசுந்திரம் என்பவர் தன் சிநேகிதரினும் வயதானவர். ஸ்திரீகளின் துவேஷி யென்று கர்வமுடையவர். உலகவின்பமனைத்தையும் வெறுத்தவர் என்று பலமுறையும் சொல்லுவார். எனினும் உலகவின்பமுழுவதையும் அனுபவிப்பவர் அவரே என்னலாம். மானுடஜன்மத்தினர் அனைவரும் பொய்புகல்பவர் என்பவர். சிறுவயது முதல் மிகுதியும் வருத்தங்களை அனுபவித்தவர். அவைகள் இவர் இனிய மனத்தை மாற்றியது. இராமசந்திரர் ஸ்திரீகளின் மேன்மையைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். கல்யாணசுந்திரமோ அவர்களின் தீயதன்மையை எடுத்துரைத்துக்கொண்டிருந்தனர்.

"ஸ்திரீகள் விஷயமாய் நாமிருவரும் ஒருவகையான அபிப்பிராய முடையவராகோம். நல்லெண்ணமுடைய ஸ்திரீயினால் ஒரு புருஷன் மேன்மையை யடைகிறான். ஒரு ஸ்திரீயின் காதலால் வாழ்நாளை வீணாளாக்கிக்கொண்டு திரியும் புருஷன் நல்வழிக்குக் கொணரப்படுகிறான். மேலும் தான் காதலிக்கும் பெண்ணின் நல்லபிப்பிராயத்தை யடையக்கருதியே ஊக்கத்தோடும் சந்தோஷத்துடனும் ஒரு வேலையைச்செய்து முடிக்கிறான். உலகின்கண் பெண்களில்லையாயின் நாம் அனைவரும் காட்டுமிருகங்களுக்குச் சமானமாகவிருப்போம் என்பதிற் சந்தேகமில்லை."

"நண்பா! என்ன இத்தகைய பெண்பித்தேறியது. மிகுந்த பணத்துடன் ஒரு சிறுவனை சுயேச்சையாயிருக்கும்படி விட்டால் என்ன நடக்கும்? யார் அவன் பணத்தை அபகரித்துக்கொண்டு ஆண்டியாய்த்திரியும்படி விடுவார்கள்? ஸ்திரீகளன்றே! ஒரு புருஷன் தீமையைச் செய்வானாயின் யார் அவனுக்கு உதவிசெய்வார்கள்? ஸ்திரீகளன்றே! ஒரு புருஷன் நல்லசாதுவாக இருப்பானாயின் யார் அவனைப்பார்த்து நகைப்பார்கள்? ஸ்திரீகளன்றே? பிரியமும், சந்தோஷமும், தீமையும், புத்தியின்மையும், கடின சிந்தையுமுடைய ஸ்திரீகளே அவ்விதம் செய்வார்கள். ஸ்திரீகள்புருஷரினும் பதின்மடங்கு பலசாலிகள், நூறுமடங்கு புத்தியுள்ளவர்கள். உலகமாகிய நாடகசாலையில் நடக்கும் குற்றங்களையெல்லாம் உற்பத்தி செய்பவர் ஸ்திரீகளாகிய சூத்திரதாரிகள்.

"விண்கு லாவுயர் விண்ணவ ராயினும்
பெண்கள் காமம் பிடித்தவ ருய்வரோ
புண்க ளாகிப் புரந்தரன் மெய்யெலாங்
கண்க ளானது காமத்தி னாலன்றோ."

"இலங்கை யழிந்தது சீதையினுலன்ரே? நூற்றுவரிறந்தது பாஞ்சாலியினுலன்ரே? இவர்கள் பெயரைத் திருடர்களுடைய பெயருடன் கூடச் சேர்த்துச் சொல்லலாகாது. நீ நன்மையைய டையவேண்டுமானுல் ஸ்திரீகளினின்று விலகுவாய். புராணக் கதைகளை எடுத்துச் சொல்லுகிறேன் என்று எண்ணுதே. என்னு டைய அனுபவத்தால் சொல்லுகிறேன். எந்தப் பெண்ணுடனும் யான் சினேகஞ் செய்யேன்."

"நண்பா! நீ சொல்வது நன்ருயில்லை. ஏதோ ஒரு பெண் உன்னை ஏமாற்றியதனுல் எல்லோரும் அத்தகையவரே என்று நீ எண்ணுதல் மூடத்தனம்."

"நீ அந்தச்சந்திராவைப் பார்த்து மயங்கி இப்படி என் அபிப் பிராயத்தைமாற்ற முயலுகிருய். என் எண்ணத்தைமாற்றவே மாற் றேன். ஸ்திரீகள் எல்லோரும் ஒரே தன்மையுடையவரே. ஆனுல் சிலருக்குச் சந்தர்ப்பம் நேருகிறது. சிலருக்கு அத்தகைய சந்தர்ப் பம் சம்பவிக்கிறதில்லை. அவ்வளவுதான்."

"நாம் சென்னைக்குப்போனதும் சில பெண்களைக் காட்டுகி றேன். அவர்களுடைய குணத்தை யறிந்தபிறகு உன் அபிப்பிராய த்தை மாற்றுவாய்."

"உன்னுடைய நல்லெண்ணத்திற்கு யான் நன்றி பாராட்டு கிறேன். உலகத்திலுள்ள பிசாசங்களைக்காட்டினுலும்பயப்படாமல் சினேகிக்கிறேன். ஸ்திரீகளை மாத்திரம் காண்பிக்காதே."

"நண்பா! நீ என்ன சொன்னுலும் சரி. இல்லறமே நல்லறம். மூடர்களுக்குத் துறவறம். இதுபற்றியே திருவள்ளுவரும் இல்லற த்தைக் கொண்டாடினுர். திருநீலகண்டநாயனுராதியரும் இல்லற த்தினின்று ஸாயுஜ்யபதவியை யடைந்தனர். நாம் பகலெல்லாம் வேலைசெய்து களைப்புற்றுத்திரும்புகையில் சாளரவாயிலில் நின்று மனைவி நம் வரவை எதிர்பார்த்துக்கொண்டு நிற்கையில் நாம் அவர் கள் கண்களிற்பட்டதும் புன்சிரிப்படைந்ததும் எவ்வளவு சந்தோ ஷத்தை யெய்துவோம் என்பதைச்சற்றுயோசித்துப்பார். வாயினுல் சொல்லமுடியாது அந்த இன்பத்தை."

"ஆம். அது வாயினுல் சொல்லமுடியாத பொய்த்தோற்றமே. உண்மையைச் சொல்கிறேன்கேள். அதிர்ஷ்டஹீனனுய இவன் பகலெல்லாம் துன்பப்பட்டு வேலையை முடித்துக்கொண்டு வருகி ருன். மணமாகாதவனுயின் சபைகளுக்கும் பந்தடிப்பதற்கும் மற்றும் பலவித இடங்களுக்கும் சென்று இனிமையாக மாலையைக்

கழிக்கிருன். மணமானவனுயின் தன் வீட்டிற்கு—மாடுகள் கட்டக் கூடிய கொட்டகைக்குப்—போகிருன். உடனே தன் மனைவி எதிர் கொண்டுவந்து தன் வேலைக்காரி வராமையால் கஷ்டப்பட்டதைப் பற்றியும், சமையல் செய்யவேண்டியதைப்பற்றியும், தான் தலைவலி யால் வருந்துகிறதைப்பற்றியும் சொல்லி வருந்துகிருள். பிறகு தானே சமைக்கிருன். குழந்தைகள் அழுகிறதைக்கேட்டு முள் மீப் பாயிலுருட்டுவதுபோன்ற துன்பமடைகிருன். கூடத்தில் வந்து பார்க்கிருன். குழந்தை கல்யாணி படுக்கையினின்று கீழே வீழ்ந்து மூக்கை உடைத்துக்கொண்டதனுல் வைத்தியனை யழைத்துவர ஓடிப்போகவேண்டி வருகிறது. மற்ருெரு குழந்தை பூனையுடன் விளையாடிக்கொண்டிருக்கையில் அது பூறியதால் கதறுகிறது. இவைகளைச் சமாதானஞ்செய்ய பாதி இரவு கழிந்துவிடுகிறது. சாப்பாட்டை யுண்ணச்சென்றதும் ஆறி ருசிகெட்டுப்போய் விடுகி றது. விதியென்று உண்டதும் வீதியில் இளைப்பார உட்காருகிருன், உண்ட இளைப்புத்தொண்டர்க்கு முளதாகையினுல். உடனே மனைவி குழந்தைக்கு "நெஸ்ஹில்ஸ் பால்" ஆய்விட்டதுபோய் வாங்கி வாருங்கள் என்று கதறுகிருள். இத்தௌர்ப்பாக்கியன் ஓடி வாங்கிவருகிருன். இவ்வளவுதான் அவன் மணஞ்செய்து கொண்டு அனுபவிக்கும் சுகம்."

"கல்யாண சுந்திரம்! என்ன இப்படியெல்லாம் பேசுகிருய். ஸ்திரீகளுடைய இனிமையான குரலைக்கேட்டுச் சந்தோஷமடைந் தால் தான் உனக்கு அவர் தம் மேன்மைதெரியும் அவர்களைப்பற்றி உன்னுடன் வார்த்தையாடுவதிற் பயனில்லை."

"நண்பா அத்தகைய இன்பத்தையளித்த ஒரு பெண்ணை எனக்கு எடுத்துச்சொல்லு."

"உனக்குச்சொல்லவேண்டுமோ. என்ன பிரயோஜனம். ஆயி னும் சொல்கிறேன் கேள். என் மனத்தில் சந்தோஷம் என்பதை யுண்டாக்கியவள் உலகத்திற்கே ஒரு திலகம்போன்றவள். அவள் அழகை என்னவென்று சொல்லுவேன். அவள் முகமாகிய சந்திர ன்ருன் என் இதயமாகிய குமுதமலரை விகசிக்கும்படி செய்தது. அவள் பேசுதல்தான் இனியகானம்.——"

"வர்ணனையை முடித்தபிறகு என்னைத் தூக்கத்தினின்றும் எழுப்பு. ஸ்திரீகளைப்பற்றிப் புகழும்போதெல்லாம் எனக்கு குழந் தைகளுக்குத் தாலாட்டும்போது தூக்கம்வருவதுபோல உறக்கம் வருவது வழக்கம்."

"இராமசந்திரன் இந்த வார்த்தைகளைக்கேட்டதும் மிகவும் சிரித்தான். கலியாணமும் கண்ணை மூடிக்கொண்டான். இப்படிச் சிறிதுநேரம் உட்கார்ந்திருக்கையில் தபால்காரன் ஒரு தந்தி கொண்டுவந்து கொடுத்தான். பிரித்துப்பார்த்தான். உடல் சிலிர்த்தான்.

"கலியாணம்! தூங்கியதுபோதும். எழுந்திரு. இன்றிரவு சென்னைக்குச்செல்லவேண்டும். ஏன் அவர்கள் விவரமாய் எழுதவில்லை? எவ்விதக்கஷ்டம் சம்பவித்திருக்கும்?"

"கலியாணம் தந்தியைப்பார்த்துச்சிரித்தான். இராமச்சந்திரன் எப்பொழுது புகைவண்டி புறப்படுகிறதென்று கேட்டான்."

"சுமார் இரண்டுமணிக்குப் புறப்படுகிறது" என்றான் கலியாணம்.

இராமசந்திரர் உடனே பிரயாணத்திற்குச்சன்னைகப்பட்டார். இவன் போவதைப்பார்த்துக் கலியாணம் தனக்குள் "என்ன கஷ்டப்படுகிறான்? அந்தத்தாமகேதுவைப் பார்ப்பதற்குள் பாதிப் பிராணனை இழந்துவிடுவான். அவளோ இவனைப்பற்றிச் சிறிதேனும் நினைக்கமாட்டாள். இவன் இவ்வளவு அவசரப்பட்டுச் சென்றதும் எதிர்கொண்டுவந்து புன்சிரிப்புச் சிரிப்பாள். நான் என்னவோ உன் தன்மையை ஆராய எண்ணி எழுதியிருந்தால் இப்படி அவசரப்படுவானே என்று சொல்லுவாள். நானும் நாளைக்கேனும் அவ்விடமேசெல்கிறேன். என்ன நடக்கிறது என்றுகவனிப்பேன்." என்று எண்ணித்தன் சிநேகிதரிடம் சென்றான்.

## அத்தியாயம்—VIII.

## அவள் குற்றவாளியல்லள்.

இராமசந்திரர் கடற்கரையில் வந்து இறங்கினர். அரைமணி நேரத்தில் சுந்தரி வீடுபோய்ச் சேர்ந்தார். சாளரவழியாய்ப் பார்த்திருந்த சண்பகம் இவர் வரவைக்கண்டதும் எதிர்கொண்டழைத்து உள்ளே சென்றாள். அவள் முகத்தைப்பார்த்த அளவில் இவருக்கு மனவருத்தமுண்டாயிற்று. அவள் கையைப் பிடித்துக்கொண்டு "சண்பகம்! அவள் இறந்துவிட்டாளா?" என்றார். சண்பகம் தலையை யசைத்தாள்.

"அவள் உடம்பு என்னவாயிருக்கிறது?"

"அவளுக்கு உடம்பு ஒன்றுமில்லை. உளம் சரியாயில்லை."

"என்ன?"

"நீங்கள் மிகவும் இளைப்பாயிருக்கிறீர்கள். இந்தக் 'காபி'யைக் குடியுங்கள். எங்களுடைய கஷ்டத்தை அவ்வளவு சுலபமாய்ச் சொல்லமுடியாது. அது விஷயத்தை நீங்கள் கேள்விப்பட்டீர்களோ என்னவோ?"

"நீங்கள் வருந்துவதாகத் தெரிந்து யான் அவ்விடம் ஒருவினாடி இருப்பேனா."

"நீங்கள் சாப்பிட்டபிறகு தான் எங்கள் துக்கத்தை வெளியிட வேண்டும்" என்றாள் சுந்தரி.

"விஷயத்தைச் சொல்லாமலிருப்பதால் ஒவ்வொரு வினாடியும் ஒரு யுகமாகத்தோன்றுகிறது. சந்திரா எங்கே? உடனே விஷயத்தைச் சொல்லுங்கள். சங்கதியைத் தெரிந்துகொள்ளாமல் ஜலபானம் பண்ணேன். சந்திரா எங்கே? சண்பகம்! எனக்கு அவளிடம் அதிகப்பிரியம் என்பதை நீ அறிவாயே! உடனே அவளைப்பார்க்க வேண்டும்."

"உங்களுடைய காதலைத்தெரிந்தவளாகையாற்றான் நான் எப்படிச் சொல்லுவேன் என்று மயங்குகிறேன். ஆயினும் சொல்லித்தான் ஆகவேண்டும்." என்று சண்பகம் விவரமாய் விஷயத்தைச் சொன்னாள். இராமசந்திரர் சிறிதுநேரம் சும்மாவிருந்தார். பிறகு தாழ்ந்த குரலொடு

"அந்தத்துஷ்டன் என் கண்மணியை ஏமாற்றினான். எவ்வளவு பொய் சொன்னான். அவன் கொலையுண்டது மிகவும் சரி. இத்தகைய தீயோர் உலகிலிருக்கக்கூடாது. என்னை அவள் பக்கம் நியாயவாதியாகவா இருக்கச்சொல்லுகிறாய்? நீ சொல்லவும் வேண்டுமா? என் கடமையல்லவா. என்னால் கூடியவரையில் சிறந்தமதியூகிகளைக்கொண்டு விஷயத்தையறியச் செய்கிறேன். யானும் தகுந்த பிரயாசை யெடுத்துக்கொள்கிறேன். சந்திராவைப்போன்ற பெண்ணா இத்தகைய கொலை செய்வாள்? என்ன மூடத்தனம். இவர் இந்தக்காரியம் செய்வார்கள், இவர் செய்யார்களென்று உணரமாட்டாதவர் நியாயாதிபதிகளென வெளியே வருகின்றனர். பெரிய உத்தியோகங்களுக்கு அறிவே பிரதானமன்று. தகுந்த சிபார்சுதான் வேண்டும். அந்தப்போர்வையை யனுப்பியவனைக் கண்டுபிடிக்கவேண்டும். இராஜேச்வரனின் மனையாளைப்பற்றிய விஷயங்களைத்தெரிந்து கொள்ளவேண்டும். கொலை செய்தவர் இன்னார் என்று அவளுக்குத்தெரியும்."

"அவள் அன்று சொல்லிய விஷயங்களால் தெரியாதவள் என்

று தோன்றுகிறது" என்ருள் சண்பகம்.

"அவ்விதம் சொல்லாதே. சந்திரா கொன்ருள் என்று சந்தேகப்படுகிருயா? அப்படி நினைக்கவே நினைக்காதே."

"இப்படித்தான் நடந்திருக்கும் என்று என்ஞல் தெரிந்துகொள்ளமுடியாது. சந்திரா மிகவும் கோபமுடையவள். கோபத்தில் தன்னை மறந்துவிடுவாள். இதைத்தவிர யான் என்ன சொல்லக்கிடக்கிறது. அவள்மீது குற்றம் சாற்றுவதற்கு ஏற்ற நிரூபணங்களெல்லாம் வெளியாயின. அவளுடைய சொற்களே குற்றவாளியென்பதைத் தெரிவிக்கிறது. அவள் குற்றமிலாள் என்று நம்ப விரும்பியும் சந்தேகமாயிருக்கிறது." என்று சண்பகம் தேமித்தேமியழுதாள்.

"சம்பா! வீணில் அழாதே. இனிமேல் அவளைப்பற்றி சந்தேகிக்காதே. அவள் குற்றவாளியல்லள் என்று எனக்கு நன்ருய்த்தோன்றுகிறது. சிலவிஷயங்கள் சமயோசிதமாக அவள்மேல் சாற்றப்பட்டது. சீக்கிரத்தில் சந்திரா முன்போல் நம்முடன் வீற்றிருப்பாள். ஆனல் ஒரு விஷயத்தில் மாத்திரம் முன்போல இராது. என்னிடம் அவளுக்குப்பிரியம் என்று எண்ணியிருந்தேன். இப்பொழுது அவள் பிரியம் மாறியது."

"அப்படிச் சொல்லவேண்டாம். அந்தத்துஷ்டன் அவளை மயக்கிவிட்டான். அவன் இனிய வார்த்தையில் ஏமாறினள்" என்று சண்பகம் தேறுதல் சொன்னுள்.

"சம்பா! அது ஒரு கனவு என்று நினைக்கிறேன். நாமெல்லோரும் நினைவுடன் இருக்கிருேம்" என்றுசொல்லிவிட்டு உடனே

"இனிக்காலஹரணம் செய்யக்கூடாது. கடைசி விசாரணைக்குப் பத்துத்தினங்கள் தாமிருக்கின்றன. அதற்குள் சந்திரா குற்றவாளியல்லள் என்று ரூபிக்கவேண்டும். அப்படிச் செய்வதில் யாதொரு சந்தேகமுமில்லை. அவளை இன்று பார்க்கமுடியாது. மிகவும் நாழிகையாயிற்று. நாளைக்கு அவளைப்பார்க்கவேண்டும்" என்று எழுந்து சென்ருன்.

"முதலில் என்னசெய்வதாய் யோசித்திருக்கிறீர்கள்?" என்ருள் சுந்தரி.

"பாலாம்பாளின் விஷயத்தைப்பற்றி முற்றிலும் அறிந்தபிறகே மற்றவைகளைக் கவனிப்பேன்" என்று இராமசந்திரன் சொன்ஞன்.

---

## அத்தியாயம்—IX.

## மங்களதாசன்.

இராஜேச்வரன் இறந்தநாள் முதல் இலட்சுமிவிலாசத்தோட்டத்திற்குப்பாலம்பாள் செல்லவில்லை. முதல் நாள் விசாரணையன்று சந்திரவல்லிகுற்றவாளியென்று ஏற்பட்டதும் சந்தோஷமடைந்து,

"சரியாகத்தான் நடந்தது. அவன் பணமுழுவதையும் அடைகிருள். ஆனல்என்ன பிரயோஜனத்தையடையப்போகிருள்? ஒன்றுமில்லை. ஒருகால் அவள் செய்திராள் என்று சந்தேகத்தையுண்டுபண்ணும். மற்றைய செய்திகளை யாலோசித்தால் இந்தச் சந்தேகம் பறந்துபோகும். நன்ருக வலையிலகப்பட்டுக்கொண்டாள். உண்மையான கொலையாளி சௌக்கியமாகவிருக்கிருன். சிறிதேனும் அவனிடம் சந்தேகப்படவில்லை. தன்னைக் காப்பாற்ற முயலுபவர்களை விதியும் தப்புவித்து விடுகிறது." என்று எண்ணிக் கொண்டு தன்னிருப்பிடமடைந்தாள். தன் அறையில் ஒரு கடிதம் வைத்திருந்தது. அதன் விலாசத்தைப்பார்த்ததும் உடல் சிலிர்த்தாள். மிகவும்வெறுப்புடன் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள்.

பிரியமுள்ள பாலா!

நான் மறுபடியும் இங்கு வந்திருக்கிறேன். உன்னைக் காணவேண்டுமென்னும் ஆசை என்னை மிகுதியும் தூண்டுகிறது. எப்பொழுது வரலாம்? நாம் சந்தித்து ஒரு யுகம் ஆனல் போலத்தோற்றுகிறது. உன்னைப்பார்க்காததால் என் வாழ்நாளே வீணுளாக விருக்கிறது. உடனே பதில் எழுதுவாய் என்று நம்புகிறேன்.

உன்னிடம் பிரியமுள்ள,

மங்களதாசன்.

"என்ன தொந்தரவு? ஊரை விட்டொழிந்தான் என்றன்ருே நினைத்திருந்தேன். அவனைக் காணப்பிரியமில்லை. என்ன புத்தியீனமாய் இங்கு இருக்கிருன். அவனை ஒருகாலும் காதலியேன். மறுபடியும் மறுபடியும் என்னைப்பீடிக்கிருன். இவ்விடத்தினின்றும் அவன் ஒழியவேண்டும். நான் அவனைப் பார்க்கிறேன். உடனே ஊரைவிட்டொழியும்படி பயப்படுத்திவிடுகிறேன்." என்று தனக்குள் ஆலோசனை செய்துகொண்டு மங்களதாசனுக்கு ஒருதந்தி கொடுத்தாள். மறுநாள் காலையில் அவன் அவள் முன்வந்துநின்ருன்.

மங்களதாசன் அழகுடையவனே. அதிக உயரமும் அதிக பருமனும் இல்லாமல் முகவசீகரத்துடனும் அவன் விளங்கினுன்.

இவன் புருவங்கள் கூடியிருப்பது ஒருவித அழகாகத்தோன்றியது இவன் கண்களைச் சுற்றிச் சிறிது கரியவளையம் போன்று காணப்பட்டது. பரஸ்திரீகமனஞ் செய்பவன் என்று இவனைக்கண்டதும் எவரும் உணர்வார். இவன் பாலம்பாளின் பழைய சிநேகிதன் என்றாலும் சுதந்தரம்பாராட்டவிடாமல் இருந்தாள். மங்களதாசன் பாலாவின் இருகரங்களையும் பற்றிக்கொண்டு.

"பாலா ! நீ சுயேச்சையை யடைந்தாயல்லவா? அந்த விஷயத்தைப்பற்றிப்பத்திரிகையில் யான்வாசித்தபோது எவ்வளவு சந்தோஷமடைந்தேன்?" என்றான். நெருங்கி முத்தமிடச் சென்றான். பாலாம்பாள் அவனை விலக்கிக்கொண்டு,

"புத்தியில்லாமல் எதையுஞ் சொல்லாதே. சுயேச்சையை யான் அடைந்ததனால் என்ன பயனை அடைந்தேன். கைம்பெண்ணாகிய என்ஸ்திதியைப்பற்றி நீ விசனப்படவேண்டியதே. அவன் உயிலிலும் ஒன்றும் எனக்கு ஏற்பாடு செய்யவில்லை" என்றாள்.

"உனக்கு ஒன்றும் வைக்கவில்லையா? முன்காலத்தில் அவன் எழுதிய உயிலுக்கு யான் ஒரு சாக்ஷியாகவிருந்தேனல்லவா."

"ஆனால் அந்த உயிலை வாசித்தாயா? எனக்கேன் அது விஷயத்தை இதுவரையும் சொல்லவில்லை?"

"உனக்குச் சொல்லத் தகுந்த சந்தர்ப்பம் நேரிடவில்லை. அந்த உயில் எழுதிய சமயம் ஞாபகம் இருக்கிறதா. அவன் சுரத்தால் வருந்திக்கொண்டிருந்தான். நீ அவன் பொருட்டு எவ்வளவு துன்பமடைந்தாய்."

"அப்பொழுது கல்யாணமாய் ஒருமாதந்தானாயிற்று."

"அப்பொழுது அவனிடம் பிரியம் பாராட்டினாய்."

"மணஞ் செய்துகொண்டதும் சிறிது பிரியம்பாராட்டினேன். என்னிடத்திலல்லாமல் மற்று யாரிடமும் பிரியம் பாராட்டுகின்றிலேன்."

"ஆனால் அந்த உயில் எங்கே?"

"அதைப்பற்றியென்ன? இறப்பதற்குச் சிலதினங்களுக்குமுன்னமே வேறொரு உயிலினால் அவனைக் கொலை செய்த பெண்ணிற்கு அவன் பொருளனைத்தையும் கொடுத்து விட்டான்."

"பழி வாங்குதற்கும் பணத்திற்காகவும் பெண்கள் எதையுஞ் செய்வார்கள். அவனைப்பற்றியும் அவளைப்பற்றியும் நாம் என் வீணில் பேசவேண்டும். உன்னைப்பற்றித்தான் யான் பேச வேண்டும். உனக்குப் பணமில்லையே, என்ன செய்யப் போகிறாய்?"

"பணத்தைப்பற்றியென்ன? எனக்குவேண்டியபணமிருக்கிறது

என்னுடைய வருவாய்களெல்லாம் உனக்கு தெரியாது."

மங்களதாசன் மிகுந்த கோபத்துடன்,

"என்ன சொல்கிறாய்? வேறு மனிதரிடம் பணம் வாங்குகிறுயா? அப்படியானால் உன்னை—" என்று சொன்னான்.

"என்ன மடையனாயிருக்கிறாய். நான் அம்மாதிரியானவளல்லள். அப்படித் தானிருந்தாலும் என்னுடைய செயலைப்பற்றி விசாரிப்பதற்கு நீ யார்? உனக்கு என்ன சுவாதீனம்?"

"என்ன சுதந்திரமா? சுதந்திரம் பாராட்டுகிறேன். ஏனென்றால் உன்னைக் காதலிக்கிறேன். அப்படிச்செய்கிறாய் என்று தெரிந்தால் இப்பொழுதே உன்னைக் கொலை செய்து விடுவேன்."

"மங்களா! இம்மாதிரியெல்லாம் பேசாதே. எனக்கு இஷ்டப்படி நடந்துகொள்கிறேன். எவனும் என்னைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை. நீ இவ்விடத்தினின்றும் செல்லவேண்டும்."

"பாலா கோபித்துக் கொள்ளாதே. உனக்கு எந்த விதம் வருவாய்? அதைச் சொல்லுவாய்."

"அதைப்பற்றி உன்னிடம் சொல்லமுடியாது. கருமானின் ஊதுலையினின்றும் எனக்கு வருவாய். அவ்வளவுதான் சொல்லமுடியும்.

"சரி உன்னை யான் மிகுதியும் காதலிக்கிறேன். அநேக நாள்களாய் உன்னை மணமகளாக அடையப்பிரியப்படுகிறேன். மணப்பதாக வாக்களிக்கவேண்டும். அவ்வளவுதான் உன்னை வேண்டிக்கொள்கிறேன். உனக்காக எதை வேண்டுமானாலும் செய்வேன்."

"செய்வாய் என்று எனக்குத்தெரியும்." என்று பரிகாசக்குரலுடன் பாலம்பாள் சொன்னாள்.

"என்னை மணக்கிறேன் என்று வாக்களி. அவ்வளவுதான் வேண்டும்."

"இராஜேச்வரன் பணமுழுவதும் என்னைச் சேரவில்லையென்று தெரிந்தா மணக்கவேண்டுகிறாய்?"

"ஆம் ஆம். எனக்குப்பணமென்னத்திற்கு. நமக்கு வேண்டிய பொருள் இருக்கிறது. உன்னிடந்தான் எனக்கு அமிதமான பிரியம். எங்கே, என்னை மணப்பதாய்ச்சொல்."

"உன்னை நான் மணக்கமாட்டேன்."

"ஏன்?"

"ஒருவனை மணந்து சுகத்தையடைந்ததுபோதும்."

"ஆனால் என்னை மணக்கமாட்டாயா? விளையாடுகிறாயா?

என் என்னை மணக்கமாட்டேனென்கிறாய்?"

"உன்னிடம் எனக்கு அன்பில்லை. உன்னைக் கண்டால் பயப்படுகிறேன்."

"என்னிடமா பயப்படுகிறாய்? பயப்படுவதற்கு யான் என்ன செய்கிறேன்."

ஒரு மனிதனுக்கு ஒன்றைச் செய்தால் மறுபடி மற்றையோர்க்கும் அப்படியே செய்வான்."

"நீ சொல்வதற்குப் பொருள்தெரியவில்லை." என்று அவளை மருண்டு பார்த்தான்.

"வெளிப்படையாக யான் சொல்லட்டுமா?" என்று உறத்துக் கூறினள்.

---

## அத்தியாயம்—X.

## பயனில்லை.

இராமசந்திரர் வந்த மறுநாள் காலையில் பத்திரிகைகளனைத்தினும் ஒரு விளம்பரம் காணப்பட்டது.

ஆயிரம் ரூபாய் வெகுமதி.—இலட்சுமிவிலாஸத்தோட்டத்தில் காணமற்போன கோமேதகம் புதைத்த ஒரு அழகிய மோதிரத்தைக் கண்டுபிடித்து என்னிடம் அனுப்புவோர்க்கு ஆயிரம் ரூபாய் வெகுமதி கொடுக்கப்படும். அங்கு நடந்த கொலையைப்பற்றிய எற்ற விஷயத்தை எடுத்துச் சொல்லுவார்க்கும் ஆயிரம் ரூபாய் வெகுமதி கொடுக்கப்படும்.

"இந்த விளம்பரத்தால் ஏதேனும் பிரயோஜனமுண்டாகிறதா பார்க்கலாம்." என்று சொல்லிக்கொண்டு சிறைச்சாலைக்கு இராமசந்திரன் சென்றான். இருவரும் சந்தித்தபொழுது சந்திரவல்லி தான் முதலில் பேச ஆரம்பித்தாள்.

"நீங்கள் வருவீர்களென்று எனக்குத்தெரியும். நியாயமாக என்னிடம் அவ்வளவு பிரியம் பாராட்டக்கூடாது. நான் அத்தகைய அன்பிற்குத் தகுதியில்லேன்" என்றாள் சந்திரவல்லி.

"நீ எதிர்பார்த்தவண்ணமே வந்துசேர்ந்தேன். முதல்விசாரணையின்போதே இங்கு வந்திலேனே என்று வருந்துகிறேன். ஆனாலும் மனம் வருந்தவேண்டாம். உன்னை இக்கஷ்டத்தினின்றும் விடுவிக்கிறேன்."

"இராமசந்திரரே! ஆயின் யான் குற்றஞ்செய்திரேன் என்று நம்புகின்றீரா?"

"நீயா இக்கொலைத்தொழில் செய்வாய்? என்ன மூடத்தனமாய் நியாயாதிபதியும் நம்பினான். நீ ஈட்டியெடுத்துக் குத்தும் சமயத்தில் தான் பார்த்ததாக ஒருவன் சொன்னாலும் யான் நம்பமாட்டேன்."

"உமக்கு அப்படித்தோன்றுவது என் அதிர்ஷ்டந்தான். உம்மிடவரவைக் குழந்தையைப்போல் எதிர்பார்த்திருந்தேன் என்றாலும் உம்மைப்பார்க்க பயமுற்றிருந்தேன். என் சகோதரிகளும் சந்தேகமடைந்தார்கள்."

"சரி. அப்படியானாலும் இனிப்பயப்படாதே. உனக்கு மனவருத்தம் தருவதானாலும் நடந்த விஷயங்களை ஆதிமுதல் விவரமாய்ச்சொல். வெளிப்படையாகச சொல். உன்போர்வை அந்தத்தோட்டத்தில் எப்படி வந்தது?"

"எனக்கு நன்றாய் ஞாபகமில்லை. நழுவி விழுந்திருக்கவேண்டும். அவ்வளவுதான் சொல்லமுடியும். குளிர்ந்த காற்று அன்றிரவு வீசியதனால் போர்வை தரித்துப்போனேன். என் எண்ணங்களெல்லாம் ஒரு நிலைப்பட்டிருந்தமையின் நடந்து செல்லும்போது கீழே விழுந்திருக்கும். அதன் கண் இரத்தக்கறை பட்டதன் காரணந்தான் எனக்கு விளங்கவில்லை."

"அவனைக்கொலை செய்ய வந்தவர் அருகில் ஒளிந்திருப்பார். உன் போர்வை நழுவி விழுந்ததைக் கண்டிருப்பார்கள். உடனே அதையெடுத்து அவன் இரத்தக்கறையாகச் செய்து உன்னைக்குற்றவாளியாகச்செய்து தாம் தப்பிவிடலாம் என்று நினைத்திருக்கவேண்டும்."

"உமக்கு யாரிடம் சந்தேகம்?"

"இன்னார் என்று இப்பொழுது சொல்லமுடியாது. ஆனால் பாலாம்பாள் இந்தக்கொலை விஷயத்தில் சம்பந்தப்பட்டவளென்று தோன்றுகிறது."

"அவள் அப்படிச் செய்திராள். அவளிடம் எனக்குப் பகைமையிருந்தாலும் யான் அவ்விதம் நினைக்கவில்லை. எப்படி அவன் கொலையுண்டனனோ? யாரும் ஒளிந்திருந்ததாகவும் தெரியவில்லை. அப்படி மறைந்திருப்பினும் யான் கவனித்திரேன். அதிவேகமாய்த்திரும்பியபோது பின்னே பார்க்கவில்லை."

"அவனைத்தினமும் சந்தித்தாயா?"

"ஆம். தினமும்."

"அவனிறந்ததினத்தில் நீ அங்கு சந்தித்தது அவன் காதலைத் துறப்பதற்கல்லவா?"

"ஆம். ஆம்."

"வருத்தப்படாதே. நீ காதலித்தவனைப்பற்றி விவரிப்பது துன்பத்தை யுண்டுபண்ணும்."

"என்ன சொன்னீர்கள்? அவனிடம் எனக்கு உண்மையான காதல் கிடையாது. என்னவோ ஏமாந்து மயங்கிவிட்டேன். என் நல்லவேளையே அவனினின்றும் பிரியும்படி நேரிட்டது. ஒரு புருஷனிடம் மரியாதை பாராட்டாமல் காதலிக்கமுடியாது. அவன் என்னை மோசஞ்செய்தான். என்னை ஒரு விளையாட்டுக் கருவியாக நினைத்தான். அவனிடம் எனக்குப் பகைமை யுண்டாகின்றது. மேலும் என்னையும் இகழ்ந்துகொள்ளுகிறேன்."

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இராமசந்திரர் மனம் இன்பத்தை யடைந்தது. மறுபடியும் இவள் தான் காதலிக்கக் கூடியவள் என்று தேர்ந்தான்.

"அதைப்பற்றி என்ன? அவமானப்படாதே. உலகத்தில் ஏமாறுதல் சாதாரணமே. நாகரிகம் அதிகப்படுதலும் தீமைகள் அதிகப்படும். எவ்வளவு புத்திசாலியும் ஒரு சமயத்தில் ஏமாறுவான். பித்தளையைக்கண்டு பொன்னென்று ஏமாறினாய். இப்பொழுது அதன் உண்மையை யுணர்ந்தாய். உன்னை மணந்து வருத்தப்படுத்தாமல் நீங்கினதே மேன்மை. நீ தரித்திருந்த கோமேதகமோதிரத்தை எங்கு தொலைத்தாய்?"

"என் கையை அவன் பற்றுகையில் நழுவிக்கொண்டிருந்த மோதிரம் என் கரங்களை இழுத்ததும் விழுந்துவிட்டது. எங்கு தேடியுங் காணவில்லை."

"அந்தமோதிரம் உயர்ந்ததுதானா?"

"ஆம். அவன் தான் அதிக விலைக்கு வாங்கிக்கொடுத்தான்."

"அதைப்பற்றி விளம்பரம் செய்திருக்கிறேன். கண்டெடுத்துத் தருபவர்க்கு ஆயிரம் ரூபாய் வெகுமதி கொடுப்பதாய்த் தெரிவித்திருக்கிறேன்."

மற்றும் அனேக விஷயங்களைப்பற்றி இருவரும் சிறிதுநேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்து ரஇராமசந்திரர்,

"தைரியமாயிரு. எல்லாம் நன்மையதாகும். யான் எப்படியும் தப்பிவைக்கிறேன்." என்றார்.

"நீங்கள் வந்தபொழுதே என் துக்கங்களெல்லாம் ஒழிந்தன. சீக்கிரம் திரும்பி வாருங்கள்."

"நான் இன்று இலட்சுமிவிலாஸத் தோட்டத்திற்குப் போகிறேன். பாலாம்பாளைப்பற்றியும் விசாரிக்கவேண்டும்" என்றார்.

இராமசந்திரர்க்கு மனச்சந்தோஷம் அதிகமே. தன்னிடம் அவளுக்குப் பிரியமில்லாமலிருக்குமோ வென்று சந்தேகித்தார். அந்தச்சந்தேகம் நீங்கியது. இனித்தான் அவளுக்காகச் சிரமமெடுத்துக்கொண்டால் தகுந்த கைம்மாறு கிடைக்கும் என்று தைரியமடைந்தார். அவள் இராஜேச்வரனிடம் பிரியம் பாராட்டியதற்குக் கோபமடையவில்லை. அவள் ஏமாற்றப்பட்டாள் என்று இரக்கமடைந்தார். சாயந்திரம் மோதிரத்தைத் தேடத் தோட்டத்திற்குச் செல்ல யத்தனித்தார். அவ்விடத்தை யடைந்ததும் பூமியில் முதலில் நன்றாய்த் தேடினார். மெதுவாகத்தன் விரலினால் மணலைத் தேடினார். அவர் இளைப்படைந்தார். குளிரும் நடுக்கியது. தைரியத்தைக் கைவிடாது தேடியும் பூமியில் ஒன்றும் அகப்படவில்லை. இப்படி நாலுமணிநேரம் தேடியும் பிரயோஜனமடையவில்லை. இரவு சுமார் ஒருமணியாயும் ஒரு சாமானும் அகப்படவில்லை.

"இனிப்பிரயோஜனமில்லை. அந்த மோதிரம் போய்விட்டது. அதைத்தேடிக்கொண்டிருப்பது மூடத்தனம். அப்படி அதைக்கண்டெடுத்தாலும் அதிக பிரயோஜனமில்லை. அதற்கு இவ்வளவு கஷ்டம் என்னத்திற்கு. அது அகப்பட்டால் சந்திரா தப்பித்துக்கொள்ளமுடியாது. அகப்படாமற் போனாலுங் குற்றவாளியாகமாட்டாள். வீட்டிற்குப் போய்ச்சிறிது உறங்கிப்பிறகு செய்யவேண்டியதை யாலோசனை செய்கிறேன்" என்று எண்ணித்திரும்பினார். உடனே அவர் கைபட்டு ஒரு பூஞ்செடி சாய்ந்தது. இவ்வளவு பெரியசெடி சாதாரணமாகக் கைபட்டதும் சாய்வானேன். முன்னமேயே யாரோ பிடுங்கிவிட்டு நட்டிருக்கவேண்டும் என்று துணிந்து அந்த மண்ணைத்தடவினார். என்ன கிடைத்தது. ஒரு மோதிரம் கிடைத்தது. அது சந்திராவினதே. அதை எடுத்துக்கொண்டு வீடு திரும்பினார். சிறிதுநேரம் உறங்கிக்காலையில் தஞ்சைக்குச் சென்றார். அங்குபோய் விசாரித்ததில் இராஜேச்வரன் பாலாம்பாளை மணஞ்செய்து கொள்ளவில்லை, அவள் முன்னமேயே ஒரு கைம்பெண் என்றும் அறிந்துகொண்டார். மேலும் அவள் பெயர் புவானி என்பதையும் தெரிந்தார்.

"பவானி இவள் பெயர். கைம்பெண்—முதல் புருஷன் எவனோ. என்று தனக்குள் ஆலோசித்தார். பிறகு தனக்கு இந்த விஷயங்களைச் சொன்னவனை அவள் குணத்தைப்பற்றி வினவினார்.

"அவள் மிகவும் நல்லவள். மிகுதியும் தர்ம சிந்தையுடையவள். பிரதிவெள்ளிக்கிழமைகளிலும்ஏழைகளுக்கு உணவளித்துவந்தாள்." என்று தஞ்சையோன் சொன்னான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் இராமசந்திரர்க்கு வருத்தமுண்டாயிற்று. "அவளைப்பற்றிய தீயவிஷயங்களை விசாரித்தால் மிகவும் நல்லவள் என்று தெரிவிக்கிறார்கள். என் செய்வேன்" என்று துன்பமடைந்தார். இனி வீடுபோய்ச் சேர்ந்து அவள் முதல் புருஷன் இன்னானென்று அறியவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார். சென்னைக்கு மறுபடியும் திரும்பிவந்தார்.

சருக்கை இராமசாமி ஐயங்கார், பி. ஏ.

அடுத்த ஸஞ்சிகையில்,
முடிவுபெறும்.



# விப்ரம்.விஹாஸம்.

## மூன்றாவது அங்கம்.

### இரண்டாவது களம்.

கோற்கை நகரத்துக் கருணாகரன் வீட்டிற்கெதிரே
ஓர் பைரங்கமான இடம்.

**மோஹனாங்கி.**—மைத்துனரே! தாங்கள், கணவன் புரியுந் தொழில் இன்னவாறென்பதை முற்றுமே மறந்து விட்டீர்கள் போலும்? இப்படிக்குக் கல்யாணஞ் செய்துகொண்ட புதுமுறுக்கு இன்னுமழியாத சின்னஞ்சிறுவயதிலே தானே தங்களுக்குத் தங்கள் மனையாளிடத்து இத்தனை அவிசுவாஸம் பிறக்கலாமோ?

ஒருவன் ஒரு கட்டிடத்தைக் கட்டும்போதே அது இடிந்து வீழ்வதைப்போலத்தாங்கள் இப்பொழுதே இப்படியானால் இனிமேலெப்படி யாகவேண்டாம்? குணத்துக்கென்றல்லாமல், அவளிடத்திலுள்ள பணத்துக்கென்று எனது ஸகோதரியைத்தாங்கள் மணந்திருக்கிற பக்ஷத்தில், அதற்கென்றாகவாவது அவளிடத்தில் பிரீதியாக விருக்கவேண்டியது நியாயமாகும்; அப்படிக்கின்றித் தங்கள் மனம் அயல் மாதரிடஞ் சென்றிருந்தால், தாங்கள் அதை வெளிக்காட்டாமல் மறைத்திருத்தல்வேண்டும்; காமத்திற்குக்கண்ணில்லையாதலால், அயல்மாதரிடத்துள்ள மோஹப்பெருக்கினல் மறந்துபோய் வாயைப்பெருக்கித்தங்கள் பண்டவாளத்தை வெளிப்படுத்திவிடாதேயுங்கள்; அவளைக் குளிர நோக்கி, நெருங்கி வார்த்தை சொல்லி, அவளிடத்தில் அதிக பக்ஷமுள்ளவர்கள்போலக் காட்டுங்கள்; மேலுக்கு நல்லவன்போலக் காட்டினல் அதினுமோர் நன்மையுண்டு; மனதில் மாசு படிந்திருப்பினும், முகத்தில் கடுகடுப்பில்லாதபடி நல்ல வார்த்தை சொல்லுவதிலும்குணமுண்டு; ராவணஸந்நியாஸியைப்போல வேஷம்பூண்டு தீச்செயல் புரிந்தாலும் அதுவும் ஒருவாறு வெளிப்படாது சற்றுமறைந்திருக்கும்; உள்ளே பொய்யெனினும் வெளியே நல்லவர்போலக் காட்டுபவர் தங்களுடைய வஞ்ச நெஞ்சத்தை வெளிக்காட்டாமல் ஒளித்திருக்கவேண்டும்; இவற்றையெல்லாம் அவளிடத்திற்காட்டுவானேன்? புதிதாகத் திருடக் கற்றுக்கொள்ளுமவன் மூடனாயினும் தான் செய்யப்புகுந்த தந்திரத்தை வெளிப்படுத்துவானே? அக்கினி ஸாக்ஷியாக மணம் புரிந்துகொண்ட தன் மனையாளைத் தனி மனை யிருத்திப் பிறர்மனைக்கேகுதலைப்போலப் பெருங்குற்றமென்னுண்டு? தாங்கள் தங்கள் குற்றத்தை மூடி வைத்தாலும், உண்ணும்

போதும் உடுக்கும்போதுமாவது அது வெளிப்படாதிராது; குற்றமானது குற்றஞ்செய்பவரின் ஸாமர்த்தியத்திஞல் குற்ற மற்றதுபோ லெண்ணப்படினும், இறுதியில் குற்றம் குற்றமேயாகும்; அதனேடு கெட்டவார்த்தையுஞ் சேர்ந்தால் அக்குற்றம் இரட்டித்துப்பெருகும்; ஐயோ, பேதைப்பெண்காள்! உங்களுடையகெதி இப்படியோ ஆகவேண்டும்? யார் எதைச் சொன்னுலும் அவற்றையெல்லாம் உண்மையென்று நம்புவதே பெண்களுக் கியல்பாகும்; ஐயா! புருஷர்களுக்கு மனமில்லா திருந்தாலும் அவர்கள் பிடித்துக்கொள்ளுவதற்காகக் கொடுப்பதுபோலத் தங்கள் கையைமட்டும் நீட்டுவார்கள்; வேண்டியவர்களுக்கோ வென்ருல், அவர்கள் தோளைக்கட்டிக்கொண்டு தொங்கிக்கொண்டாடுவார்கள்; நாங்களோவெனின், தாங்கள் சொன்னபடியெல்லாஞ் செய்கிறேம்; ஆதலிஞல், மைத்துனரே! தாங்கள் உள்ளே சென்று என் தமக்கையாரைப் பாராட்டிச் சீராட்டி அவள் மனங்குளிரச்செய்யுங்கள்; அன்றியும், அவளை நோக்கி, எனது ஆசைக்கண்ணுட்டியென் றழையுங்கள்; ஸமாதானமுண்டாகிற விஷயத்தில் சற்றேறவார்த்தைகள் ஸ்தோத்திரமாய் பொய்யைத் தழுவியனவா யிருந்தாலும், அதுவுமோர் பரிஹாஸம்போ லாகுமென்பது பெரியோர் கொள்கையாகும்.

ஸிம்மளத்துக் கருணுகரன்.—தேன்மொழியாளே! உனது பேர் தெரியாமையால் இப்படிப் பெயரிட்டுக் கூப்பிட்டேன்; இதென்ன ஆச்சரியம்! எனக்கு உன் பேர் தெரியவில்லை; நீயோ என்னை யறிந்திருப்பவள் போல என் பேரைச்சொல்லி யழைக்கிருய்! இத்தனை ஸாமர்த்தியமும் அருளுமுடைய பெண் மணியை நான் இது வரையிலும் எங்குங் கண்டதில்லை; எனது சிந்தாமணியே! நீ என் மீது அருள் புரியவேண்டும்;

நான் இது பொழுது எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பதையும், எந்த விதமாக உன்னோடு பேசவேண்டுமென்பதையும் நீ எனக்குக் கற்பிக்கவேண்டும்; நானோ இம்மண்ணிற் பிறந்து ஒன்றுமே தெரியாத பேதை; பிழைமலிந்து பேசத்தெரியாமல் நாக்குளரித்தட்டித்தயங்கி நெஞ்சையடைத்துக்கொண்டு குளரிக் கொட்டி வழிகிறேன்; ஸந்தர்ப்பத்திற்கேற்றபடி பற்பலவகையாகப் பொருள்படும்வண்ணம் நீ ஸமயோசிதமாகச்சொல்லும் வார்த்தைகளுக்கும், எனது புன்மொழிக்கும் பொருத்தமேயில்லை; மிகவும் இழிந்தோனாகிய என்னையும், அதிமேதாவினியான உன்னையும் ஒப்பிட்டுப் பார்ப்பதெப்படி? நீ தெய்வமகளோ சொல்லு; என்னை நீ உனக்குத் தோற்றியவாறு புதிதாக மாற்றிப் படைத்தல் கூடுமோ? அப்படிக்குச் செய்யின் நான் உனக்குத் தொண்டனாகி நீ யிடுகின்ற கட்டளைப்படி நடக்கிறேன்; நான் நானோ அல்லது வேறோ? நான் வேற்றுருவாக மாற்றப்பட்டிருப்பது மெய்யாயின், கண்ணுங் கண்ணீருமாகக் கதறியழுகின்ற இம்மடந்தை எனது மனையாளல்லளேயாம்; நான் என்றைக்கேனும் இவளைக்கண்டு இவளோடு ஸல்லாபஞ் செய்ததுமில்லை; நீ என்ன தான் சொன்னாலும் நான் கேட்கவேமாட்டேன்; உன் விஷயத்திலோவென்றால் நீ எப்படிச் சொன்னாலும் அது எனக்குச் சம்மதமே; அகோ நாககன்னிகையே! உனது ஸகோதரியின் கண்ணீர்வெள்ளத்தில் உனதுபாட்டின் இன்னிசையால் என்னை ஆழ்த்திவிட வொண்ணாது; கர்ணாமிருதமாகப் பாடுகின்ற உனது கீதத்தைக் கேட்டு நான் உன்னைச் சரணமடைந்தேன்; கன்னங்கரேலென்று கருத்து நீண்டு, படிப்படியாகத்தாழ்ந்து, குதிங்காலில் வந்திடிக்கின்ற கேசபாசங்களையுடைய மடநல்லாய்! உன்னைக் காணப்பெற்ற எனக்கு உன்

ளினும் நல்லாளெவள்? உன்னைக் கண்டானிந்திக்கிற எனக்கு உன் பொருட்டால் உயிர்துறக்கவரினும் அதுவே யெனக்குப் பேரின்பமாகும்.

மோஹ.—மைத்துனரே! இதென்ன தர்க்கம் பேசுகிறீர்கள்? தங்களுக்கு ஏதேனும் பித்துப் பிடித்திருக்கிறதாவென்ன தெரியவில்லை!

ஸி. கரு.—பைத்தியம் பிடிக்கவில்லை; பெண்டு கொண்டவனாகவாக்கப்பட்டிருக்கிறேன்; ஆனால், அந்தக்காரணம் மட்டுந்தான் இன்னும் எனக்குப் புலப்படவில்லை.

மோஹ.—தங்களுடைய கண்ணில் ஏதோ கொஞ்சம் தோஷமிருக்கிறதுபோலக் காண்கின்றது.

ஸி. கரு.—சூரியனைப்போல தேஜோமயமாய் இந்தப் பூமியில் ஸஞ்சரிக்கின்ற உன்னைக்காண்பதினால் என் கண் அப்படியாயிற்று.

மோஹ.—தாங்கள் புகழுமாறு அப்படிக்கு அழகு வாய்ந்திருப்பவள் நானல்ல; பார்க்கத் தகுந்தவளைப் பார்த்தால் தங்கள் கண்ணிலுள்ள குற்றம் நீங்கும்.

ஸி. கரு.—இனியாளே! பகலைப்பார்த்த கண்ணுக்கு இருளைக்காணப் பொருந்ததைப்போல உன்னைக்கண்டகண் மற்றொருத்தியைக் காணக்கருதுமோ?

மோஹ.—"இனியாளே" யென்று என்னை யேன் கூப்பிடுகிறீர்கள்? எனது தமக்கையாரை நோக்கி அப்படிச் சொல்லியழையுங்கள்.

ஸி. கரு.—ஆம்; உனதுதமக்கையின் ஸகோதரியைத்தான்.

மோஹ.—மைத்துனரே! நான் என்னுடைய ஸகோதரியை யென்றல்லவோ தங்களோடு சொன்னேன்.

ஸி. கரு.—அப்படிக்கன்று; உன்னைத்தான்; நீ தான் என்னுடைய பிராணனுக்குப் பிராணன்; நீயெனக்கு மூவா மருந்து; எனது அஷ்டைசுவரியம்; என் சிந்தையழலாற்ற வந்தவள்; எனக்கு இம்மைப்பயனளிக்கவந்தவள் நீயே; மறுமைக்குறுதியாய் நின்று என்னைக்காப்பவளும் நீயே தான்.

மோஹ.—தாங்கள் எனது ஸகோதரியைப் பார்த்தன்றோ இவ்வாறு மொழியுதல் வேண்டும்? நல்லது போனது போகட்டும்; இனிமேலாவது அவளோடு வார்த்தை சொல்லுங்கள்.

ஸி. கரு.—பெண்ணணங்கே! இதில் இத்தனை தடமாட்டமென்னத்திற்கு? ஸஹோதரி என்ற சொல்லையே உனக்குப் பேயராக வைத்துக்கொண்டு விடலாமே; ஏனெனில், நான்உன்மீது காதல்கொண்டிருக்கிறேன்; நான் உன்னையன்றி மற்றொருத்தியின் முகத்தைப் பாரேன்; நான் உன்னோடு கூடி இல்வாழ்க்கை புரிய விரும்புகிறேன்; நீயோ இன்னும் மணந்திலை; நானும் அப்படித்தான்; ஆதலினால்,என்செம்பவழவாயாளே! உனது செங்காந்தள் மலர்க்கரத்தைநீட்டு; நான் உன்னைக்கைப்பிடித்து மாலையிட்டு மணந்துகொண்டு நீயும் நானும் இணை பிரியாமல் ஒன்றாக வாழ்ந்திருக்கலாம்.

மோஹ.—மைத்துனரே! பதறவேண்டாம்; சற்றுப்பொறுங்கள்; இதோ ஒரு நொடிக்குள் என் தமக்கையாரை இங்கே அழைத்துக்கொண்டு வருகிறேன்; அவர் வந்த பின்பு அவருடைய அநுமதியைப் பெற்றுக்கொண்டு செய்யலாம் (என்று போய்விட்டாள்).

ஸிம்மளத்துச் சுமுகன் கோற்கைக் கருணாகரன் வீட்டிற்கு விரைந்தோடி வருதல்.

ஸி. கரு.—சுமுகா! இப்பொழுதென்ன ஸங்கதி சொல்லு; இத்தனை வேகமாய் எவ்விடத்திற்கடா ஓடுகின்றாய்?

ஸி. சுமு.—ஐயா! என்னைத் தங்களுக்குத் தெரியுமோ? நான் சுமுகந்தானோ? நான் தங்களுடைய வேலைக்காரனோ? நான் நானே தானோ?

ஸி. கரு.—நீ சுமுகன் தான்; நீ எனது பணியாளனே; நீ நீயே தான்.

ஸி. கரு.—ஐயா! நான் கழுதை; நான் ஒருத்திக்காளானேன்; என் புத்தி எனக்கு ஸ்வாதீன மில்லாதபடி

நான் வேற்றுருவமாக மாற்றப்பட்டிருக்கிறேன்.

ஸி. கரு.—நீ எவளுக்காளானாய்? நீ உனவயமற்று அயலா ருக்காட்பட்டிருப்பதேன் ?

ஸி. சுமு.—ஐயா! தெய்வத்தின் முன்னே சொல்லுகிறேன்; என் புத்தி எனக்கு ஸ்வாதீனமில்லை; நான் ஒருத்தி யிடம் அகப்பட்டுக் கொண்டு அவள் சொன்னபடி யெல்லாஞ் செய்பவனானேன்; என்னையவள் தன்னு டைமையென்று உரிமை பாராட்டுகின்றாள் ; என்னை அவள் பேயாய்ப் பிடித்துக்கொண்டு ஆட்டி அலங் கோலமாக்குகிறாள்.

ஸி. கரு.—அவள் உன்னிடத்தில் என்ன உரிமை பாராட்டு கிறாள் ?

ஸி. கரு.—உள்ள தத்துவத்தைச் சொல்லுகிறேன் கேளுங் கள்; தாங்கள் தங்களுடைய ஆடு மாடுகளை எப்படிக் கிரயவிக்கிரயங்களுக்குரித்தாய் வைத்துககொண்டிரு க்கிறீர்களோ அப்படியேதான் என்னையவள்வைத்துக் கொள்ளப் பார்க்கிறாள்; நான்மிருகமாகவிராமல் புரு ஷனை விருப்பதினாலே தான் அவள் அப்படிக்கு என்னை நடத்தப்பார்க்கிறாள்; அன்றியும், அவள் மிரு கத்தன்மையளா யிருப்பதுபற்றி என்னையும் அப்ப டியே நடத்தப்பார்க்கிறாள்.

ஸி. கரு.—அவள் எப்படி யிருக்கிறாள் ?

ஸி. சுமு.—அவள் பூதனையைப்போல மாம்ஸ பருவதமா யிருக்கிறாள்; அவளைக்கண்டமாத்திரத்தில் எங்குள்ள வர்களும், "அம்மா! கும்பிடு வருகிறது" என்று அவ ளுக்கு வந்தனை வழிபாடுகள் செய்யாமலிரார்; நான் அவளை மணம்புரிந்துகொண்டால் அப்புறம் நான் வாழ்ந்தாற்போலே தான்! அது மதயானையைப் பெண் டாகக்கொள்ளுவது போலக் கொழுப்புக் கலியாண மாகத்தானாகும்.

ஸி. கரு.—கொழுப்புக்கலியாணமென்றால் அதற்கு அரு

த்தமென்ன? அதை எனக்குச் சற்றே விளங்கும்படிச் சொல்லுவாயாக.

ஸி. கரு.—ஐயா! அவள் மடைப்பள்ளிக்கழுக்காணி; அவள் மேல் காலெல்லாங் குளிக்காமையால் ஊற்றையாய் நாற்றமெடுக்கும்; அவளது ஆடை முழுவதினுமே நெய்யிலே நனைத்தெடுத்தாற் போல் நெய்யும் பாலுந் தயிருமாகச் சேர்ந்து தோய்ந்திருக்கும் ; ஆதலினால் நான் அவளைக்கலியாணஞ்செய்துகொண்டால் பின்பு படும்பாடு நாயும்படாது ; வேண்டுமென்றால் அவளை தீபஸ்தம்பமாக நிறுத்தி அவள் தலையில் விளக்கேற்றினால் அது தூண்டா விளக்காய் அணையாது நின்றெரியும்; அந்தவெளிச்சத்தின் துணையால் நானும் மெள்ள மெள்ள அவளிருக்கு மிடத்தை விட்டுத் தப்பித்துக் கொண்டோடிப்போய்விடலாம்; நெய்தோய்ந்த அவளது ஆடையிலேற்றும் விளக்கோ திருவண்ணாமலைக்கார்த்திகை தீபம்போல அணையாமலே வருஷருது முழுவதுக்கும் தூண்டாவிளக்காகும்; அவள் மேனியிலும் வஸ்திரத்திலுமிருக்கிற நெய் அவள் இந்தக் கலியுகம் முடியுமளவும் பிழைத்திருந்தாலும், அந்தஅகண்டம் கிருதயுகம் பிறந்த பின்னுஞ் சில நாள் நின்றெரியும்.

ஸி. கரு.—அவளுடைய நிறமெப்படி யிருக்கும்?

ஸி. சுழு.—மை மலைபோலக் கன்னங்கரேலென்றிருப்பாள்; அவளுடைய முகத்தைப் பார்த்தால் மஹா விகாரமாய் அன்னத்துவேஷமுண்டாகும்; அவள் முகத்தினின்று எப்போ பார்த்தாலு முண்டாகின்ற வியர்வையும், நெடுங்காலமாகப் படிந்திருக்கிற அழுக்குஞ் சேர்ந்து சேறுஞ் சகதியுமாய் நாறிக்கொண்டிருக்கும்; அதில் ஒருவன் செருப்புக் காலோடு நடந்தால் வைத்த அடி பதியும்.

ஸி. கரு.—அதனாலென்ன குற்றம்? ஜலத்தைவிட்டலம்பினால் முகத்தழுக்குப் போகாதோ?

ஸி. சுமு.—அந்த அழுக்கு ஸாமானியமான அழுக்கன்று; அது நாட்பட்டு வயிரம்பற்றி யிருக்கிறது; ப்ண்டொருகால் ஸ்ரீமந் நாராயணன் மஹாப்பிரளயத்தில் ஆலிலைமேற் பாலகனாய்ப் பள்ளி கொண்டிருந்தபோதுண்டான ஜலத்தையெல்லாம் விட்டலம்பினாலும் அந்த அழுக்குப்போகாது.

ஸி. கரு.—அவளுடைய பேரென்ன?

ஸி. சுமு.—அவளுக்கு மதயானையென்று பெயர்; அவளது இடுப்பின் பருமன் பேரிகையின் உடலின் சுற்றளவைப்போல ஆறரை அடி பருமனிருக்கும்.

ஸி. கரு.—இடையின் அளவைத்தான் இவ்வாறு அளந்து சொல்லிவிட்டாய்; அப்படிக்கானால் அவளுடைய உயரம் எவ்வளவு இருக்கும்?

ஸி. சுமு.—அவளுக்கு, உச்சந்தலைமுதல் உள்ளங்கால் வரையிலுமுள்ள அளவும், இடுப்பினளவும் ஒன்றற்கொன்று ஏற்றக்குறைவில்லாதபடி இரண்டு மொன்றாகத் தானிருக்கும். இப்படிக்கு அகலமும் நீளமும் ஓரளவாக அவள் பூகோள வடிவமாயிருப்பாள்; அந்தக் கோளத்தில் தாங்கள் என்னை எந்த நாட்டைச்சுட்டிக் காட்டவேண்டுமென்றாலும் காட்டுவேன்.

ஸி. கரு.—ஐர்லாண்டு தீவு அவள் தேகத்தின் எந்தப்பாகத்திலிருக்கிறது?

ஸி. சுமு.—நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்; அது அவளது பருத்த பின் தட்டிலிருக்கிறது; அதிலுள்ள சதுப்பு நிலத்தால் அதனோடு ஒப்பிட்டேன்.

ஸி. கரு.—ஸ்காட்லண்டு அதில் எங்கே யிருக்கிறது?

ஸி. கரு.—அதில் விளைவில்லாத வெறுநிலம் அதிகமாயிருப்பதனாலும், கெட்டியான கற்றரையா யிருப்பதனாலும் அது அவளது உள்ளங்கையி லிருக்கிறதென்று கண்டேன்.

ஸி. கரு.—பிரான்ஸ் தேசமெங்கே யிருக்கிறது?

ஸி. சுமு.—அது கையுங் காலுமாய் ஆயுதம்பூண்டு, தன் தாய்த்தாருடன் நேயக்குறைவாய்ப் போர் புரிந்தமையால் அது அவளுடைய நெற்றியிலிருக்கிறது.

ஸி. கரு.—இங்கிலாண்டு தேசம் அதில் எங்கேயிருக்கிறது?

ஸி. சுமு.—அதில் சுண்ணாம்புக் குன்றம் எங்கிருக்கிறதென்று தேடிப்பார்த்தேன்; அந்தக் குன்றத்தின் நிறம் வெண்மையாகவிருக்கவில்லை; ஆனால், பிரான்ஸ் தேசத்திற்கும் அதற்கும் இடையே யுள்ள உவர் நீர்க்கழியால் அது அவளது முகவாயினிடத் திருக்கலாமென்று அநுமானிக்கிறேன்.

ஸி. கரு.—ஸ்பெயின் தேசமெங்கிருக்கிறது?

ஸி. சுமு.—யதார்த்தத்தைச்சொல்லுகிறேன்; அதை நான் அதில் காணக்கூடவில்லை; ஆயினும் அந்நாட்டின் உஷ்ணமான காற்றை அவளது மூச்சுக் காற்றினாலறிந்தேன்.

ஸி. கரு.—அமெரிகாவும், கிழக்கிந்தியா தீவுகளும் அதில் எங்கிருக்கின்றன?

ஸி. சுமு.—அவளதுமூக்கில் அணியப்பட்டிருக்கின்ற மாணிக்கம், மரகதம், நீல முதலிய தேஜோமயமான நவரத்தினங்களை அணிந்திருக்கிறதைப்பார்க்கையில் அவை அவளது மூக்கை யொத்திருக்கின்றன; ஸ்பெயின் தேசத்து உஷ்ணமான காற்று அவற்றின்மேற் படுவதினால் அவற்றின்காந்திமட்டும் சற்றேமலினமாகின்றது; ஸ்பெயின் தேசத்திலிருந்து அங்குச் சென்ற கப்பல்களின் தொடர்ச்சியானது, அவள் தனது மூக்கில் அணிந்திருக்கின்ற புலாக்கைப்போலிருக்கிறது.

ஸி. கரு.—பெல்ஜியம், ஹாலண்டு என்கிற நாடுகள் எங்கேயிருக்கின்றன?

ஸி. சுமு.—நான் அத்தனையாகக் கீழே தாழ்ந்து பார்க்கவில்லை; அது போனாற்போகட்டும்; நான் சொல்ல ஆரம்பித்த ஸங்கதியைச் சொல்லி முடித்து விடுகி

றேன் கேளுங்கள்; இந்த மாயாதேவி என்மேலாசைப் பட்டு, என்னைத் தன்னுடையவ னென்கிருள்; என்ன மாயம் பார்த்தீர்களா! என் பேரைச் சொல்லியும் என்னை அழைக்கிருள்; நானவளை மணம்புரிந்துகொண்டதாக என்னோடு பிரமாணமாகச் சொல்லி வாதாடுகிருள்; அன்றியும் அவள் எனது தோளிலிருக்கிற தழும்பையும், கழுத்திலுள்ள மச்சத்தையும், இடது புஜத்திலுள்ள பாலுண்ணியையும், இதற்கு முன்னே என்னோடிருந்து பார்த்தறிந்திருப்பவள் போலச்சொன்னுள்; ஆதலால் நான் அவளைச் சூன்யகாரியென்று நினைத்து நடுநடுங்கி வேர்த்து தெதும்பி விலுவிலுத்து அவளை விட்டோடிப் போகிறேன்; நான் எப்பொழுதுமே பரமாத்துமாவைத்தியானம் பண்ணிக்கொண்டு நிஷ்டையி லிருப்பவ னுதலால், அவர் என்னுடைய ஹிருதயகமலத்தில் நிலேயாய் நின்று குடிகொண்டிராமலும், நான் அவரே சரணமென்று உறுதிகொண்டிராமலுமிருந்தால் அந்த மாயைப்பிசாசு என்னை ஒரு சிறு நாய்க்குட்டியாக்கி அதன் வாலையறுத்து நாச்சந்தியில் படுகுழியில் சுற்றிச்சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருக்கும்படி யேவியிருப்பாள்.

ஸி. கரு.—அப்பா சுமுகா! நீ இங்கே நிற்கவேண்டாம்; இந்த விடம் விட்டு ஒரே ஓட்டமாக வோடிக் கப்பல் தங்கி நிற்கின்ற துறைமுகத்துக்குச் செல்லு; எந்த வேளையில் நிலக்காற்று கடலைநோக்கி யடிக்கத்தொடங்கினுலும் நான் உடனே ஊர்க்குப் புறப்பட்டு விடுகிறேன்; இனிமேல் இங்கே இன்றுராத்திரி கூடத்தங்கியிருக்க எனக்குச் சம்மதமில்லை; இன்றைக்கு எந்தக் கப்பலாவது பிரயாணப்படுகிறதாக விருந்தால் நீ அக்கணமே அவ்விடம் விட்டுக் கடைத்தெருவுக்கு வந்து என்னோடு சொல்லு; நீ வருமளவும் உன் வரவிற்காக நான் அங்குமிங்குமாக உலாவிக்கொண்டிருக்கிறேன்;

இந்நகரத்திலுள்ள எல்லோர்க்குமே நம்மைநன்றாய்த் தெரிந்திருக்கிறது; நமக்கோ இங்கே கண்ணைக்கட்டிக் காட்டிலே விட்டாற்போல ஒருவரையாயினுந் தெரிய வில்லை; இதென்ன விதிப்பயனோ தெரியவில்லை; ஆதலி னால் எந்த விதத்திலாவது இந்த விடத்தைவிட்டுத் தப்பிப் பிழைத்தோடிப் போவதே நன்றாகும்.

ஸி. சுமு.—என்னைக்கண்டு காதலிக்கின்ற அந்தப்பூதத்தை விட்டு, புலியைக்கண்டஞ்சியோடுபவனைப்போல நான் ஓடிப்போய் விடுகிறேன் பாருங்கள்.

ஸி. கரு.—இந்நகரத்தில் எந்த ஸ்திரீயைப் பார்த்தாலும் சூனியகாரியா யிருக்கின்றாளேயன்றி, ஒருத்தியாயி னும் நல்லவளா யில்லை; ஆதலினால், எப்படியாவது இனிமேல் ஒரு கணமேனும் இங்கே தங்கியிராதபடி இதைவிட்டு இப்பொழுதே தப்பியோடிப் போனாற் றான் பிழைக்கலாம்; எவள் என்னைக்கணவனாகப் பெற வேண்டுமென்றெண்ணி என்னிடத்தில் அன்பும் ஆதர மும் பாராட்டுகின்றாளோ அவளை நான் காணும்போ தே கண்கூசி எனது அங்கம்பதறி மனம் வெம்பித்தடு மாறுகின்றது; ஆயினும், அவளுடன்பிறந்த அழகுகொ டியாகிய மற்றொருத்தியின் செந்தாமரை மலர் முகத் தைக் காணும்போதே பார்க்கப் பதினாயிரங் கண்களி ருந்தாலும் போதாதபடி பால்வடிந்து சுந்தரியாய் ராஜகுமாரியைப் போலப் பெருந்தன்மை வாய்ந்து, அமிருத வர்ஷம்போல மதுரமாய் மொழிகின்றாள்; நான் அவ்வணங்கியலாளைக்கண்டதுமுதற்கொண்டே என் மனம் என்னை வஞ்சித்து விட்டு, அவளிடஞ் சென்று குடிகொண்டிருக்கிறது; இன்னுஞ்சற்றுநேர மளவும் நான் அவள்பாடும் பண்ணுக்குச் செவிசாய்த் திருப்பின் என்னை யவள் தன்வயமாக்கியே யிருப் பாள்; ஆனதினாற்றான் அவள் கிட்ட நிற்பதும் கூடா தென்று கண்டு மெள்ள ஏட்டி வந்துவிட்டேன்.

நீலமேகாசாரி வருதல்.

நீலமே.—ஐயா கருணாகரரே!

ஸி. கரு.—நீர் பேரிட்டழைப்பது ஸரியே; அது தான் என் பேர்.

நீலமே.—ஆம் ஐயா; தங்களுக்கு அது தான் பெயரென்று எனக்குத் தெரியாதோ? இதோ பார்த்தீர்களா; சங்கிலியை? இந்தாருமய்யா தங்கள் சங்கிலி வந்துவிட்டது; வாங்கிப்பாருங்கள்; இந்தச் சங்கிலியைத் தாங்கள் லட்சுமீமந்திரத்திலிருக்கும்போது தானே தங்களிடத்திற் கொண்டுவந்து கொடுக்கவேண்டுமென்றிருந்தேன்; ஆயினும் கொஞ்சங் குறை வேலையாயிருந்தமையால் இந்நேரமாயிற்று.

ஸி. கரு.—இந்தப் பொற்சங்கிலியை வைத்துக்கொண்டு என்னை என்ன செய்யச்சொல்லுகிறீர்? இதனை என்னத்திற்காக என்னிடம் கொடுக்க வந்தீர் சொல்லுமய்யா?

நீலமே.—இதை நான் தங்களுக்கென்று செய்துகொண்டு வந்தேன்; தங்களுக்கு எப்படி இஷ்டமோ அப்படிச் செய்து கொள்ளுங்கள்.

ஸி. கரு.—இதனை எனக்கென்றோ செய்துகொண்டுவந்தீர்! இதைப்பற்றி உம்மோடு நான் ஒன்றுஞ் சொன்னதில்லையே.

நீலமே.—வெகு நன்ருக இருக்கிறது! அப்படிக்குத் தாங்கள் அதை என்னைச் செய்யும்படிச் சொன்னது ஒரு முறை இருமுறையென்று மட்டுமல்ல; கிளிப்பிள்ளைக்குச்சொல்லுவது போலப் படித்துப்படித்து இருபது தரம்என்னோடு சொன்னதையெல்லாம் இதற்குள்ளே மறந்தீர்களோ என்ன சொல்லுங்கள்; இதைக் கையிலெடுத்துக் கொண்டு தங்கள் வீட்டிற்குச் சென்று தேவியாரிடங்கொடுத்துச் சந்தோஷப்படுத்துங்கள்; தாங்கள் மத்தியானபோஜநஞ் செய்யுமுன்னே தானே

விரைவாய்த் தங்கள் ஸந்நிதானத்திற்குவந்து தங்கள் தரிசனம்பெற்று இந்தக் காஞ்சனமாலையின் விலையை வாங்கிக்கொண்டு போகிறேன்.

ஸி. கரு.—ஐயா! உம்மை வருந்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்; பணத்தை இப்பொழுதே வாங்கிக்கொண்டு போய்விடும்; ஏனெனில், இந்தவேளை தப்பிப்போனால் பின்பு நீர் இந்தச் சங்கிலியையுங் காணமாட்டீர்; பணத்தையும் பெறமாட்டீர்.

நீலமே.—தாங்கள் இவ்வண்ணமாகப் பரிஹாஸஞ் செய்வதை நான் இப்பொழுதுதானே பார்த்திருக்கிறேன்! தாங்கள் தங்கள் மனையாளோடு பல்லாண்டு பல்லாண்டாக வாழ்ந்திருப்பீர்களாக. (என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்).

ஸி. கரு.—இங்கே யிருக்கின்ற இருப்பைப் பார்க்கையில் இன்னவிதமென்று எனக்கு இன்னும் பிடிபடவில்லை; ஆயினும், வலியவரும் ஸ்ரீதேவியை வேண்டாமென்று சொல்லுவார் எங்குமே யிரார்; ஆதலினால், இத்தனை அழகான பொற்சங்கிலியை இவன் கொடுக்க வருகையில் அதனை வேண்டாமென்று சொல்லுவது ஸரியன்று; இந்நகரில் பொருள் பெறுவதற்கென்று மனிதன் பாடுபடாமலே தந்திரமாய் வேண்டியமட்டுந் தேடிக்கொள்ளலாமென்று காண்கிறது; "கொடுக்கிற தெய்வம் கூரைவழியாகக் கொண்டுவந்து கொட்டும்" என்றபடி வருவது தானே வரும்; என்னிடம் ஒருவன் வலிய வந்து சங்கிலியை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று பலவந்தப்படுத்துகிறான். நான் இது பொழுது இங்கிருந்து கடைத்தெருவுக்குச் சென்று அவ்விடத்திற்குச் சுமுகன் வருமளவும் அங்கு காத்திருக்க வேண்டும்; ஏதேனுங்கப்பலொன்று இன்று துறைமுகத்தினின்று புறப்பட்டால் உடனே நான் பயணம் புறப்படவேண்டியது தான்.

மூன்றாவது அங்கம் முற்றிற்று.

# தாதாபாய் நௌரோஜி.

உலகத்திலே விருத்தி யடையும் ஜாதியார்களுக்கும் விருத்தியாகாத ஜாதியார்களுக்கும் பலவிஷயங்களிற் பெருத்த வித்தியாசமுண்டு. விருத்தியாகும் ஜாதியார் தங்களுடைய க்ஷேமத்தைப் பெருக்கக் கூடிய சகல வழிகளையும் கையாளுவார்கள். தேசாபிமானம் பூண்டவர்களாய், ஜாதியபிமானம் நிறைந்தவர்களாய், ஒற்றுமையென்னுங் குணம் தங்களுக்கோர் வலிய அரணைப் பொருந்தியவர்களாய், ஊக்கம், உற்சாகம், விடாமுயற்சி முதலிய நற்குணங்கள் செறிந்தவர்களாயிருப்பார்கள். தங்கள் தங்கள் நாட்டின் செல்வத்தையும், செல்வாக்கையும், கீர்த்தியையும் பெருகச்செய்வதில் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். இடையில் தோன்றும் இடையூறுகளை வென்று மேன்மையடையக்கூடிய மார்க்கங்களைத் தேடுவார்கள். இன்னும் பலவழிகளில் தங்களை முதன்மையாக்கிக் கொள்வதையே முக்கிய நோக்கமாகக் கடைப்பிடித்தொழுகுவார்கள். திருஷ்டாந்தமாக, உலகத்திலுள்ள பெரிய தேசங்களையெல்லா மெடுத்துச் சீர்தூக்கிப்பார்த்தால் இந்த உண்மை தெள்ளெனவிள

ங்கும். இங்கிலாண்டு தேசமானது இப்பொழுது மிகவும் செல்வாக்குடையதா யிருக்கின்றது. இஃதேனித்தகைய உன்னதநிலைமையை யடைந்திருக்கின்றதென்பதை இந்தியர்கள் ஆராய்ந்தறியவேண்டும். அப்படிக்காராயப் புகுந்தால், வெளிப்படையாகச் சில காரணங்களேனும் யாவருக்கும் தோன்றலாம். பிரிடிஷ்ஜாதியார் தொகையில்குறைந்தவர்களே யென்றாலும், அவர்களுடைய அதிகாரமானது உலகமெல்லாம் பரவியிருக்கிறது. பிரிடிஷார் ஓயாத முயற்சியுடையவர்கள். மிகுதியான ஒற்றுமையும் தேசாபிமானமும் படைத்தவர்கள். தங்கள் நாட்டுக்குத் தீமை வருமெனத் தெரிந்தால் தங்கள் ராஜாங்கத்தின் பெருமையினையும், கீர்த்தியினையுமே பொது நோக்கமாகக் கருதித் தங்களுக்கு இயற்கையாகத் தோன்றியிருக்கும் அபிப்பிராயபேதங்களையெல்லாம் அறவேமறந்து ஒற்றுமைக்குணமும், ஒருமைப்பட்ட மனமும் பாராட்டும் உத்தமத் தன்மைவாய்ந்தவர்கள். காலஞ்சென்ற லார்ட் ஸாலிஸ்பரியும் அவருடைய உதவி மந்திரிமார்களும் கூடிப் போவர்களுடன் யுத்தத்தை ஆரம்பிக்க முயன்றபோது, லிபரல் கக்ஷியார் பலமாய் யெதிர்வாதம் நடத்தினார்கள். ஆனால் யுத்தம் ஆரம்பித்த சில காலத்துக்கெல்லாம் பிரிடிஷ் சேனை தென்னாபிரிகாவில் பலமான தோல்வியடையவே, பிரிடிஷார் தங்களுக்கு நேரிட்ட கௌரவக்குறைவை நோக்கி லிபரல் கன்ஸர்வெடிவ் ஆகிய இருகக்ஷியாருமொன்றுசேர்ந்து யுத்தத்தை மேலும் மேலும் நடத்திப் போவர்களைத்தகர்த்துத் தோற்கவடித்துப் பிரிடிஷ் வெற்றிக்கொடியைப் பிரிடோரியாவில்கட்டுவதே தங்களுடைய முக்கியமானமுதற்கடமை யெனத் தீர்மானித்தார்கள். இம்மாதிரி பிரிடிஷார் ஸகல விதத்திலும் மேன்மையடைந்தவர்கள். இந்தியர்கள் இவர்களுடைய குணங்களில் சிலவற்றையேனும் பின்பற்றுவது

பொருத்த முடையதாகும். நம் நாட்டுக்காக அல்லும் பகலுமாக அனவரதமும் பாடுபடும் பெரியோர்களைப் போற்றும் குணங் கூட நம்மிடமில்லையே! என்ன பரிதாபம். மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி இந்தியாவுக்காக மிகவும் பாடுபடுகின்றவர். ஆகையினாலே அவரைப்பற்றிச் சுருக்கமாகச் சிலவிஷயங்கள் ஈண்டு எழுதுவது பொருத்தமாகும். அதிலும் ஸ்ரீ வாணீ விலாஸினீ பத்திரிகை கற்றோரிடமெல்லாம் சென்றுலாவுவதால், அப்பத்திரிகைக்கே இவ்விஷயதானஞ் செய்யக் கருதினேன். எனக்கு அவகாசம் நேரிட்டபோதெல்லாம் சில விஷயங்கள் எழுதவேண்டுமென்பதும் என்னுடைய கருத்து.

இந்தியர்களுக்கெல்லாம் தலைவரெனக் கருதப்படுபவரும், இந்தியர்களுக்கெல்லாம் தேசாபிமானத்தை யூட்டும்படியாகவே தோன்றியவரும், நம் நாட்டாராலேயேயன்றிப் பிற நாட்டாராலும் மதிக்கப்படுபவருமாகிய மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி யென்பவர் குஜராத்திலே, நஸேரி என்ற கிராமத்திலே 1825ளு செப்டம்பர்மீ 4உ ஜனனமானார். இப்பெரியவர் கருவிலே திருவுடையவராய், இளமையிலேயே நற்குணங்கள் செறிந்தவராய் விளங்கினார். இவரது இளமைப்பிராயத்தே தந்தையார் மரிக்க, இவரது தாயார் இவரைப் பலவிதத்திலும் தேற்றுவராகி இனிய புதல்வருக்கு உலக ஞானம் யாவும் ஒருங்கே யமையச் செய்தனர். கற்றோரே கண்ணுடையாரெனும் பெரும் நீதியை யுன்னி இவரது தாயார் இவருக்குக் கல்விப்பயிற்சி செய்வித்தனர். ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாயன்றோ சிறப்புடையள்? இவ்வருங் குணங்களெல்லாம் இவ்வம்மையிடத்துப் பொருந்தியிருந்தனவென்பது மிஸ்டர் தாதாபாய் நௌரோஜியினது அருமையான குணங்களாலேயே நன்கு விளங்கும். கல்விப்பயி

ற்சி செய்வித்ததோடமையாது இவருக்குச் சன்மார்க்க மும் போதித்து, இவரைச் சதாகாலமும் நல்வழிப்படுத்திப் புதல்வரைக் கண்ணிமை கண்ணைக் காக்குமாறு போற்றி வந்தனர். தாயைப்போல் பிள்ளையென்பதுண்மையாயின் மிஸ்டர் தாதாபாயின் தாயார் எவ்வளவு பெருமை வாய்ந் திருந்தார்களோ என்பது நம்மால் அளவிடும் தரத்ததன்று. "என்னுடைய தாயார், கல்வி யறிவில்லாதவளா யிருந்த போதிலும், என்னிடத்துப் பேரன்பு வகித்திருந்தபோதி லும், மிகுந்த ஞானமுடையவள்; என்னைத் தீநெறி புகா வண்ணம் பாதுகாத்து வந்தாள்" என மிஸ்டர் தாதாபா யியே கூறியிருக்கின்றார். "நான் சிறு குழந்தையாயிருக் கும்போதே வைதவ்யமடைந்தும், என்னையே தன்னுடைய ஆஸ்தியெல்லாமெனக் கருதிக்காத்தனள். நான் பெண் கல்வி விஷயமாகவும், மற்றும் பல ஆசாரத் திருத்தங்கள் விஷயமாகவும் செய்த வேலைகளுக்கெல்லாம் எனக்கு உற்ற துணையா யிருந்தாள். என்னை இவ்வளவு ஸ்திதிக்குக் கொண்டுவந்தவள் என் தாயே." எனவும் இவர் கூறியிருக் கிறார்.

சுதேச பாஷைப் பள்ளியிலும், ஆங்கிலேயப் பாடக சாலையிலும் படித்துத் தேர்ச்சியானபின்னர் மிஸ்டர் தாதா பாய் எல்பின்ஸ்டன் காலேஜில் போய்ச் சேர்ந்து அங்கு முதல் மாணவராகப் பிரகாசித்தனர். கலாசாலையில் படி த்துவரும்போது இவருடைய புத்திக்கூர்மையைப்பார்த்து எல்லோரும் வியந்தார்கள். இவர் தம்முடைய காலேஜ் படிப்பை முடித்தவுடன், அப்போது பம்பாய் ஐக்கோர்ட் டில் சீவ் ஜட்ஜாயிருந்த ஸர் எர்ஸ்கைன் பேர்ரி என்பவர் தம்முடைய சொந்தச் செலவில் இவரை லண்டனுக் கனு ப்பிப் பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிக்கச் செய்வதாய்த் தெரிவித்தார். மிஸ்டர் தாதாபாய்க்கு இங்கிலாண்டு செல்

லப் பிரியமே யென்றாலும், இவரெங்கே கிருஸ்தவராய் விடுவாரோ என்று பயந்து இவருடைய குடும்பத்தார்கள் இவரைத் தடைசெய்து விட்டார்கள். இவருக்கு இந்தச் சமயத்தில் கவர்ண்மெண்டு உத்தியோகமும் கிடைக்கக் கூடியதாயிருந்தது. ஆனால் நாமெல்லாஞ் செய்த புண்ணியப்பேற்றால் இவர் தமக்கு வலியவே கிடைத்த கவர்ண்மெண்ட் உத்தியோகத்தை யங்கீகரிக்கவில்லை.

சென்ற 1854-வருஷம் எல்பின்ஸ்டன் காலேஜிலேயே இவருக்குக் கணித சாஸ்திர உபாத்தியாயர் வேலை கொடுக்கப்பட்டது. இப்பேர்ப்பட்ட வேலை முதல் முதல் இந்தியராகிய இவருக்கே கொடுக்கப்பட்டமையால் இதனை நாம் ஒரு பெரிய கௌரவமாகக் கருதவேண்டும்! இப்பாடசாலையினுபாத்தியாயராக இவர் சில காலம் வேலை செய்து ராஸ்ட்காப்டார் என்ற குஜராத்தி பத்திரிகை ஆரம்பித்து அதனை நடத்தினார். பின்னர் லண்டனில் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்ட காமா கம்பெனியிலொருவராக இவர் சென்ற 1855-வருஷம் இங்கிலாண்டுக்குச் சென்றார். இங்கிலாண்டில் இவர் தம்முடைய வியாபார விஷயமாக உழைத்ததோடு நில்லாமல் ஆங்கிலேயருக்கு இந்தியாவைப் பற்றிய விஷயங்களையும் அடிக்கடி யெடுத்துப் போதித்து வந்தார். லண்டனில் இவர் "இந்தியன் ஸொஸைடி" என்ற சங்கமொன்றை ஸ்தாபித்தனர். இப்போது இச்சங்கம் "ஈஸ்ட் இந்தியா அஸ்ஸோஸியேஷன் என்றழைக்கப்படுகிறது. இச்சங்கத்தின் மூலமாய் இவர் நம்மவர்களுக்காக மிகவும் பாடுபடுகின்றார். இவருடைய கியாதியானது இந்தியா முழுமையும் பரவிற்று. ஆகையினாலே இவர் சென்ற 1869-வருஷம் இந்தியாவுக்குத் திரும்பியபோது பம்பாயிலுள்ள ஜனங்கள் ஒரு பெரிய பொதுக்கூட்டம் கூடி இவரை வாழ்த்தித் துதித்துப் புகழ்ந்து பரிசளித்தார்கள். அதே

வருஷம் இவர் பழையபடியும் இங்கிலாண்டுக்குச்சென்று, சென்ற 1871—72-வருஷத்தில் இந்திய விஷயங்களைப் பற்றிவிசாரிக்கும்படியாக நியமிக்கப்பட்ட பார்லிமெண்டரி கமிட்டி அல்லது பாஸட் கமிட்டியின் முன்னர் ஸாக்ஷியம் கொடுத்தார். பிற்பாடு இவர் இந்தியாவுக்குத்திரும்பியதும் பரோடா தேசத்து முதன் மந்திரியாகச் சிலகாலம் வேலை பார்த்தார். சென்ற 1876-வருஷம் பம்பாயில், லண்டன் ஈஸ்ட்இந்தியா அஸோஸியேஷனின் கிளைச்சங்கமொன்று ஸ்தாபித்துவிட்டு இங்கிலாண்டுக்குச் சென்றார்.

இந்தியாவின் தரித்திர நிலைமையைப்பற்றி இவருக்கும் இந்தியா செக்ரிடெரிக்கும் பலமான கடிதப்போக்குவரத்துகள் நடந்தன. பெரிய தேசாபிமானியாகிய மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி தம் நாட்டின் தரித்திர ஸ்திதியையுணர்ந்து சென்ற 1880-வருஷம் முதல் 1883-வருஷம் வரையில் இந்தியா செக்ரிடேரிக்குக் கடிதங்களெழுதி மிகவும் சுரு சுருப்பா யுழைத்தார். இப்பெரியவர் இந்தியாவுக்காகச் செய்திருக்கும் வேலைகளையெல்லாம் அளவிட்டுக் கூறுவது என்றால் முடியாது. ஆகையினாலே சுருக்கமாகச் சில விஷயங்களைக் கூறுகின்றேன்.

காங்க்ரெஸ் மகாசபையை 1885-வருஷம் உற்பத்திசெய்தவர்களுளிவரொருவர். 1886-வருஷம் கூடிய காங்க்ரெஸ் சபையிலும், 1893-வருஷம் கூடிய காங்க்ரெஸ் சபையிலுமிவர் அக்கிராஸனம் வகித்தார். சென்ற 1892-வருஷம் இவர் பார்லிமெண்டு மெம்பராகி ஸிவில் ஸெர்விஸ் பரீக்ஷைகள் இந்தியாவிலும் இங்கிலாண்டிலும் நடத்தப்படவேண்டுமென்று தீர்மானத்தைப் பார்லிமெண்ட் சபையில் நிறைவேற்றினார். 1895-வருஷம் பார்லிமெண்ட் கலைந்தபோது இவரும் தம்முடைய ஸ்தானத்தை யிழந்தார். சென்ற 1895-வருஷம் ராயல்கமிஷன் நியமிக்கப்பட்டபோது இவரும்,

ஸர் வில்லியம் வெட்டர்பர்னும், காலஞ்சென்ற மிஸ்டர் கெயினும் மெம்பர்களாகவிருந்து அபரிமிதமான வேலைசெய்தார்கள். இன்னும் பார்லிமெண்ட் மெம்பராக இவர் பிரயத்தனஞ் செய்துகொண்டிருக்கிறார். நார்த்லாம்பேத் என்பதின் பிரதிநிதியாக இவர் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார். இவருடைய முயற்சி கைகூடவேண்டுமென்பதே எல்லா இந்தியர்களுடைய முழு நோக்கம்.

மிஸ்டர் தாதாபாய் நௌரோஜியை நான் என்னென்று தான் புகழ்வேன். பரிசுத்தமான நடத்தையும், மிகுந்த தேசாபிமானமுமுடையவர். இவரைப்போல் தங்கத்தால் சிலையடித்து வைத்து நாமெல்லாம் பூஜித்து வந்தாலும் தகும். இவர் சிரஞ்சீவியாய் வாழ்ந்து இந்தியர்களுக்காக மேலும் மேலும் உழைப்பாராக.

அ. சங்கரலிங்கம்பிள்ளை பி. ஏ.



நிஜாம் மீர்மாபுப் ஆலிகான் ஜீ. ஸி. எஸ். ஐ.

# ஐதராபாத்

அல்லது

# நிஜாமிராஜ்யம்.

பரப்பளவு-98,000சதுரமைல், ஜனத்தொகை.-11,174,897.

வருஷவருமானம் சுமார் ரூ 40,0000,00.

இங்கிலேய அரசாட்சிக் குட்பட்டமகம்மதிய ராஜ்யங்களில் முதன்மை பெற்றது ஹைதராபாத் ராஜ்யம். அதை ஆண்டு வரும் நிஜாம் என்பவர் இந்தியாவில் இருபத்தொரு குண்டு மரியாதைக் குள்பட்ட மூவர்களில் ஒருவர். *

கொஞ்ச நாள்களுக்குமுன்பு பிரிந்துபோன பேரார் பிரதேசம் நீங்கலாக, ஹைதராபாத் ராஜ்யம் இங்கிலாந்து தேசத்தைக்காட்டிலும் சற்றுப்பெரிதாயும்,பெரும்பாலும் இந்தியர்களையுடைய 12,000,000 ஜனங்களையுடையதாயும், நான்கு பக்கங்களிலும் ஆங்கிலேயருடைய ஆளுகைக்

* இந்தியாவில் சக்கரவர்த்திக்கு மரியாதை 101 குண்டுகள்; ராஜப்பிரதிநிதிக்கும் அரசக்கொடிக்கும் 31; அதற்கு அடுத்தபடி மைசூர், பரோடா, ஹைதராபாத் என்னும் தேசங்களை யாள்பவர் மூவரும் 21 குண்டு மரியாதைக்குட்பட்டவர்கள்.

குட்பட்ட நாடுகளால் சூழப்பட்டுமிருக்கிறது. பூமிமட்டத்துக்கு 1000 அடிமேலானதாய் அனேக சிற்றாறுகளினால் துண்டு துண்டுகளாக்கப்பட்டிருக்கிற இந்நாடு வடபக்கத்தில் கோதாவரியையும் தென்பக்கத்தில் கிருஷ்ணா நதியையும் எல்லையாக உடையது. இவ்வாறு நீர்வளம் மிகுதியாயிருத்தல்பற்றி, செல்வத்திலும் சௌக்கியத்திலும் ஒப்புயர்வின்றி விளங்குகின்ற இந்நாடு கி. பி. பதினாறும் நூற்றாண்டின் கடைசியில் தான் ஸ்தாபிக்கப்பட்டது.

தக்ஷிணத்தை ஜயித்த பிறகு அதின் ஓர் பாகமாகிய பீஜப்பூரை ஆண்டு வரும்படி மொகல் சக்கரவர்த்தி (அவுரங்கசீப்) தன்னிடமிருந்த ஓர் துருக்க பிரபுவான சின்கலிச்கான் என்பவனை அனுப்பினான். அவன் வந்து தன்னுடைய புத்திவன்மையாலும் சாமர்த்தியத்தினாலும் தென்பாகத்தில் பெரும் புகழும் செல்வாக்கும் அடைந்து நிற்கவும், 1713ம் வருஷத்தில் பரக்ஸியர் சக்கரவர்த்தியால் தக்ஷிணத்துக்குச் சுபேதார் என்னும் அதிகாரமும் "நிஜாமல்முல்க் ஆஸாப் ஜா" என்னும் பட்டமும்பெற்றனன். பெற்றுச் சின்னாளானதும் டில்லியின் மேல் படையெடுத்து மொகல் * சக்கரவர்த்தியைக் கைக்குட்போட்டுக்கொண்டிருந்த இரண்டு துருக்கர்களைவென்று சக்கரவர்த்தியைச் சிறை மீட்டதும், ஆஸாப் ஜாவை டில்லியின் முதன்மந்திரியாக்கினார்கள். தனக்கு இஷ்டமில்லாததினால் அவ்வேலையை விட்டு விட்டுத்தன் தேசமாகிய தக்ஷிணத்துக்கே வந்து சுயேச்சையாய் ஆண்டு இப்போது இருக்கும் அரசவம்சத்துக்கு மூலபுருஷனாயினான்.

மகாராட்டியர்கள் அவனை அடிக்கடி தொந்திரவு செய்ததினால் அவன் தன்னைத் தக்ஷிணத்தில் ஸ்தாபிதம் செய்துகொள்ளவேண்டியதற்கு அவர்களோடு அநேகம்

* மகம்மதுஷா.

தரம் சண்டைபோட வேண்டியிருந்தது. 1744ம் வருஷத்தில் அவனிறந்தபோது அவனுடைய தேசம் நருமதை நதி தொடங்கித் திருச்சிராப்பள்ளிவரையிலும், மசூலிப்பட்டணம்தொடங்கி பீஜாப்பூர்வரையிலும் பரவியிருந்தது.

அவனிறந்தவுடன் பட்டத்துக்கு வருவதைப்பற்றி விவாதம் உண்டாயிற்று. மொகல் சக்கரவர்த்தி சக்தியற்றிருந்ததினால் தலையிட முடியாமலிருந்தனன். ஆஸாப் ஜாவின் மூத்த பிள்ளை காஜியுடின்கான் என்பவன் டில்லியிலிருந்தபடியால், இரண்டாவது குமாரனான நாஸர்ஜங் நிஜாமானான். ஆனால் அவனுடைய சகோதரியின் மகன் முஸபர்ஜங் அவனுடன் ராஜ்யத்துக்காகச் சண்டை செய்ய வாரம்பிக்கவும் இருதிறத்தாரும் துணை சேர்த்தனர். முஸபர்ஜங்குக்குத் துணையாகக்கர்நாடகசுபேதார் சந்தா சாகிபும் பிரஞ்சுக்காரரும் சேர்ந்தனர். நாஸர்ஜங்குக்கு ஆங்கிலேயர் அநுகூலமாய் நின்றனர். இவ்வாறு மேற்றே சத்தாரிருவரும் எதிர்த்த கக்ஷிகளிலிருந்தபடியால் இவ்விருதிறத்தவர்க்குள் முதல் முதல் நேராகச் சண்டையாரம்பித்தது. ஆனால்பிரஞ்சுக்காரரும், சந்தாசாகிபும்முஸபர்ஜங் கைக்கைவிட்டுப்போனதும்,நாஸர்ஜங் எளிதில் அரசனாயினன். அவன் சிற்றின்பப் பிரியனாய் ராஜ்யபாரத்தை வகியாமலிருந்ததினால், எதிர்த்து வந்த பிரஞ்சுக்காரருடைய படைக்குத் தோற்றுவிடவும் அவனுடையசேவகர்களிற் சிலர் அவனைக்கொன்று விட்டு முஸபர்ஜங்கை அரசனாக்கினர். அரசனான முஸபர்ஜங்கும் இதே கதியையடைந்தபின்பு, பிரஞ்சுக்கார்,நிஜாமல்முல்கின் மூன்றாவது பிள்ளையாகிய ஸலபட்ஜங்கைப் பட்டத்துக்குக் கொண்டு வந்தனர். அது முதல் பிரஞ்சுக்காரருடைய பிரதாபம் மேன்மேலெழுத்தொடங்கியது. இது காரணம் பற்றியே ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் நடந்த சண்டைகள்பல. அவை

களில்பின்னவர்கள்தோல்வியடையவும் ஆங்கிலேயருடைய கீர்த்தியும் புகழும் அதிகரித்தது. பிரஞ்சுக்காரர் கைப்பற்றியிருந்தநாடுகளில் பலவற்றை அவர்கள் பிடுங்கிக்கொண்டனர். பிறகு உதயகிரி யென்னுமிடத்தில் நடந்த சண்டையில் மகாராஷ்டிரர்கள் ஸலபட்ஜங்கை ஜயித்து அவனிடமிருந்து பீஜப்பூரைக் கைப்பற்றிக் கொண்டனர். கொண்டதும், ஸலபட்ஜங்கைத் தள்ளிவிட்டு அவன் தம்பியாகிய நிஜாமலி என்பவன் நிஜாமானான். இதற்கு முன்பேயே டில்லி சக்கரவர்த்தியினிடமிருந்து ஆங்கிலேயர் சில நாடுகளைப் பெற்றிருந்தனர். அவர் அவ்வாறு பெறுவதற்கு அருகரல்லவென நிஜாமலி ஆங்கிலேயருடன் சண்டைக்குப் போகவே, இருதிறத்தாரும் சமாதானமாயினர். அதன்படி ஆங்கிலேயர் வடஸர்க்கார் மாகாணங்களை வைத்துக்கொள்ளுகிறதென்றும், அதற்கு ஈடாக நிஜாமலி வருஷத்துக்கு 9 லக்ஷ ரூபாயும் வேண்டியபோது சண்டையில் ஒத்தாசையும் ஆங்கிலேயரிட மிருந்து பெறுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இங்கேயிப்படியிருக்க மைசூரிலிருந்த இந்தியவரசனைத்தள்ளிவிட்டு, அவன் கீழிருந்த ஓர்மகம்மதிய வீரனான ஹைதர் என்பவன் அரசனானான். அவன் ஆங்கிலேயருடன் சண்டை செய்யவெண்ணி நிஜாமைத் தனக்குத் துணையாகச் சேர்த்துக் கொண்டு முதலில் வெற்றியடைந்து பின்னர் ஆம்பூர் என்னுமிடத்தில் தோல்வியடைந்தனன். உடனே நிஜாம் ஆங்கிலேயரோடு சமாதானமாயினன். 1794ம் வருஷத்தில் "சௌத்" என்னும் வரி விஷயமாய் மராட்டியருக்கும் நிஜாமுக்கும் நடந்த கார்டா சண்டையில் நிஜாம் தோற்றுப்போனான். அவன் தோற்றதற்குக் காரணம் அவன் சேனையிலிருந்த ஆங்கிலேயர்கள் விலகிவிட்டமையேயாம். தான் தோற்றுப் போனது

மன்றி நிஜாம் மகாராட்டிரர்களுக்கு மூன்று கோடி ரூபாயும், தௌலதாபாத் என்னும் கோட்டையையும், 35 லக்ஷம் ரூபாய் வரும்படி வருமான நிலங்களையும் கொடுக்கும்படி நேரிட்டது. தனக்குச் சண்டையில் உதவி செய்யாததினால் கோபங்கொண்டு தன்னிடமிருந்த ஆங்கிலப் படையை வேண்டாமென்று நிஜாம் தள்ளிவிட்டவுடன், தன்மகன் தனக்கு விரோதமாய்க் கிளம்பியதால், தள்ளிவிட்டபடையை மீண்டும் வரவழைத்து ஆதரிக்கலானான்.

1782ம் வருஷத்தில் ஹைதர் இறக்கவும், அவன் மகன் திப்பு சுல்தான் அரசனாகி ஆங்கிலேயரையும் நிஜாமையும் எதிர்க்க அவர்கள் ஒன்றுசேர்ந்து அவனை முறியடித்துக் கடைசியாக 1799ம் வருஷத்தில் அவனைச் சண்டையிற் கொன்று, அவனாட்டில் அதை முன்னாண்ட அரசவம்சத்தானுக்கு ஓர்பகுதியைக் கொடுத்து, மீந்ததை இருவரும் பாகித்துக் கொண்டனர்.

தன் காலமுழுவதும் ஆங்கிலேயருக்குக்கீழ்ப்படிந்து நின்று, அவருடைய சேனையைத் தனக்கு வேண்டியபொழுது துணையாக்கிக் கொண்டு, வெகுகாலமாண்டுவந்து 1803ம் வருஷத்தில் நிஜாமலி தன்னுடைய நூறுவது வயதில் இறந்தான். அவனுடைய மூத்த மகன் அவனுக்கு முன்னமேயே யிறந்து விட்டதினால், இரண்டாவது பிள்ளையாகிய ஸிக்கந்தர்ஜா என்பவன் அரசனானான். அவன் தன் காலமெல்லாம் அந்தப்புரத்திற் கழித்துக் கொண்டிருந்ததினால் நாடெல்லாம் துன்பமேயதிகரித்தது. மந்திரியான மீர் அலிம் இறந்தபிறகு, அவன் மருமகன் முனீரல் முல்க் என்பவன் 1808ம் வருஷத்தில் திவானானான். ஆங்கிலேயரோ, தங்கள் அதிகாரத்தினால் நிஜாமின் இஷ்டத்துக்கு விரோதமாக சந்துலால் என்பவனை திவானாக்கினர். சந்துலால் மிகவும் கெட்டிக்காரனாகவும் முனீரல் முல்க்

முழுவதும் ஞானமில்லாதவனாகவுமிருந்தபடியால் ராஜ்ய பாரம் முழுவதும் சந்துலாலே வகிக்க வேண்டியிருந்தது. மிகுந்த கெட்டிக்காரனாயிருந்தபோதிலும் சந்துலால் ஆங்கிலேயர் ஒத்தாசையினால் ஜனங்களை மிகுதியும் துன்பப் படுத்தலாயினன். வரிகளை ஜாஸ்தியாக்கவே குடிகள் கொடுக்கமாட்டாது தவித்தனர். இப்படியிருக்கும் காலத்தில் ஆங்கிலேயர் மகாராஷ்டிரர்களோடு செய்த சண்டையில் நிஜாம், ஆங்கிலேயருக்குச் செய்த உதவிக்காக, வருஷமொன்றுக்கு 626,000 ரூபாய் வரும்படியுள்ள நிலத்தைப் பெற்றுக்கொண்டான். 1820ம் வருஷத்தில் நிஜாமின் வருஷ வரும்படி சுமார் ஒரு கோடியே ஒன்பதினாயிரம் ரூபாயென்று மதிப்பிடப்பட்டது [ரூ 10,009,000].

சந்துலாலுக்கு விரோதமாக நிஜாமின் குமாரர்கள் கிளம்பியபோதிலும் ஆங்கிலேயரெஸிடெண்டின் உதவியால் சந்துலால் எல்லாரையும் வென்று மிகவும்குரூரமாக ஆண்டு வந்தனன். 1829ஹு மே மீ 24உ ஸிக்கந்தர்ஜா இறந்தவுடன், அவன் மகன்நாஸருட்டௌலா நிஜாமாகி, சந்துலாலை முதல் மந்திரியாக வைத்துக்கொண்டான். திவான் தன்னைச்சேர்ந்தவர்களுக்கெல்லாம்நல்லபதவிகளைக்கொடுத்துப் பணத்தைவாரிவிட்டபடியால் அரண்மனைப் பொக்கிஷத்தில் பணமில்லாமற்போயிற்று. உடனே சந்துலாலும் இறந்தான். 1843ம் வருஷத்தில் திவான் முனீரல் முல்கும் இறக்க அவனுடையவிடத்தில் அவன் மகன் ஸிராஜல் முல்க் என்பவன் வந்து சேர்ந்தான். அவன் வந்த சின்னாட்களுக் கெல்லாம் நிஜாம் வைத்துக்கொள்ளவேண்டிய சேனைகளைக் குறைக்கவேண்டுமென்று ஏற்படவே, அவ்வாறு குறைத்து, அச்சேனைக்கு உணவளிக்க வேண்டியதற்காகவும், பட்டிருந்த கடன்களைத் தீர்க்கவேண்டியதற்காகவும் நிஜாம் ஆங்கிலேயருக்கு பேரார் மாகாணங்களைக் கொடுக்க நிச்சயித்தான். ஆங்கிலேயரும்,

பேராரின் வரும்படியினின்றும் தங்கள் செலவுபோக மிகுதியை நிஜாமுக்குக் கொடுத்து விடுவதாக ஒப்புக்கொண்டனர். உடனே ஜனங்களுக்குத் துன்பம் அதிகரித்தன. ஏழைகளெல்லாம் அதிகமானவரிகளைக் கொடுக்கமுடியாமல் தடுமாறினர். நியாயமென்பதே யில்லாமற் போயிற்று. லஞ்சம் வாங்குவதிலேயே கண்ணுயிருந்த அதிகாரிகள் வேறு என்னதான் செய்வார்கள்? போர்வீரர்கள் செய்த அட்டூழியங்களுக்கும் அனியாயங்களுக்கும் அளவேயில்லை. ஏனென்று கேட்பாரில்லாத ஏழைகள் பட்ட பாட்டைச் சொல்லமுடியாது. நிஜாமோ, இதெல்லாவற்றையும் விட்டுவிட்டுக்காமவலையிற்சிக்கி ஒன்றுந்தெரியாது மயங்கியிருந்தனன். இவ்வாறு கோலாகலமாயிருக்கையில் அதிருஷ்டவசத்தினுல் ஸிராஜல் முல்க் இறக்கவும், அவனுடைய மருமகனை ஸாலர்ஜங் என்பவர் மந்திரியானர். இவராலேயே இந்நாடு மேலான நிலைமைக்கு வந்தபடியினுல் இவரைப்பற்றிச் சற்று விவரமாய்ப்பேசுவோம்.

ஸாலர்ஜங் மந்திரியாகவரும்போது அவருக்கு வயது இருபத்துநான்கு. ஆனுலும் நன்ருய்ப் படித்துத் தேர்ந்து அடைந்த பெரும் பதவிக்கேற்ப ஞானமும் குணமும் பெற்றிருந்தார். மந்திரியாக வந்ததும், அனேக சீர்திருத்தங்களைச் செய்யலானுர். சுய ஜாதி என்று சொல்லிக்கொண்டு, ஹைதராபாத்தில் குடியேறிச் சுற்றிலுமுள்ள இந்தியர்களை வருத்தப்படுத்திக்கொண்டிருக்கும்படியான அராபியர்கள், ரோஹில்லர்கள் முதலானவர்களைக் குடியேறவிடாமல் தடுத்தனர். நாடெங்கும் பரவியிருந்த கலகங்களைத் தடுத்தனர். இப்படியெல்லா மாரம்பிக்கவே, அரண்மனை யிலுள்ளாரும் மற்றைப்பிரபுக்களும் அவரை விரோதிக்கவாரம்பித்தனர். அது மாத்திரமன்றி நிஜாமிடத்திலும் இவரைப்பற்றி அவதூறுகள் சொல்ல

வாரம்பித்தார்கள். இந்த விஷயம் ஸாலர்ஜங்குக்குத் தெரிந்தவுடன் தனக்கு உத்தியோகம் வேண்டாமென்று நிஜாமுக்குத் தெரிவிக்கவும், உண்மையை யறிந்த நிஜாம் அவரையே சர்வாதிகாரியாக நியமித்தனர். நியமிக்கவும் ராஜ்யத்துக்கு நற்காலம் பிறந்தது. அநேக சீர்திருத்தங் களேற்படவே, வருஷவரும்படி யதிகரித்தது. ஜனங்களும் சந்தோஷமாகவும்சௌக்கியமாகவும்வாழவாரம்பித்தனர்.

இவ்வாறிருக்கும் தருணத்தில், 1856, 1857ம் வருஷத்தில், இந்தியா முழுவதிலும் பெரிய சிப்பாய்க் கலகத்தினல் மிகுந்த குழப்பமுண்டாயிற்று. அதில் முக்கியமாய்த்துருக்கர்களும் சிற்சில துருக்க அரசர்களும் சேர்ந்துவிட்டபடியால், ஹைதராபாத் பெரியதுருக்கதேசமாகையால் அதுவும் சேர்ந்து எங்கே பெரிய அமளியை விளைவிக்கப் போகிறதோ வென்று ஆங்கிலேயர் மிகவும் திகிலடைந்தனர். ஆகையால் நிஜாமும் அவனுடைய மந்திரியும் யோக்கியர்களாய்த் தங்கள்சொற்சோர்வுபடாமலிருந்தால் தான் ஆங்கிலேயருடைய உயிரும் மானமும், சொத்தும் சாவதானமாயிருக்குமென நன்றாய்த் தெரிந்திருந்தது. நிஜாம் தன் வார்த்தையைக் காப்பாற்றினன். அதுவுமன்றிக் கலகத்தை அடக்குவதில் ஆங்கிலேயருக்கு வேண்டிய ஒத்தாசையும் செய்தான். ஐதராபாத்திலேயே சிற்சிலர் கலகத்துக்கு ஏற்பாடு செய்யவதைக்கேட்டு கலகக்காரர்களையெல்லாம் நிஜாம் கடுமையாய்த் தண்டித்தான். ஆகையினல் துருக்கர்கள் பலரும், இந்தியர்களில் சிலரும் இவ்வாறு தகுந்த சமயம் வாய்க்க, அதில் தங்களைத் தலையெடுக்கவொட்டாமல் செய்து விட்டார்களே யென்று திவான் ஸர்ஸாலர் ஜங்கைப் பழித்தனர். பழித்தது மாத்திரமன்றி அவரைக் கொல்லச் சூழ்ச்சியுஞ் செய்தனர். செய்தும் பயன்படவில்லை.

இப்போது 1857ம் ஷூ நிஜாம் நாஜருட்டௌலா இறந்துபோக அவன் மகன் அப்ஸலுட்டௌலா சிங்காதனமேறினன். நாட்டிலும் நகரத்திலும் கலகமும் குழப்பமும் பரவாவண்ணம் ஸாலர்ஜங் தடுத்து வந்தனர். இவரிவ்வாறு செய்துவந்ததைப்பற்றி உயர்ந்த உத்தியோகத்திலிருந்த ஒரு ஆங்கிலேயர் எழுதுவதாவது.—"மயிர் முனையில் தொங்கிக்கொண்டிருப்பது போல் நின்ற ஆங்கிலேய வரசாட்சிக்கு, இக்காலத்தில் நிஜாமின் மந்திரியானவர் ஸாலர்ஜங் என்பவர் செய்த பேருதவியானது, சொல்லிமுடியாது. ஆங்கிலேயருக்குக் கொடுத்தவாக்குத்தத்தத்தை நிறைவேற்றுது போயிருப்பாராயின், இப்போது ஆங்கிலேய ராஜ்யம் இந்தியாவில் நிலை நிற்பது முடியாத காரியமாயிருக்கும்" என்பதேயாம்.

1859ம் வருஷத்தில் ராஜப்பிரதிநிதியான கன்னிங் பிரபு நிஜாமுக்கு, ஒரு கடிதம் எழுதினர். அதில் கலகத்தை அடக்க ஒத்தாசை செய்ததற்காக நிஜாமையும் அவர் மந்திரியையும் புகழ்ந்து, அவர்களுக்கு மாக்ஷிமை தங்கிய மகாராணியாரவர்களின் வந்தனத்தையும்தெரிவித்தார். அதற்கு அடுத்த வருஷத்தில் இந்தப் பிரபுவே, லக்ஷரூபாயையும், ஷாஹாபூர், ராய்ச்சூர், தாரவலியா என்னும் மாகாணங்களையும் நிஜாமுக்கு இனமாகக் கொடுத்ததன்றி, 50 லக்ஷ ரூபாய் கடனையும் வேண்டாமென்று தள்ளிக்கொடுத்துவிட்டார். மகாராணியாரோ, நிஜாமுக்கும் அவர் மந்திரிக்கும் கே. ஸி. எஸ். ஐ. பட்டம் கொடுத்தனர். ஸர்ஸாலர்ஜங், தான் செய்த காரியங்களுக்காக 30,000 ரூபாய் இந்தியா கவர்ன்மெண்டிலிருந்து இனமாகக்கொடுக்கப் பெற்றுக்கொண்டார்.

கலகம் முழுவதும் நன்றுயடங்கிய பின் மந்திரி அரசைச் சீர்திருத்த வெண்ணங்கொண்டார். ஆகவே, பிரபுக்களெல்லாரும் இவரைத் துவேஷிக்க வாரம்பித்தனர். நிஜாம், சக்தியற்றவனும், புத்தியில்லாதவனுய மிருந்தபடியால் தன்னுடைய பிரபுக்கள் சொல்வதை யெல்லாம்

கேட்கவாரம்பித்தனன். அவர்கள் மந்திரியை நீக்குவதற்குப்பலவித ஏற்பாடுகள் செய்தனர். நிஜாமிடத்திற்போய் ஆங்கிலேய ரெஸிடெண்டாகிய கர்னல் டேவிட்ஸனைக் கேட்டால், மந்திரியை நீக்கி விடச் சரியான வழிசொல்லுவார் என்றனர். கடைசியாக 1861ம் வருஷத்தில் அதிருப்தியடைந்த பிரபுக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, ஒரு ஆங்கிலேய ஸ்திரியை நல்ல ஆடை யாபரணங்களினாலலங்கரித்து, கர்னல் டேவிட்ஸனுடைய மனைவியென்று சொல்லி நிஜாமிடத்துக்கு அனுப்பினர். அவளும் போய், திவானைத் தள்ளிவிடவேணுமானால் தன் கணவனைக்கேட்டு அவருத்திரப்படி நடந்துகொள்ளும் பக்ஷத்தில் சவுக்கியமுண்டாகுமென்று சொல்ல, நிஜாமும் இவை முழுவதும் உண்மையெனவே நம்பி, அவளுக்கு வேண்டிய ஆடையாபரணங்கள் கொடுத்து மரியாதைகள் செய்து வீட்டுக்கு அனுப்பினான். மறுநாள் டேவிட்ஸனைக் கண்டு நிஜாம்தன் மனதிலுள்ளதைச் சொல்லவே, அவர் மிகவும் ஆச்சரியப்பட்டு, அப்படிச்செய்தால் நாட்டுக்கு அழிவு வந்துவிடுமாகையால் செய்யக்கூடாதென்று வேண்டிக்கொண்டார். ரெஸிடெண்டு வார்த்தையைக் கேட்டதும், ஏதோ சூது நடந்ததென்றறிந்த நிஜாம் சங்கதிகளை விசாரித்துத்தான் மோசம் போனதாய்த் தெரிந்து கொண்டனன். இவ்வாறு தங்கள் எண்ணம் வீணானதைக் கண்டு மனஞ் சோராமல் பிரபுக்களெல்லாரும் மந்திரியை எவ்வாறுவது கொன்றுவிட வாரம்பித்தார்கள். டேவிட்ஸன் வேறுஇடத்துக்கு மாற்றப்பட்டுப் போகு முன்னமே, ஸாலர்ஜங்குடன் கைகோர்த்து ராஜ்ய விஷயமாய்ப் பேசிக்கொண்டு நடக்கையில், ஒரு துஷ்டத் துருக்கன் இவ்விருவரையும் நோக்கிச் சுட்டான். அதிருஷ்டவசத்தால் குறிதப்பவும், இருவர்களும் பிராணபயமின்றித் தப்பினார்கள். இக்குறி தப்பினதைக்கண்ட துருக்கன் கத்தியை உருவிக்கொண்டு இவ்விருவரையும் நோக்கிக் கொல்லப் புறப்பட்டான். உடனே பக்கத்தி லிருந்தவர்களெல்லாம் அவன்

மேல் விழுந்து கத்திகளினுல் கண்டதுண்டங்களாக்கிவிட்டார்கள். இது சென்றதும், மகாராணியார் ஸாலர்ஜங்குக்கு "ஸர்" என்னும் பட்டமும் ஜி.ஸி.எஸ்.ஐ. என்னும் பட்டமும் கொடுத்து "நைட்" ஆக்கினர்.

1867ம் வருஷத்தில் மறுபடியும் நவாபுக்கும் மந்திரிக்கும் சிறிது மனவருத்த முண்டாகவே, பின்னவர் தனக்கு வேலை வேண்டாமென்று ராஜிநாமா கொடுத்து விட்டனர். உடனே ஜனங்களெல்லாரும் 'ராஜ்யம் என்னவாகுமோவென்று பயப்படத்தலைப்பட்டார்கள். தெய்வாதீனமாய் உடனே இருவருக்கு முள்ள மனவருத்தம் நீங்கவே, ஸர்ஸாலர்ஜங் மறுபடியும் மந்திரியாகித் தன் பூர்வ சக்தியுடனும் ராஜ்யபரிபாலனம் பண்ணுவாராயினர். 1868ம் வருஷத்தில் அவரைக்கொல்வதற்கு மறுபடியும் ஓர் கலசமுண்டாயிற்று. ஒருநாள் அரண்மனைக்குப் போய்க் கொண்டிருக்கும்போது ஒரு துருக்கன் தன்கையிலுள்ளதுப்பாக்கியினுல் அவரை நோக்கிச் சுட்டான். இந்தத்தடவையிலும் அவர் பிராணபயமின்றியே தப்பிப்பிழைத்தனர்.*

1869ம் வருஷம் பிப்ருவரி மீ 27உ நிஜாம் அப்ஸலுட்டௌலா இறந்தவுடன், அவனுடையமகன் நாலுவயதுக்குமுந்தையாயிருந்த மீர்மாபூப் ஆலிபட்டத்துக்குவந்தனன். இந்தியா கவர்னர்ஜனரலாயிருந்த மேயோ பிரபுவானவர்

---

* ஸர்ஸாலர்ஜங்கைக் கொல்ல நினைந்தவன் ரெக்கு ஆலி என்னும் ஓர் துருக்கன். தன் மனைவி விஷயமாக நேர்ந்த ஒரு வழக்கில் சாஜியானவர் அவனுக்கு விரோதமாய் நியாயமாய்த்தீர்ப்புச்செய்ததற்காக, ஸாலர்ஜங்கின் பேரில் கோபங்கொண்டு அவரைச்சுட்டான். அவன் தப்பிப் பிழைத்ததைக் கேட்டு ஜனங்களெல்லாரும் சந்தோஷித்தனர். அந்தக் கொலைகாரனும் சில நாள்களுக்கெல்லாம் மரணதண்டனையடைந்தான். நாட்டில் வழங்கும் நியாயங்களுக்கெல்லாம் மந்திரியே மூலகாரணமென வெண்ணி அவன் அவ்வாறு கொடுந்தொழில் புரிய நினைந்தான்.

ஸாலர்ஜங்கைச் சர்வாதிகாரியாக நியமிக்கவும், அவரும் தம்முடைய மேலான பதவியிலிருந்து கர்வமடையாமல் சீருடனும் சிறப்புடனும் ஆண்டு வந்தார்.

இவ்வாறு ஆண்டுவருகையில், ஸிகந்தராபாத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஆங்கிலேயப் படைகளின் போஷணைக்காக மந்திரியாகிய ஸிராஸல் முல்க் என்பவன் ஆங்கிலேயருக்கு 1853ம் வருஷத்தில் கொடுத்த செழிப்பாகிய பேரார் மாகாணங்களைத் திரும்பிப் பெற்றுக்கொள்ள ஸாலர்ஜங் எண்ணங்கொண்டு, தம்மாலானவரைக்கும் முயன்று பார்த்தார். நாடெங்கும் அமளியடங்கி விட்டபடியால் ஆங்கிலேயப்படை வேண்டுவது அவசியமில்லையென்றும், அவ்வாறு வேண்டாமற் போனால் பேரார் மாகாணங்களின் வரும்படியைக் கொண்டு ராஜ்யக்கடனைத் தீர்த்து விடவேணுமென்றும், ஒரு சமயம் ஆங்கிலேயப் படையிருக்கவேண்டியது அவசியமெனத்தோற்றினால் அரண்மனைக்கஜானாவிலிருந்து பணம் கொடுக்க உத்தரவாதம் கொடுக்கிறதாகவும் கடைசியாக பேரார் மாகாணங்களைத்திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்றும்ஸாலர்ஜங் கவர்னர் ஜனரலான நார்த்புரூக்பிரபுக்கு ஒரு கடிதம் எழுதினார். இந்தக் கடிதத்துக்குப்பதில் ஒன்றுமில்லாமற் போகவே, மறுபடியும் ஸாலர்ஜங் இதைப்பற்றிக் கேட்க வாரம்பித்தனர். கடைசியாக ஒரு பதில் கிடைத்தது. அதில், நிஜாம் மைனராயிருக்கிறபடியால் ராஜ்யபாரம் அவர் வகிக்கிற வரையில், பேரார் மாகாணங்களைப்பற்றி ஒன்றும் செய்ய முடியாதென்றும், இனிமேல் மந்திரி அடிக்கடி அதைப்பற்றி முயற்சி செய்ய வேண்டியதில்லையென்றும், எழுதியிருந்தது. இந்தப்பதிலைக் கண்டு மனந்தளருகிறவர் ஸாலர்ஜங் அல்ல; தகுந்த சமயம் வாய்க்கும் வரையில் பொறுமையோடு காத்திருந்தனர்.

1875ம் வருஷத்தில் மாக்ஷிமை தங்கிய வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்கு வந்தபோது, பம்பாயில் அவர் கப்ப

லில் நின்று மிறங்கியவுடன் வந்தன மளித்து நல்வரவு கூறுவதற்காக நிஜாம் அழைக்கப்பட்டிருந்தனர். நிஜாமுக்கு அப்போது தேக அசௌக்கியம் மேலிட்டிருந்தபடியால் தாம் போகாமல் தம்முடைய மந்திரியைப் போகும்படி செய்யவும், ஸாலர்ஜங் போய் இளவரசைக்கண்டு வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது பின்னவர் ஸாலர் ஜங்கை இங்கிலாந்துக்கு வந்து அங்கு நடக்கும் ராஜ்ய விஷயங்களை நேரிற்கண்டு நன்றாயறிந்து வரும்படி சொல்லினர். அதன்படியே 1876ஷு ஏப்ரல் மாதத்தில் இங்கிலாந்துக்குப் போய் அங்கே ஸதர்லண்டு பெருமானின் விருந்தாளியாக விருந்தனர். அங்கு சென்ற விடமெல்லாம் மிகுந்த சிறப்புடன் உபசரிக்கப்பட்டார். மகாராணியாரும் தம்முடன் உடனிருந்து உண்ணும்படியழைக்கவவ்வாறே போயினர். இவரை மரியாதை பண்ணுவதற்கு நான் நான் என்று எல்லாரும்முன்வந்தனர். ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடியார் இவருக்கு டி. ஸி. எல். (Doctor of Civil Laws) என்னும் பட்டம் கொடுத்தனர். ஒருநாள் அவர் இந்தியா ஸெகர்டேரியான ஸாலிஸ்பரி பிரபுவுடன் பேசிக் கொண்டிருக்கையில் பேரார் மாகாணங்களைப்பற்றிப்பிரஸ்தாபித்து, அதைப்பற்றி இந்தியாகவர்ன்மெண்டுக்கு மறுபடியும் எழுத அதிகாரம் பெற்றுக் கொண்டனர். ஸாலர்ஜங் இங்கிலாந்துக்குப்போனது இந்த செழிப்பான பேரார் மாகாணங்களைப் பெற்றுக் கொள்வதற்காகத்தானென்று ஊகிக்கிறார்கள். அவர் இங்கிலாந்துக்குப் போகையில் ரோமாபுரி பாரிஸ் முதலிய பட்டணங்களின் வழியாய்ச் சென்றார். அப்போது பாரிஸில் ஒரு படிக்கட்டினின்றும் கீழே விழுந்து தொடை முறிந்து அதினால் மிக வாதைப்பட்டுத் தம்மாயுள் முழுவதும் நொண்டியாகவேயிருந்தார். இந்தியாவுக்குத் திரும்பி வந்ததும்பேரார் விஷயமாக லிட்டன் பிரபுவுக்கு ஒருகடிதம் எழுதி அதினால் அவருடைய அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்

டனர். கடைசியாக 1903ம் வருஷத்தில் நிஜாமுக்கு ஜி. ஸி. பி. என்னும் பட்டம் கொடுத்து, பேரார் மாகாணங்களை ஆங்கிலேயர் சாசுவதமாய்ப் பெற்றுக் கொண்டுவிட்டனர்.

1877ம் வருஷத்தில் மகாராணியார் இந்தியா சக்கரவர்த்தினி யென்னும் பட்டம் பூண்டபோது, அதற்காக டில்லியில் நடந்த தர்பாருக்கு நிஜாமும் அவர் மந்திரியும் சென்றிருந்தனர். அங்கே நிஜாமுக்கு ஒரு அரசக்கொடியும் ஸாலர்ஜங்குக்கு 17 குண்டு மரியாதையும் கொடுக்கப் பட்டன. நிஜாம் ஆங்கிலேயத்தில் படித்துத்தேர்ந்தவோர் சாமர்த்தியசாலி. ஸாலர்ஜங்குடன் கூடவிருந்து ராஜ்ய பாரத்தை வகித்துவந்த ஷம்ஸஉம்ரா இறந்தவுடன், விட்டன் பிரபு அந்தஸ்தானத்துக்கு விகரஉம்ரா என்பவரை நியமித்தார். அவரும் நாலுவருஷங்களுக்கெல்லாமிறந்து போகவே, கவர்னர் ஜனரலான ரிப்பன் பிரபுஸாலர்ஜங்கையே சர்வாதிகாரியாக நியமித்தார். எல்லாரையு மிகுந்த அன்போடு பாதுகாத்து வந்த ஸாலர்ஜங் அதிக காலமிருக்கவில்லை. 1883ம் வரு பிப்ரவரி மீ 8 உ தம்முடைய நாற்பத்தொன்பதாவதுவயதில் வாந்திபேதியினலிறந்தார்.

இந்தியாவில் ராஜதந்திர நிபுணர்களில் இவர் ஒருவர் என்பதற்குச் சந்தேகமேயில்லை. சுற்றிலும் கலகமும் வஞ்சனையுமுள்ள காலத்திலும் இடத்திலும் பிறந்த இவருடைய மனம் மாசற்றதாய்ச் சுயநயம் கருதாது தன் எஜமானனுடைய நயத்தையே கருதி உழைத்தது மிகவும் பாராட்டற் பாலதேயாம்.

நிஜாமாகிய, மீர் மாபூப் ஆலிகானுக்கு ஸாலர்ஜங் இறந்தபோது வயது பதினெட்டு. நிஜாம் மேஜராகும் காலம் வரையில் ஒரு சபையார் (Council of Regency) ராஜ்ய பாரம் செய்துவருவதென இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்தனர். ஸர் ஸாலர்ஜங்கின் குமாரனாகிய ஸாலர் ஜங் என்பவனை இந்தச்சபைக்குக்காரியதரிசியாக நியமித்

தனர். 1884ஆ பிப்ரவரிமீ 5உ ரிப்பன் பிரபுவே நேராக ஹைதராபாத்துக்குச் சென்று நிஜாமுக்கு முறைப்படி வயதுவந்தபடியினால் முடிசூட்டினர். சூட்டியதும் ராஜப்பிரதிநிதி நிஜாமுக்கு வைரக்கற்களிழைத்த ஒரு ஈட்டியும், பிரபுக்களான ஸாலர்ஜங், பேஷ்கார் நரேந்திர பிரஸாத், குர்ஷட்ஜா என்பவர்களுக்கு விலையுயர்ந்த கத்திகளும் இனமாகக் கொடுத்தனர்.

நிஜாம் பட்டத்துக்கு வந்ததும், ஸர் ஸாலர்ஜங்கின் குமாரரான ஸாலர்ஜங்கை முதல்மந்திரியாக்கினர். ஆனால் பேஷ்கார் நரேந்திர பிரசாதுக்கும் ஸாலர்ஜங்குக்கும் ஒரு விதத்தில் மனஸ்தாப முண்டாகவே, ஸாலர்ஜங் திவான் வேலையை விட்டு நீங்கிவிட்டார். கொஞ்ச நாள்களுக்கெல்லாம் நிஜாம் ஸாலர்ஜங்கையே அந்தப்பெரிய பதவியில் வைத்தார். வைத்தும் ஸாலர்ஜங்குக்குத் துன்பங்கள் பலவுண்டாகத் தலைப்பட்டன. இந்தத் துன்பங்களெல்லாம் கவர்னர் ஜனரலுக்கு எட்டவே, அவர் தீர விசாரித்து, கர்னல் மார்ஷல் என்பவரை நிஜாமுக்கு ஓர் முக்கிய அமைச்சராய் ஏற்படுத்தினர். ஸாலர்ஜங் வேலையை ராஜிநாமா கொடுக்க, நவாப் குஷிர்ஜெட்ளலா என்பவர் திவானாக வந்து சேர்ந்தார். ராஜ்யத்துக்கு முதலாவது ஸாலர்ஜங் செய்த பேருதவிக்காக இரண்டாவது ஸாலர்ஜங் திவான் வேலையை விட்டு நீங்கும்போது அவர் பட்டிருந்த 20 லக்ஷ ரூபாய்கடனையும் அரண்மனைக்கஜானாவிலிருந்து நிஜாம் கொடுத்துத் தீர்த்து விட்டதுமன்றி, மாஸம் ஒன்றுக்கு சுமார் 3,750 ரூபாய் உபகாரச் சம்பளமாக இரண்டாவது ஸாலர்ஜங்குக்குக்கொடுத்து காப்பாற்றி வந்தார்.

1889ம் வருஷத்தில் நிஜாம் மீர்மாபூப் ஆலிகானுக்கு ஜி. ஸி. எஸ். ஐ. பட்டம் கொடுத்தார்கள். அவருக்கு இருபத்தோரு குண்டு மரியாதையும், அவர் தேசத்துக் குடிகளின் மேல் மரணதண்டனை விதிக்க அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

உ

# கலைமகள் பஞ்சகம்.

இவை ஸ்ரஸ்வதி பூஜை தினத்தன்று இயற்றியவை.

### கட்டளைக்கலித்துறை.

* திருவேறு தெள்ளியர் ஆதலும் வேறெனும் தேவர்மொழிக்
குருவேறு கொண்ட உயர்ஞான மூர்த்தி இளையவளென்
றிருவேறு மாதர் இலக்கா யினர்;எவ் வமரருளும்
ஒருவேறு வமைஇ லாதுயர்ந் தாள்புகழ் ஓதுவனே.

பொய்யாத உள்ளமும் நாவும் ஒழுக்கும் புலமையினோர்
கையாத சீரும் கருதுநெஞ் சே!இவை காசினியிற்
செய்யாள் தருமெனின் மெய்த்திரு என்றவள் சேவடிகள்
எய்யா திறைஞ்சுதி, எத்துதி அன்னாள் இசையினையே.

உடுக்கக் குறைத்துணி உண்ணமு தின்றி உழல்பொழுதும்
கொடுக்கக் குறையாத மெய்ப்பொருள் விட்டொரு குன்றியுமே
எடுக்கக் குறைதரும் பொய்ப்பொருள் எற்கும் இழிவினரை
அடுக்கக், குறைநிறைத் தாட்கொள்ள நேராள் அறிவணங்கே.

அஞ்சே வயதுனக் காட்பட்ட நாள்;அடி யாற்கொருநீ
தஞ்சே அதுமுதல்; தாயினும் நீயே தய்வுடையோய்;
உஞ்சே உலகு கடைத்தேற ஞான மழைபொழியும்
மஞ்சே! படிக,என் பேதைமை என்னும் மலைமிசையே.

† 'தக்கத காதன இன்னவென் றுய்ந்துணர் தன்மையிலா
மக்களு மேவிலங் காவர் ; மனுநெறி வாய்ந்தவிலங்
கொக்குவ தேவரை'; என்றே கவிஞர் உரைத்தமையால்,
எற்குனை யின்றிப் புகலுமுண் டோசொல், இசைமகளே!

அ. மாதவையர்.

---

* திருக்குறள்—௩௭௪.

† கம்பராமாயணம்—வாலிவதைப்படலம்—௧௧௨.

# கிருஸ்துபோன்ற ஒழுக்க முறை நூல்.

## 18-வது அதிகாரம்.

### பூர்வீக மஹான்களின் ஒழுக்க முறை.

ஞானிகளால் நடத்திக்காட்டிய தபசையும், சீலத்தையும், கவனித்துப்பாரு. அது எவ்வளவு கம்பீரமாகப் பிரகாசிக்கிறது! அது ஜோதிக்கொடிபோல் விளங்குகிறது! அது எங்கே! நம்முடைய ஒழுக்கமெங்கே! நம்முடைய வாழ்நாள் முறைக்கும், அவர்களுடைய ஒழுக்க முறைக்கும் எவ்வளவோ தூரம்!

கிருஸ்துவின் நண்பர்களான ஞானிகள் பசியால் வருந்தியும், தாகத்தால் தபித்தும், குளிரால் வருந்தியும், உண்ண அந்நமும் உடுக்க ஆடையும் இன்றி, இறைவன் வழிப்பட்டு நடந்திருக்கிறார்கள். கண்கொட்டா விழிப்பில் கழிப்பது எவ்வளவு நேரமோ? உபவாசமாய் எத்தனை நாளோ! அவர் தியானம் என்ன என்பேன்! அவர் மனோபாவங்களின் அழகை என்ன என்று சொல்வேன்! பிறரால் நிந்தனை எத்தனையோ! பலரால் துன்பம் எவ்வளவோ! இவை எல்லாம் உன்னிப்பார். எவ்வளவு துன்பம் அவர்கள் அனுபவித்தார்கள்! அந்தோ! என்ன கொடுமை! என்ன கொடுமைக்கு அவர்கள் உள்ளாயினார்கள்! கிருஸ்து வழிப்பட்டு நடக்க முயன்ற உபதேசிகள் (apostles) என்ன: அதற்காக தம்முயிரையே கொடுத்தவர்கள் (martyrs) என்ன; துறவித்தன்மை புரிந்த சந்நியாசினிகள் என்ன; தம் குற்றங்களை நினைத்துப் பாவிகள் (confessors) என உருகினார்கள் என்ன; இத்தன்மையோர்—எத்தனை பெயர்கள் என யான் சொல்லுவேன்! இவ்வுலகில் இருக்கும் அளவில், தம்மை முற்றும் வெறுத்து இறைவனிடம் தம்மை அடைக்கலமாக்கிச்செய்தவர்கள் இவர்களென அறிகிறோம்.

இத்தகைய ஞானிகள் நோன்பு பூண்டு, தங்களை முற்றும் மறந்து, வனாந்தரங்களில் எவ்விதம் காலம் கழித்தனர் எனத்தெரிந்து கொள்ளுற ? சோதனைகளுக்குள்ளாகி கழித்த நாள் எத்தனையோ! விரதம் பூண்டு இருந்த நாள் எத்தனையோ! பகைஞரால் துன்பம் அடைந்த நாள் எத்தனையோ! அன்புற்று அகம் குழைந்து கடவுளைப் போற்றியே கழித்த நாள் எத்தனையோ! அவர்கள் கொண்ட தீவர நோன்பின் கொடுமை என்ன! அவர் அனுஷ்டித்த மார்க்கத்தில் அவர் அன்பு என்ன! ஊக்கம்என்ன! தம்மை அடக்கித்தாம் உபசாந்தம் பெறுமாறு தம்மனதுடனே அவர்செய்த போராட்டம்என்ன! கடவுள் வழிபட்டு அவர் அடைந்த மனத்தூய்மை என்ன! மனநேர்மை என்ன!

பகலில் உழைப்பு, இரவில் சிறுபொழுதுவரை விழிப்பு, உழைப்பிலும் இறைவனை மனசில் உபாசனை செய்தல் விடார்: இவ்வண்ணம் அவர்கள் வீழ்நாள் படாமை நன்று ஆற்றினர்கள். ஈசன் தியானத்தில் சென்ற காலம் விறைவாய்ச் சென்றது; தியானபரர்களாய், பசியைமறந்தார்கள்; செல்வம், கௌரவம், பெயர், சினேகர், உற்றார் இவை வேண்டினரில்லை. அவர்களுக்கு வேண்டுவன இவ்வுலகத்தில் ஒன்றுமில்லை. சரீரயாத்திரைக்கு வேண்டுவன உண்ண வேணுமே என நோவார்கள். உலக சம்பத்தில் அவர்கள் ஏழை: தெய்வ சம்பத்தில் அவர்கள் வலியர்கள். அன்பும் அருளும் முற்றுமுள்ளார். மனச்சந்துஷ்டியும், இறைவன் அருளும் பெற்றவர்கள். உலகத்திற்கு அந்நியர்; கடவுளுக்கு அயலார்: அவருக்கு நெருங்கிய தோழர்: தம்மை அற்பராய் நினைந்தார்: உலகரால் நிந்திக்கப்பெற்றார்; இறைவனால் மதிக்கப்பெற்றார்; அவர் பண்பும் பணிவும் அமைந்தாராய் ஒழுகி வந்தார்; பொருமையை அணிந்தனர்: எல்லாரிடமும் அன்புபற்றி நடந்தனர்: தினந்தோறும் மேன்பாட்டை விருத்திசெய்து வந்தனர்: மெய்யுணர்வு அடைந்தனர்; ஈசன் அருள் அதிகரித்தே பெற்றனர்; நிவிர்த்தி வழியின் உதாரணமாக அவர் நிகழ்ந்தனர்: ஆகவே, அசுரபாவங்கள் நம்மை அணுகாமல் ஞானிகள் வழிபற்றி நடைபெறுவோமாக.

ஆதியில் ஏற்பட்ட காலத்தில் இருந்த இச்சந்நியாசமார்க்கத்தைப் பாருங்கள். அதன் தீவர வைராக்கியத்தின் நிலைமை என்ன! அச்சந்நியாசிகளின் கம்பீரமான பிரார்த்தனைகள் என்ன! ஒருவருக்கு ஒருவர் போட்டி போட்டார்ப்போலும் அவர்களின் தூய ஒழுக்கம் இருந்தது, அவர்கள் விரதம் எவ்வளவு கண்டிப்பாயும்

பயிர்போல் மேன்மேலும் விருத்தியடைந்தே வந்தது; உலகத்தில் அவர்களுக்கு எங்கே போனாலும் எவ்வளவு கௌரவமும், மரியாதையும் நடந்து வந்தது. பூர்வீகர்களால் ஏற்படுத்திய ஒழுக்க முறைகள்பற்றி அவர்கள் நடந்துவந்தார்கள். நில்லா உலகத்தை விட்டு எவ்வளவு தீரத்தன்மையாக, அவர்கள் போராடிக்கொண்டு வந்தார்கள் என நாம் அறிகிறோம்.

இக்காலத்திலோ—சந்நியாசத்தின் வெளிமுறை பற்றிவழுவாமல் எடுத்த ஆசிரமதர்மத்தை வெளி விதிப்படியாவது நடைபெறுவாராகில்—அவரே பெரியவராக விளங்குகிறார்—அந்தோ, அந்த ஆசிரமத்தின் உயர்வு எவ்வளவு தாழ்ந்துவிட்டது! அது நம்முடைய சிரத்தைக் குறைவால் உண்டாயிருக்கிறது. ஆதியுயர்வினின்று எவ்வளவு தூரம் நழுவியிருக்கின்றோம்! சோம்பலினாலும், களைப்பினாலும், உலகவாழ்வை துறக்கப்பார்க்கின்றோம்; எத்தனையோ மஹான்களின் சரிதத்தைக்கேட்டியிருக்கின்ற நீங்கள்—இந்த உயர்வான ஆசிரமத்தின் மஹிமையை மறவாமல் மென்மேலும் அது அபிவிருத்தி ஆகும் வண்ணம் நடைபெறுவீராக.

## 19-வது அதிகாரம்.

### துறவோர் சங்கத்தில் ஒருவன் இருக்குமுறை.

துறவிகள் ஆசிரமத்தில் உள்ள ஒரு நல்ல மனிதனிடம், எல்லா நற்குணங்களும் அதிகமாக விளங்கவேண்டும். வெளிவேஷத்திற்கும் மனோபாவத்திற்கும் நேர்மை இருக்கவேண்டும். அன்றியும் வெளிவேஷத்தால் நாம் எதிர்பார்க்கிறதைவிட மனோ பாவமானது அதிஉயர்வாக இருத்தல்வேண்டும். நம்முள்ளத்தைப்பார்க்கின்றவர் கடவுள். அவர்நம்மால் வணங்கப்பெற்றவர். தேவர்கள்போன்று நாமும் அவர் சந்நிதானத்தில், பரிசுத்தர்களாக ஒழுகவேண்டும்.

ஒவ்வொரு நாளும் நம்முடைய எண்ணம் களிம்புபற்றாமல் புதிதாயிருக்கும்படி கண்ணோக்காய் இருத்தல்வேண்டும்.

அது பெறுமாறு, ஊக்கமுடையராக இருத்தல்வேண்டும். இன்று தான் ஞானமுறை நாம் கைக்கொண்ட ரீதியாக அகமுருகி "ஜகதீசா, இந்த எண்ணம் நிறைவேறுமாறு அருள் புரிவாய். நான் பூண்ட விரதம் சரியாய் நடைபெறுமாறு அருள்வாய். யான் இது, வரை செய்தது ஒன்றுமில்லை" எனக் கடவுளை அன்புடன் வணங்கு. நம்முடைய கருத்து எவ்விதமோ அவ்விதமே நம்முடைய அபிவிருத்தியும் நடைபெறுகிறது. கருத்து நிறைவேறும் வண்ணம் வேண்

டின், கருமத்தில் கவனமாய் இரு.

தூணிவான முறையைத்தமக்கு உற்றது என தீர்மானிக்கிற தீரனே, தவறுவானுகில், மனச்சோர்வுள்ள சாமான்னியன் தவறுவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது. நாம் ஏற்படுத்தும் தீர்மானங்களுக்கு இடையூறுகள் பலவாம். நாம் கொண்டதை ஒன்று விட்டால், அதனுல்நஷ்டம் சம்பவித்தேதீரும். நல்லார், தங்கருத்துகளைக் கடவுள்அருளால் நிறைவேற்றுகிறுர்கள். தம்மால் அன்றுஎன அவர்கள் அறிவார்கள். அவர்கள்கர்மங்களை எல்லாம், கடவுள்மேல் பாரத்தையும் நன்னம்பிக்கையும் வைத்து--அவர்கள் தொடங்குவார்கள்.

நாம் ஒன்று எண்ண, தெய்வம் வேருக மாற்றிவிடும். இரக்கத்திலைாவது, பிறருக்கு உபகரிக்கவேண்டுமென்றுவது, நம்முடைய விரதங்களில் ஒன்றையேனும் செய்யாமல் விட்டால் வேறு ஒரு சமயத்தில் அக்குற்றத்தை நேர்மை செய்துகொள்ளல் கூடும். சோப்பலினுலாவது, அசிரத்தையினுலாவது, நம்முடைய விரதம் ஒன்றைச்செய்யாமல் விட்டோமாகில் அது குற்றயாம்; அதன் தீய பயனை அனுபவித்துத் தீரவேண்டும். அதைத்தவிர்க்க ஒண்ணுது.

நம்முயற்சி எவ்வாருக இருப்பினும் நம்முடைய விருதங்களில் அநேகத்தை நடத்தாமல் தவறிப்போகவுங் கூடும். ஆகையால் இன்னபடி செய்வோம் என்று உறுதியான தீர்மானம் செய்துகொளல் வேண்டும். முக்கியமாக நம்மைத்தவறுக்கு உள்ளாக்கும், இடையூறுகள் நம்மை மேற்கொள்ளாதபடி உறுதியான தீர்மானம் செய்யக் கடவோம்.

நம்முடைய ஒழுக்கமும் மனேபாவமும், நேர்மையாக இருக்கிறதாவெனக்கவனித்துப்பார்க்கவேண்டும்; அவ்வண்ணம் நிகழுமாறு செய்யவேண்டும், நாம் எடுத்திருக்கும் நிவிருத்தித் துறைக்கு அது முக்கியமாம்.

இவ்விஷயத்தில் எப்போதும் கவனம் செலுத்த இயலாவிடினும், ஒரு ஒரு சமயத்திலாவது, அவ்விதம் செய்யமுடியும். ஒரு நாளில் ஒரு முறை, காலையிலாவது மாலையிலாவது, அவ்விதம் செய்யவேண்டும். ஒவ்வொரு நாளும் சாயங்காலம் அன்று முழுதும் நீ செய்த காரியங்களைப்பரிசீலனை செய்துபார். நீஎது வசனித்தாய் என நினைத்துப்பார். அயலானுக்கு விரோதமாகவும், ஈசுவர சம்மதமில்லாமலும், ஒரு முறைக்கு மேற்பட்டே பாவம் செய்திருப்பாய்: உலகமாயையின் வலைக்குட்படாமல் எச்சரிப்பாய் இரு. முதலில் பெருந்தீனியை தவிர்: இது அடங்க, மற்றைய ஆசா பாச

ங்களும் ஒடுங்கும்; அவைகளை இலகுவாய் வசப்படுத்தல் கூடும். முற்றும் சோம்பலாக இராதே. வாசி, எழுது, தவஞ்செய், அல்லது ஒன்றை நினைத்துப்பார்; அல்லது, பிறருக்குபயன்படும் யாதேனும் கருமம்செய்; சரீரத்தை வசப்படுத்தும் தபசு முறையில் கவனத்துடன் முயலு.

எல்லாருக்கும் பொதுவாய் ஏற்படாத தபசு முறையை, பகிரங்கமாக செய்யப்படாது. அது உனக்கு மாத்திரம் ஏற்பட்ட முறை; அதை உன்னுடைய தபசு அறையில் செய்யவேண்டும்; அது குப்தமாகச்செய்யத்தக்கது; பொதுப்படச் செய்யவேண்டிய தபசு காரியங்களை, மற்றையரோடு செய்யாமல், நீ ஒதுங்காதே; தன்பாடு உண்டு என்று விலகாதே; மற்றையரோடு நீ செய்யவேண்டிய தபசுக்கிருத்தியங்களை பூர்ணமாயும், பயபக்தியோடும், செய்துமுடி; அதன் மேல், உனக்கு சாவகாசம் இருப்பின், ஏகாந்தத்தை நாடு; உன் மனசை அந்தர்முகப்படுத்து; உனக்கென்று உரிய தவமுறை பற்றி நோக்கு.

எல்லாரும் ஒரே மாதிரியான தவமுறை அனுஷ்டிக்க இயலா; ஒன்று ஒருவருக்குக் கூடும், மற்றொன்று வேறு ஒருவருக்குக் கூடும். மேலும், காலங்களுக்குத்தக்கபடி தபசு முறைகளும் வேறுபடும். நோம்புத் தினங்களில், சில தபசு முறை செய்ய, ரம்மியமாக இருக்கும்; சாதாரண தினங்களில், சில தப முறை செய்யப்பிரியமாக இருக்கும்; சில, சோதனையான கஷ்டகாலங்களில், செய்ய நலமாம்; பின்னும்சில, சாந்தமாகவும் க்ஷேமமாக இருக்கும் காலங்களில், செய்தல் ருசியாம்: மனசு இருண்டு மயங்கியிருக்கும்போது சில விஷயங்களை நினைக்க நாம் பிரியப்படுகிறோம்; நாம் ஈசுவரனிடம் மனசுபற்றி சந்துஷ்டியாயிருக்கும்போது சில விஷயங்களை நினைக்க உத்ஸாகம் உண்டாகிறது.

ஆனால் முக்கிய திருநாட்களில், நன்மையான ஒவ்வொரு விரதத்தையும் திரும்ப அனுஷ்டிக்கவேண்டும்; அதிக ஊக்கத்துடனே மஹான்களுடைய அனுக்கிரகத்தை அடையப்பிரார்த்திக்கவேண்டும்; ஒவ்வொரு விரததினமும், அந்த விரதந்தான் முக்கியமென்று நினைத்தும், அது தான் நாம் கடைசியில் உலகத்தில் செய்யப்போகிற விரதம் என்றும், அடுத்த தினம் இரோமெனப்பாவித்து, அவ்விரதத்தை சிரத்தையுடன் செய்யத்துணி; அடுத்த க்ஷணத்தில், இறைவன் சன்னிதியில் நிற்போமென நம்பி, நீ செய்யும் ஆராதனை காலங்களில், அதிக சிரத்தை பக்தியுடனே, நன்மையான மார்க்

கத்தை அனுஷ்டிக்கத்தீர்மானம் கொண்டும், செய்யும் ஒவ்வொரு காரியம், நேர்வழி பிறழாவண்ணம், கவனமாய் இருக்க முயல்வாய். நீ எண்ணியபடி அடுத்த க்ஷணத்திலேயே, ஈசுவர சன்னிதானம் கிட்டாமல், நாளடைவில் தான் சித்திக்குமென்று இருப்பினும், அதைப்பற்றிச்சோர்வு அடையாமல், அந்த உயர்ந்த பதவிக்கு, நீ இன்னும் ஆயத்தமாகவில்லை என நினைந்தும், உற்ற காலத்தில் மனதின் கண்ணுள்ள அஞ்ஞான இருள் நீங்கிவிடுமென்றும் நிச்சயம் கொள்ளு. அத்தருணத்தை நீஅடையும்படியாக ஆயத்தம் செய்துகொள்ளு. லூக் என்னும் ஞானியார் சொல்லுகிறதாவது, "கடைமுறையில், மரண காலத்தில், கடவுள் பார்க்கும் சமயத்தில் ஜாக்கிரதையாயுள்ள பக்தனே அதிர்ஷ்டசாலி. ஈசன் அருளுக்குப் பாத்திரவானவன. அவருடைய அதிகாரபுருஷர்களில் ஒருவனாக ஏற்படுவான்."

## 20-ம் அதிகாரம்.

### ஏகாந்தமும் மௌனமும்.

ஏகாந்தமாக இருக்க சாவகாசத்தைத்தேடு. கடவுளின் காருண்ணியம்பற்றி நினை. வீண் விசாரணைகளைத் தவிர். மனசுக்கு வேலை கொடுக்கும் விஷயங்களை விலக்கு. மனசை உருக்கி இளகச் செய்யும் விஷயங்களில் செலுத்து. உன் பாபங்களைப்பற்றிப்பரிதாபப்படும்படி செய்யும் படிப்பினைகளை நாடு.

வீண் பேச்சையும், சோம்பலாகத் திரிதலையும் பயனில் சொற்கேட்பதையும், விரைவில் தவிர். அதனால் நன்மை பயக்கும். விஷயத்தில் மனசு நாடாச்சாவகாசம் ஏற்படும். ஆழ்ந்த ஞானிகள் கூடியவரை மனித சகவாசத்தினால் ஏற்படும் ஆறுதலை ஒழித்து ஏகாந்தத்தில் தம்முள்ளே ஈசனை நாட முயன்றார்கள்.

அடியில் வருமாறு, ஸெனிகா என்ற ஞானியார் சொல்லுகிறார்:—"ஜனப்பழக்கம் அதிகப்பட அதிகப்பட, மனுஷத் தன்மையில் குறைவுற்றேன் குறைவுற்றேன்." இந்த அனுபவம் வீண்பேச்சில் காலங்கழிக்கிறதினால் பெறுவோம். அதிகமாக பேசுவதலினும் வாயடக்கி மௌனம் சாதித்தல் நன்று. வெளியேறியடக்க முயல்வதினும் அகமிருந்து சும்மாயிருத்தலே நலமாம். உள்ளடங்கி ஞான வழியில் நடைபெறக் கருதுகிறவன் ஏசுநாதர் செய்தவண்ணம் விருதாக் கூட்டத்தினின்று பெயர்வான்

## 2

உள்ளடங்கி, வாழ்நாள் பிறர் அறியாமல் கழிக்க விரும்புபவன் அன்றோ பயமின்றி வெளியேறிப்போக வல்லான் ஆவான்! நாவடக்கி மௌனம் சாதிக்கப்பிரியமுள்ளவன் அன்றோ பயமின்றிப்பேச வல்லானவன்! கீழானபதவி தமக்குப்போதுமென்று விரும்புபவன் அன்றோ, அதிகாரம் வகிக்க வல்லான் ஆவன்! பண்பும் பணிவும் உணர்ந்தான் அன்றோ இடையூறின்றிச்செல்வாக்கு அமைந்த பதவிகள் பெறவல்லான் ஆவான்! தன் கண்மனச்சாக்ஷி நேர்மைபற்றியவனன்றோ செல்வம் எய்து செழுமையிலிருக்கும் நாளில் நேர்மை குன்றுமல் நிற்க வல்லான் ஆவன்! இதற்குக்காரணம் என்னவென்று அறி. ஞானிகளின் இவ்வல்லமைக்கு அவர்கள் ஈசுவரனிடம் பாராட்டி வந்த பயபக்தியே ஆதாரமாம். தாங்கள் ஒழுக்கத்திலும், குணத்திலும், மனோபாவத்திலும், மாகாத்மியம் பெற்றிருக்கிறோமென்று நினையாமல், எப்போதும் கவலையுள்ளவர்களாகவும் எச்சரிப்புள்ளவர்களாகவும் வணக்கமுள்ளவர்களாகவும் இருப்பார்கள். ஆகையினால் அவர்கள் பயமின்றி இருப்பார்கள். தீயவர்களோவென்றால், செருக்குற்றவர்களாய் நான் என்ற மமதை யேற்பட்டு, ஏமாந்திருந்து பயமில்லையென நினைத்துக்கடைமுறையில் மயங்கிக் கெடுவார்கள்.

## 3

என் நண்பனே! கவனமாய்க்கேள். எத்துணைய பக்தியுடையரேனும், எத்தகையதுறவியரேனும், இப்பிரபஞ்ச வாழ்க்கையில்பயமில்லையென இருமாப்புக்கொள்ளவொண்ணாது. ஏனெனில், பிறரால் நன்குமதிக்கப்பெற்ற அறிஞரே, தமக்குப்பயமில்லையென்று அதிக நம்பிக்கை கொண்டகாரணத்தினால் ஏனையர்களைவிட அதிக அபாயத்திற்கும் ஆளாகுகின்றார்கள். ஆகவே, துன்பமும் துயரமும் பற்றிய சோதனைகள் இல்லாமல் சாதாரண ஜனங்களுக்கு வாழ்நாள் செல்லுதல் நலமன்றாம். அடிக்கடி சோதனையான துன்பங்கள், சம்பவித்தல் நலமாம். அதனால் மனிதர்கள் பயமற்ற நிலையிலிருக்கிறோமென்று நினையார். அதனால் மனச்செருக்குற்றிரார். அதனால் மனச்சாக்ஷியின் ஹிதமொழிகளை அலக்ஷியம் செய்யார்.

நிமிஷம் நிமிஷம் தோன்றி மறையும் உலகவாழ்வின் சந்தோஷங்களை நாடாமலும், உலக விஷயங்களில் தலைக்கொடுக்காமலும், ஒருவன் இருப்பானாகில் அவன் உள்ளம் எவ்வளவு நேர்மையா

யிருக்கும்: உலக சம்பந்தமான விருதாக்கவலைகளை முற்றும் களைந்து விலக்கியும், மனசைக் கடவுள் வழிச்செலுத்தியும், வீடுபெறவேண்டுமென்ற ஒரே நோக்காய், உடல் பொருள் ஆவி மூன்றையும் இறைவனிடம் ஒப்புவித்து, அவரே அடைக்கலமென்று, மெய்யுணர்ச்சியுள்ளவனுடைய சாந்த நிலையே நிலை. அதன் உயர்வு இத்தன்மையதென்று சொல்லமுடியாது.

தன் பாபத்தை நொந்து அனவரதமும் அனுதாபப்படான் ஒருவன் ஈசன் அருளுக்கு அருகனல்லன். உள்ளம் நெகிழ்ந்து நெஞ்சம் புண்ணாகி அன்பினால் உருகவேண்டுமேயானால் உலக ஆரவாரத்தினின்று பிழைத்துப் பெயர்மின். ஏகாந்தத்தை நாடுமின். "தலையணையில் (துயிலுமுன்) பாபத்துக்கு அனுதாபப்படு" என்றது, மூத்தோர் சொல். அவ்வார்த்தையமிர்தமென்று அறி.

உன்னுடைய ஏகாந்த அறையில் நீ வெளியில் இழந்ததெல்லாம் கைப்பற்றுவாய். ஏகாந்த அறையை நாட நாட, அது ருசிதட்டும். அதை ஏகதேசம் நாடில் வெறுப்பாயிருக்கும். ஈசனை நாடிச் செல்ல நீ ஆரம்பிக்கும் கால் ஏகாந்த அறையில் உட்புகுந்து அதிலேயே யிருக்கப்பழகுவாயாகில், சீக்கிரம் அது பிரியமுள்ள நண்பனாய் ஆகும். அது உன் மனசுக்கு ஹிதமான ஒழிவுஸ்தானமாகும். ஏகாந்தமான சாந்த நிலையில் தான், ஞானவழியின் இரகசியங்கள் புலப்பட்டு அன்போடுஉறுகி அகங்குழைந்துஅனுதாபக்கண்ணீர்கள் இரவுஇரவாய் ஆறுகப்பெருகி அதனால்மனத்தூய்மைபெற்று இறைவனடியணுக வழியதாகும். பிரபஞ்சப் பரபரப்பினின்று எவ்வளவுக்கெவ்வளவு மனசுவிலகி உள்ளடங்குமோ, அவ்வளவுக்கவ்வளவு ஈசனடிஅணுகுவதாகும். உற்றாரையும் உறவினரையும் விலகவிலகத் தேவனும் அவர் கணங்களும் உன்னை விரைந்து அடைவதாகும்.

4

பிறர் அறியாமல் உள்ளடங்கி வாழ்நாள் கழித்தல் நலமாம். அதனால் தான்உள்நோக்கி மெய்யுணர்வுபெறுகிறதற்கு இடமுண்டு. சித்திகள் செய்கிறது நலமன்றாம். அதனால் தான் மெய்யுணர்வு பெறத் தடையுண்டாம். ஏகதேசம் வெளிவருதலும், ஜனசங்கத்தைக் கண்டால் விலகி விடுதலும், மனுஷ்ய முகத்தைப் பாராமல் இருக்க விரும்புதலும், துறவி விருதம் பூண்டவனிடத்தில் மெச்சப்பாலது.

ஒருவன் தனக்கு வேண்டாததை என் பார்க்கவேணும். உலகம் சென்றுகொண்டிருக்கின்றது. அதன் ஆசாபாசங்களும் அத

னுடனே நடைபெறுகின்றன. விஷயாதிகளில் நமக்கிருக்கும் பற்றுகள் உலகத்திற்குள் இழுக்கின்றன. அவ்வண்ணம் கொஞ்சகாலம் கழித்துத்திரும்புகையில் மன நேர்மை குன்றி உள்ளம் தளர்ந்து, நெஞ்சம் தடுமாறி இருக்கின்ற நிலை தான் பிராப்தம் ஆகிறது.

உத்ஸாகத்துடன் வெளியேறுகிறோம்; வியசனத்துடன் திரும்புகிறோம். இரவில் அகாலம் வரை மகிழ்ச்சியான விழிப்பு; காலையில் இருண்ட மனசே. ஆகவே, ஒவ்வொரு விஷய சுகமும் முதலில் முகமலர்ச்சியோடே கிட்டும்; கடைமுறையில் மனசைப்புண்படுத்தி நோகச்செய்யும்.

உன் ஏகாந்த அறைக்குள் நீ காணுதது புறம்பாய் என்னயிருக்கிறது? அங்கே பூலோகத்தையும் சொர்க்க லோகத்தையும் பார்க்கலாம். உன் வாழ்நாளுக்கு ஆஸ்பதமாயுள்ள யாவையும் உன்னுள்ளே பார்க்கலாம். எல்லா விஷயங்களுக்கும் வித்து மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் இருக்கின்றது.

நீ பார்க்கிறவை யாதேனும் நீடித்து நிலை நிற்கத்தக்கதா? உலகத்தில் எந்த வஸ்துவிலுலேயாவது உனக்கு திர்ப்தியுண்டாகுமென்று நினைக்கிருயா? அது வராது, அது பெருகிய மயக்கம். உலக வஸ்துக்களை உள்ளபடி உணர்வாயாகில், அவை எல்லாம் ஆதாரமில்லாத பாழான தோற்றமாய் முடியும்.

அதனுல், உன் மனக்கண்ணை க்கடவுளிடம் செலுத்து. செய்த பாவங்களுக்கும் விட்ட நற்கருமங்களுக்கும், அனுதாபப்பட்டுக் கடவுளைச் சரணமடை. உலக விஷயங்களை உலகத்தார்களிடம் விடு. இறைவனிடம் சேர உற்ற உபதேசங்களை மநநம்பண்ணு. ஏகாந்தமாயிரு. இந்திரிய வாயல்களை அடக்கு. உனக்குப்பிரியமான மூர்த்தியின்மேல் மனசைவைத்து, "ஏசுநாதா? என் உடலிடம் கொள்ளாய்" என வருந்தி அழை.

ஆத்மநாதன்.



# திரிபுர தகனம்.

தாரகன் புதல்வர்களாகிய வித்யுன்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்ற மூவரும் தங்கள் முன்னோர்கட்குச் சுரர்களால் உண்டான துன்பைத் தொலைத்து அவர்களை வென்று ஆக்கமுறக் கருதி,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்."

என்றவாறு பிரமனை நோக்கி அருந்தவம் புரிந்தனர். பல நாட்களுக்குப் பின் பிரமதேவன் அவர்களது அருந்தவத்திறனை வியந்து முன்னின்று, வேண்டும் வரம் தருவதாக வாக்களித்தனர். அதுகண்டு அவ்வசுரர்கள் "பெருமானே! எங்களுக்குப் பொன், வெள்ளி, இரும்புகளான் இயன்றனவும் அநுபவ பாக்கியங்கள் அனைத்தும் நிரம்பப் பெற்றனவும் எங்களிஷ்டப்படி எங்கு வேண்டுமென்றாலும் விரைவில் பறந்து இயங்கத்தக்கனவும் ஆகிய முப்புரங்களையும் அநுக்கிரகிக்க வேண்டும். எங்களை வெல்வார் ஒருவரும் இருத்தல் கூடாது. ஒடுங்கா வலியும், அழியா உடம்பும், முடியா ஆயுளும் ஆகிய இவற்றையும் அநுக்கிரகிக்கவேண்டும்" என்றனர். அதுகேட்டு நான்முகக்கடவுள்




திரிசிரபுரம் மலை.

"தோன்றின அனைத்தும் அழிவுறவேண்டும் என்ற நியதியைக்கடக்க ஒருவராலும் ஒண்ணாதே. முழுமுதற்கடவுளாகிய பரம்பொருள் ஒருவரேயன்றி ஏனையோர் எல்லோரும் அழிவுளற்பாலரேயாவர். ஆதலின் இவ்வழியாவரம் ஒன்றொழிய பிறவெல்லாம் ஆர்வத்தோடளிப்பேன்" என்றனர். அதற்கு அவ்வசுரர்கள் "ஐய! அங்ஙனமாயின் எங்கள் முப்புரமும் ஒன்று சேர்ந்திருப்புழி ஓரம்பால் ஓரே கணத்து ஒருங்கே அழிக்கும் ஆற்றலுடையான் ஒருவன் உளனேல் அவனால் அவ்வழிவு வரத்தக்கதாக வரம் அருளல்வேண்டும்" என்று இறைஞ்சினர். அயனும் அவ்வாறே அருளி அந்தர்த்தானமாயினர்.

பின்னர் அவ்வசுரர்கள் அவ்வாறே முப்புரங்களில் உறைந்து அநேக கோடி அசுரக் கூட்டங்கள் புடை சூழ வீற்றிருக்கையில் ஆணவம் மேலிட்டுப் பிறரொருவரையும் மதியாதவர்களாய்ச் சுரர், முனிவர் முதலிய பலருக்கும் இன்னல் இயற்றுவா ராயினர். தங்கள் புரங்களோடு ஓரோரிடங்களிற் சென்றிறங்குவதும், அங்குள்ளார்களை உபத்திரவித்து, உடனே அவ்விடம் விட்டுப் பெயர்வதுமாயிருந்தனர். இப்படி இவர்களால் உண்டான சங்கடங்களைச்சகிக்கமுடியாத தேவர்கள் எல்லோரும் ஒன்றுகூடித் தங்கள் தலைவனை இந்திரனிடம் போய் முறையிட, அவனும் தனது பல்வகைச் சைனியங்களுடன் பன்முறையும் சென்று அவ்வசுரர்களை எதிர்த்துப் பரிபவம் உற்றனன். பிற்பாடு அமரேசன் தனது பரிவாரங்களுடன் பிரமதேவனிடம் சென்று முறையிட, அவர் அவ்வசுரர்களுடைய ஆற்றலாதிகளை எடுத்துரைத்து அவர்களை வெல்லத் தன்னால் இயலாதென்று சொல்லி, அவ்விந்திரன் முதலியவர்களோடு ஸ்ரீ மகா விஷ்ணு விடம் சென்று முறையிட்டனர். ஸ்ரீ மகா விஷ்ணு எல்லாத் தேவர்களையும் சைனியங்களாகச் சேர்த்துக்கொண்டு அவ்வசுரர்களைப் பல முறையும் எதிர்த்துப் போய்த் தம்முடைய மாயாசக்தியினால் எவ்வ

ளவோ விதமான தந்திரயுத்தங்களைச் செய்து முயன்றும் அவர்களை வெல்ல முடியவில்லை. இவ்வாறாகத் தேவர்கள் பன்முறையும் தோற்று ஓடவே அவ்வசுரர்கட்குப் பின்னும் கர்வம் அதிகமாகி அத்தேவராதியர்களை முன்னிலும் எண்மடங்கு அதிகமாக உபத்திரவிப்பாராயினார்கள்.

அதற்குப் பரிகாரம் ஒன்றும் காணாதவர்களாகி, தேவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பரங்கருணைத் தடங்கடலாகிய பரமேசுரரிடம் சென்று முறையிட்டார்கள். அப்பெருமான் இவர்களது பிரார்த்தனையையும் அவ்வசுரர்களது பாவத்தன்மையையும் உணர்ந்து அத்தேவர்களுக்கு அநுக்கிரகிக்கக் கருதி "நாம் அவ்வசுரர்களுடன் போர்க்கு வருகின்றோம். அதற்கு வேண்டிய இரதம் முதலியவைகளைச் சித்தம்பண்ணுங்கள்" என்றார். உடனே தேவர்கள் எவ்லாரும் எம்பெருமான் ஆரோகணித்தற்கென்று ஓர் அற்புத இரதத்தை அமைப்பாராயினர். அத்தேர்க்குப் பூமியே அடித்தட்டாக அமைந்தது. சூரிய சந்திரர்களே சக்கிரங்களாக அமைந்தனர். நக்ஷத்திரங்களும் மற்றைத் தேவர்கள் சிலரும் அதன் மற்றைய உறுப்புகளாக அமைந்தனர். வேதங்களே குதிரைகளாக அமைந்தன. உபநிஷத்துகளே அக்குதிரைகளைக்கட்டும் கயிறுகளாக அமைந்தன. நான்முகக் கடவுளே அக்கயிறுகளைப் பிடித்துக் குதிரைகளைச் செலுத்தும் சாரதியாக அமைந்தனர். மகாமேருகிரியே வில்லாக அமைந்தது. வாசுகி என்னும் மகாநாகமே அவ்வில்லைப் பூட்டும் நாணியாயிற்று. நாராயணமூர்த்தியே அம்பாக அமைந்தனர். மற்றுமுள்ளார் அனைவரும் சைனிய கோடிகளாய் அமைந்தனர்.

இவ்வாறாக எல்லாம் சித்தமாயின பின் தேவர்களுக்குள் "அடடா! இப்படிப்பட்ட அழியா இரதம் முதலிய அமைந்தால் அவ்வசுரர்களை ஜயிப்பதில் கஷ்டமென்ன?" என்று ஒரு எண்ணம் உண்டாயிற்று. அதையுணர்ந்த விரிசடைக் கடவுள், துணைக் காரணங்களைக் கொண்டே

ஓரோர் காரியங்களைச் சாதித்துக்கொள்ளும் தங்களைப் போலவே, தம்மையும் அவர்கள் மதித்திருக்கும் தன்மையைக்கண்டு, தாம் உபகரணங்கள் வேண்டா உத்தமர் என்ற உணர்ச்சியையும், அத்தேர் முதலியவை எவ்வளவு பெரியனவாயிருப்பினும் தம்மை ஏற்க வல்லன அல்ல என்பதையும் அவர்கட்கு உணர்த்தவேண்டி அவ்விரதத்தின் மீது சற்றே தமது காற்பெருவிரலால் ஊன்றினர். உடனே

"* * * தாமடியிட்டலும்
அச்சு முறிந்தவா பாடியுந் தீபற."

என்றபடி அவ்வலிய இரதத்தின் அச்சு முறிந்தது. அத்தேரிற்பூட்டிய அசுவங்களும் அவற்றை ஓட்டுதற்கமைந்த சாரதியும் முன்னோக்கமின்றி பின்புறமே திரும்பித் தம்மையே நோக்குவதையும்,

"ஈரம்பு கண்டிலேம் ஓரம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புர முந்தீபற."

என்றவாறு வில்லாற் பூட்டியெய்தற்குத் தமது திருக்கரத்தில் இரண்டாவதம்பின்றி ஓரம்பே இருப்பதையும், கண்டு நகைப்பர் போல எம்பெருமான் நகைத்தனர். உடனே பெருமானிடத்து உள்ளன்புள்ள புண்ணியசீலர்களாகிய மூவர் ஒழிந்த அசுர கோடிகள் அனைவோருடனும் அப்புரங்கள் மூன்றும்வெந்து சாம்பராய் வீழ்ந்தன. இக்கருத்தையே இரட்டைப் புலவர்களும்,

"* * * * * * * * ஆர்வமுள
மூவருயிர் வாழ முப்புரமும் நீறாக
யாவர் பொருதாரிமையோ ரில்."

என்று தாங்கள் இயற்றிய ஏகாம்பரநாதர் தெய்வீக வுலாவில் கூறுகின்றனர். இத் திரிபுரதகனம் எம்பெருமானது அட்டவீரட்டங்களில் ஒன்று. இது நிகழ்ந்த இடம் திருவதிகை வீரட்டானம் என்றும் திருக்கெடிலத்திற்கு அடுத்திருக்கும விளையாக் கோல்லையே எரிந்து வீழ்ந்த இடம் என்றும் கருதப்படுகின்றன.

இனி இச்சரித்திரத்தால் உணர்த்தப்படும் உண்மை

பொருள் யாதென்பதைப்பற்றிச் சிறிது விசாரம் செய்வோமாக. இதன் கருத்தைத் திருமூலநாயனார்

"அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறிவாரே."

என்ற பாசுரத்தால் அருமையாக எடுத்து விவகரித்திருக்கின்றார்.

இத்திருமூலர் சுந்தரமூர்த்திநாயனாரது திருத்தொண்டத்தொகையுள் குறிக்கப்பெற்ற நாயன்மார்களுள் ஒருவர். மகா சிவயோகி. ஸ்ரீ கைலயங்கிரியில் எழுந்தருளியிருக்கும் நந்திகேசுரரின் அருள் பெற்று அணிமாவாதி அஷ்டசித்திகளும் அடைந்து விளங்கி அகஸ்தியருடன் சிலநாள் கழிக்க வேண்டிக் கைலையினின்று புறப்பட்டுப் பொதிகை நோக்கி வருபவர் கேதாரம், பசுபதி நேபாளம், காசி, ஸ்ரீசைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு முதலிய திவ்ய க்ஷேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறைக்கு வந்து பெருமானைத் தரிசித்துச் சிலகாலம் அத்தலத்தே வசிக்கவேண்டுமென்றெண்ணி அவ்வாறே இருந்தனர். அப்போது ஓர் நாளில் சாத்தனூரில் இடையர் குலத்தே தோன்றி, அவ்வூர் அந்தணர்களின் ஆநிரைகளை மேய்க்கும் மூலன் என்பான் பொன்னி நதிக்கரையில் மாடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும்போது தற்செயலாக உயிரிழந்தானாக அவ்வாக்குலங்களெல்லாம் "வந்தணைந்து சுற்றி மிகக் கதறுவன சுழல்வன மோப்பனவாக" அதனை நம் சிவயோகிகள் கண்டு இவ்வாக்களுற்ற துயரை நீக்குவேனாக என்று தமது உடலை ஒரு புறத்தே சேமித்து அம்மூலனின் உடலுட்பிரவேசித்துத் திருமூலராக எழுந்தார். அவ்வாறெழலும்

"......................................பசுக்களெலாம்
நாத்தழும்ப நக்கி மோந்தணைந்து கூப்பொடு நயந்து
வாய்த்தெழுந்த களிப்பினால் வாலெடுத்துத் துள்ளியபின்
நீத்த துயரினவாகி நிறைந்துபோய் மேய்ந்தனவால்."

பின்னர் சிவயோகியார் அவ்வாக்களை அந்திக் காலத்தே சாத்தனூர் கொண்டுபோய் உடையவர்கள் வீடுகளில் உய்த்துவிட்டுத் தம்மைத் தடுத்தழைத்த அம்மூலனது மனைவி முதலியனரை அகற்றி விட்டு முன் தமதுடலை வைத்தவிடத்தே அடைந்து பார்க்க அதைக்காணாதவராய் இது எம்பெருமான் திருவருளே யென்றெண்ணி அத்திருவாவடுதுறைக்கு மேற்கேயிருந்த அரசமரத்தின் கீழ் மூவாயிரம் ஆண்டு சிவயோகத்தே வீற்றிருந்து வேதாகமங்களின் உண்மைக் கருத்துகளை யெல்லாம் அமைத்து வருடத்திற்கோர்செய்யுளாக மூவாயிரம்செய்யுளால் திருமந்திரம் என்னும் தமிழ் முறையை அருளி, எம்பெருமானது திருவருளால் "திருக்கைலை தன்னிலணைந்தொருக்காலும் பிரியாமைத்தாளடைந்தார்." அப்பெருமை வாய்ந்த மேற்காட்டிய திருமந்திரச் செய்யுளின் உட்கருத்தையறிய எம்மனோரால் இயலுமோ?

'முப்புரமாவது மும்மல காரியம்,' என்றார் திருமூலர். அதாவது உடம்பு என்பது பொருள். அதனிடத்தேயிருந்த அசுரராவார் ஜீவான்மகோடிகள். அவ்வான்மகோடிகள் பரமாத்மஞானம் உண்டாகப் பெறுமல் ஆதியில் ஆணவமலத்தோடு அத்துவிதமாயிருந்த அவை அந்நிலையினீங்கி மாயா கர்மத்தால் உண்டாகிய தநு கரண புவன போகங்களைப் பெற்றவழி பெரிதும் இறுமாந்து நாஸ்திகாதி நிலைகளில் தலை நின்று பிறர்க்கும் பெரிதும் இடுக்கணிழைக்கும் தகையினை அறிந்து வழிப்படுத்த முயன்ற ஒருவர்க்கும் இசையாது, தமது இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாய பக்குவ சமயத்தில் பரமாத்மபூதமான குருமூர்த்தத்தின் கடாக்ஷ வீக்ஷண்யம் பட்டமாத்திரத்தாற்றானே தமது புரங்களாகிய தேகேந்திரிய அந்தக்கரணாதிகளெல்லாம் அறவே அழியப்பெற்று, பரமாத்மாவின் பாதாரவிந்தத்தில் தம்மை அர்ப்பணம் பண்ணி ஆநந்தாநுபவம் உற்றன, என்பதுதான் இதனால் உணர்த்தப்படும் உண்மைப்பொருள்.

ம. வீ. மீனாக்ஷிசுந்தரம்.



# காதற்கடன்.

## ஒரு துறவியின் கதை.

ஆரிய மொழியினும் சீரிய மொழியா
அந்தணர் ஆதி அனைவரும் சொந்தமா
அன்பொடும் பயில இன்பம் சுரந்து
அமிழ்தினும் இனிய தமிழ்மொழி கனியும்
நீண்ட புகழ்சால் பாண்டிய நாட்டிலே,
வானுயர் குன்றமும் வளர்மரச் சோலையும்
பானுவை மறைக்கும் பைம்புனற் சுனையில்
கூனிய மந்திதம் குட்டியை ஊட்டிடத்
தேனிறால் சிதைப்ப வழிதரு தேனும்
வாழையும் வருக்கையும் மாவும் பழுத்துச்
சூழ்ரு கரையும் தொங்கித் துவண்டு
வழியெலாம் வந்து பொழிதரு நறவும்
செந்நெல் வயல்களில் தேங்கிய தேறலும்
கன்னற் காவில் கழிவறு சாறும்

தம்முட் கலந்து தமிழ்மொழி போலத்
துறைதொறும் துறைதொறும் இனிக்கும் தா நீர்த்
தாமிரவருணியின் தண்பெருங் கரையிலே.

சிறுபோய்றை என்னும் ஊரினது நீராடு துறையைச்சார்ந்த மடத்திலே, ஆற்றங்கரைச் சாமியார் என்ற துறவி ஒருவர் இருந்தார். அவ்வூரார் ஒருவரும் அவரது பூர்வ சரித்திரத்தை அறியார். பதினைந்து ஆண்டுகளுக்கு முன், ஒரு பால் குடி மாறுப் பெண் குழந்தையோடும், சிறியதோர் துணி மூட்டையோடும், வழிப்போக்கில் வந்து அவ்வூர் மடத்தில் தங்கின அவர், தம்மிடத்தும் தம் குழவியிடத்தும் அவ்வூர் பாராட்டிய அன்பையும் ஆதரவையும் கண்டு மனங்கசிந்து, மேற்செலவொழிந்து அம்மடத்திலேயே வசித்து வந்தார். அப்பொழுது அவருக்கு முப்பது வயதிருக்கலாம்; ஆனல் அவர் தேகம் நோன்புகளாலும், மனோ விசாரத்தாலும் மிக இளைத்து மெலிந்திருந்தது. அவர் கொண்டு வந்த பெண் மகவின் முகத்தையும் அவர் முகத்தையும் பார்க்கச் சில ஒற்றுமைகள் இருந்தபடியால், அவர்க்குப் பிறந்த குழந்தை என்றும், வழி நடுவே அவர் மனையாட்டி இறந்திருக்கலாம் என்றும், அவர் முறைப்படி துறவு பூண்டு காவி வஸ்திரம் தரியாத பரதேசி வகுப்பினர் என்றும் அவ்வூரார் தமக்குள் யூகித்துக் கொண்டனர். அவரிடத்தே சிறந்துவிளங்கிய காம்பீரியம், சாந்தம், அடக்கம், ஜீவகாருண்யம், தெய்வ பக்தி, ஸதாசாரம் முதலிய குணங்களினுலும், அவரை அணுகிச் சென்றவர் மனங்களில் விசுவாசமும் பயபக்தியும் அன்பும் சிறிது நேரத்தில் பெருகி அவர்களை அவர் வசப்படுத்தினமையினுலும், அவரது பூர்வ விருத்தாந்தத்தை ஒருவரும் கேட்கத் துணிய வில்லை; முதலிலே துணிந்து தூண்டித் தொளைத்து வினவிய இரண்டொருவரும், தாம் நாணித் தலைகுனியத் தக்க விடைகளைப் பெற்றுரேயன்றி, அவர் வாயால் ஒரு சங்கதியையும் தெரிந்துகொள்ளவில்லை. அவர் ஒரு நாளும் அன்னப்பிச்சை எடுக்கவில்லை. அவ்வூரார் ஒவ்வொருவரும்தம்மால் ஆனமட்டும் நான் நான் என்று அரிசி பருப்பு காய்கறி நெய் பால் தயிர் முதலிய பதார்த்தங்களைவலியக்கொண்டு கொடுத்தார்கள். அவர் தாமே சமயல் செய்து ஒரே வேளைதான் சாப்பிடுவது வழக்கம்; அன்றியும், வழிப்போக்கருக்கெல்லாம் அமுதளித்து வந்தார். அவர் தெய்வ பூசையிலும் யோக நிஷ்டையிலும் சில பொழுதைக் கழிப்பார்; மீந்த நேரத்தை, மடத்தைச் சூழத்தாம் வைத்து வளர்த்து வந்த செடி கொடி மரங்களுக்கு நீர் வார்ப்பதிலும், தம்மைப் பார்க்க வந்தார் கஷ்ட நிஷ்டூரங்களை விசாரித்து

அவர்க்கு நன்மதி கூறுவதிலும், தத்துவப் பொருள்களை உபதேசிப்பதிலும், நோயாளிகளுக்கு வைத்தியம் செய்வதிலும், தம் குழந்தையுடன் விளையாடுவதிலும், தக்க பருவம் வந்தது முதல் அவளைக் கல்வியிலும் வீட்டுவேலைகளிலும் பயிற்றுவதிலும் செலவிடுவார். இவ்வாறு யாவரும் தம்மைக் குலதெய்வம் போல் மதித்துக் கொண்டாடும்படி பல ஆண்டுகளாக அம்மடத்திலேயே அவர் வாழ்ந்து வந்தார்.

சாமியாரால் சாமளாம்பாள் என்றும், அவ்வூராரால் சாமிக்குட்டி என்றும் அழைக்கப்பட்டுவந்த அப்பெண், தாயில்லாப்பெண்ணுக்கு ஊரெல்லாம் தாய் என்பது விளங்க அவ்வூர் ஸ்திரீகளால் பேணிப் போஷிக்கப்பட்டு, நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்ந்து வந்தாள். பெரியாரைப் பேணித் தமராக் கொள்ளும் அரியவற்றுளெல்லாம் அரிய பேற்றினை இடைவிடாது பெற்றிருந்த அப்பெண்மணி இனநலத்தால் எல்லாப் புகழையும் அடைந்தது வியப்பில்லை: செயற்கையால் உண்டாவதின்றி இயற்கையாகவே அமையவேண்டிய பேரழகும் அவள் குணாதிசயங்களுக்குத் தக்கபடி வாய்ந்திருந்தது பொன்மலர் நறுமணம் பெற்றது போலிருந்தது. பூர்வகால முனிவர்களில் ஒரு மகானது ஆச்சிரமம் போன்ற அம்மடத்திலே, அவருக்கு பணிவிடை செய்யும்படி வந்திருந்த ஒரு தேவஸ்திரீபோல் அப்பெண்மணி அங்கும் இங்கும் உலாவிவந்தாள். தனக்குத் தாயும் தந்தையும் சகோதரனும் சகோதரியும் தோழியும் குருவும் எல்லாம் தன் தவப்பேற்றால் ஒரே வடிவெடுத்து வந்தாற் போல விளங்கிய அந்தப் பெரியவரிடத்தில், சாமளாம்பாள், அளப்பரிய அன்பும் வாஞ்சையும் பக்தியும் வைத்து அவரையே தன் தெய்வமாகப் பாராட்டி வந்தது ஆச்சரியமோ? முகமறியா அயலாரிடத்தும் தம் ஜீவகாருண்ய மிகுதியால் தாய்போல் அன்பு செய்து வந்த அவர், பல வருஷங்களாகத் தம்உயிர்நிலையானவளும், தம் இருகண்களுக்கும் ஒருமணிபோன்றவளுமான அப்பெண்மணியின் மேல் வைத்திருந்த வாஞ்சையை யாரே உள்ளபடி அறிவார்! இது நிற்க.

அவ்வூரிலே நாராயணதாஸன் என்ற தோட்டக்காரன் ஒருவன் இருந்தான். அவனை அவ்வூரார் 'வடக்கத்தியான்' என்று சொல்வது வழக்கம். இதனாலேயே அவன் அயலூரான் என்பது விளங்கும். சாமியாருக்கு ஒரு பெண்குழந்தையாவது இருந்தது. அவனுக்கு உற்றார் உறவினர் ஒருவருமே கிடையாது. சாமியாரு

க்குப் பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்குப் பின்பு தான் அவன் முதல் முதல் அவ்வூருக்கு வந்தான். அப்பொழுது அவனுக்கு இருபது வயதுக்குமேலாயிராது. வழிப்போக்கிலே அம்மடத்தில்தங்கிச் சாமளாம்பாள் இட்ட அமுதையுண்டு, சாமியாரோடு அளவளாவிப்பேசிக்கொண்டிருந்து, கடைசியில் கூலி வேலை செய்யும் தோட்டக்காரனாக அவ்வூரிலே தங்கி வசித்து வந்தான். சிலசிலசமயங்களில் அவன் கூறிய மொழிகளிலிருந்தும், தங்கள் யூகத்திலும் அவன் விருத்தாந்தத்தைப் பற்றி அவ்வூரார் அறிந்துகொண்டதுபின் வருவதே: மகாராஷ்டிர தேசத்திலே புநாநகரத்திலே வெகு வருஷங்களாகக் குழந்தைகளின்றித் தவித்துக்கொண்டிருந்த ஒரு கனவானுக்குக் கடைசியில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தையைக் கண்ணில் வைத்து இமையால் மூடிக்காப்பதுபோல அக்கனவானும் அவர் மனையாளும் சீராட்டி வளர்த்து வருநாளிலே அதற்கு ஒரு கொடிய நோய் கண்டு வைத்தியர்களும் கைவிட்டுவிட்டார்கள். துன்பக்கடலில் ஆழ்ந்து கரை காணாது தத்தளிக்கும் அத்தாய் தந்தையரைக்கண்டு இரக்க முற்ற ஸாது ஒருவர் தாம் கேட்டபொழுது அப்பிள்ளையைத் தமக்குக் கொடுப்பதாக வாக்களித்தால் தாம் பிணியைத் தீர்த்துப் பிழைக்கச் செய்வதாகச் சொல்ல, அப்படியே அவர்கள் உடம்பட்டனர். ஸாது ஒரு மாத்திரையினால் நோயை நீக்கிவிட்டுப் போய்விட்டார். பின்பு சில வருஷங்களாயும் அவர் வாராமையினால் அக்கனவானும் அவர் மனைவியும் தம் வாக்குத்தத்தத்தை முழுதும் மறந்து விட்டனர். பிள்ளைக்குப் பன்னிரண்டாவது வயது நிறைந்தவுடன் ஸாது மறுபடியும் வந்து தோன்றிப் பிள்ளையைத் தம்முடன் அனுப்பும்படி கேட்டார். இயமனைக்கண்டது போல மனங்கலங்கிய அக்கனவான் எவ்வுபாயத்தினாலும் ஸாதுவின் உத்தேசத்தை மாற்றமுடியாமல், தம் வாக்கு ஸத்தியத்தினும் புத்திரவாஞ்சையையே அதிகமாகப் பாராட்டி, அனுப்புவதில்லை என்று சொல்லி மறுத்துவிட்டார். ஐயோ! ஸாது வடிவாய் வந்தவர் யமதர்மராஜர் தாமோ? என்ன மாயமோ, என்ன வித்தையோ, மூன்று நாள் காலையில் ஸாதுவையும் காணோம், பிள்ளையையும் காணோம்! அக்கனவானும் அவர் பத்தினியும் தம்புதல்வனைத் தேடுவதில் வெகு திரவியத்தை வீணில் இறைத்துவிட்டுக் கடைசியில் புத்திர சோகத்தினால் ஒருவர் பின்னொருவராய் மாண்டுபோயினர். மீந்த சொத்தைத் தாயாதிகள் பகிர்ந்துகொண்டனர். அந்த ஸாதுவின் பின் சென்ற வாலிபன், அவருடன் காடுமலைகுகைகளெல்லாம் அலைந்து திரிந்து, அதிவிந்தையும் பயங்கரமுமான பல

காட்சிகளைக் கண்டு, சம்பவங்களை அநுபவித்து, எட்டுதவியின்றியே அநேக சூக்ஷ்மங்களையும் புராணகதைகளையும்சாஸ்திரஸித்தாந்தங்களையும் அவரிடம் கற்றுணர்ந்து, தன் பதினெட்டாவது வயதில் அவர் திடீரென்று தேகவியோகமானவுடன், மறுபடியும் புநாநகரத்துக்கு வந்து சேர்ந்தான். செல்வநிலையாமையை ஸாதுவின் போதனையால் கேட்டிருந்தது இப்பொழுது பிரத்தியக்ஷமாய் அவனுக்கு விளங்கியது. அவனது அருமை அன்னையும் பிதாவும் ஆவியோடிருந்தால் எவ்வளவு ஆர்வத்துடன் அவனை வரவேற்றிருப்பாரோ அவ்வளவு பகைமையோடும் நிந்தையோடும் அவன் சொத்தை அநுபவிக்கும் தாயாதிகள் அவனை மறுத்து மிரட்டி விரட்டி, அவனைக் கொலை செய்து விடவும் உபாயம் தேடலாயினர். ஆற்றொணாத மனக்கசப்புடன் அங்கிருந்து புறப்பட்டவன் சிறுபொற்றையில் வந்து தான் ஊர் சுற்றுவதை ஒழித்துத் தங்கலானான். தோட்டக்காரன் நாராயணதாஸன் என்ற வடக்கத்தியான் கதை இது.

சாமளாம்பாளது திவ்யரூபலாவண்ணியத்தினாலும், சாமியார் இருந்த உன்னதபதவியினாலும், தன் ஏழைமையினாலும் சிறுமையினாலும், நாராயணதாஸன், தான் தூரத்திலிருந்து தரிசித்து வணங்குதற்குரிய ஒருதெய்வமாகவே அவளை மதித்து ஒழுகி வந்தான். அவள் விஷயத்தில், காதலினும் பக்தியும் விசுவாசமுமே அவன் மனதில் அதிகமாயிருந்தன. அவளோ, சிறுபெண், உலக அனுபவத்தில் இன்னும் சிறியவள்: காதற்சுவை அறியாதவள்: ஆயினும், ஒன்று மட்டும் உறுதிதான்: அவ்வூரிலுள்ள புருஷர், சிறியோர், முதியோர் எல்லார்க்குள்ளும், யார்மேல் உனக்கு அதிகப் பிரியம் என்று அவளைக்கேட்டால், சாமியாருக்குப் பின் இரண்டாவது விரல் மடக்கும்பொழுது, நாராயண தாஸன் என்றே மடக்குவாள். இதன் காரணம், அவனது கட்டழகு அமைந்த வாலிபமோ, சிறந்த குணங்களோ, பரிதாபமான பூர்வசரித்திரமோ, தோட்டவேலைக்கு வருவதினால் மற்றவரினும் அதிகமாய் நாளும் அவளொடுபழகும் பழக்கமோ, அவள் விஷயத்தில் அவனுக்குள்ள பக்தி விசுவாசமோ, யாமறியேம். இந்தப்பிரியம், அவளுக்கு வயதேற ஏற முதிர்ந்து, மனமறிந்தவிஷயமாய் விடவே, அவன் தன்னை மரியாதையுடன் எஜமானியைப் போல நடத்துவது வருத்தத்தை உண்டு பண்ணிற்று. சாமளாம்பாள் ஒருநாள் தனக்கு வில்வம் பறித்துக்கொடுக்கும்படி அவனை வேண்டினாள். அவன் வில்வமரத்திலேறிப் பறித்துக்கொண்டிருக்கையில் ஒரு பசுமாடு முட்டவருவதைக் கண்டு பயந்து "ஐயோ"

என்று அலறிக்கொண்டு அவள் மடத்துக்குள் ஓடினாள். இக்கூக் குரல் திடீரென்று தன் காதில் விழுந்தவுடன் பதறிக் கீழ் நோக்கின நாராயணதாஸன் கால் தவறிக் கீழே விழுந்துவிட்டான்: இடது கால் முழி புரண்டுவிட்டது. இதனால் சிலவாரம் படுக்கையிலிருக்க நேர்ந்ததுமன்றிக் கடைசிவரை இடதுகால் சற்று ஊனமாகவே போய்விட்டது. தன்னால் விளைந்த துன்பம் என்றும், கால் ஊனமாய் அழிகழிந்த பின் இனி ஒருநாளும் தன்னைக் காதலொடு நோக்கான் என்றும் ஆருத மனக் கிலேசத்தையும் துயரத்தையும் அடைந்தவளாய், முடிவில் தானே தன் மனதுள் துணிந்து கொண்டு அவன் வீட்டுக்குச் சென்று, எவ்வாறோ தானே தன் காதலை வெளியிட்டு அவன் உள்ளன்பையும் அறிந்துணர்ந்தாள். இவ்வாறு பருவமும் குணங்களும் உள்ளக் கருத்தும் ஒத்த காதலர் அடைந்த ஆனந்தத்தை எவ்வண்ணம் எழுதுவது?

மறுநாள் விடியற்காலம் சாமியார் நீராடப்போம் பொழுது நாராயணதாஸனும் உடன் சென்று, உண்மையை உரைத்து, அவர் அனுமதியை வேண்டினான். அப்பொழுது வைகறையானபடியால் அவர் கண்களில் தளும்பின நீரை அவன் காணவில்லையாயினும், அவர் பதிலுரையின் தடுமாற்றம் அவர் மனநிகழ்ச்சியை நன்கு உணர்த்தியது. நீராடி மடத்துக்கு வந்தவுடன், சாமளாம்பாளை வினவு முன்னமே, அவள் மெய்ப்பதற்றமும் முகக்குறிப்புக்களும், நாணமும், உண்மையைத் தெளிவாய்த் தெரிவித்தன. பின்பு சாமியார் அவளை நோக்கிச் சொன்னதாவது:—

"குழந்தாய்! உன் காதலை நான் தடை செய்யேன், உன் காதலனையும் ஏழையென்று இகழேன்: மகா பாவியாகிய நான், அந்திகாலத்திலும் என் சந்தோஷத்தையே பாராட்டி என் கடமையில் தவறுதல் முறையன்று: அது கூடாது. ஆனால் இப்பொழுது பதினைந்து வருஷங்களாக எந்தக் கடனை நிறைவேற்றுதற்கென்றே நான் உயிர் வாழ்கிறேனோ அதைச் செலுத்தி உங்களை ஆசீர்வதிக்குமுன், வெகு நாளைக்கு முந்திய பழைய கதை யொன்று சொல்லுகிறேன் கேளுங்கள்; நீங்கள் அதைக்கேட்டால் தான் என்னை உள்ளபடி அறிந்து நியாயப்படி மதித்தொழுகலாகும். வட நாட்டிலே இரண்டு சகோதரர் இருந்தனர்; இராமன் இலக்ஷ்மணன் என்ற பேர்களுக்கு ஏற்க வெகு அந்நியோந்நியமாயிருந்தனர். அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் பொருந்தியிருந்தன; இருவரும் அநேகமாய்ச் சமவயதினராயும் இருந்தனர். அவர்களுடைய அத்

தையாருக்கு ஒரே ஒருமகளிருந்தாள்; ரம்பை என்றால் அவளுக்கே பொருந்தும்; அவளே பெண்கள் நாயகம்; நற்குணக்களஞ்சியம்;

'மாசறு பொன்னே வலம்புரிமுத்தோ
காசறு விரையோ கரும்போ தேனே
அரும்பெறற் பாவையோ ஆருயிர் மருந்தோ
பெருங்குடி துலக்கும் பேரொளி விளக்கோ.
மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ'

அப்பெண்மணியை என்னென்று உரைக்கேன்? விதிவசத்தினால் சகோதரர் இருவரும் அவள் மேல் ஆசை கொண்டு காதல் வெள்ளத்தில் மூழ்கினர். ஆனால் ஒருவருக் கொருவர் அக்காதல் வெளிப்பட்டவுடன், எங்ஙனமாயினும் அவள் விஷயமாய்த் தங்கள் உடற்பிறப்புப்பாசம் தளர்ந்து அந்தரங்க நட்பு முறிந்துவிடுமென்று உணர்ந்து, வேறு பாக்கியவான் யாவனாவது அவளை மணம்புரியும் வரை, தங்களுக்குத் துன்பத்தையே விளைக்கும் அவள் சமீபத்தை விட்டு நீங்குதலே உத்தமமென்று கருதி, இருவரும் மரக்கலமேறி வாணிபம் செய்யப்புறப்பட்டார்கள். அதிஷ்டவசத்தால் அவர்கள் ஏறிய கப்பல் கன்னியாகுமரிமுனை அருகேபாறில்தாக்குண்டு சிதறி இருவரும் கடலில் விழுந்து பிரிவுற்றார்கள். அந்தோ! அப்பொழுதே அவர்கள் மூழ்கியிறந்திருந்தால் ஆகாதா! அல்லது—நானாவது —அவர்களில்ஒருவனாவது இறந்திருந்தாலும் நலமாய்முடிந்திருக்குமே! ஆனால் விதியை யார் விலக்குகிற்பார்? அவர்களில் மூத்தவனாகிய இராமன் மூர்ச்சை தெளிந்து தன்னறிவுற்றபொழுது, இங்கிலாந்துக்குச் செல்லும் ஒரு நீராவிக் கப்பலில் தானிருப்பதை உணர்ந்தான். அக்கப்பல் அவனை அரேபியா தெசத்தில் ஒரு துறை முகத்தில் இறக்கிவிட்டுப் போய் விட்டது. உயிரைக் காப்பாற்றும் பொருட்டுத் தாடியை வளர்த்து மகமதிய வேஷம் பூண்டு, மூன்று வருஷகாலம் தேசம் தேசமாய்த்திரிந்து கடைசியில், பழையஆசையும் நம்பிக்கையும் தழைக்கின்ற உள்ளத்தோடு தன் நாட்டை அடைந்தான். அங்கே தன் அருமைத் தம்பியாகிய இலக்ஷ்மணனும் தப்பிப்பிழைத்து வந்து க்ஷேமமாய் வாழ்ந்துகொண்டிருக்கிறான் என்னும் சந்தோஷ சமாசாரம் கிடைத்தது. ஆனால், அதையும் சொல்லவா, அவனுக்கும் அவளுக்கும் கலியாணமாகி அவர்களுக்கு ஒரு பெண் குழந்தையும் பிறந்திருந்தது.

நன்மை தீமை தெரியாமல் அறிவை மழுக்கிப்பித்தேற்றிக், கொடியதோர் விலங்கோ மக்கட் பிறவி தானோ என்று சந்தேகிக் கும்படி மனிதனுக்கு மூர்க்காவேசத்தை உண்டு பண்ணும் அருவை என்ற வெறி உடனே அவன் மனசிற் கொதித்தெழும்பிப் பழிவாங் கத் தூண்டியது; அவ்வெறிவசத்தனாய் நள்ளிரவில் அவன் அவர்க ளது படுக்கையறைக்குட் புகுந்து நித்திரையிலிருந்த தன் குற்ற மற் ற சகோதரனைக் கத்தியினால் குத்திக் கொலை செய்துவிட்டான். அப்பெண்மணி உடனே விழித்தெழுந்து நடந்ததை யறிந்து கதறி னாள்: இத்தனை வருஷங்களாயும் அவ்வழுகுரல் செவிவாய் நின்று, இன்று நினைத்தாலும் இருதயத்தில் தேள் கொட்டியதுபோலவ தைக்கின்றதே!—நாராயணதாஸ்! அதோ சாமளாம்பாள் மூர்ச்சிக் கின்றாள்: பார்.''

நாராயணதாஸ் அவள் கீழேவிழுந்து விடாமல் தாங்கிப் பிடித் துக்கொண்டான். அவள் சிறிது மயக்கம்தீர்ந்தபின்சாமியார், பின் வருமாறு கதையைச் சுருக்கிக் கூறினார்:— ''அந்தக்கொலைகாரன் பின்புற்றமனத்துயரத்தையும் வியாகுலத்தையும் விரித்துரைப்பது விசனகரமே. தன் வயமழிந்த வெறியில் அவனால் அக்கொலை செ ய்யப்பட்டதென்பதை அவள்நன்குணர்ந்தாள். தன்னைப் பெற்றதந் தையைக்கொலை செய்தவன்முகத்தைப்பார்த்துச் சிறிக்கும் அச்சிறு குழந்தையை எடுத்து அவன் கையிற் கொடுத்து, ''எனக்கு உண்மை தெரிகின்றது; கடவுள் உன் செயலை மன்னிப்பாராக. பூவரும்பு போன்ற இக்குழந்தையும், என் தாய் எனக்குக்கொடுத்த அந்தச் சிறு பெட்டியிலிருக்கும் என் சொந்த நகைகளும் உன் அடைக்க லம். இதோமாண்டு கிடக்கும் உன் அருமைத் தம்பிமேலும், நீ ஒருகாலத்தில் என் மேல் கொண்டிருந்த காதல்மேலும், இன்னும் நீ அருமைபாராட்டி மதிக்கும் மற்று எல்லாவற்றின் மேலும் ஆணை வைத்து, இக்குழந்தையை உன் சொந்த மகள் போலப் பேணி வள ர்க்கும்படி உன்னை வேண்டுகிறேன்: தெய்வானுக்கிரகத்தினால் அவ ள் பெரியவளாகி ஒரு காதலனை வேட்கும்பொழுது, இந்நகைகளை மட்டும் நான் வைத்துப்போன சொத்தாக அவளிடம் கொடு; இது வரையும் என் கணவருடையதும் இப்பொழுது உன்னுடையது மாயிருக்கும் சொத்தில் ஒரு காசேனும் திருகாணியேனும்அவளைச் சேரக்கூடாது. இவ்வரத்தை எனக்கு வாக்களித்து நீ உண்மை யுடன் நிறைவேற்றின அன்று, நானும் இக்கொலையை மன்னித்து விட்டதாக நினைந்துகொள்:'' என்று, பழுக்கக் காய்ச்சிய எழுத் தாணியால் எழுதியன போல், மனதைச்சுட்டுக்கொண்டு ஆழ்ந்து

பதிந்த வார்த்தைகளில் சொல்லி, நான் அவள் மொழிகளின் பொருளை அறியுமுன், பதில் பேசுமுன், தன் மணவாளன் மாங்கிலிருந்து கத்தியை உருவிப் பிடுங்கித்தன்னுயிரை மாய்த்துக் கொண்டு அவன்சென்றவிடம் தானும்போய்விட்டாள். அப்பாதகன் தன் ஐசுவரியங்களையெல்லாம் தர்மத்துக்குவிட்டுவிட்டுத், தன் அருமை அடைக்கலப் பொருள்களுடன் வெகு தூரஞ்சென்று வேறு நாடடைந்து, ஒருநாளும் ஆறாத இரகசியமான துக்கத்திலும் தன் கடனை நிறைவேற்றுவதிலும் தன் பாழ்நாளைக கழித்து வந்தான்."

கதையை இவ்வாறு முடித்தபின், முன்னிலும் இருமடங்கு வயதுசென்ற விருத்தர்போலத் தளர்வெய்திய சாமியார், மெல்ல எழுந்து மடத்தில் தம் பூசையறைக்குள் சென்று, நடுங்குகின்ற தம் கைகளில் ஒரு சிறுபெட்டியை எடுத்து வந்து, அதிலிருந்த ஆபரணங்களை வெளியே எடுத்து. "இந்த நகைகளுடன்தான் நான் அவளைக் காதலித்தேன்" என்று சொல்லிக்கொண்டே அவைகளைத் தம் ஊற்றெடுத்துப் பெருகும் கண்களில் ஒற்றிக்கொண்டு, முத்தமிட்டுப், பின்பு, அந்நகைகளைச் சாமளாம்பாள் மடியில் வைத்து, அவளை வணங்குபவர்போலப் பணிந்து, தேம்பித்தேம்பி அழுதுகொண்டு, பின்வருமாறு கூறினர்:—விலைமதிப்புக்கு அடங்காத இந்த ஆபரணங்களை அளிந்துகொண்டு நீ தீர்க்க சுமங்கலியாய் வாழ்வாயாக! என் காதற்கடன் நிறைவேறி விட்டது; என் பாவத்தை அவள் இன்று மன்னித்தாய்விட்டதென்று நான் நம்புகிறேன். குழந்தாய்! ஒரு நிமிஷத்திலே உன்னைத் தாய் தந்தையில்லா அநாதை ஆக்கிவிட்ட இந்த மகாபாவியை, உன் தாய் மன்னித்தது போலவே, நீயும் மன்னிக்கும்படி பிரார்த்திக்கிறேன்; ஆனல் தான் என் ஆத்மா சாந்தமடைந்து, என் மரணம் சுகிர்தமாம்." சாமளாம்பாள் தன் அடங்காக் கண்ணீரை அடக்கிக்கொண்டு மறுமொழி கூறி அவர் மனக்கிலேசத்தையும்கவலையையும் தன் இனியஅன்புரையால் ஆற்றுவிக்குமுன், அவர் ஆத்மா திரும்பாப்பயணத்தில் சென்றுவிட்டது; அவளும் தன் காதலனது மார்பின்மேல் மயங்கிச் சோர்ந்துவிட்டாள்.

அ. மாதவையர்.

---

This Story is adapted from an English poem by the same author—**Seetha**: An Indian Idyll.



உ

# ஸ்வ - தேசியம்.

ஸ்வதேசீயம் என்றால் ஒரு தேசத்தார் தங்கள் தேசத்தில் தாங்களே, செய்து கொள்ளுகின்ற பண்டங்களென்று பொருள்படும். எந்தத் தேசத்தார் ஒன்றையேனும் அயல் நாடு தேடிச் சென்று கொண்டுவாராமல் தாங்களே செய்துகொண்டு அவற்றை வழங்குவதுமன்றி, தங்களுக்கு வேண்டிய அளவு போக மிகுதியாயுள்ளனவற்றை அயல் நாடுகளுக்கனுப்பி மிக்க ஊதியம்பெற முயல்கின்றார்களோ அவர்களே மற்றெல்லோரினும் மேம்பாடுடையவராவார். ஆஸேது ஹிமாசலமளவுமுள்ள பெரு நாட்டாராகிய நமதுபரத கண்டத்தார் பண்டைக்கால முதற்கொண்டே நாகரீகத்தில் நன்றாகத் தேர்ச்சியடைந்து இப்பூமண்டல முழுதுமே நச்சி உச்சி மேற்கொள்ளும்படியான பலவகைத்தாய சிறந்த

பண்டங்களை அற்புதமாகச் செய்து அவற்றையெல்லாம் அயல் நாட்டு வர்த்தகரிடம் விற்றுப் பெருமிகமான ஊதியம் பெற்று வந்தார்கள். அங்கிலேயர் இந்தியாவையாளத் தொடங்கியது முதற்கொண்டுதான் இந்தியாவில் தொன்று தொட்டு வழங்கிவந்த ஒப்புயர்வற்ற கைத்தொழில்களெல்லாம் ஒன்றின் பின் ஒன்றாகத் தலைக்குப்புற வீழ்ந்து இருந்த ரீதியில்லாமலே அடியோடு அழிந்து நசித்துப்போய்க்கொண்டுவருகிறதை நாம்கண்கூடாய்க்காண்கையிலும், உன்மத்தங்கொண்டிருப்பவர்களைப் போல ஏமாந்து அலமலந்து நிற்கின்றோம். இக்காலத்தில் நமது தேசத்தில் எங்கும் யார்க்குமே, நாமும் நமது பூர்வீகர்களிருந்தபடியே நல்ல ஸ்திதிக்கு எப்பொழுது வரப்போகிறோமோவென்கிற ஆசை மட்டுமிருந்தாற் போதாது. பெரும்பான்மையாய் நம்மவர்களுக்குள் தேசாபிமானம் இன்னுமே நிலையாய் நின்று வேரூன்றவில்லையெனலாம். நம்மைப்போல இந்தப் பூமண்டலத்தில் ஆதிகால முதற்கொண்டே உயர்ந் திருந்தோருமில்லை; இப்பொழுது தாழ்ந்திருப்போருமில்லை. சென்ற முப்பது வருஷ காலத்திற்குள்ளே ஜப்பான் தேசத்தார் அடைந்திருக்கின்ற பெருமையை என்னென்று சொல்லுவோம்! தேசாபிமானம் அவர்களிடத்தில் பலமாகக்குடிகொண்டிருப்பதனாலன்றோ, இந்தப்பூமியின் மூன்றிலொரு பங்கைக் கட்டி யாண்டுவருவதுமன்றி, ஐரோப்பாவிலுள்ள நாட்டா ரெல்லோருமே கண்டு நடுநடுங்கிக்கொண்டிருந்த ருஷ்ய சக்கிரவர்த்தியின் பெரும்படைகளெல்லாம் போரில் அவர்களோடு முன்னே நிற்கமாட்டாமல் பின்வாங்கியோடித் தலைமாடு கால்மாடாகச்சாய்ந்து தோற்றுப்போய் நமனார் உலகிற்கு நல்விருந்தாயிற்று?

நாம் விடிந்தெழுந்தால் அந்திப் பட்டால் கிட்டத் தட்ட எந்தப் பொருள்களையும் அயல் நாடுகளிலிருந்து ஆசைப்பட்டு விலைக்கு வாங்கிக் காலக்ஷேபஞ் செய்யும்படியான ஹீன ஸ்திதிக்கு இப்பொழுது வந்துவிட்டோம்.

இந்தியாவின் க்ஷேமம் முழுமையுமே இந்தியாவில்செய்யப்படும் கைத்தொழில்களைப் பொறுத்திருக்கிற தென்பதை யாருமே உறுதியாக நம்பவேண்டும். பெரிதான நகரங்களிலேயன்றிச் சிற்றூர்களிலும் அயல் நாட்டுப் பண்டங்களை கடைத்தெருவுகளிலெல்லாம் நிரை நிரையாக வைத்துப் பரப்பப்பட்டிருக்கின்றதை யாருங் காணலாம். இக்காலத்தில் தனிகர்களாக விருப்பவர்களின் மாளிகைதோறும் வகைவகையான மின்னல் விளக்குகளும், நிலைக்கண்ணுடிகளும், தினிசு தினிசான கடிகார யந்திரங்களும், உடைகளும், பாதரக்ஷைகளும், குடைகளும், கைத்தடிகளும், பீங்கான் வகைகளும், க்ஷவர ஸாமான்களும், மை, காகிதம் லேகனிமுதலிய எழுதும்ஸாமான்களும், சிற்றுண்டிவகைகளும், சாராயவகைகளும், சுருட்டுப்பெட்டிகளும், வகை வகையான வாத்தியப் பெட்டிகளும், மெழுக்கு வத்திகளும், ஸோப்புக்கட்டிகளும், நாற்காலிகளும், ரத்தினக் கம்பளங்களும், ஊசியும், நூற்கண்டும், நெருப்புப்பெட்டிகளும், பற்பல வகையான இரும்பு ஸாமான்களும், தாக சாந்திக்கென்று சங்கையற்றபானவகைப் புட்டிகளும், குதிரைவண்டிகளின் ஜீனி முதலிய தோல் ஸாமான்களும், வாஸனைப்பொருள்களும், சிறு குழந்தைகள் பொழுது போக்காக விளையாடும் பொருட்டு ஆடும்பொம்மை, பாடும் பொம்மை, ஓடுங்குதிரையென்று பற்பலவாகிய பயனற்ற விளையாட்டு பண்டங்களையும், போடோகிறப் படங்களையும், நவராத்திரி பண்டிகைகாலத்தில் பெண்டுகள் கொலு ஜோடித்திருப்பதைப்போல அழகாய் வைத்திருப்பதை யார்தாம் அறியார்? சிலர் பணத்தைப் பணமென்றெண்ணமலும், தாங்கள்வாங்கும் பண்டங்களின் பிரயோஜனத்தை யறியாமலும், எட்டிப்பழம்போலக் கண்ணுக் கழகாயிருந்தாலும் போதுமென்று சீமைக்கெழுதி உபயோகமற்ற ஸாமான்களை வரவழைத்துப் பூஜார்கம்போல வைத்திருப்பதுமுண்டு. அதிலும் சிலகாலமாக நம்மவர் வரம்புகடந்து,

தாங்களும் அவர்களைப்போலாகவேண்டுமென் றெண்ணி உடையுந்தரிக்கப் புகுந்து விட்டமையால், நமதுதேசத்து வஸ்திரங்கள் அவர்களுக்குப் பொருந்துகிறதுமில்லை; வர வரப் பெண்டுகளும் அவர்களுக்கேற்றபடி அவர்களைப்போ லவே உடை தரிக்கவாரம்பித்து விட்டால் இன்னும் எப்படியாகுமோ தெரியவில்லை. இக்காலத்தில் யார்க்கும் அயல் நாட்டுப் பண்டங்களைக் கொள்ளுவதில் செலவு மட்டென்று தோற்றுவதாகக் காண்கிறது. நாம் நமது நாட்டிலே செய்யப்படுகின்ற பண்டங்களையன்றி அயல் நாட்டுப் பண்டங்களை ஏன் வழங்குவது கூடாதெனில், அவையனைத்தும் எளிதில் கெட்டுப்போய் விடுவதுமன்றி, கெட்டபின்பு ஒரு காசுக்குக்கூட உதவாமல் சீந்துவாரற் றுக் குப்பையிலே கொண்டுபோய்க் கொட்டக் கூலி கொடுக்கும் தன்மையனவாம். அவற்றுள் பெரும்பான் மையானவை மேலுக்குமட்டுஞ் சில காலம் பளபள வென்றிருந்து சீக்கிரத்தில் கெட்டுப்போகின்றன, இங்கி லாந்து முதலியதேசங்கள் குளிர்ந்தபூமியாதலால், அங்கே கறையானின் உபத்திரவமே இல்லை; அதிக நுட்பமான மரங்களாற் செய்யப்பட்டு வருகின்ற பண்டங்களெல்லாம் ஒரு நொடிக்குள்ளே கறையானுக் கேற்ற உணவாய்விடு கின்றன. நாம் அதிக விலைகொடுத்து வாங்குபவற்றுள் கறையான்றின்றழிவன பலவாம்.

இந்தியாவின் சீதோஷணம் எங்கும் ஒரேவிதமாகவிரா மல் வெவ்வேறிடங்களில் வெவ்வேறாக விருத்தலால் இதில் இந்தப்பூமியில் விளைகின்றஎந்தக் காய், கறி, கனி,கிழங்கு, பயிர், பூண்டு, கொடி, செடி,ஆகிய எல்லாமே நன்றாக உற் பத்தியாகும். அன்றியும் இந்தியாவில் தங்கம், தாம்பிரம் இரும்பு முதலிய சிறந்த லோகங்கள் கனிகளில் வேண்டிய மட்டுமகப்படும்.

இன்னும் வரும்.

அன்பில் ஸ்ரீ வேங்கடாசாரியார்.

# வித்யுன்மாலை.

## அத்தியாயம் 4.

மெல்ல மெல்ல நாட்கள் சென்றன. தினங்கள் வாரங்களாயின. வாரங்கள் மாதங்களாயின. மாதங்கள் வருஷங்களாய் மாறின. வாக்களித்துப் போனபடி சுசீலன் ஒரு தடவை கூட வரக்காணோம். வித்யுன்மாலை ஏங்கினள். இன்ன காரணத்தினால் அவன் வரவில்லை என்றறியாதவளாய்ப் பலவிதமும் ஆலோசித்து மனங்கலங்கினள். அவன் வடிவழகை மனதாகிய சித்திரப்பலகையில் எழுதி எழுதிப் பார்த்தாள். அவன் சொன்னவார்த்தைகளை நினைத்து நினைத்து "கனவோ? நினைவோ? கண்டது வீணோ?" என்று தியங்கினள். வீட்டில் அவனைப்பற்றிப் பிரஸ்தாபமே யில்லாமையால் தானும் அவனைப்பற்றி ஒருவரையும் கேட்கவில்லையென்றாலும், அவன் நினைவு அவளைவருத்தாமல் நிற்கவில்லை. பிந்தினவயதில் ஏற்படக்கூடியகாதல் என்பதவளிடத்து அப்பொழுதில்லை யென்றாலும், பால்யவயதிற்கு உசிதமான பிடிப்பு அல்லது பற்று என்னக்கூடிய அபிமானம் சுசீலனிடத்தில் இவளுக்கு விசேஷமாய்க்குடிகொள்ளாமல் போகவில்லை. விரகம் (பிரிவாற்றாமை) என்று பெயர்வாய்ந்த மற்றொரு வயதிற்குரித்தான தாபத்தையவளப்பொழுதடையவில்லை யென்றாலும், தனது கன்னிப்பருவத்திற்கடையாளமான விளையாட்டுத் தன்மையையே அவள் அற நீக்கிவிட்டாள். சிந்தையால் இவ்வண்ணம் விசேஷமாறுதலடைந்தாலும் அழகு மாத்திரம் நம் வித்யுன்மாலைக்குச்சிறிதும் குறையவில்லை. வளர்பிறைச் சந்திரனையொத்துத் தினமும் விருத்தியடைந்தது.

இப்படி எழுவருஷங்கள் ஆயின. வஸந்தத்தின்பின் தளிரும்,

அதன்பின் குஸுமஸமிருத்தியும் ஏற்படுவதுபோல் பால்யத்தின் பின் கன்னிப்பருவமும், அதன் பின்னர் யவ்வனமும் கிரமமாய் இவளறியாமலே யிவளை வந்தடைந்தது. யவ்வனத்தைத் தொடவாரம்பித்த அவளங்கங்கள் அரும்புகட்டிய மல்லிகைக்கொடியின் மகிமையைப் பழித்து நின்றன. காலப்படி வந்து தொண்டுபுரியும் சேடீனப்போலும் சமயமறிந்துவந்த யவ்வனமானது இவளுக்கடங்கியிருந்ததேயன்றி, மற்ற யுவதிகளைப் போலிவளை மதோன்மத்தையாய் ஆக்கவில்லை. பரிசுத்தையான இவளை யடைந்தால் தானும் சுகம்பெறலாம் என்ற எண்ணங்கொண்டதுபோல் இவளை வந்தடைந்த லாவண்யமானது வளர்ப்புமான்போல் சாபல்யமின்றி யிவளிடம் நிலை நின்றது. நிர்மலமான முல்லைமுகுளங்களைப் பழிக்கக்கூடிய இவள் பற்கள் இயற்கைச் சிவப்பான அதர காந்தியால் மறைக்கப்பெற்று, சிவப்பு மகமல்லால் மூடப்பெற்ற பளிங்கின் புகழை யிகழ்வதாயின. கண்கள் காரணமின்றிக்காதுவரையோடுவதும் திரும்புவதுமாய்த் தத்தளிக்கவாரம்பித்தன.

வசந்தகாலம் வந்தது. மாக்கள் தளிர்த்து வழியேவரும் தணந்தோர்களை வருத்தவாரம்பித்தன. வண்டுகள் கூட்டம் கூட்டமாய்ப் பறந்துபூக்களின்மீதுட்கார்ந்து சப்திக்கத்தொடங்கின. மலர்ந்தபூங்கொத்துகளின் மதுவினையுண்டு குயில்கள் இசைபாடின. அலர்ந்த குமுதம், கல்ஹாரம் முதலியவைகளின் நறுமணம் வகித்துச் சலீரென்று சொகுசாய் வீசும்தென்றல் தேகத்தில் படவும், யாவும்துறந்த சன்யாசிகளும் கிரகஸ்தர்களைப் புகழ்ந்து தம்மை யிகழலாயினர்.

மத ஜனகமான இவ்வசந்த நாட்களில் ஒரு நாள் இரவில் வழக்கப்படி படுக்கைக்குச்சென்ற நம்வித்யுன்மாலை தூக்கம்பிடிக்காதவளாய் அமிருதக்கம்பிகளையொத்துச் சந்திரிகையுட்புகும் பலகணியண்டையில் வந்துஅங்குபோடப்பட்டிருந்தசோபாவின்மீதுட்கார்ந்தவளாய் வெளித்தோட்டத்தின் அழகைவியந்துகொண்டிருந்தாள். நடைவாபியில்பிரதிபிம்பிக்கும் நக்ஷத்திரநாதனை மதியின் நேர்த்தியைப் பார்த்துப் பார்த்துக் களித்தாள். சம்பங்கி பழவமல்லிகை முதலிய குஸுமங்களினமோதத்தை இன்பமாய் அனுபவித்தானந்தித்தாள். மதனனும் இதுவே தகுந்த சமயமென்று இப்பூந்தோட்டத்தில் ஏழுவருஷங்களிற்கு முன் சுசீலனுடன் இவள் விளையாடிய விஷயத்தை இவள் ஞாபகத்திற்குக்கொண்டுவந்து விட்டனன். அந்தச் சம்பாஷணை முழுவதையும் ஒவ்வொன்றாய் நினைத்து நினைத்துப்பார்த்தாள். "சுசீலா! இவ்வளவு இன்பமாய்ப் பேசி வஞ்சித்து

விட்டு முற்றிலும் என்னை மறந்தனேயே இது உனக்கழகா?" என்று வாய்விட்டுத் தானுய் பிரலாபித்தாள்." ஒரு வேளை நாம் சுசீலனைக்கண்டது, சம்பாஷித்தது எல்லாம்ஸ்வப்னமோ" என்றுதிகைத்தாள். ரமணீயமான அவள் வீற்றிருந்த இடமும் கட்டுக்கடங்காத யவ்வனதசையும் சஞ்சலஸ்வபாவமுள்ள இந்திரியங்களும் [redacted]னக்குரங்கின் கால்விட்டோடும் தன்மையுமாய்ச் சேர்ந்து இவளைத்திடீரென்று கல்விழுந்த தடாகத்தைப்போலும் தரளமாக்கியது. புதிதாய் இவள்பால் பிரவேசிக்கும் காமத்தினை எதிர்கொண்டழைப்பதுபோல் ரோமங்கள்சிலிர்த்து மேல்வந்தன. சுசீலனைநாடிச்செல்லும் மனதிற்கு வழிகாட்டுவதுபோல் சுவாஸங்கள் முன்னதாய் வெளிப்பட்டன. அசுத்தையாய்விட்டாளென்றெண்ணியதுபோலக்கையிலிருந்த மலர்கள் நழுவிவிட்டன. வித்யுன்மாலை மெய்மறந்தனள். "எங்கு வந்தோம்? எங்கிருக்கின்றோம்? யாதுசெய்கின்றோம்? தனியாயிருக்கின்றோமா? சகிகளுடனிருக்கின்றோமா? பேசுகின்றோமா? சும்மாவிருக்கின்றோமா? தூங்குகின்றோமா? விழித்திருக்கின்றோமா? இது சுகமா துக்கமா? இது பகலோ இரவோ? என்று ஒன்றையுமவளறிந்தாளில்லை. ஜன்னலில் கண்ணை வைத்தபடி அது அவனிருந்தவிடமாதலால் அதுவே ஸ்வர்க்கமென்றெண்ணிச் சித்திரப்பதுமை போலும் அசைவற்றிருந்தாள்.

அச்சமயத்தில் அதிகதூரமல்லாத இடத்திலிருந்து வருவதான குதிரைகளின் காலடி ஓசையும், மனிதர்களின் ஆரவார ஓசையும் வித்யுன்மாலையின் காதில்படவே திடுக்கிட்டாள். உடனே துப்பாக்கி வெடிகளும் கேட்டது. தன்னை நிதானித்துக்கொண்டவளாய் அதை ஒரு சிறு சண்டையென்று ஊகித்தாள். ஐந்தாறு நிமிஷங்களுக்கெல்லாம் சப்தங்கள் குறைந்து மெல்ல அடங்கியது. பயபீடிதையான அச்சிறுமி பலகணிவழியாய் கண்களுக்கெட்டியவரையில் பார்த்தாள். மரங்களின் நெருக்கத்தால் ஒன்றும் புலப்படவில்லை. காலையில் விசாரித்துக்கொள்வோமென்ற எண்ணத்துடன்படுக்கைக்குச்செல்ல எத்தனித்தாள்.

கதவை யிடிப்பதாய் மற்றொரு சப்தம் கேட்டது. மறுபடியும் ஜன்னலண்டை நின்றுகொண்டு கவனித்தாள். அவள்பிதாவும், இரண்டு மூன்று வேலைக்காரர்களுமாய் வெளியில் போவதைப்பார்த்தாள். பதினைந்துநிமிஷங்களுக்கெல்லாம் வேலைக்காரர்களால் தூக்கியெடுத்து வரப்பட்ட காயம்பட்ட ஒரு மனிதனுடன் அவர் திரும்பி உட்புகுவதையும் கவனித்தாள்.

கவனமாய் ஒட்டுக்கேட்டுப் பார்த்தாள். ஒன்றும் காதில்படவில்லை. அறைகளைத் திறக்கும் ஓசையாவது மூடும்சப்தமாவது காதில்படவில்லை. வந்தவன் இன்னானென்றும் இவ்வளவு பந்தோபஸ்தாயும் ரகஸியமாயும் அவனை வீட்டில் கொண்டுவந்து காப்பாற்ற வேண்டிய காரணம் இன்னதென்றும் பலவிதம் ஆலோசித்தும் அறிந்தாளில்லை. சிந்தாகுலையாய்ப் படுக்கையிலமர்ந்தாள். தூக்கமும் வரவில்லை. ஒருவாறாய் இரவைக்கழித்தாள்.

உதயமாயிற்று. வழக்கப்படி எழுந்து மோகனமாலையின் அறைக்குச்சென்றாள். அவளுடன் வெகுநேரம் பேசிக்கொண்டிருக்கையிலும் இரவின் விஷயமான ப்ரஸ்தாபமேயில்லை. தந்தையிடமும்போய் நின்றாள். அவரும் அவ்விஷயமாய் ப்ரஸ்தாபம் செய்யவில்லை. தானாகவாவது ப்ரஸ்தாபிக்கலாமென்ற எண்ணங்கொண்டவளாய் "அப்பா எனக்குத் தூக்கமே வரவில்லை" என்றாள்.

"எதனால் அம்மணி!" என்றவர் வினவினர்

"சமீபத்தில் சண்டை நடப்பதுபோல்பெருங்கூச்சல் கேட்டதால்"

"ஒன்றுமில்லை கனவு கண்டிருப்பாய்"

வித்யுன்மாலை அதற்கு மேலொன்றும் கேட்கவில்லை. தனக்குள் பின்வருமாறு ஆலோசித்தாள். "என்ன விந்தையிது! ஒருவராவதுஇரவில் நடந்தசண்டையைப்பற்றியும் வீட்டிற்குள் வந்திருக்கும் மனிதனைப்பற்றியும் பிரஸ்தாபிக்கக் காணோமே. வந்தவன் காலையிலேயே திரும்பிப்போய்விட்டானோ? என்ன! நான் கண்டதெல்லாம்கனவா? தூக்கமேயில்லாதது எனக்குக்கனவு எங்கிருந்துவரும்? பிரமையோ? பிரமிக்கும்படி இன்னும் அவ்வளவு புத்திக்குறைவடையவில்லையே. ஒருவேளை நமக்குச்சொல்லக்கூடாதென்று இருக்கிறார்களோ? அவ்வளவு என்ன இரகசியம் இருக்கும்? இருந்தால்தான் என்ன? நான் என்ன பச்சைக்குழந்தையா? வெளியிட்டுவிடுவேனோ? இப்படி என்னை நம்பாமலிருக்கும்படி நான் ஒன்றும் நடந்துகொள்ளவில்லையே! நல்லது! அவர்கள் ஏதோ நமக்கு இது சங்கதியேதெரியாதென்றுஎண்ணி இருக்கிறார்கள். ஏதோகாரணத்தினால்நம்மிடத்தில்சொல்லாமலிருக்கிறார்கள். நாமறிந்ததாய்க்காண்பித்தால் வருத்தப்படுவார்கள். குதூகலத்தை அடக்கிக்கொண்டு நிதானிப்போம்." இவ்வாறுநினைத்தவளாய் தன்னறைக்குட்சென்று வழக்கப்படி மோகனமாலையிடம் போதிக்கப்படுவதிலும் புஸ்தகங்களை வாசிப்பதிலும் பகலைக்கழித்தாள்.

சாயங்காலம் வந்தது. முதல்நாளில் போலும் ஜன்னலண்டை

யுள்ள ஸோபாவில் உட்கார்ந்து பலவாறு சிந்திக்கலாயினள். தன் பிதாவினால் அழைத்துவரப்பட்ட மனிதன் யாரென்றும், அவனைத் தான் பார்த்ததிலிருந்து யாரைப்போலிருக்கலாமென்றும் யூகித்தாள். முகத்தை அவள் தெளிவாய்ப்பார்க்கமுடியவில்லை. ஆக்ருதியை மாத்திரம் கவனித்திருந்தாள். ஒருவேளை நம் சுசீலனயிருக்கலாமோ என்றும் எண்ணினள்.

சந்திரோதயமாயிற்று. சுகமாய்க் காற்றுவீசியது. சுசீலனது விரகம் இவளை முன்னிலும் அதிகமாய் வருத்தத்தொடங்கியது. அர்த்தராத்திரி காலம் வந்தது. ஏதோ சில துஸ்வப்னபவங்களால் பயந்தாள். தனியாயிருக்கப் பிடிக்கவில்லை. மோகனமாலையின் அறைக்குச்சென்று மிகுதியான இராத்திரியைக் கழிக்கலாமென்று நினைத்தாள். எல்லாவற்றிற்கும் ஒரு தீபம் ஏற்றிவருவோமென்று எண்ணி எப்பொழுதும்பிரகாசித்துக்கொண்டிருக்கும்தீபங்களுடைய திவான்ஹாலுக்குச் செல்லவெண்ணினள். தந்தை முதலானவர்கள் நித்திரைசெய்யும் அறைவழியாய்ப்போகப்பயந்தவளாய்ச்சுற்றுத்தாழ்வாரத்தின் வழியாய்ப்புறப்பட்டாள். நிச்சப்தமாய்த்தேவதைபோல் அதிமந்தமாய் நடந்தும், சந்திரிகை தெரியாத விடங்களில் கைகளால் சுவற்றைப் பிடித்துக்கொண்டும், ஒரு படிக்கட்டினிடமாய்வந்து கீழேஇறங்கினள். இறங்கிச்சமீபஅறைக்குட்போக எண்ணிப் பத்தடிதூரம் செல்லவும் கடவுளை ஸ்தோத்தரிக்கும் சில பாடல்களைக்கேட்டாள். குரலின் மாதுரியத்தால் வாலியவயதுள்ள ஒரு புருஷனுடைய குரலாயிருக்கவேண்டுமென்று ஊகித்தாள். மேலிருந்தோ! கீழிருந்தோ! பக்கங்களிலிருந்தோ! எத்திசையினின்று சப்தம் வருகிறதென்று ஆலோசித்தாள். தென்பக்கத்துச் சுவரினிடமாய் வருவதாய் நிச்சயித்தாள். சமீபித்தாள். முன்னிலும் அதிக சுத்தமாயும் நன்றாயும் பாடல்கேட்டது. நாலடி நடந்தாள். வழவழவென்றிருக்கும் ஓரிடத்தைக்கால்களால் தொடவும் திடீரென்று ஒரு கதவு திறந்தது. ஆச்சரியத்துடன் உள்ளே பார்த்தனள். அதிபிரகாசமான லஸ்தரின் ஒளியுடன் போராடுகின்ற திருமேனியின் காந்தியுடைய ஒரு சுந்தரபுருஷன் படுக்கையிலிருந்து பொட்டெனவெழுந்திருக்கக்கண்டாள். இருவர் முகமும் ஆச்சரியத்தினல் நிறைந்தனவாயின. அவ்வாலிபன் ஒரு வார்த்தையும் பேசவில்லை. வித்யுன்மாலையோ பாதாதிகேசபரியந்தம் அவனை நன்றாய்ப்பார்த்து "சுசீலா; சுசீலா" என்று சொல்லிக்கொண்டே ஒருசோபாவின் மீது சாய்ந்தாள்.

இன்னும் வரும்.

## கணவரன்பைக் கவருமுபாயங்கள்.

நமது தென் இந்தியாவில் அநேகம் சிறுமியர் தமது கணவர்களுக்குத் தம்மிடத்தில் நேசமுண்டாகும்படி அவர்களிடத்தில் தாங்கள் நடக்கவேண்டிய முறைமைகள் தெரியாமல் தடுமாறுகிறார்கள். அப்பால் அக்கணவர்களுக்கு அம்மாதரிடத்துள்ள அன்பு வழுவி அவர்கள் வேறு விதமாய் நடக்கும்போது அக்கணவர்களைத் தூற்றுகிறார்கள். சிலர் மருந்திட்டு வசமாக்கமுயல்கின்றனர். இவ்விதமாய் வசிய மருந்தென்று விற்கப்படும் பொருள்கள், பல்லி முட்டை, பாம்புச்சட்டை, அரணையின் வால் முதலிய அநேக தீங்கான விஷ பதார்த்தங்களினால் அமைந்துள்ளனவாதலால், அம்மருந்து அக்கணவர்கள் வயிற்றில் சேர்ந்தவுடனே சிலர், தீர்க்க ரோகிகளாகிறார்கள். சிலர் அந்தோ! சீக்கிரத்திலும் இறந்துவிடுகிறார்கள். சிலர் பைத்தியம் பிடித்துப் போகிறார்கள். இத்தகைய சிறுமிகளுக்கு மாத்திரமல்ல; மற்று எல்லா வித மாதர்களுக்கும் பின்வரும் புத்திமதிகள் கூறப்பட்டுள. இவை வாத்ஸ்யாயன மஹரிஷியால் செய்யப்பட்ட ஓர்